Nil

2-7-14

Christian Evidences

காம்பெல் ஐயர் செய்யுளாக்.

கிறிஸ்துமார்க்க ப்ரமாணங்கள்.

1914.

இ6:3
N14
67678

# CHRISTIAN EVIDENCES

BY

The Rev. W. H. CAMPBELL, M.A., B.D.

*Tamil Translation*

# கிறிஸ்துமார்க்க ஆதாரங்கள்

இஃது

சங்கை: W. H. காம்பெல் ஐயரால்

இயற்றப்பட்டது

THE CHRISTIAN LITERATURE SOCIETY
FOR INDIA

LONDON, MADRAS AND COLOMBO

1914

Price, 8 As] [விலை, ௮ அணா

# CHRISTIAN EVIDENCES

BY

The Rev. W. H. CAMPBELL, M.A., B.D.

*Tamil Translation*

---

# கிறிஸ்துமார்க்க ரூபகாரங்கள்

இஃது

சங்கை: W. H. காம்பெல் ஐயரால்

இயற்றப்பட்டது

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA
LONDON, MADRAS AND COLOMBO
1914

67678

Q 6:3
1114

# NOTE

*Christian Evidences* was written in Telugu by the late W. Howard Campbell, M.A., B.D., of the London Mission, Gooty. It was an able statement of Christian apologetic from one who was intimately acquainted with the methods of thought and the ways of speech familiar to the Telugu people, and there has been public evidence that it has led to faith in Christ.

About four years ago the Christian Literature Society for India was asked to publish a Tamil translation, and the publication has taken time and care. Three workers from different missions have taken part in it. The Rev. S. Gnanamuttu of the S. P. G., Nandyal, prepared most of the translation. Mr. J. S. Masillamani of the American Madura Mission rendered valuable assistance in the proof-reading. The Rev. A. O. Brown of the Wesleyan Mission Training Institute, Guindy, finally read and passed the proofs.

The translation is published in earnest hope that it may prove a statement of the grounds of Christian faith specially helpful to those who are surrounded by Hindu or Moslem influences.

A. C. CLAYTON,
*Secretary, Tamil Publication Committee,*
*Christian Literature Society for India.*

# பொருள் அட்டவணை


| அதிகாரம் | | பக்கம் |
|---|---|---|
| | பொருளடக்கம் .... .... .... .... | vii–xix |
| | முகவுரை .... .... .... .... .... | 1—13 |
| I. | தேவன் அவதரித்து வருவாரென்று நம்ப ஆதாரமுண்டா? .... .... .... .... | 1—24 |
| II. | இந்து சாஸ்திரங்களைக்கொண்டு இயேசுகிறிஸ்துநாதர் சத்தியாவதார லட்சணங்களுடையவரென்று ரூபித்தல் .... .... .... | 25—47 |
| III. | தீர்க்கதரிசிகள் இயேசுகிறிஸ்துநாதரின் மனிதவதாரத்தைக் குறித்துக் கொடுத்த சாட்சி .... | 48—65 |
| IV. | இயேசுகிறிஸ்துநாதர் மனுஷாவதாரச் சரித்திரம் நிச்சயமானது .... .... .... .... | 66—85 |
| V. | இயேசுநாதருடைய சுபாவலட்சணங்கள் தேவசம்பந்தமானவை .... .... .... | 86–109 |
| VI. | இயேசுநாதர் தம்மைக்குறித்துக் கொடுத்த சாட்சி. | 110–128 |
| VII. | இயேசுநாதர் தமது வாக்கின் மகிமையால் தமது திவ்ய மகத்துவத்தை ரூபித்தல் .... .... | 129–159 |
| VIII. | இயேசுகிறிஸ்து சர்வாதிகாரமுடையவராய் லோகபரிபாலனம் பண்ணுகிறார் என்று ரூபித்தல்.. | 160–187 |
| IX. | அனுபவப் பிரமாணத்தைக்கொண்டு இயேசுகிறிஸ்து ஜகத்ரட்சகர் என்று ரூபகாரம்பண்ணல். | 188–203 |
| X. | இயேசுநாதரின் மனிதாவதாரப் புண்ணியங்களைக் கொண்டு அவருடைய தெய்வீகத்தை ரூபகாரம் பண்ணுதல் .... .... .... | 204–227 |
| XI. | ரூபகாரப் பொழிப்பு .... .... .... | 224–235 |

# பொருளடக்கம்


## முகவுரை

பக்கம்

மனிதர் தழுவியிருக்கிற மதக்கோட்பாடுகளை விசாரிக்கும்பட்சத்தில், கடவுளுடைய சுபாவ லட்சணங்களைக்குறித்தும், மனிதர் ஸ்திதியைக்குறித்தும், மோட்சவழியைக்குறித்தும், ஒன்றுக்கொன்று விரோதமான அநேக அபிப்பிராயங்களிருக்கின்றன என்று தெளிவாகும்.

எந்த மார்க்கத்தைச் சேர்ந்தாலும் சரியென்பது மோசமானதாகையால், சகலவித சமயக்கோட்பாடுகளையும் ஜாக்கிரதையாகப் பரிட்சைபண்ணுவது அதிக அவசியமானது. கிறிஸ்துசமய ஆராய்ச்சிசெய்யக் கோரினால், முதலில் அதின் சாராம்சத்தை நன்றாக அறியவேண்டும்.

கிறிஸ்து மதஸ்தரிடத்தில் சில வித்தியாசமிருந்தபோதிலும் முக்கியபொருளில் எல்லாரும் ஒரே அபிப்பிராயமுடையவர்களாயிருக்கிறார்கள். இதுவுமன்றி கிறிஸ்துசமய பக்தரின் அபிப்பிராயங்களை விசாரிப்பது அவ்வளவு அவசியமானதன்று. இயேசுநாதர் சரித்திரத்தை ஆராய்ந்தால், அவருடைய மார்க்கசாரத்தை கிரமமாகத் தெரிந்துகொள்ளலாம்.

இயேசுகிறிஸ்துவே கிறிஸ்துமார்க்க சாரம். அவரில் அடைக்கலம் புகுந்து அவரை முழு இருதயத்துடன் நேசித்துப் பணிவிடை செய்வதே கிறிஸ்துமார்க்கம்.

இயேசுகிறிஸ்துவின் சங்கதியை விசாரிப்பது மனிதஜாதி எல்லாருக்கும் அதிக அவசியமானது. அவர் திருவுளம்பற்றியவை உண்மையாயிருக்குமாகில், அவர் திருவவதாரமெடுத்த ஜெகத்து ரட்சகரே. ஆதலால் அவர் சரணம் அடைவதினால் மோட்சமும், அவரைத் தள்ளுவதினால் நரகமும் சந்தேகமின்றி பிராப்திக்கும்.

கிறிஸ்துமத அத்தாட்சிகளைத் தொகுப்பாய் விளக்கிக்காண்பித்தல் .......... 1–13

## I. அதிகாரம்

### தேவன் அவதரித்து வருவாரென்று நம்ப ஆதாரமுண்டா?

அற்புதக் காரியத்தைக் குறித்து விசாரிக்கும்போது சாதாரணமாக நான்கு விஷயங்களைக்குறித்து விசாரணை செய்யவேண்டும்.

பக்கம்

அவையென்னவெனில்: அக்காரியம் கூடியதா? கூடாததா? அதற்குக் காரணம் இருக்கிறதா இல்லையா? அது நடக்குமென்று நம்புவதற்கு ஆதாரமுண்டா இல்லையா? அது நடந்ததென்று ரூபகாரமுண்டா இல்லையா என்பவைகளே.

சத்தியாவதாரக் கோட்பாட்டை இவ்வாறு விசாரிக்குமிடத்தில் நமக்குத் தெரிகிறவை யென்னவெனில்:—

1. கடவுள் மனிதாவதாரமெடுப்பது கூடாத காரியமல்ல. அவர் சர்வாதிகாரியாயிருந்து, தன்னைக் காலத்துக்கும் ஸ்தலத்திற்குமுரிய கட்டுப்பாடுகளுக்குக் கீழாக்கிக்கொள்ளக் கூடியவர். அன்றியும் மனிதர் தேவசாயலில் சிருஷ்டிக்கப்பட்டவர்களாகையால், அவர் மனிதர்வேஷம் பூண்டுகொண்டாலும், தம் சுபாவ லட்சணங்களை விட்டுவிட்டதுபோலாகாது.

2. மனிதர் பாவாந்தகாரத்தில் சிக்கி, தாங்களே விடுதலைபண்ணிக்கொள்ளக் கூடாதவர்களாகையால், கடவுள் அவதரிக்கிறதற்குத் தகுந்த காரணமுண்டு.

3. கடவுள் அன்பின் சொரூபி ஆகையால், மனிதரை ரட்சிக்க அவர் அவதாரமெடுப்பாரென்று நம்புவதற்கு ஆதாரமுண்டு.

4. கடவுள் அவதரிப்பதால் மாத்திரமே மோட்சவழி உண்டாகுமேயன்றி வேறெவ்வகை உச்சிதவழியாலும் உண்டாகாது.

சகல தேசங்களிலும் மனிதர் தங்கள் பலவீனங்களை உணர்ந்து முக்திவழிகாட்டியான ஒரு அவதாரப் புருஷனுக்காக எதிர்பார்த்திருக்கிறார்கள்.

இந்த உலகச்சரித்திரத்தைப் பரிசோதனைபண்ணினால், இயேசு கிறிஸ்துவின் அவதார சங்கதியே விசாரணைசெய்யத் தகுந்ததாயிருக்குமேயன்றி, அவதாரப் புருஷர்களென்று சொல்லப்பட்டவர்களுடைய சங்கதி அனுவளவாகிலும் ஆலோசிக்கத் தகாதவை என்று தெளிவாய் விளங்கும்…………………………… 14–24

## II. அதிகாரம்

### இந்து சாஸ்திரங்களைக்கொண்டு இயேசுகிறிஸ்துநாதர் சத்தியாவதார லட்சணங்களுடையவரென்று ரூபித்தல்

பூர்வகால நூல்களெல்லாவற்றிலும் சத்திய அவதாரத்தைக் குறித்துச் சொல்லப்பட்ட குறிப்புகளுண்டு.



பக்கம்

2. இயேசுநாதர் சரித்திரச் சுருக்கம்.

3. இயேசுநாதர் சரித்திர நூல்களை யெழுதிய ஆசிரியர் அவரைக் கண்ணாரக்கண்டசாட்சிகளாயிருந்து, தாங்கள் பார்த்தவைகளையுங் கேட்டவைகளையும் விவரித்து எழுதினார்கள். ஆனால் அவர்கள் கவிராயர்போல அலங்காரக் காவியங்களைக் கட்டியெழுதவில்லை.

4. அவர்கள் இயற்றிய நூல்களில் சில அற்பபேதங்களிருக்கின்றன. ஆனால் முக்கிய அம்சங்கள் விஷயமாக வித்தியாசங்கிடையாது. ஆகையினால் அவர்கள் எழுதியவற்றை வாஸ்தவமென்று நிச்சயிக்கலாம்.

5. இயேசுநாதரின் சங்கதிகளைத் தெரியப்பண்ணுவதால், அவர்களுக்குச் சொல்லிமுடியாத உபத்திரவங்கள் சம்பவித்தன. ஆதலால் நடந்தவற்றை விட்டுவிட்டு, அச்சங்கதியைக் கற்பனைபண்ணிப் போதித்தார்களென்பதற்கு ஆதாரமில்லை.

6. இயேசுநாதரின் சீஷர்கள் எழுதிய நூல்களினால் அவர் சரித்திரம் யாவும் நமக்குத் தெளிவாய்த் தெரியவரும். ஆகையினால் அவைகளை விசாரிப்பதால், அவர் உலகரட்சகரென்று நிச்சயிக்கலாம்…………………………… 66–85

## V. அதிகாரம்

### இயேசுநாதருடைய சுபாவலட்சணங்கள் தேவசம்பந்தமானவை

இயேசுநாதரின் சுபாவலட்சணங்களைப் பரிசோதனை பண்ணுங்கால் அவை மனித லட்சணங்களுக்கு மேற்பட்டவை யென்று சொல்வதற்குச் சந்தேகமில்லை.

1. இயேசுநாதர் தாம் ஜன்மித்த தேசகால நிபந்தனைக்குள்ளாகாதவராய் பட்சபாதமின்றிச் சகல மனிதருக்கும் செவ்வையாகப் பொருந்தும்விதமாய்ப் போதித்தார்.

2. அவர் எளிய நிலைமையில் ஜீவியம்பண்ணியவராயிருந்தபோதிலும், சகல மனிதரும் அவருடைய சகஜமான மாட்சிமையைக் கண்ணுற்று வெருவாய் வியப்படைந்து, அவருக்குப் பயப்பட்டார்கள்.

பக்கம்

3. அவர் அளவிறந்த மாட்சிமையுடையவராயினும், சாந்த மூர்த்தியும் தாழ்மையுள்ள கர்த்தாவுமாயிருந்தார்.

4. அவர் அளவற்ற அன்புடையவர்; இழிகுலரையுந் துன்மார்க்கரையும் இகழ்ந்து தள்ளிவிடாது, அவர்களைக் குணப்படுத்தும் பொருட்டு நானாவிதங்களாய்ப் பிரயாசப்பட்டார். தம் சத்துருக்களிடத்திலும் கபடற்ற அன்புகூர்ந்து அவர்களுக்குச் சமயோசித உபகாரங்கள் செய்தார்.

5. அவர் தம் சொந்த சுகத்தைக் கருதாமல், தம்மைத்தாம் வெறுத்து பிறர்பாரத்தை ஏற்றுக்கொண்டார். அவர் தமது ஜீவனைக் காப்பாற்றிக்கொள்ளக் கூடியவராயிருந்தும் மனிதர் பொருட்டே தம் ஜீவனை இலவசமாய்க் கொடுத்தார்.

6. இயேசுநாதர் சகல சற்குண சம்பன்னரென்றுரைப்பது மாத்திரமேயன்றி, அவர் முழுவதும் பாவமற்றவரென்றும் தப்பாமல் ஒப்புக்கொள்ளவேண்டும்.

அவர் பாவத்தைக்குறித்து வெகு கண்டிப்பாய்ப் போதித்தார் என்றாலும் தமக்கு முழுமையும் பாவமே இடையாதென்று சந்தேகமறக் கூறினார்.

அவர் சத்துருக்கள் எவ்வளவாய்ப் போராடினாலும், அவரில் எவ்வளவு மாசும் மறுவும் கண்டுகொள்ளக் கூடாமற் போனார்கள்.

அவரைத் தினந்தோறும் பார்த்த யாவரும் அவர் செய்த கிரியைகளைக் கண்டு அவர் அணுவளவும் தோஷமற்றவர் என்று ஏகோபித்து ஒரு வாய்மொழியாய்ச் சொல்லியிருக்கிறார்கள்.

7. இயேசுநாதர் சகல பாவங்களையும் அருவருக்கிறவராய் இருந்தபோதிலும், பாவிகளிடத்தில் மட்டற்ற இரக்கமும் ஒப்பற்ற அன்புமுடையவராயிருந்தார்.

இவ்வித குணலட்சணங்கள் தேவசம்பந்தமானவைகளேயன்றி மனிதசம்பந்தமானவையல்ல. ஆகையால் இயேசுநாதர் அவதரித்துவந்த திவ்ய இரட்சகரென்று நிச்சயிக்கலாம்........ 86–109



பக்கம்

VI. அதிகாரம்

இயேசுநாதர் தம்மைக்குறித்துக் கொடுத்த சாட்சி

இயேசுநாதர் சகல மனிதருக்கும் மேலானவர். ஆகையால் அவர் சங்கதியைச் செவ்வையாக அறிந்துகொள்ள விரும்பினால், அவர் தம்மைக்குறித்துச் சொல்லியவைகளைக்கொண்டே ஆராய்ச்சிசெய்வது அவசியம். அவர் சத்தியசொரூபி ஆகையால் தம்மைக்குறித்துப் பகர்ந்த சாட்சி நம்பத்தக்கதென்பதற்குச் சந்தேகமில்லை.

1. இயேசுநாதர் தரித்துக்கொண்ட நாமங்களைக்கொண்டு விசாரணைசெய்தால், அவர் தம்மைக் கடவுளுடன் சமானமானவராக்கிக் கொண்டதாகவே வெளியாகும்.

2. இயேசுநாதர் தாம் கடவுளுடன் சமானமானவராய் இருக்கிறதாகவே காண்பித்தார். தாம் கடவுளைப் பூரணமாய் அறிந்தவரென்றும், தமக்கும் கடவுளுக்கும் எவ்வித பேதமும் இடையாதென்றும் தெளிவாய்ப் போதித்தார்.

தமக்குத் தெய்வாதிகாரம் இருக்கிறதுபோல் சகல மனிதர் மேலும் அதிகாரம் பாராட்டினார்.

மனிதர் எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புசெய்து, அவர்கள் கிரியைகளின்படி அவர்களுக்குத் தீர்ப்புசெய்கிறதற்கும், தம்மை அண்டினவர்களுடைய பாவங்களை நிவிர்த்திபண்ணி அவர்களுக்கு மோட்ச பதவியை அளிக்கிறதற்கும் தமக்கு அதிகாரமுளதென்று தாராளமாய்ப் போதித்தார்.

3. இயேசுநாதர் தமது சங்கதிகளைக்கொண்டு தாம் ஆதியந்தமில்லாதவர் என்றும், சர்வாதிகாரமுடைய கடவுள் என்றும், மனிதரை ரட்சிக்க நரவேஷம்பூண்ட ரட்சகர் என்றும் சந்தேகமறத் திருவாய் மலர்ந்தருளினார்.

4. இயேசுநாதர் தமக்குச் சம்பவிக்கப்போகிற மரணப்பாடுகளைக்கொண்டு, தாம் அவ்வித பாடுகளை வேண்டுமென்கிற மனதுடன் பட்டு உத்தரித்து, அவற்றால் சகல மனிதருடைய பாவங்களையும் பரிகரிப்பதாகப் பிரசுரம்பண்ணினார்.

இயேசுநாதர் முழுமையும் சத்திய சொரூபியாயிருந்து, பூரண அனுபவமுடையவராய்த் திருவுளம்பற்றினதினால், அவர் தம்மைக்குறித்துக் கொடுத்த சாட்சியினால், அவர் திவ்ய ரட்சகர் என்று தப்பாமல் நிச்சயிக்கவேண்டும் .............................. 110–123

பக்கம்

## VII. அதிகாரம்

### இயேசுநாதர் தமது வாக்கின் மகிமையால் தமது திவ்ய மகத்துவத்தை ரூபித்தல்

I. இயேசுநாதர் அருளின போதனையின் மகத்துவம்.

1. இயேசுநாதரின் போதனையைக் கேட்டவர்களெல்லாரும் சத்துருக்களானாலும் சரி, மித்துருக்களானாலும் சரி அவர் வாக்கின் மாட்சிமையைக் கண்ணுற்று அதிக வியப்புற்றார்கள்.

2. இயேசுநாதரின் உபதேசம் பட்சபாதமில்லாத் தன்மையுடையதாய் சகல மனிதருக்கும் வெகு நேர்த்தியாய் இசைந்திருந்தது.

3. இயேசுநாதரின் உபதேசத்தில் சகல சத்தியமும் அடங்கியிருந்தன. அவர் கிரியை ஞான பக்தி மார்க்கங்களிலுள்ள குறைவுகளைக் கண்டித்து, அம்மார்க்கங்களிலுள்ள சத்தியத்தை நிறைவாக்கினார்.

4. பக்திமார்க்கத்தை உபதேசித்தபோது, அவர் சந்தேகமாய்ச் சொல்லவில்லை. ஆனால் சகலரும் தம்மை நம்பி தம்மில் பக்தியுடையவர்களாக வேண்டுமென்று வெளிப்படையாகத் திருவாய் மலர்ந்தருளினார்.

5. அவர் உபதேசிக்கிறவராக மாத்திரமல்ல, காரணக்குருவாகவுமிருந்து தம்மில் ஒதுக்கிடந் தேடினவர்களின் பாவங்களைச் சர்வநாசம்பண்ணி அவர்களைச் சற்குணமுடையோராக்கினார்.

II. இயேசுநாதர் செய்த அற்புதக் கிரியைகள்.

மனிதருக்குக் கூடிய காரியங்களெவை, கூடாத காரியங்களெவை என்று சிறிதளவு விளக்கிக் காட்டுதல்.

1. இயேசுநாதர் மனிதர் வல்லமைக்கு மேற்பட்ட காரியங்களைச் செய்தாரென்பதற்கு ஆட்சேபனைக் கிடமில்லா ரூபகாரங்களுண்டு.

2. இதற்கு உதாரணங்கள்.

3. இயேசுநாதர் செய்த அற்புதக்கிரியைகளைப் பார்க்கும்போது அவர் திவ்ய அதிகாரமுடையவரென்று நிச்சயிக்காமலிருக்க விதியில்லை.



பக்கம்

III. 1. இயேசுநாதர் மரணப்பாடுகளைக் குறித்துச் சிலர் சந்தேகிக்கிறதுண்டு. ஆனால் அப்பாடுகள் சம்பந்தமாய் நாம் மூன்று காரியங்களை அறிந்து ஞாபகம் பண்ணவேண்டும்.

(1) ஜகத்ரட்சகர் அவ்வகைப் பாடுகளைப்பட்டு உத்தரிப்பாரென்று பூர்வகாலத் தீர்க்கதரிசிகள் முன்னுரைத்தார்கள்.

(2) இயேசுநாதர் பிறர் நிமித்தமேயன்றி தம் நிமித்தம் பாடுபட்டு உத்தரிக்கவில்லை.

(3) இயேசுநாதர் தம் ஜீவனை இலவசமாகக் கொடுத்தார்.

2. பிறர்பொருட்டு எண்ணிறந்த பாடுகளை உத்தரிப்பது மிகவும் புகழ்ச்சிக்குரிய காரியமாதலால் அதை நிறைவேற்றினவர் அதிக மேன்மையுடையவர் என்பதற்குச் சந்தேகமில்லை.

3. இயேசுநாதர் தம் ஜீவனைவிட்டு மரணமடைந்தபோதிலும், மூன்று தினங்கள் கல்லறையிலிருந்தபிறகு திரும்ப ஜீவனை அடைந்து எழுந்தருளினார்.

இவ்விதமாய் நிஜமாக நடந்ததென்று ரூபகாரம் பண்ணல். இயேசுநாதரின் மகத்துவத்தைக்கொண்டு அவர் பூலோகரட்சகர் என்று விசுவாசிக்கவேண்டுவது அவசியம்...................... 129–159

## VIII. அதிகாரம்

### இயேசுகிறிஸ்து சர்வாதிகாரமுடையவராய் லோக பரிபாலனம் பண்ணுகிறார் என்று ரூபித்தல்

I. கிறிஸ்துமார்க்கச் சரித்திரத்தினால் இயேசுநாதரின் மகத்துவம் நிச்சயமென்று வெளியானது.

1. உலக அதிகாரிகள் யாவரும் ஒருமித்து கிறிஸ்துமார்க்கத்தை நிர்மூலம்பண்ண வகை தேடினபோதிலும், அவர்களே படிப்படியாய் மடிந்துபோனார்களேயன்றி, அது சர்வகாலத்திலும் சமஸ்ததேசத்திலும் பிரபலமாகிக்கொண்டே வந்தது.

2. மற்ற மதங்கள் யாவும் குறைந்துபோகையில் கிறிஸ்துமார்க்கமே சகல தேசங்களிலும் பரவிவருகிறது.

3. கிறிஸ்துமார்க்கச் சரித்திரத்தைப் பரிசோதனை பண்ணினால், இந்த அபிவிர்த்தியை உண்டுபண்ணின சக்தி கிறிஸ்துபக்தர்களிடத்தில் இருந்ததாகத் தோன்றாமல் இயேசுநாதரே தமது அடி

பக்கம்

யாருக்குத் துணையாயிருந்து, தமது தெய்வீக மாட்சிமையால் தம் ராஜ்யத்தைப் பரவச்செய்து வருகிறாரென்று தெளிவாகும்.

4. இயேசுநாதர் தம் ராஜ்யத்தை அதிகரிக்கச்செய்யும் விதம் அதிக ஆச்சரியமானது. அவர் மனிதரைப் பலவந்தம்பண்ணாமலும், அவர்கள் சுபாவ இச்சைகளின்படி போகவிடாமலும் தம் ஒப்பற்ற அன்பினால் அவர்கள் கடின இருதயங்களை இளகச் செய்து அவர்களைத் தம் தொண்டர்களாக்குகிறார்.

5. இயேசுநாதர் தம் அன்பின் மாட்சிமையால் சகலவித மனிதரிடத்திலும் பூர்ண பயபக்தியை உண்டுபண்ணுகிறார். இதற்கு உதாரணங்கள்.

II. இயேசுநாதரின் அதிகாரத்தால் விளைந்த நன்மைகளைக் கொண்டு, அவர் திவ்ய ரட்சகர் என்று நிச்சயிக்கவேண்டும். கிறிஸ்துமார்க்கம் பரவிய தேசங்களிலுள்ள துர்ப்பழக்கங்களைக் கொண்டு சிலர் இதற்கு விரோதமாய் ஆட்சேபிக்கிறதுண்டு. ஆனால் அவர்கள் ஆட்சேபனைக்கு ஆதாரங் கிடையாது. என்னத்தினாலெனில்:

1. கிறிஸ்துமார்க்கம் பரவியிருக்கிற தேசங்களில் சகலவித துரப்பியாசமும் குறைவு.

2. கிறிஸ்துசமயம் அதிகரிக்க அதிகரிக்க அவ்வகைத் துர்ப்பழக்கங்கள் படிப்படியாய் வலிகுறைந்து வருகிறது.

3. கிறிஸ்துமார்க்கச் சட்டங்களைக் கைக்கொள்ளுகிறவர்களிடத்தில் துரப்பியாசங்கள் சாதாரணமாய்க் கிடையாது.

4. இத்தேசத்திலுள்ள அநேக துர்நடத்தைகள் ஹிந்துமதச் சட்டங்களுக்குச் சார்பானவைகளாயிருக்க, கிறிஸ்துமார்க்கமோ சகலவித துர்நடபடிக்கைகளையும் கண்டிப்பாக விரோதிக்கிறது.

5. கிறிஸ்துமார்க்க அபிவிர்த்தியினால் உண்டான நன்மையும் கிறிஸ்துநாதர் உபதேசத்தினால் ஹிந்துதேசத்தில் விளைந்த பலனும்.

6. கிறிஸ்துமார்க்கம் பரவாத தேசங்களில் துன்மார்க்கம் அதிகரித்துக்கொண்டுவருகிறது. ஆனால் கிறிஸ்துசமயம் பரவிய தேசங்களில் சகல துர்நடக்கைகளும் நாளுக்குநாள் ஒழிந்து போகின்றன. இதினால் இயேசுநாதர் தம் மகத்துவத்தைத் திருஷ்டாந்தப்படுத்துகிறார் ............ 160–187



பக்கம்

## IX. அதிகாரம்

### அனுபவப் பிரமாணத்தைக்கொண்டு இயேசுகிறிஸ்து ஜகத்ரட்சகர் என்று ரூபகாரம்பண்ணல்

1. அனுபவம் முக்கியமானதாகையால் கிறிஸ்துநாதரின் பக்தர்கள் தாம் அடைந்த நன்மையைக்குறித்துச் சாட்சியிடுகையில், அவர்களுடைய சாட்சி அங்கிகரிக்கத்தக்கதே யென்பதற்குச் சந்தேகமில்லை.

2. இயேசுநாதர் முக்கிய சீஷர் இட்ட சாட்சி
போலிகார்ப்பு என்ற பக்திமானின் அனுபவம்
அகுஸ்தீன் என்ற வேதசாஸ்திரியின் சரித்திரம்
கர்னல் கார்டினர் என்பவரின் சங்கதி
பக்தர்கள் சாதாரணமாய்ப் பகரும் சாட்சி. இயேசுநாதர் தயாளத்தை அனுபவித்து தன் கொடுமையைத் துறந்த ஒரு பேதையின் சங்கதி.

3. இயேசுநாதர் எங்கள் பாவங்களை நாசம்பண்ணி, எங்களுக்குப் புதிதான இருதயம் அளித்து, எங்களில் சொல்லக்கூடாத மனச்சமாதானம் உண்டாக்கி, தினந்தோறும் சமயோசித உதவி புரிந்து வருகிறாரென்றும், மரணபயந் தீர்த்து எங்களுக்குத் திடநிச்சய வாக்களித்தாரென்றும் நாங்கள் யாவரும் சந்தேகமின்றிச் சொல்லக்கூடியவர்கள்.

4. இயேசுநாதருக்குத் தெய்வாதிகார மிருந்தாலொழிய, தம் அடியாருக்கு இவ்வித பெரிய வரங்களை அளிக்க முடியாதாகையால், அவர் நமது மத்தியில் நிறைவேற்றிவரும் இவ்வற்புத காரியங்களைப் பார்த்து, அவர் ஜெகத்ரட்சகரென்று நிச்சயிப்பது ...சியம் ............ 188–203

## X. அதிகாரம்

### இயேசுநாதரின் மனிதாவதாரப் புண்ணியங்களைக்கொண்டு அவருடைய தெய்வீகத்தை ரூபகாரம்பண்ணுதல்

இயேசுநாதர் கடவுள் என்று ஒப்புக்கொண்டால்தான், சமஸ்த காரியங்களும் விளங்குமேயன்றி அவர் கடவுள் என்று

ஒப்புக்கொள்ளாதபட்சத்தில் சமஸ்தமும் கருகலும் மறை பொருளுமாகவே யிருக்கும்.

1. இயேசுநாதர் சத்தியமான அவதாரப் புருஷனாகிறபட்சத்தில், அவர் மூலமாய்க் கடவுளுடைய லட்சணங்களை அறிந்து கொள்ளலாம். அவர் நிஜாவதாரி ஆகாதபட்சத்தில் அவரை ஒருக்காலும் அறிந்துகொள்ள முடியாது. இயேசுநாதர் சரித்திரத்தின் வழியாய் கடவுள் நமக்குப் பிதாவென்றும், நம்மில் மட்டற்ற அன்புடையவராயிருக்கிறாரென்றும் உணர்ந்தறிகிறோம்.

2. இயேசுநாதர் மனிதருடைய நிஜஸ்திதியை வெளிப்படுத்தினதினால், அவருடைய அவதாரத்தின் புண்ணிய பலன்களைக் கண்டறியும்போது நாம் எத்தன்மையுள்ளவர்களென்றும் தேவ உதவியினால் நாம் எத்தன்மையுள்ளவர்கள் ஆவோமென்றும் நமக்குத் தெளிவாகும்.

3. இயேசுநாதர் தம்மில் தெய்வீகம் மனுஷீகம் இரண்டும் கலந்தவராய் இருப்பதினால், அவரை அண்டிக்கொள்வதினால் மனிதர் தம் பாவக்கறையைப் போக்கிக் கடவுளுடன் ஐக்கியப்படக் கூடியவர்களாவர்.

இயேசுநாதரின் மரண பலாபலன்.

4. மனிதர் தமக்கு நேரிடும் கஷ்டங்களைச் சகிக்க முடியாமல் வெகுவாய்ப் பிரலாபிக்கிறார்கள். ஆனால் இயேசுநாதரின் சரித்திரத்தை விசாரித்துப் பார்க்கும்போது, கடவுள் அளவற்ற தயவுடையவராய்த் தங்களுடன் பாடு அனுபவிக்கிறவரென்றும் கண்டு கொள்வார்கள். அல்லாமலும் இயேசுநாதர் மரணப்பாடுகளின் புண்ணிய பலன்களைக் கண்டறியும்போது, தங்கள் பாடுகளால் கூட நன்மை விளையுமென்று நிச்சயித்து ஆறுதலடைவார்கள்.

மற்ற மார்க்கங்கள் எல்லாம் அழிந்து குன்றிப்போகின்றன. ஆதலால் கிறிஸ்துநாதரின் திருப்போதனையைச் சங்கரிக்காவிடில் நமக்கெவ்வகை ஆதாரமும் கிடையாது. கிறிஸ்துநாதரின் உபதேசத்தை ஏற்றுக்கொண்டு, அவர் உலகரட்சகரென்று நம்புகிறபட்சத்தில், நமது சந்தேகங்கள் நிவிர்த்தியாகி, நமது ஜனனம் பயன்பெறும் ........................................



பக்கம்

## XI. அதிகாரம்

### ரூபகாரப் பொழிப்பு

கிறிஸ்துநாதருடைய சமயத்தை விசாரணை செய்கிறபோது, சகலவித ரூபகாரங்களையும் ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்யவேண்டும். இவ்விதம் விசாரிக்கும்பொழுது அவை யாவும் ஏகோபித்து இயேசுநாதர் உலகரட்சகரே என்பதை ஸ்திரப்படுத்துகின்றன என்று தெளிவாகும்.

மேற்சொல்லிய ரூபகாரங்களின் சுருக்கம். இயேசுகிறிஸ்துநாதரை நம்பி, அவருக்கு மனதை ஒப்புக்கொடுத்தால், அவர் பாவங்களை நிர்மூலப்பண்ணும் ரட்சகரென்று அனுபவத்தால் தெளிவாகும்.

இயேசுநாதர் ஜெகத்ரட்சகரென்று நிச்சயிக்கையில் நாம் செய்யவேண்டுவதென்ன? ........................................ 224–235

MADRAS

# கிறிஸ்துமார்க்க ரூபகாரங்கள்

## முகவுரை

மிருகஜீவன்கள் தின்று குடித்து சுகமாய்ப் படுத்து அதிலேயே திருப்தியடைகின்றன. ஆனால் மனிதர் எவ்வளவு சந்தோஷங்களை அனுபவித்தபோதிலும், எவ்வளவு கனமாகவும் எவ்வளவு பெருமையாகவும் வாழ்ந்தபோதிலும் அவர்களுக்குத் திருப்தி கிடையாது. அவர்கள் எவ்வளவு அவிவேகிகளாகிலும் கொஞ்சமாகிலும் ஆத்தும விசாரணையுடையவர்களாய் சரீரேச்சைகளுக்கு மேற்பட்ட ஆலோசனைகள் செய்து மனச்சமாதான மடையவேண்டுமென்று பிரயாசப்படுகிறார்கள். இவ்வித ஆத்தும விசாரணை உண்டாவதற்கு இரண்டு காரணங்களுண்டு. **முதலாவது**, மனிதரெல்லாரும் பிரகிருதிகாரியங்களினாலும் மனச்சாட்சி தெரிவிக்கும் சட்டங்களினாலும் தேவனுண்டென்று ஆலோசனைசெய்து தெரிந்துகொள்வது. மனிதர் இவ்விதம் ஆலோசித்துக் கவலையற்றிருக்கிறார்கள். ஆனால் தாங்கள் தேவனுடைய அதிகாரத்துக்குள்ளாகி, அவர் விதித்த விதிப்படி நடக்கக் கடமைப்பட்டிருக்கிறார்களென்று நிச்சயித்து, அந்தத் தேவனுடைய தயவைச் சம்பாதித்துக்கொள்ள அநேகவிதங்களாய்ப் பிரயத்தனம் பண்ணுகிறார்கள். **இரண்டாவது**, மனிதரெல்லாரும் மனச்சாட்சியைக்கொண்டு தாங்கள் நீதிமுறை தவறிப் பாவத்தைச் செய்தவர்களென்று கண்டறிவது. மனிதர் பாவத்தைக்குறித்துப் பலவாறாய் வாதிப்பார்கள். ஆனாலும் பாவமில்லையென்று யாரும் சொல்ல

முடியாது. எல்லாரும் அனுபவிக்கிறவர்களாதலால், சகல ஜனங்களும் தங்கள் பாவநிலைமையைக் கண்டறிந்து அதைக்குறித்து ஆலோசிப்பார்கள். இவ்வாறு சிந்திப்பதால் தம் பாவத்தால் தங்களுக்கும் தேவனுக்கும் ஏதோ ஒருவகை விகற்பம் இருக்கிறதாகவும், அவ்விகற்பம் தோன்றினதால் தேவன் தயைகூராமல் தங்கள்மேல் கோபமுடையவராயிருக்கிறதாகவும் சகல ஜனங்களும் சாதாரணமாக நிச்சயிப்பார்கள். இக்காரணத்தினால் மனிதர் சந்தேகசாகரத்தில் அமிழ்ந்து, தேவனுடைய லட்சணங்களைத் தெரிந்துகொள்ளும் விதம் எப்படியென்றும், தங்களுக்கும் தேவனுக்கும் இடையே குறுக்கிட்ட பாவத்தை நீக்கி தேவதயவை எப்படி சம்பாதித்துக்கொள்ளலாமென்றும் தட்டுகெட்டுத் தடுமாறிப் போராடுகிறார்கள். இவ்வகைப் போராட்டங்களினால், சகலவிதமான மதக்கோட்பாடுகளும் சகலவிதமான மதாசாரங்களும் தோன்றியிருக்கின்றன. **எல்லா மதங்களுக்கும் தேவனிருக்கிறார் என்றும் பாவம் இருக்கின்றதென்றும்** ஒத்துக்கொள்ளுகின்றன. இந்த தாற்பரியங்களில்லாத மதமொன்றாகிலும் கிடையாது.

சகல மார்க்கங்களும் இவ்விதமே ஏதோ ஓர் காரணத்தினாலேயே தோன்றினவைகளாயிருந்தாலும் அவைகளில் அநேக பேதங்கள் உளவென்றுரைக்கச் சந்தேகமில்லை. அவரவர் மதம் அவரவர்களுக்குச் சிரேஷ்டம் என்ற பழமொழியைச் சாதாரணமாக ஒப்புக்கொள்ளவேண்டியதே. நாம் எவ்வளவாக விசாரணை செய்தாலும், மனிதர் தங்களுக்கென்று ஏற்படுத்திக்கொண்ட மதங்கள் எல்லாவற்றையும் குறித்து விவரிக்கவேண்டுமானால் யாருக்கும் ஆயுள்காலம் போதாது. தேவனைக்குறித்து எத்தனையோ விதங்களாக எண்ணுகிறார்கள். தேவனொருவர் இருக்கிறார் என்போர் சிலர், முப்பத்து முக்கோடி தேவர்கள் உளர் என்போர் சிலர். தேவன் களங்கமற்றவரும் சகல பாவங்களையும் அருவருக்கிறவரென்றும் வாதிப்போர் சிலர். தேவர்கள் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், பகை முதலியவற்றிற்குக் கீழ்ப்பட்டு அல்லது உள்ளாகி மனிதரைப்போலவே அநேக பாவகாரியங்களைச் செய்தவர்களென்று சாதிப்போர் பலர். தேவன் பூரண சற்குணரெனக் கூறுவோர் சிலர். அவர் முழுவதும் நிர்க்குணரெனச் சொல்வோர் சிலர். மனிதர் இவ்விதம்



ஒன்றுக்கொன்று விரோதமான அபிப்பிராயங்களைப் பின்பற்றி அவரவர் தாற்பரியப்படி நடந்துகொள்கிறார்கள். அல்லாமலும் தேவனைக்குறித்து மாத்திரமேயன்றி தம்மைக்குறித்தும் மனிதர் நானாவகை அபிப்பிராயமுடையவர்கள். நாம் சுயாதீனமுடையவர்களாய், பாவபுண்ணியங்களை அறிந்து நமது சொந்த சித்தப்படி நடக்கிறவர்களா? அல்லது சுயாதீனமொன்றுமில்லாது யந்திரங்களுக் கொப்பானவர்களாய் தேவாதீனத்தினால் சமஸ்த காரியங்களையும் நிறைவேற்றுகிறவர்களா? நமக்குச் சம்பவிக்கிற கர்மம் நமது பிரயத்தனத்தினாலுண்டானதோ, அல்லது நமது பிரயத்தனமில்லாமல் துர் அதிஷ்டத்தினால் விளைந்ததோ அல்லது பிராப்தித்ததோ என்னும் இவ்வகை விஷயங்களைக்குறித்து மனிதர் பலவித தாற்பரியமுடையவர்களாயிருக்கிறார்கள். தேவனுடைய சுபாவத்தைக்குறித்தும் மனிதருடைய சுபாவத்தைக்குறித்தும் இவ்வளவு வெவ்வேறு அபிப்பிராயங்களிருக்கின்றமையால், மனிதர் மோட்சவழியைக்குறித்து ஏராளமான நானா கோட்பாடுகளைக் கற்பனை பண்ணிக்கொண்டிருப்பார்களென்பதற்குச் சந்தேகமில்லை.

மனிதர் தழுவியிருக்கும் சமயங்களில் இவ்வளவு வித்தியாசமிருக்கின்றமையால், நாம் சகலமதக் கோட்பாடுகளை ஜாக்கிரதையாகப் பரிசோதித்து அவற்றிலுள்ள சத்தியா சத்தியங்களைப் பகுத்தறியவேண்டியது அதிக அவசியமானது. நாம் சத்தியத்தைச் [illegible]க்கொள்ளும்பட்சத்தில் நமக்குப் பயனுண்டாகுமேயொழிய அசத்தியத்தை ஆதாரமாக்குகிறபோது யாதொரு பயனும் கிடைக்காது. இதற்கு தெலுங்கு கவிராயராகிய வேமன்னாவென்பவர் சொல்லியது:—

எத்தனை மதத்தைத் தழுவினாலும் எவ்வளவு ஜெபஞ்செய்தாலும் சத்தியம் அணுவளவாகிலு மிராவிடில் துன்மார்க்கத்தை விடான். சத்தியமுடையவனாயிருப்பதாலேயே புவியில் பிராமண னானேயன்றி வேறல்ல!

மனிதர் இந்தச் சத்தியத்தை அறிந்துணர்வது அரிது. எந்தமார்க்கத்தில் சேர்ந்தாலுஞ் சரிதான். நாம் உறுதிப்பிடி பிடித்து நம்பும் பட்சத்தில் நாம் எவ்விதத்திலுங் கடைத்தேறுவோம் என்ற அபிப்பிராயத்தைக் கையாடி அநேகர் தம்மதாபிப்பிராயங்களை யெவ்வளவேனும் பரிசோதிக்காமல் அதிக கவலையற்றிருக்கிறார்கள். தன் தேக நிலைமையைக்குறித்து, யாரும் இவ்வளவு பைத்திய ஆலோசனை பண்ணார்

கள். தேகத்திற்கு அசௌக்கியம் நேரிடும்சமயத்தில் வைத்தியன் வந்து தேகக்கூறுகளை விசாரிக்காமல் எந்த மருந்து கொடுத்தாலுஞ் சரிதான். பூரணமாய் நம்பிச் சாப்பிட்டால், வியாதி சுகமடையுமென்று சொல்வானாகில் எல்லாருங்கூடி அவனைத் துரத்தமாட்டார்களா? சரீரத்திற்கு நேரிட்ட ரோகத்தைச் சுகப்படுத்தக் கோரினால், சரீரஸ்திதியை வெகு ஜாக்கிரதையாகப் பரிசோதித்து அந்த ரோக லட்சணத்தைச் செவ்வையாக அறிந்து அதற்கேற்ற அவிழ்தம் கண்டுபிடித்து அதற்கு வைத்தியமுறை யெழுதவேண்டும். இவ்விதம் செய்யும்பட்சத்தில் தேவதயவால் அவ்வியாதி தீருமேயன்றி அவ்வித விசாரணைசெய்யாது கையில் கிடைசென்று அல்லது தற்செயலாய் அகப்பட்ட அவிழ்தத்தைச் சாப்பிடும்படி கொடுத்தால், வியாதி சகஜமாய் அதிகரித்து நோயாளிக்குப் பிராணாபாயம் வருவிக்கும். தேகஸ்திதியைக்குறித்து இவ்வளவாய் முயற்சிசெய்கிற நாம் ஆத்தும கதியைக்குறித்து அசட்டையாயிருக்கலாமா? வெவ்வேறு ஔஷதங்களைப் பரிசோதித்து உபயோகிக்கிறதுபோல், வெவ்வேறு மதாபிப்பிராயங்களைப் பரிசோதனைபண்ணி பொய்யானவற்றைத் தள்ளி உபயோகமானவற்றை வசப்படுத்தி அல்லது கைப்பற்றிக்கொள்ளக் கூடாதா? நாம் சேருகிறது பொய் மதமானால், மருந்துக்குப் பதிலாக விஷமுண்டவன் நிலைமை யெவ்வண்ணமோ அவ்வண்ணமே மதங்களில் சேர சேர அல்லது மதங்களைத் தழுவத்தழுவ நாம் வழிவிட்டலைகிறவர்களாகி முழுதுங் குணங்கெட்டவர்களாவோம். இது அதிகத் தெளிவான சங்கதியாகையால், இதைக்குறித்துச் சவிஸ்தாரமாய்ப் பிரசங்கம் பண்ணவேண்டுவதில்லை. 'அவர்கள் கனிகளினால் நீங்கள் அவர்களை அறிவீர்கள்; முட்செடிகளில் திராட்சப்பழங்களையும், முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிறார்களா? அப்படியே நல்ல மரம் எல்லாம் நல்ல கனி கொடுக்கும்; கெட்ட மரமோ கெட்ட கனி கொடுக்கும். நல்லமரங் கெட்ட கனிகளைக் கொடுக்கமாட்டாது. கெட்ட மரம் நல்ல கனிகளைக் கொடுக்கமாட்டாது. நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும். பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! யென்று சொல்



லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை' யென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துநாதர் திருவுளம்பற்றினார். மத். 7. 16–18, 21.

மத ஆராய்ச்சி செய்யும்பொழுது இந்தச் சட்டத்தைக் கைக்கொண்டு விசாரிக்குங்கால் நமக்குச் சத்தியாசத்தியங்கள் தெரியவரும். சத்தியத்தை அனுசரிக்கிறவர்கள் வழக்கமாய் துர்ப்பழக்கங்களை விட்டுவிலகி தேவனிடத்தில் பயபக்தியுடையவர்களாகி நியாயப்படி நடந்துகொள்வார்கள். ஆனால் சத்தியந்தவறி நடந்து தேவனுக்கு இழிவான குணங்களைக் காட்டுகிறவர்கள் அவ்வித தீயகுணங்களைச் சம்பாதித்துக்கொண்டு நியாயவிரோதமாய் ஜீவனம்பண்ணுவார்கள். இப்படியிருக்கின்றமையால் நாம் சகல மதாபிப்பிராயங்களையும் வெகு ஜாக்கிரதையுடன் சீர்தூக்கிப் பார்த்து பரிசோதிப்பது அவசியமென்பதற்குச் சந்தேகமில்லை. உரைகல்லில் உரைக்க உரைக்கப் பசும்பொன் எவ்விதம் மேலும்மேலும் பிரகாசிக்கின்றதோ அவ்விதமே பரிசோதிக்கப் பரிசோதிக்க கிறிஸ்துசமயத்தின் பிரகாசம் வெகுவாய்த் துலங்கும் என்று உறுதியாய் நம்பி கிறிஸ்துநாதரின் பக்தர்கள் இவ்வித விசாரணைக்கு எவ்வளவேனும் பயப்படாமல் தம் மதாபிப்பிராயங்களைச் சகல மனிதருக்கும் தாராளமாய் வெளிப்படுத்துகிறார்கள். ஒரேயொரு ஷரத்துமாத்திரம் வெகு அவசரமானது. அதேதென்னவெனில், கிறிஸ்துமதம் பரிசோதனைசெய்ய ஏற்படுமுன் அதின் முக்கியசாரம் என்னவென்று விசாரித்து அறிந்துகொள்ளவேண்டும் என்பதே. இவ்விதம் செய்யாவிடில் நாம் ஒருசேன நிஜஸ்திதியைக் கைக்கொள்ளாமல் படைச்சால் தவறவிட்ட உழவனைப்போல் வீணாகப் பிரயாசப்படுவோம்.

இது அங்கிகரிக்கத்தக்கதேயென்று யாவரும் ஒத்துக்கொள்வார்கள். ஆனால் கிறிஸ்துமதஸ்தர்கள் அனுசரிக்கிற அபிப்பிராயங்களில் அநேக விகற்பங்களிருக்கின்றமையால் அதின் சாரத்தை அறிந்துகொள்வது அசாத்தியம், என்று சிலர் ஆட்சேபனை செய்வார்கள். இத்தேசத்தில் ஹிந்துக்கள் பலர் சங்கதியைச் செவ்வையாய்க் கிரகிக்காமல் வெவ்வேறு மிஷன்களிலுள்ள வித்தியாசங்களைப் பார்த்து கிறிஸ்துமதமென்றால் என்னவென்று சந்தேகமாய்க் கேட்பார்கள். இந்த ஆட்சேபனையை விசாரித்துப் பார்க்குமளவில் இது அவ்வளவு நியாயமானதல்லவென்று தெளிவாகும். மதசித்தாந்தங்களிலும், கோட்

பாடுகளிலும், மதாசாரங்களிலும் வெவ்வேறு வகுப்பானவரான கிறிஸ்தவர்களுக்குச் சில விகற்பங்களுண்டென்பது வாஸ்தவமானாலும், அவ்வித பேதங்களைச் செம்மையாகப் பரிசோதனைபண்ணினால் அவைகள் அற்பமானவைகளேயன்றி முக்கியமானவைகளல்லவென்று தெளிவாய் விளங்கும். கிறிஸ்துநாதர் பக்தர்களில் எவ்வகுப்பினராயினும் எல்லாரும் ஒருமனப்பட்டு பத்துக்கற்பனைகளையொரு சட்டமாகக் கைக்கொண்டு ஆண்டவர் கற்றுக்கொடுத்த ஜெபத்தை அனுதினமும் உபயோகித்து கிறிஸ்துமார்க்க உபதேசங்களைப் பொழிப்பாய் விவரிக்கிற அப்போஸ்தலர் விசுவாசப்பிரமாணத்தை அங்கீகரித்திருக்கிறார்கள்.

இப்படியிருக்கையில் யாவரும் ஏகோபித்துக் கைக்கொள்ளும் உபதேசங்கள் எவைகளோ அவற்றைச் செம்மையாக விசாரித்துத் தெரிந்துகொண்டால் கிறிஸ்துமார்க்க உபதேசங்களைக் கிரகித்துக் கொள்வதற்கு யாதாமோர் சந்தேகமுமிராது.

நாம் இப்படி விசாரிக்கவேண்டிய அவசரமில்லை. இயேசு கிறிஸ்துநாதர் சரித்திர நூல்கள் நம்மிடமிருக்கின்றன. ஆகையினால் அந்த ஆண்டவருடைய வாக்குக் கிரியைகளினால் அவர் ஸ்தாபித்த மார்க்கத்தின் சாராம்சத்தை நிச்சயமாய் அறிந்துகொள்ளலாம். கிறிஸ்தவர்களில் சிலர் ஒருவேளை துர் அபிப்பிராயங்களைப் பின்பற்றி பொய்யுபதேசங்களைக் கைக்கொள்வார்கள். ஆனால் கிறிஸ்துநாதர் நியமித்த மார்க்கத்தில் பழுது யாதொன்றுங் கிடையாது. அவர் போதித்ததும் தம் சீஷருக்கு நியமித்ததும் சர்வ சத்தியமானவைகளே. ஆனால் மனிதர் கைக்கொள்பவை ஒருக்கால் சரியாயிருக்கும்; பின்னொருக்கால் சரியாயிராது. இயேசுநாதர் அருளிச்செய்த உபதேசங்கள் மனிதருடைய எல்லாப் புத்திக்கு மேற்பட்டதாயிருந்தாலும் அவர் வெகு தெளிவாயும் பூரணமாகவும் போதித்தமையால் கல்லாதவர்களும் அதின் முக்கிய பொருட்களைக் கிரகித்துக்கொள்ளலாம். மனிதர் அதிகமாய்ப் பிரயாசப்பட்டு விசாரிக்கிற தேவனுடைய சுபாவ லட்சணங்களைக்குறித்தும், மனிதருடைய உண்மையான ஸ்திதியைக்குறித்தும், மனிதர் தேவனுடன் ஐக்கியப்படுகிற வழியைக்குறித்தும் அவர் வெகு தெளிவாகப் போதித்தார். அல்லாமலும் அவர் தாம் செய்த உபகாரங்களினால் தேவனுடைய மட்டில்



லாத் தயவைக் காண்பித்துத் தமது தெய்வீக மாட்சிமையால் தேவனுக்கும் மனிதருக்கும் ஊடே குறுக்கிட்ட பாவ மேகத்தைச் சிதறடித்து எல்லா மனிதருக்கும் கர்மம் நிவாரணம் ஆகிற வழியை வெளிப்படுத்தினார். தாம் பாவ பரிகாரியென்றறிந்து, நானே வழியுஞ் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடம் வரமாட்டான் என்று வெளிப்படையாய்த் திருவுளம்பற்றினார்.

கிறிஸ்துமார்க்கத்திற்கு இயேசுகிறிஸ்துநாதரே ஆதாரம். அவர் அவதாரபுருஷனான ஜகத்ரட்சகராயிருக்கும்பட்சத்தில் அந்த மார்க்கம் தழுவத்தக்கதே; அவர் அவதாரமெடுத்துவந்த ரட்சகராயிராதபட்சத்தில் அதற்கு ஆதாரமொன்றுங் கிடையாது. இந்தவிஷயத்தில் கிறிஸ்துமதத்திற்கும் மற்ற மதங்களுக்கும் பெரிய வித்தியாசமுண்டு. மற்ற மதங்களில் மதசித்தாந்தங்களும் மதாசாரங்களும் முக்கியமானவைகள். ஆனால் கிறிஸ்துமார்க்கத்தில் அவை முக்கியமானவையல்ல. மனுஷர்கள் கிறிஸ்துமத உபதேசங்களைக் கைக்கொள்ளுகிறவர்களாயிருந்தபோதிலும் கிறிஸ்து மதாசாரங்களில் பூரண பக்தி வைராக்கியமுடையவர்களாயிருந்தபோதிலும் கிறிஸ்துநாதரின் பக்தர்கள் ஆகமாட்டார்கள். இயேசுகிறிஸ்துநாதரை நம்பி அவரை வேண்டுமென்கிற மனதுடன் பின்செல்பவர் யாரோ அவர்களே கிறிஸ்துநாதரின் உண்மையான பக்தர். கிறிஸ்துமார்க்கத்தை விரோதிக்கிறவர்கள் இதைக் கண்டுகொள்ள முடியாமல் கிறிஸ்துமத சாராம்சத்தை விட்டுவிட்டு அநேக அற்ப சொற்ப சங்கதிகளைக்கொண்டு பைபில் என்னப்பட்ட வேதாகமத்திலும் கிறிஸ்தவர்கள் கையாடிவரும் ஆசாரங்களிலும் குற்றங்குறை கண்டுபிடிக்கப் பிரயாசப்படுகிறார்கள். இது முழுவதும் அப்பிரயோஜனமானது. தடாகத்தில் ஊடுருவக் காணப்படுகிற சூரியமண்டலத்தின் நிழலைச் சிதறவடித்தால் சூரியனுக்கு யாதொரு குறையுண்டாகுமா? தண்ணீர் எடுக்கும் பாத்திரங்கள் உடைந்துபோனால் நதி வற்றிப்போகுமா? பைபில் என்ற வேதாகம நூலில் கிறிஸ்து நிஜசொரூபம் பிரகாசிக்கிறது. ஆகையால் வேதநூலில் சில குறைவுகள் இருந்தபோதிலும் முதற்பொருள் எவ்வளவாயினும் பழுதுபடாது. சகல ஜனங்களின் தாகத்தையுந் தீர்க்கும் ஜீவ ஜலம் கிறிஸ்துநாதரிலிருந்து ஊறி யெங்குமோடிப் பாய்ந்து ஆசாரங்கள் முதலான கருவி

களின்வழியாய் மனிதருக்குச் சித்தியாகின்றது. ஆனாலும் அவ்வகைக் கருவிகளில் ஒருவேளை குறைவுகளிருந்தாலும் கருணாநிதியாகிய அந்தக் கர்த்தாவின் மாட்சிமைக்கு யாதொரு குறைவுமே கிடையாது. ஆகையால் கிறிஸ்துமார்க்கத்தைப் பரிசோதனை பண்ணுகையில் கிறிஸ்துநாதர் சரித்திரத்தைக்கொண்டு அவர் செய்த காரியங்களையும் அவர் நியமித்த மார்க்கத்தையும் விசாரிக்க வேண்டுவதேயொழிய மற்ற சங்கதிகளை விசாரிப்பதினால் பயனொன்றுமில்லை. இயேசுகிறிஸ்துநாதரை நம்புவதும் அந்நாதருக்கு மனதை ஒப்படைக்கிறதும் அவரை நேசித்துச் சேவிக்கிறதுமே கிறிஸ்துமார்க்கம்.

இந்த அனுபவமடைந்தவர்கள், கிறிஸ்து மதாசாரத்தைக் கிரகித்து அதின் சத்தியத்தைச் செவ்வையாகக் கண்டறிவார்களேயொழிய மற்றபேர் அதின் நிச்சயத்தைக் கண்டுகொள்ள முடியாமல் எப்போதுஞ் சந்தேகித்து இடறலடைகிறவர்களாகவே யிருப்பார்கள். இப்படியிருக்கையில் கிறிஸ்துமத அத்தாட்சிகளை யெடுத்துரைத்தாலும் லாபமென்ன? தழுவாதவர்கள் அந்த மதத்தைச் செம்மையாகக் கிரகிக்கக்கூடாதபட்சத்தில் அதைப் பரிசோதித்து விசாரணைபண்ணுவதாலாய பயனென்ன? நாம் பின்னால் கூறிய உதாரணத்தைக் கொண்டு விசாரிக்கும்பொழுது இதற்குச் சமாதானமுண்டாகும். வியாதிக்காரர் வைத்தியனிடம் வருகையில் அவரவர் தேகநிலைமையைப் பரிசோதித்து வைத்தியமுறை யெழுதுவான் (Prescription). ஆனால் அந்த முறையை வெறுமையாக வாசித்துப்பார்த்தால் அதிலுள்ள அவிழ்தத்தின் மேன்மையை யாரும் நன்றாக அறியார்கள். அந்த அவிழ்தத்தைச் சாப்பிட்டு அதினால் எப்போது சுகமடைகிறார்களோ அப்போதுதான் அவர்களுக்கு அதின் சங்கதி உறுதியாகத் தெரியவரும். இவ்விதம் அனுபவத்தில் கண்டறியும்வரையில் பூரண நிச்சயமுண்டாகாது. ஆனால் அனுபவமில்லாவிடினும் ரசவாத சாஸ்திரத்தைக்கொண்டு இந்த அவிழ்தத்தின் லட்சணங்களை ஓர் அளவாய்த் தெரிந்துகொள்ளலாகும். இதுவுமன்றி தங்களுக்கு அனுபவம் இல்லாமற்போனாலும் முன்னமே அந்த மருந்தைச் சாப்பிட்டு சுகமடைந்தவர்களிடத்தில் விசாரித்து அவர்களால் அதினுடைய சிரேஷ்டத்தை யறிந்துகொண்டு அதைச் சாப்பிடுவதற்குத் தைரியமடையலாம். வியாதியஸ்தர் சந்தேகப்பட்டால் வைத்தியர்கள் வழக்க



மாக இப்படிப்பட்ட திருஷ்டாந்தங்களை யெடுத்துரைத்து அவர்கள் சந்தேகத்தைத் தீர்ப்பார்களல்லவா? முதலில் தேகஸ்திதியைக்கொண்டு அதிலென்னென்ன குறைவுகளிருக்கின்றனவென்றும், அக்குறைவுகள் எந்தவழியால் நீங்குமென்றும் இவை யாவையும் விவரித்துரைப்பார்கள். அதின்பிறகு தான் கொடுக்கும் மருந்தின் லட்சணங்களை விவரித்து அது எவ்வளவாயினும் பொல்லாப்புண்டாக்குவது அல்லவென்றும், அதின் மகத்துவத்தினால் தேகத்திற்கு நேரிட்ட நோய்ப்பிணிகள் சாதாரணமாய்த் தொலைந்துபோமென்றுந் தைரியஞ் சொல்வார்கள். கடைசியாக பூரண நம்பிக்கை யுண்டாகும்படி அந்த மருந்தினால் ரோக நிவாரண மடைந்தவர்களைக் காட்டி அதினுடைய மேன்மையை அவ்விதமாகத் திருஷ்டாந்தப்படுத்துவார்கள்.

இவ்வித திருஷ்டாந்தங்களை யெடுத்துக்காட்டுவதால் பிணியாளிகள் சந்தேகங்களை விட்டுவிட்டு அவிழ்தத்தைச் சாப்பிட்டு தமக்குண்டான அனுபவத்தினால் அதினுடைய சிரேஷ்டத்தைப் பூரணமாய் அறிவார்கள். தேகப்பிணிகளைச் சுகப்படுத்துகிற அவிழ்த லட்சணங்களை எவ்விதம் பரிட்சைபண்ணி தெரிந்துகொள்ளுகிறோமோ அவ்விதமே நமக்கு நேரிட்ட பாவத்தைப் போக்கும் ரட்சகருடைய சங்கதியை விசாரித்துத் தெரிந்துகொள்ளலாம். அனுபவம் பிரதானமாகையால் அந்த ரட்சகருடைய தயவை அனுபவித்தவர்களுக்குமாத்திரம் பூரண நிச்சயமுண்டு. என்றாலும் அனுபவியாதவர்களுக்கு இவ்வகைப் பூரண நிச்சயமில்லாவிடினும் அவர்கள் அந்த ரட்சகருடைய லட்சணங்களைப் பரிசோதனைபண்ணி அவர் பாவங்களைப் பரிகரிக்கிற ரட்சகர்தானா அல்லவா என்பதை அநேக திருஷ்டாந்தங்களினால் அறிந்துகொள்ளலாம்.

மனிதர் சாதாரணமாக இயேசுகிறிஸ்துநாதரைப்பற்றி விசாரிக்காமல் அவர்விஷயத்தில் வெகு நிர்விசாரிகளாயிருக்கிறார்கள். இது அவிவேகம். சில காரியங்கள் நமக்கு அனாவசியமானவை யாகையால் நாம் அவற்றை விசாரித்தாலும் விசாரிக்காமற்போனாலும் நமக்கு அதினால் லாப நஷ்ட முண்டாகாது. பூர்வகாலத்தில் அரசர்கள் எப்படி அரசாட்சி செய்தார்களென்றும், இக்காலத்தில் நானாதேசங்களில் எவ்வகைச் சட்டங்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனவென்றும் விசாரிக்கலாம். ஆயினும் இவைகள் அனுபவ சம்பந்தமானவைகளல்ல.

ஆகையால் நாம் இவைகளைக் கிரகித்தாலும் கிரகிக்காமற்போனாலும் அவ்வளவு அவசியமில்லை. நம்மை ஆளுகிற அதிகாரிகள் எப்படிப் பட்டவர்களென்றும், அவர்களமைத்த சட்டங்கள் எப்படிப்பட்டவைகளென்றும் அறிகிற இப்படிப்பட்ட சங்கதிகள் மிகவும் அவசியமானவைகள். நாமவைகளைச் செவ்வையாக அறியாதபட்சத்தில் ஒருவேளை தெரிந்தும் தெரியாமலும் சட்டத்தை மீறி அதிகாரிகள் முன்பாகக் குற்றவாளிகளாவோம். இப்படிக் குற்றத்தில் அகப்படும் பட்சத்தில் தெரியாமற் செய்தோமென்று சொன்னாலும் பயனில்லை. எவ்வளவு அறிவீனர்களாயினும் அதிகாரிகள் நியமித்த சட்டங்களை விசாரித்தறிந்துகொள்ளலாம். ஆகையால் தக்கபடி விசாரியாதவர்கள் துரோகிகளென்னப்பட்டு அதிகாரிகள் விதிக்கும் தண்டனைக்கு உள்ளாகும்படி நேரிடும். இந்த நீதியின்படி விசாரணைபண்ணினால் கிறிஸ்துமத விசாரணை முழுவதும் அவசியமானதென்று தெளிவாகும். கிறிஸ்துமார்க்கம் சத்தியமானதாயிருந்தால், இயேசுகிறிஸ்துநாதர் மனிதாவதாரமெடுத்து நம்மெல்லாருக்காகவும் தன் ஜீவனை மரணத்திற் கொப்புக்கொடுத்து நமக்கு மோட்சவழியை நியமித்த லோகரட்சகர் ஆகையால், நாமெல்லாரும் அவருடைய மார்க்கத்தில் சேர்ந்து அவரிடத்தில் பக்தியுடையவர்களாகி அவருக்கு மனதாரப் பணிவிடை செய்வதற்குக் கடமைப்பட்டவர்களாயிருக்கிறோமென்பதற்குச் சந்தேகமேயில்லை. இவ்வித உத்தரவாதத்தை அசட்டைபண்ணி இரட்சகருடைய மட்டற்ற தயவை அவமதிக்கிறவர்கள் அதிக துரோகிகளா யிருப்பார்களல்லவா? நமக்கு இவ்வளவு உபகாரஞ்செய்தவரை அசட்டைபண்ணி அவர் நியமித்த மார்க்கத்தில் சேராவிடில் நரகவாதைகளுக்குத் தப்பி மோட்சகதி எப்படி அடைவோம். இயேசுகிறிஸ்துநாதர் உலகரட்சகரா யிராதபட்சத்தில் அவரைப்பற்றி நமக்குக் கவலையொன்றுமில்லை. ஆனால் அவர் உலகரட்சகராய் இருக்கும்பட்சத்தில் அவருடைய மார்க்கத்தில் சேர்ந்து அவர்நிமித்தம் யாவற்றையும் வெறுத்துத் தள்ளி எவ்வித வாதையையாயினும் எவ்வித கஷ்டங்களையாயினும் அநுபவிக்கிறதற்குக் கடமைப்பட்டவர்களென்று சொல்வதற்குச் சந்தேக மொன்றுமில்லை. கிறிஸ்துமத விசாரணைவிஷயத்தில் இகசுகமும் பரசுகமும் இரண்டும் அடங்கியிருக்கின்றன. ஆகையினால் ஒவ்வொருவனும் பட்ச



பாதத்தை முழுவதுந் தள்ளிவிட்டு அதிக முயற்சியுடன் இந்த மதாசாரத்தை எவ்விதத்தினுந் தெரிந்துகொள்ளவேணும்.

நாம் மேலே பார்த்தபடியே கிறிஸ்துநாதரே கிறிஸ்து மதாசாரமாகையால் மற்ற சங்கதிகளைத் தள்ளி இயேசுகிறிஸ்துநாதரின் சரித்திரத்தைமாத்திரம் வெகு ஜாக்கிரதையாகப் பரிசோதித்து அவர் பாவவிமோசனம் அநுக்கிரகிக்கிற ஜகத்ரட்சகரென்று நம்புவதற்கு ஆதாரமுண்டா இல்லையாவென்று விசாரிப்போம். நோயாளிகள் வாதையை நீக்கும் ஔஷதம் தேடுகிறவர்கள், அந்தப் பிணியாளிகள் தேகஸ்திதியைக்குறித்து எவ்விதம் முன்னாகவே விசாரிக்கவேண்டுமோ, அவ்விதமே மதவிசாரணைக்கு ஏற்படுகிறவர்கள் மனிதர் ஸ்திதியைக் குறித்து முதலிலேயே விசாரிக்கவேண்டும். நாம் இவ்விதம் விசாரிக்கும்போது எல்லா மனிதரும் தெய்வீக லட்சணங்களைச் சிறிதளவாகிலும் ஆராய்ச்சிபண்ணி தெரிந்துகொண்டவர்களாவார்கள். ஆனால் பாவாந்தகாரம் சுற்றிக்கொள்வதினால் சந்தேக சாகரத்தில் அமிழ்ந்தவர்களாகி அநேக துர் அபிப்பிராயங்களைச் சார்ந்திருக்கிறார்கள். ஆகையினால் தேவன் தம்மைத்தாமே வெளிப்படுத்தினாலொழிய அவர்கள் அவருடைய குணத்தைச் செவ்வையாகக் கிரகித்து பாவநிவாரணம் பெற்றுக்கொள்ள முடியாதவர்களென்று தெளிவாகும். பூர்வகாலத்திலிருந்து மனிதர் இந்த சங்கதியைக் கிரகித்து தங்கள் சந்தேகங்களை நீக்கி தங்கள் பாவங்களை நாசமாக்கும் ரட்சகருக்காகக் காத்திருக்கிறார்கள். சாஸ்திர நூல்களையாகிலும் மனிதருடைய வழக்கமான அபிப்பிராயங்களையாகிலும் விசாரிக்குமிடத்தில் காணப்படாத பரமதேவன் எப்போதோ வோர்காலத்தில் எப்படியாகிலும் நராவதாரமெடுத்து வருவாரென்கிற நம்பிக்கை சகல ஜனங்களிலும் பிரபலமானதென்று உறுதியாய்த் தெரியவரும். அல்லாமலும் தெய்வீக லட்சணங்களை விசாரித்தால் தேவன் மனிதருடைய ரட்சிப்புக்காக நராவதாரமெடுத்து வருவதற்குத் தடையொன்றுமே கிடையாதென்று தெளிவாகும்.

தேவன் மனிதாவதாரமெடுத்து வந்தாலொழிய மனிதருக்கு மோட்சமில்லை. அவர் அவதாரமெடுத்து வருவதற்கு எவ்வளவாகிலுந் தடையிராது. இவ்விரு சங்கதிகளையும் நிச்சயித்துக்கொண்டபிறகு நாம் இயேசுகிறிஸ்துநாதர் சரித்திரத்தை யெடுத்து விசாரித்-

தால் அவர் சத்தியத்தின் அவதாரபுருஷனாகி சகல மனிதருக்கும் பாவ பரிகாரமளிக்கும் ரட்சகரென்று அநேக ரூபகாரங்களினால் நமக்கு நிச்சயமாகும். இயேசுநாதர் மனிதனாய்மாத்திரமிருந்தால் அவர் சரித்திரம் முழுமையும் அறிவுக்கெட்டாததாய் இருக்கும். அவருடைய சுபாவ லட்சணங்கள் தெய்வீக சம்பந்தமான லட்சணங்களேயன்றி பாவம்நிறைந்த மனிதருடைய லட்சணங்களல்ல. அவர் தம்மைக்குறித்துக் கொடுத்த சாட்சியை விசாரித்தால், தாம் அவதரித்து வந்த ரட்சகரென்றும், காணப்படாத தேவனை வெளிப்படுத்துகிறதற்கும், எல்லா மனிதருக்கும் நீதியின் பிரமாணங்களை நியமிக்கிறதற்கும், தங்கள் பாவங்களை அறிக்கையிடுகிறவர்களுக்கு மன்னித்து மற்றவர்களுக்கு நியாயதண்டனை விதிக்கிறதற்கும் சர்வாதிகாரமுடையவரென்றும் அவர் பரிஷ்காரமாய்ச் சொல்லிக்கொண்டுவந்ததாக வெளியாகும். மேலும் தமது வாக்கு நம்பிக்கைக்குரியது என்று ரூபிக்கிறதற்கு அவர் தம் மகத்துவத்தை அநேகவிதமாய்க் காண்பித்துக்கொண்டு வந்தார். மனிதர் ஞானத்திற்கு மேற்பட்டதாய்ப் போதித்ததினாலும், மனிதர் செய்யமுடியாத அற்புத காரியங்களை நிறைவேற்றியதினாலும், தம்மை மரணத்துக் கொப்புக்கொடுத்து மூன்று தினங்களில் திரும்ப ஜீவனையடைந்து கல்லறையிலிருந்து ஜீவனுடையவராய் எழுந்ததினாலும் அவர் தம் வாக்கை ஸ்திரப்படுத்தினவரானார். அன்றியும் இந்த வுலகத்தைவிட்டுப் பரமேறியபிறகு அவர் வாக்கெல்லாம் நிறைவேறினதாகவும் அவர் தம் சத்துருக்களெல்லாரையும் ஜெயித்து எல்லா மனிதரையும் தன்னண்டை யிழுத்துக்கொண்டு தம் ராஜ்யத்தைச் சர்வலோகத்தினும் பரவச்செய்து வந்ததாகவும் அநேக திருஷ்டாந்தங்களுண்டு. இதையல்லாமல் அனுபவத்தைப்பற்றி விசாரிக்குங்கால் அவர் தன்னைத் தஞ்சமாகக் கொண்டவர்களுடைய பாவங்களை நீக்கி அவர்களுக்கு மனச்சமாதானம் அளிக்கிறாரென்பதை வாஸ்தவமென்று ஒப்புக்கொள்ளாதிருக்க விதியில்லை. இவ்வித விஷயங்கள் அனைத்தையும் விசாரித்தபிறகு அவரது அவதாரத்தின் புண்ணியபலனை விசாரித்துப் பார்க்கையில், அவர் எல்லாமனிதரும் கோருகிற சற்குருவென்றும், மூன்று லோகங்களையு மாளுகிற ஆண்டவரென்றும், சகல பாவங்களையும் நாசம்பண்ணும் பாவ பரிகாரி என்றும் மனிதரை தேவனுடன் ஐக்கியப்படுத்துகிற வழியென்றும் நாம் நிச்சயிப்பது அவ



சியமென்று தெளிவாகும். இவ்விதம் நிச்சயித்துக்கொண்டபிறகு நாம் துர் அபிப்பிராயங்களைக் கண்டித்து முன்னுள்ள மதாபிமானங்களையும் குலாபிமானங்களையும் வெறுத்துத் தள்ளி பாவமில்லாதவராகிய அந்த ரட்சகருக்கு மனதைப் படைத்து அவர் நியமித்த மார்க்கத்தை முழுமனதோடுந் தழுவினால் நாம் பாவ விமோசனம் பெற்று அந்த ரட்சகருடைய தெய்வீக உதவியினால் களங்கமில்லா மனமுடையவர்களாகி சகல துர்க்குணங்களையும் படிப்படியாய் விட்டு அவருக்கொப்பான ரூபத்தைத் தரித்துக்கொண்டு பரமானந்தத்தைப் பெறுவோம்.

# அவதார உபதேசம் விசுவாசிக்கத் தகுந்ததா?

## I. அதிகாரம்

### தேவன் அவதரித்து வருவாரென்று நம்ப ஆதாரமுண்டா?

யாதோமோர் ஆச்சரியகாரியம் நடந்ததோ இல்லையோவென்று விசாரிக்குமிடத்தில், நாம் சாதாரணமாக உள்ள ஸ்திதியைக்கொண்டு, அவ்வகை காரியங் கூடியதோ கூடாததோ, கூடியபட்சத்தில் அதற்குக் காரணம் ஏதாகிலுமுண்டா இல்லையா, காரணம் இருக்கும்பட்சத்தில், அவ்விதம் நடக்குமென்று நம்புவதற்குத் தகுந்த ஆதாரம் இருக்குமோ இராதோவென்று முன்னமே விசாரித்து நிச்சயித்து, பிறகு அக்காரியத்தைக்குறித்த சாட்சியைப் பரிசோதிப்போம். வியாஜ்ய காரியங்கள் விஷயத்திலும், சாதாரண சங்கதிகள் விஷயத்திலும் இவ்வண்ணம் விசாரிக்கிறதுண்டு. ஒரு விஷயம் கூடாமையென்று நிச்சயிக்கும்பட்சத்தில், அது நடந்ததென்று எத்தனைபேர் சாட்சி கொடுத்தாலும், அவர்கள் சாட்சி அங்கிகரிக்கத் தகாதவையென்று எண்ணுவோம். இதுவுமன்றி ஒரு காரியங் கூடியதாயினும், அதற்குத் தகுந்த காரண மிருந்தாலொழிய, எந்த சாட்சியையாகிலும் ஏற்றுக்கொள்ளுகிறதற்கு நமக்கு மனமிராது. அல்லாமலும், அது கூடியதாயிருந்து, அதற்குப் போதுமான காரணமிருந்தாலும், அக்காலத்தில் அது நடக்குமென்று நம்புகிறதற்குக் கொஞ்சமாகிலும் ஆதாரம் இருந்தாலொழிய, நாம் சாதாரணமாகச் சந்தேகிப்போம். அதிசயமான காரியங்களைக்குறித்து நாம் விசாரிக்கும்போது, இவ்வகை சந்தேகங்கள்



தோன்றினாலும், நாம் விசாரிக்கையில் சகலமும் அனுகூலமாயிருந்தால், அவை நடந்திருக்கலாமென்று சாதாரணமாய் ஒத்துக்கொள்வோம். எந்தக்காரியங் கூடியதென்று நிச்சயித்து, அதற்குத் தகுந்த காரணங் கண்டுபிடித்து, இவ்விதம் நடக்குமென்று நம்புவதற்கு ஆதாரமிருக்கிறதென்று பாவித்துக்கொள்வோமோ, அக்காரியத்தைக்குறித்த சாட்சியை அங்கிகரிக்கிறதற்குச் சந்தேகமிராது. இயேசுகிறிஸ்துநாதர் அவதரித்தவர்தானா இல்லையாவென்று விசாரிக்கும்பொழுது, நாம் இவ்விதமாகவே விசாரிக்கவேண்டும். ஆகையால் இவருடைய மகத்துவத்துக்குரிய சாட்சியை விசாரிக்குமுன்னர், நாம் உண்மையான நிலைமையைக்கொண்டு, தேவன் நராவதாரம் எடுத்துவருவது கூடியதோ கூடாததோ, அவர் அப்படி வருகிறதற்குக் காரணம் இருக்கிறதோ இல்லையோ, மனிதருடைய நிலைமையைப் பார்க்குங்கால், அவர் நிஜமாக வருவாரென்று ஆலோசிக்கிறதற்கு ஆதாரம் இருக்கிறதா இல்லையாவென்று ஜாக்கிரதையாக விசாரித்துத் தெரிந்துகொள்வது அதிக உத்தமமானது.

ஒரே தேவனுண்டென்கிற கொள்கையையுடைய சமயத்தைச் சேர்ந்த சிலர், அவதார உபதேசத்தைத் தள்ளி, தேவன் நராவதாரந் தரித்து வருவது கூடாதகாரியமென்று வாதிப்பார்கள். இத்தேசத்தில், இந்துமதத்திலுள்ள துர் நடக்கைகளைத் தள்ளி, ஆவியான ஏக தேவனை ஆராதிக்கிற பிரமசமாஜ சமயத்தார், இவ்விதக் கொள்கையுடையவர்கள். அவர்களும், இன்னும் வேறு மதஸ்தர்களில் சிலரும், தேவனுடைய அளவிடப்படாத லட்சணத்தைக்கொண்டு, காணப்படாதவரும், அளவிடப்படாதவரும், சுயம்புவானவரும், சர்வவியாபகரும், சர்வஞானமு முள்ளவருமான அத்தேவன், தம்மைக் காலஸ்தல நிபந்தனைகளுக் குள்ளாக்கி எப்படி நரரூபம் தரித்துக்கொள்வாரென்றும், அவர் நரவேடம் பூண்டால் அவரது தெய்வீகத்திற்குப் பழுதுண்டாகி, அவரது அளவிடப்படாமை நீங்கிப்போகுமென்றும் சாதிப்பார்கள். இப்படி வாதிக்கிறவர்கள் ஒரு சங்கதியை மறந்து இப்படி வாதிக்கிறார்கள். ஒருவன் தன் அனுமதியின்றி கட்டுப்பாட்டுக் குள்ளாக்கப்பட்டால், அவன் அந்நிபந்தனைக் குள்ளானவனாகி பூரணனாக மாட்டானேயன்றி, ஒருவன் தகுந்த காரணத்தினால் தானுத்தேசித்துக்கொண்டு எவ்வளவு நிபந்தனைகளுக்குத் தன்னை உட்

படுத்திக்கொண்டாலும், அவனுக்குக் குறைவொன்றுமிராது. எக்காலத்திலும் எவ்விடங்களிலும் ஒளிகொடுக்கும் சூரியன், நீர்த்துளியில் தன் நிஜரூபத்தைக் காட்டுகிறதுபோல, பரஞ்ஜோதியான பகவான், தம் இயற்கைப் பிரகாசத்தை நரரூபத்தில் காண்பிக்கக்கூடாதா? மனிதஜாதியைச் சிருஷ்டித்தபோது, தேவன் அவர்களைத் தம் சாயலில் சிருஷ்டித்தமையால், தேவ சுபாவத்திற்கும் நர சுபாவத்திற்கும் அதிக சம்பந்தம் இருக்கிறதென்று சொல்வதற்குச் சந்தேகமில்லை. ஆகையினால், தேவன் ஒருவேளை நரரூபந்தரிக்கத் திருவுளங்கொள்ளும்பட்சத்தில், அவர் தம்மியற்கை லட்சணங்கள் யாவையுந் துறந்து வேறு லட்சணங்களைப் பூண்டுகொள்ள அவசியமில்லையானாலும், தமக்கு இயல்பாய் உரிய லட்சணங்களைத் தாழ்த்திக்கொண்டு தம்மைக் காலஸ்தல நிபந்தனைக் குள்ளாக்கிக்கொள்ளும்பட்சத்தில் அந்நோக்கம் சித்திபெறும். இவ்வகைக் காரியங் கைகூடிவருகிற வழி பெரும்பாலும் நமக்கு விளங்காதாயினும், தேவன் இவ்வாறு செய்ய உத்தேசிக்கும்பட்சத்தில், அவர் தாம் கொண்ட கொள்கையை நிறைவேற்றுவதற்குத் தடையொன்றுமில்லை யென்று ஒத்துக்கொள்ளாதிருக்க இடமில்லை.

மனுமக்கள் ஸ்திதியைப் பரிசோதனைசெய்து பார்க்குங்கால், தேவன் இவ்வகை மேலான வழியொன்று ஏற்படுத்தினாலொழிய, மனுக்குலம் அவருடைய நிஜ சுபாவத்தை யறியாமல், எக்காலமும் பாவாந்தகாரத்தில் சிக்கி, நற்கதியடைய முடியாமல், அதிக அவஸ்தைப்படும் என்றே அநேக திருஷ்டாந்தங்களினால் தெளிவாகும். தேவன் உண்டென்று மனிதரெல்லாருக்கும் சாதாரணமாய்த் தெரிந்தாலும், தம்மைச் சூழ்ந்திருக்கும் பாவாந்தகாரத்திலிருந்து விடுதலை அடைய மாளாமல், சந்தேக சாகரத்தில் மூழ்கியிருக்கிறார்கள். நானாதேசங்களிலுள்ள மதாசாரங்களையும் மதோபதேசங்களையும் பரிசோதிக்கையில், மானிடர் புண்ணியநெறி தவறி எவ்வளவு மதிகேடராயிருக்கிறார்களென்பது நமக்குத் தெளிவாய் விளங்கும். சத்திய வேதம் கூறுகிறபடி தங்கள் சிந்தனையில் வீணரானார்கள். உணர்வில்லாத அவர்கள் இருதயம் இருளடைந்தது. 'அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பைத்தியக்காரராகி, அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள் மிருகங்கள்



ஊரும்பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள். தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள்.' ரோம. 1. 22, 23, 25.

இப்பாவ வல்லிருள் மனிதரெல்லாரையும் சூழுகிறது. இப்பாரத கண்டத்தில் மிலேச்சர்மாத்திரமேயன்றி சகல சாஸ்திரங்களிலும் பயின்று தேறின புலவருங்கூட தம்மைச் சிருஷ்டித்த சருவேஸ்வரனைத் தள்ளி அவருக்குப் பதிலாய் அநேக தேவர்களைச் சேவித்து அத்தேவர்களுக்கு எத்தனையோ இழிகுணங்களைச் சூட்டி, அவர்கள் சொல்லவொண்ணா தீய கிரியைகளைச் செய்ததாகக் கணக்கில்லா புராணக்கதைகளைக் கற்பனைபண்ணி விளம்பரம் செய்திருக்கிறார்களல்லவா? மனிதர் இவ்வகை துரப்பியாசங்களைக் கையாடுவது ஆச்சரியமல்ல, கண்ணில் சதை வளர்ந்தால் அதின் திருஷ்டிக்குச் சகல வஸ்துக்களும் வெகு விகாரமாய்க் காணுமேயன்றி ஒன்றாயினும் சரிவரக் காணப்படாது. இவ்விதமே பாவக்கறைப்பிடித்த மனதிற்கு ஒன்றுஞ் சரியாய்த் தோன்றாது. பாவக்கல்மிஷம் இருப்பதாலும், அதின் கறை சர்வ ஸ்தானத்திலும் பரவியிருப்பதினாலும், சகல மனிதரும் தேவனுடைய லட்சணங்களைச் சரிவர அறிந்துகொள்ள முடியாமல், அவரது நிகரற்ற திவ்ய லட்சணங்களோடு களங்கத்தைக் கலவாதிருக்கமாட்டார்கள். இக்குறைவு மனிதர் யாவருக்கும் உளதாகையால் கற்றாராயினும் கல்லாராயினும், தபோநிதிகளாயினும் தேவனுடைய நிஜ சுபாவத்தைச் செம்மையாகத் தெரிந்துகொள்ள ஏலாதவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் அரும்பிரயாசத்துடன் சீர்தூக்கிப் பார்க்குமளவில், அவரது தன்மையை நிச்சயித்து, அவருடைய குணாதிசயங்களைச் சிறிதளவேனும் தெரிந்துகொள்வார்களேயன்றி, மற்றப்படி தங்கள் துர் அபிப்பிராயங்களைக் கண்டித்து, தங்கள் சந்தேகங்களை நிவிர்த்திசெய்து அவருடைய நிஜஸ்திதியை உள்ளபடி நிச்சயிப்பது அவர்கள் சக்திக்கு மேலானவிஷயம். நமது துர்க்கிரியைகளினால் தேவனுடைய சந்நிதியை மறைத்திருக்கிறோம். அதை மறைத்த திரையை நீக்க நமக்குப் பலம் போதாமையால் தேவனே அதை நீக்கித் தம்மைத்தாம் வெளிப்படுத்தினாலொழிய, நமது பாவாந்தகாரம் என்றென்றைக்கும் தொலையவே தொலையாது.

அல்லாமலும் தேவனை அறிகிறதுமாத்திரமல்லாமல், அவர் தயவைச் சம்பாதித்து அவருடன் ஐக்கியப்பட்டாலொழிய நமது ஜனனம் பயன்பெறாது. தேவனுடைய கட்டளைகளை மீறி துராசைகளுக்கிடங்கொடுத்து அக்கிரமமாக நடப்பதினால், நாமெல்லாரும் தேவனுக்குத் தூரயானவர்களாயிருக்கிறோம். நமது பிறவி முழுவதும் வீணானதால், நாமெவ்வளவு சுகபோகமாய் வாழ்ந்தாலும், எவ்வளவு பெருங்கீர்த்தியுமாய் ஜீவித்தாலும், நாம் தேடிக்கொண்ட கர்மம் வேர்ப்பூச்சியைப்போல் நமதுள்ளத்தை அரித்து நம்மைக் கொடுமையாக வாதிக்கும். இவ்வாதையைச் சகிக்கத் தாளாமல் அதை யெப்படியாயினும் நிவாரணஞ்செய்து அமைதி அடைய யத்தனித்து கொசுகு கடித்த ஆடுகளைப்போல் முன்னும் பின்னுமா யோடி பலவாறாகப் போராடுகிறோமேயொழிய நமது பிரயத்தனங்கள் யாவும் பிரயோஜனமானவை அல்ல. ஆகையால் நாம் அப்போதப்போது மிகுந்த வியாகுலப்பட்டு ஓலமிட்டு, 'நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்' (ரோம. 7. 24.) என்று பவுல் என்னும் பக்தன் சொல்லியவண்ணம் புலம்பி தவிக்கிறோம். இதைப்பற்றி நாராயணசதகம் என்னும் நூலாசிரியன் தன் நிர்ப்பாக்கியஸ்திதியை உணர்ந்து ஆசைப்பிசாசு என்னைப் பிடித்து வைராக்கியவாசனை சேரவிடாமல் வாதிக்கிறது. நானென்ன செய்வேன் நாராயணா! என்று தேவனை நோக்கி முறையிட்டுவந்தார்.

நமது சொந்த பிரயத்தனங்களினால் பாசக்கயிறுகளை அறுத்து, நம்மைக் கீழ்ப்படுத்தின காம, குரோத, லோப, மோக, மத, மாச்சரியம் என்னும் தீயகுணங்களை அடக்குவது கூடாமை யென்பது திண்ணம். பாவவேஷத்தால் நாம் முற்றிலும் பலவீனர்களாகி சூம்பின தேகிகள்போல் கைகால் முடங்கி நடமாடமாளாமல் கர்மத்தில் விழுந்து சிக்கிக்கொண்டிருக்கிறோம். ஒருபட்சத்தில் மாண்டவருக்கு ஒப்பானவர்களேயெனத் தகும். இப்படி இருப்பதினால், மனிதர் பாவபாரத்தைச் சுமக்க முடியாமல், கர்ம நிவாரணத்திற்காகப் பலவாறாய்ப் பிரயாசப்பட்டுவருகிறார்கள். அவர்கள் கையாடும் பற்பல வழிவகைகள் யாவையும் விவரித்துரைக்க அவசியமில்லை. சகல தேசத்தாரும், ஜெபத்தினாலும், உபவாசத்தினாலும், கற்பனைகளாலும் தேவதயவைத் தேடிக்கொள்வதற்குப் பிரயத்



தனிப்பார்களென்பது சாதாரணமாய்த் தெரிந்தகாரியமே. இதுவுமன்றி அநேகர் தம் பாவங்களுக்குப் பிராயச்சித்தம் எவ்வாற்றாலும் செய்யவேண்டுமென்று கருதி தம் ஜீவனுக்கு மாறாய் யாதாமோர் மிருகத்தை வெட்டி பலி செலுத்துவார்கள். சிலர் இவ்வித யாகம் போதாதென்றெண்ணி மிருகஜீவனை அற்பமாகப் பாவித்து தாம் செய்த அபராதங்களுக்காக ஒரு மனிதனைக் கொன்று நரபலி யிடுவார்கள். பூர்வகாலத்தில் சில தேசங்களில், ஜனங்கள் தம் சிரேஷ்ட புதல்வரை இவ்வாறே தேவனுக்குப் பலியிட்டுவந்தார்கள். இவ்வகை வழக்கங்களைச் சீர்தூக்கி ஆராயுங்கால் அவை யாவும் பரிபூரணமானவை யல்லவென்று விளங்கும். அவற்றால் இம்மட்டும் செய்த பாவங்கள் யாவும் எவ்வளவேனும் நிவாரணமாகமாட்டா. கர்மப்பாவத்தால் பிடியுண்ட மனிதருக்கு அமைதி கிடைக்காது. மேலும் அவை பாவக்கட்டுகளைக் குலைத்து நம்மைச் சிறையாக்கின துராசைகளின் வசத்தினின்று நம்மை விடுதலையாக்க முடியாது. பரோபகாரியான மகாத்மா ஒருவர் நமக்குத் துணைபுரிந்தாலொழிய மற்றப்படி நாம் நமது பிரயத்தனங்கள் யாவையும் விட்டுவிட்டு, ஆராத்துயரில் மூழ்கினவர்களாகி நம்மைச் சூழ்ந்துகொண்ட வல்லிருளில் ஊழிபூழிகாலமாய் அமிழ்ந்தி கிடக்க வேண்டியவர்களே. 'இனி உங்களுக்கு என்ன கதியுண்டு? மானிடரே! இனி உங்களுக்கு என்னகதி யுண்டு' என்று ஒரு ஞானகீர்த்தனையில் சொல்லியது வாஸ்தவமே.

மனுமக்கள் பட்சத்தைப் பார்த்தால் நற்கதி கிடைக்கும் வழியொன்றுமே கிடையாதேயன்றி, சகலத்தையும் ஆண்டு நடத்திவருகிற தேவனிருக்கிறபட்சத்தில், அவர் மனித நிலைமையைத் தம் மருட்கண்ணால் கடாட்சித்திறங்கி மோட்சமளிக்கும் ஓர் நல்வழியை நியமிப்பாரென்று எண்ணுவதற் கிடமில்லையா? ஒரு வேந்தன் அரசியற்றும் ராஜ்யத்தின் ஓர் நாட்டில் சகல ஜனங்களும் நீதி வழுவி முற்றிலும் கெட்டுப்போனால் அவ்வரசன் தன் நகர் துறந்து அந்நாட்டுக்கேகி அத்துன்மார்க்கர் ஸ்திதியை விசாரித்தறிந்து அவர்கள் பற்றிய துர்ஒழுக்கங்களை நிர்மூலம்செய்து, நீதிநெறிகளை எவ்வாற்றாலும் நிலைநிறுத்தும்பொருட்டு தன்னா லியன்றமட்டும் பிரயாசப்படுவானல்லவா? இத்திருஷ்டாந்தத்தின் மூலமாயே, சகல ஜனங்களும் சன்மார்க்கநிலை தவறி, சீர்கெட்டுப்போவதைக் கண்ணுற்று, அவர்

களைப் பரிபாலிக்கும் கடவுள், அவர்கள் கைகளைப் பிடித்து தூக்கி யெடுத்து, ஏதோ ஓர் வழியால் சகாயம் செய்யாமல் போக மாட்டாரென்று சந்தேகமற யோசிக்க இடமில்லையா? தேவன் நம்மை அரசாளும் அண்ணலென்று பாவிக்கிறது மாத்திரமேயன்றி, நம்மைப் பிறப்பித்த தந்தையென்றும் பாவிக்கவேண்டும். ஆதலால் பிதாவடைவான தமது தயாளத்தினால், அவர் நம்மை அகதிகளாக விடாமல், எவ்விதத்திலும் நமக்கோர் வழிகாட்டுவாரென்று நிச்சயிக்கிறது அவசியம். ஒரு பையன் கிணற்றில் விழுந்துவிட்டால், மற்றவர்கள் ஒருவேளை ஓரத்தில் நின்று கவைக்குதவாத கூச்சல் போடுவார்கள். ஆனால் தகப்பன் வந்தவுடனே தன் ஜீவனையும் ஒரு பொருட்டென்று எண்ணாமல், கிணற்றில் குதித்து எவ்வகையினும் தன் குழந்தையைக் கரையேற்றுவானல்லவா? மனிதர் சண்டாளராயினும், தம் புத்திரரில் அன்புகூர்ந்து, அவர்கள்நிமித்தம் பலவிதமாய்ப் பிரயாசப்பட்டு, அவர்களைக் காப்பாற்றும்பொருட்டு எவ்வளவு வாதையையுஞ் சகித்துக்கொள்வார்கள். இவ்வித அன்பு சகல சற்குணங்களிலும் உச்சிதமானதாகையால், தேவனுக் கிவ்வளவு அன்பு இராதபட்சத்தில், நாம் அவரைவிட உத்தமர்களாயிருப்போமென்பதற்குச் சந்தேகமில்லை. இது பைத்தியமான வீண்யோசனையல்லவா? 'என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளுமல்ல. பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப்பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது' என்று தேவன் திருவுளம்பற்றியிருக்கிறாரென்று சத்திய வேதத்தில் சொல்லியிருக்கிறது (எசா. 55. 8, 9.). தேவஅன்பு கரைகாணா சமுத்திரம். மனிதருக்குரிய பிதாவடைவான தன்மை, இச் சமுத்திரத்திலிருந்து தெறித்து விழுந்த ஓர் துளி ஜலமே. மனிதர் ஒவ்வோர் சமயத்தில் தம் புத்திரர்மேல் தயவற்று அவர்களை மறந்துவிடுகிறவர்களாயிருந்தபோதிலும், தேவன் நம்மை ஓர்காலும் மறக்கிறவரல்ல. இதைப்பற்றி, 'ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை' என்று ஒரு வேதவாக்கியஞ் சொல்லுகிறது (எசா. 49. 15.). இத்திருவாக்குகள் உண்மையாயிருக்கும்பட்சத்தில்,



தேவன் சீர்கெட்ட நமது ஸ்திதியைக் கண்ணுற்று, நம்மாபத்திற்கிடையே வந்து, நமது ஜனனத்தை யீடேற்றும் ஓர் உபகாரமார்க்கத்தை எவ்வாற்றாலும் உண்டுபண்ணுவாரென்று நிச்சயிக்க இடம் இருக்கிறது.

தேவன் எப்படிப்பட்ட சிறந்த வழிகளை அமைப்பாரென்று விசாரிக்குமிடத்தில், நாம் பூரண நிச்சயமுடையவர்களாய் அதைச் சொல்லக்கூடாதாயினும், அவற்றின் அறிகுறிகளைச் சிறிதளவு சீர்தூக்கிப் பார்த்து உரைக்கலாகும். நாம் முன்கூறியபடி, மனிதர் யாவரும் பாவ வல்லிருளில் சிக்கித் தேவனுக்குத் தூரமானவர்களாகி, தங்கள் கர்மப்பாரத்தைப் போக்கடிக்க முடியாமல், அதிகமாய் அவஸ்தைப்படுகிறதால், அவர்களுக்கு நற்கதி கிடைக்கும்படியாக மூன்று காரியங்கள் சித்தியாகவேண்டுமென்று தெளிவாகும். (1) நம்மைச் சூழ்ந்திருக்கும் பாவாந்தகாரத்தைத் தேவன் நீக்கி, தமது குணலட்சணங்களைத் தகுந்தபடி வெளிப்படுத்தவேண்டும். (2) அவர் நமது இருதயகடினத்தை இளகப்பண்ணி நம்மைத் தம்மண்டை இழுத்துக்கொள்ளவேண்டும். (3) அவர் நமது பாவத்தைப் பரிகரித்து நாம் தேடிக்கொண்ட கர்மத்திலிருந்து நம்மை விடுதலை செய்யவேண்டும். தேவன் மனிதனாய் வந்துதித்தபட்சத்தில் இம்மூன்று காரியங்களும் சித்தியாகுமென்பதற்குச் சந்தேகமில்லை. அவர் அவதரித்துவந்து மனிதனாய் ஜீவித்தபட்சத்தில், நாம் அவரைக் கண்ணாரக் கண்டு, அவருடைய கிரியைகளினால் அவருடைய குணலட்சணங்களை அறிந்துகொள்ளுவோம். மேலும் நமது சுபாவத்தைத் தரித்துக்கொள்வதினால், அவரும் நாமும் முற்றிலும் சம்பந்தமுடையவர்களாவோமாதலால், அச்சம்பந்தத்தைப் பார்த்து, பயந்தெளிந்து, அவரிடம் வந்து முறையிடுகிறதற்குத் தைரியங்கொள்ளுவோம். இதுவுமன்றி நாமெவ்வளவு கடினராயிருந்தபோதிலும், அவர் செய்த உபகாரங்களைப் பார்க்கும்போது, உலைவாய் மெழுகுபோல், நமது இருதயகடினம் அவருடைய அன்பின் தழலால் உருகிப்போமாதலால், நாம் பகையைவிட்டு அவரிடம் திரும்பி, அவருக்கு நமது மனதைப் படைப்போம். அன்பின் பலத்தைவிட இத்தரணியில் அதிபலமானதொன்றும் எங்குமே கிடையாது. ஆதலால் தேவன் மனுவுருவெடுத்து தன் மட்டற்ற அன்பைக் காண்பிப்பதால், சகல இடையூறுகளையும் நீக்கி சகல மனிதரையுந் தம்மிடம் இழுத்துக்கொள்வார்.

தேவன் மனுவுருவெடுப்பதால், சகல பாவத்தையும் போக்கி, பாழடைந்த நமது ஸ்திதியைச் சீராக்க இடமுண்டென்பதற்குச் சந்தேகமில்லை. மனிதர் எவ்வளவாய்ப் பிரயாசப்பட்டாலும், தம் பாவக்கறையைப் போக்கிக்கொண்டு, தேவசந்நிதியில் சேரக்கூடாதவர்களே. என்றாலும் தேவன், மனுவுருவெடுத்து, மனித நிலைமை அடைந்து மனுஷீகத்தைப்பற்றின மாசு எல்லாவற்றையும் அவர் நீக்கி, மனிதரெல்லாரையும் தன்னுடன் ஐக்கியம் பண்ணிக்கொள்ளக்கூடும். கோடைகாலத்தில் நதிகள் அதிகமாய் வற்றிப்போவதால், ஜலம் சிலவிடங்களில் முற்றிலும் வற்றி, சில இடங்களிலுள்ள மடுக்களில் அல்லது பள்ளங்களில் சேர்ந்து குவியலாய் நிற்கும். அப்பள்ளங்களில் ஒதுங்கிய ஜலம் கொஞ்சமாகிலும் ஓடாததால், சாதாரணமாக அசுத்தமாகி அருவருப்புக்கு இடமாய் இருக்கும். இப்படி அழுக்கடைந்த நீர் சுத்தியாகிற தெவ்வாறு? அது முதலில் வானத்திலிருந்து பெய்தபோது வெகு சுத்தியும் பரிசுத்தமுமா யிருந்தபோதிலும், பூமியுடன் கலந்து பழுதுக்குள்ளானது. ஆகையால் அது சுத்தியாகவேண்டுமென்றால், ஆதியில் அது எங்கேயிருந்து உற்பத்தியானதோ, அங்கேயிருந்து புதுமழை அந்நதியில் பெய்யவேண்டும். அப்பால் நதி பெருகி வெள்ளமாயோடி பள்ளத்திலுள்ள எல்லா அழுக்கையும் அடித்துக்கொண்டுபோய் அதைச் சுத்தியாக்குமல்லவா? இவ்வாறே தேவன் தம்மிடமிருந்து புறப்பட்டு மாய்கையில் சிக்கிச் சீர்கேடடைந்த மனுஷஸ்திதியில் சேர்ந்து, அதை ஒட்டிய சகல கறையையும் நீக்கி அதற்குப் புது குணங்கள் அளித்து சகலவிஷயங்களிலும் அதைச் சீர்ப்படுத்தவேண்டியது அவசியமாம்.

நாம் எவ்வகையாய் விசாரித்தாலும், சத்தியாவதாரத்தினால் மனிதருக்கு விடுதலை கிடைக்குமேயொழிய, வேறே எவ்வழியாலும் கிடையாதென்பது தவறாத சத்தியம். மதச்சரித்திரங்களை விசாரிக்கும்பொழுது, மனிதர் இதை சகஜமாய் ஒப்புக்கொள்வார்களென்று தெரியவரும். தாம் எவ்வளவு கல்வி கற்றாலும், எவ்வளவு ஞானம் சம்பாதித்தாலும், மனிதரெல்லாரும் தங்கள் சீர்கெட்ட நிலைமையைக் கண்ணுற்று, அதை நிவாரணம்பண்ணுகிற இரட்சகருக்காகக் காத்திருக்கத் தவறார்கள். ஞானிகளாயினும், பண்டிதர்களாயினும், மகாரிஷிகளாயினும், யாவரும் தம் பெலவீனத்தை யறிந்



துணர்ந்து, பாவிகளென் றறிக்கையிட்டு, தங்கள் காரியங்களைச் சீர்ப்படுத்திக்கொள்ள முடியாமல், தங்கள் கண்களைப் பரத்திற்கு நேராக உயர்த்தி, ‘தேவா, நீர் கடாட்சித்து, எங்கள் வாதைகளை நீக்கி எங்கள் ஜனனத்தை யீடேற்றமாட்டீரா?’ என்று தாங்கள் அறியாத தேவனை நோக்கி முறையிடுகிறார்கள். இதைப்பற்றி ‘ஒரு பரிசுத்தமும் இன்றி ஐயோ என் ஜனனம் வீணானது. களங்கமற்ற மார்க்கம் காண்பிக்கமாட்டீரோ நாராயணா’ என்று நாராயணசதகத்தில் சொல்லியிருக்கிறது.

இக்கோரிக்கை சகல மனிதருக்கும் சகஜமானதால், சகல மதஸ்தர்கள் வேதநூல்களையும் விசாரிக்கையில், சர்வலோகாதிபதியான கடவுள் தம்மை வெளிப்படுத்தி, மனிதஜாதிக்கு மோட்சவழி காட்டுவார் என்ற நோக்கம் வெகு பிரபலமாய்க் காணப்படும். இது ஒரு தேசத்தாருடைய அபிப்பிராயமாத்திரமல்ல, சகல தேசங்களிலும் தம் நிர்ப்பாக்கிய ஸ்திதியைக் கண்டுணர்ந்து கர்ம நிவாரணம் தேடுகிறவர்கள் யாரோ, அவர்களனைவரும் இக்கொள்கையை சகஜமாய் ஒப்புக்கொண்டுவருகிறார்கள். பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் எகிப்துதேசத்தார், தம் தேவதைகள் மனுவுருவெடுத்து வருவார்களென்று நம்பிவந்தார்கள். அன்றியும் சகல வித்தைகளிலும், சாஸ்திரங்களிலும், அதிகக் கீர்த்திபெற்ற கிரேக்கதேசத்தார், சூரிய சந்திராதி தேவதைகள், நானாகாரணங்களையிட்டு நரவடிவெடுத்து வந்ததாக அநேக புராணங்களை இயற்றிவந்தார்கள். இவ்வித அவதார சரிதைகளை விசாரிக்கையில், மனுஜாதி அதிக ஆவல்கொண்டு தங்கள் மனோபாவனைக்கிசைய இல்லாதவற்றைக் கற்பனை செய்ததாகக் காணப்படுமேதவிர, அவர்கள் வாஞ்சை தீர்ந்து ஆசை அடங்கியதாய் எவ்வளவேனுந் தோன்றாது.

நானாமத நூல்களை ஆராய்ச்சிசெய்கையில், அவதார புருஷர்களின் விஷயங்கள் பல வெளியானாலும், அவற்றில் ஒன்றாயினும் திருப்தியானதன்று. அப்படிப்பட்ட அவதார புருஷரை நம்பி ஆதாரம் செய்துகொண்டால், நமது ஆசை வீணாகுமேயன்றி சிறிதளவேனும் பயன்பெறாது. மனிதருடைய சரித்திரத்தை எவ்வளவாக விசாரித்தபோதிலும், சகல சற்குண சம்பன்னராய்த் தமது நற்கிரியைகளினால் தேவனுடைய மகத்துவத்தையும், அவருடைய அளவற்ற

தயவையும் பரிபூரணமாக வெளிப்படுத்தினவர் ஒருவரே என்று தெளிவாய்த் துலங்கும். மற்ற அவதாரபுருஷர்களை நாம் பார்க்குங்கால், சித்திரக்காரர் மனோபாவனையாக வரைந்த படங்களில் மலைகள், விருட்சங்கள், பறவைகள், மிருகங்கள் முதலியவற்றின் ரூபங்களைக் காண்கிறதுபோலிருக்க, திரு அவதாரம்செய்த திருப்புதல்வனின் திருச்சரித்திரத்தைப் பார்க்கையில், நிஜஸ்திதியே காணப்படுகிறது. மற்றவை யாவும் நிழல், அப்பரலோக மன்னனே சகல லோகங்களுக்கும் ஒளிகொடுக்கும் பரம சூரியன். நிழலைப் பார்க்கையில் சூரியன் வானிலிருந்து பிரகாசித்ததினால் இப்படிக் காணப்படுகிறதென்று நிச்சயிப்போமல்லவா? அப்படியே மனிதர் தங்கள் தோற்றத்தின்படி கற்பனைபண்ணின அவதார புருஷர்களின் சரித்திரங்களைப் பார்த்து, சத்தியமான அவதார புருஷர் ஒருவர் இருக்கிறார் என்று பரிசோதித்துக் கண்டறியலாம். இயேசுகிறிஸ்துநாதர் சரித்திரத்தைப் பரிசோதிக்குங்கால், சகல மனிதரும் விரும்பின விருப்பமும், அவர்கள் தங்கள் நூல்களில் வெளியிட்ட நோக்கங்களும், அப்பரம புருஷனாலேயே நிறைவேறி சித்தியாயிற்றென்று தெளிவாகக் காணப்படுகின்றன. இவ்விஷயத்தை ஸ்திரப்படுத்துகிறதற்கு இந்துமத கிரந்தங்களைச் சிறிதளவு ஆராய்ந்து சீர்தூக்கிப்பார்த்து, அவை அந்த சற்குருவுக்கு எப்படி சாட்சி கொடுக்கின்றன என்பதை விசாரித்து அறிந்துகொள்வோம்.

# II. அதிகாரம்

## இந்து சாஸ்திரங்களைக்கொண்டு இயேசுகிறிஸ்துநாதர் சத்தியாவதார லட்சணங்களுடையவரென்று ரூபித்தல்

இந்த சிறந்ததேசத்தில் வசிக்கும் இந்துக்கள் ஆத்தும விசாரணை விஷயத்தில் ஆதியிலிருந்து அதிக வாஞ்சையுடையவர்கள். மற்ற ஜனங்கள் சரீரப் போஷணைக்கடுத்த உபயோகமான சாஸ்திர வித்தைகளை அப்பியாசித்தபோது, இவர்கள் அப்படிப்பட்ட விசாரணையை அற்பமாயெண்ணி வேதாந்தத்தைப் பூரணமாக ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று அதிகமாகப் பிரயாசப்பட்டுவந்தார்கள். அவர்கள் தேவசுபாவத்தைக்குறித்தும், பாவபுண்ணியங்களைக்குறித்தும், மோட்ச வழியைக்குறித்தும் பலவாறாக யோசித்து எண்ணிறந்த கோட்பாடுகளை உண்டாக்கிக்கொண்டார்கள். அக்கோட்பாடுகளை விசாரிக்கும்போது அவற்றில் சத்தியமும் அசத்தியமும் கலந்திருப்பதாகக் காணப்படும். அதிக மப்புமந்தாரமு மெழும்பி தேசம் முழுமையும் சுற்றிக்கொள்கையில், சூரியகிரணங்கள் இங்குமங்கும் திடீரென்று ஒளிவீசுகின்றதுபோல, முற்காலத்திலுள்ள ஜனங்கள்கொண்ட அபிப்பிராயங்களில், திவ்ய ஞானம் இடைக்கிடையே சமயாசமயங்களில் பிரகாசித்துவந்தது. சகல மனிதர்களுக்கும் ஒளிகொடுக்கிற அந்த திவ்யமான ஒளி, அவர்கள் இருதயங்களில் தோன்றிக்கொண்டிருந்தமையால், அவர்கள் சத்தியமான அவதாரத்தைக்குறித்துத் தெரிந்தும் தெரியாமலும் சாட்சி கொடுத்துவருகிறார்கள். அவர்கள் அவர்களுக்குப் பிராப்தியான சத்தியத்தைக்கொண்டு தகுந்தவிஷயமாக யோசித்து அதைவிட மேலான சத்தியத்திற்குப் படிப்படியாக ஏற

லாம். மேலும் அவர்கள் பெறக்கூடாததை விசாரிக்கிறதினால், அதைக் கிடைக்கப்பண்ணும் சத்தியமான அவதார உபதேசம் எவ்வளவு சிரேஷ்டமானதென்று நாம் திட்டமாய் அறிந்துகொள்ளலாம். தங்கள் சொந்தப் பிரயத்தனங்களினால், மோட்சத்தைச் சம்பாதித்துக் கொள்ளுகிறதற்கு மனிதருக்கு வல்லமை யிருக்குமானால், இத்தேசத்தில் வசித்த தபசிகளும், தபோநிதிகளும், புலவர்களும், வித்துவான்களும் அதை எப்படியாகிலும் சம்பாதிப்பார்களாகையால், அவர்கள் இப்பரம பாக்கியத்தை யடையாமற்போவதினால் அது தேவனுடைய கிருபையினால் கிடைக்குமேயொழிய, மற்றப்படி கிடைக்காதென்பதற்குச் சந்தேகமில்லை. பூர்வத்திலுள்ள முனிகளும், ரிஷிகளும், தபசிகளும் சித்தியடையாதவர்களானாலும், பலவாறாய் முயன்று நிறைவேற்ற ஏலாமல், தேவனுடைய வரத்திற்காக எதிர்நோக்கி வந்தார்கள். அவர்கள் நியமித்த வரைமுறைகளால், நமக்கு மோட்சவழி சித்தியாகாமற்போனாலும், அவர்கள் எதிர்நோக்கினவைகளைப்பற்றி விசாரிக்கையில், மோட்சவழி யெவ்வகையானதென்று சிறிதளவாயினும் வெளியாகும். அவர்கள் பாவிகளான மனிதருக்குண்டான ரோகத்தின் குறிகுணங்களை நன்றாக விசாரித்து விவரித்து, அந்த ரோகத்தைக் குணமாக்கும் அவிழ்தத்தின் குணலட்சணங்களைக்கூடக் கொஞ்சம் விவரித்துரைத்திருப்பதால், அவர்கள் கோட்பாடுகளுக் கிசைந்து அவர்கள் கொண்ட எதிர்நோக்கத்தைச் சம்பூரணமாய் நிறைவேற்றுகிறது எதுவோ, அதுவே சத்தியமான அவதாரமென்று சந்தேகமற நிச்சயிக்கலாம். அவர்கள் அமைத்துக் கொண்ட விதிவகைகள் சித்தியாகாவிடினும், அவர்கள் நோக்கங்களைச் சித்தியாக்குகிற நல்வழி வேறொன்று தோன்றுமானால், அவ்வழி திருப்தியும், பரிபூரணமும், சமாதானமும் நிறைந்த வழி என்று எண்ணத்தக்கது.

வேதவாக்கியங்களால் 'உங்களுக்கு நித்தியஜீவனுண்டென்று எண்ணி, அவைகளை ஆராய்ந்து பார்க்கிறீர்கள். என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே' என்று (யோவா. 5. 39.) பரிசுத்த இயேசுநாதர் தம்மிடம் விசாரணைசெய்த சாஸ்திரிகளுக்கு விடைபகர்ந்தார். அத்திவ்ய புருஷர் முக்கியமாய் யூதருடைய வேத சாஸ்திரங்களைக்கொண்டு இப்படிப் பேசினாலும் அவர் அருளின திரு



மொழிகள் இந்துசாஸ்திரங்களுக்குங்கூடச் செல்லும் என்பதற்குச் சந்தேகமில்லை. நான்கு வேதங்களையும், உபநிஷதங்களையும், புராணங்களையும், இன்னும் வேறெந்த மதநூல்களையும் நாம் பரிசோதனை பண்ணினபோதிலும், சற்குருமூர்த்தி விதித்த நீதிநெறியே மனித பாவஸ்திதிக்குத் தகுந்தது என்றும், வேறு ஏற்பாடுகளொன்றும் அதற்கு இசைந்ததல்லவென்றும் நிச்சயிக்கவேண்டும். நாலு வேதங்கள் திவ்யவாக்கு ஆகையால், அவைகளை ஓதுகிறவர்கள் திவ்ய ஞானத்தைச் சம்பாதித்து முத்தியடைவார்களென்று எண்ணிறந்தபேர்கள் எண்ணுவதுண்டு. அவ்வேதங்களைப் பரிசோதியாதபட்சத்தில், இவ்வபிப்பிராயத்தை யேற்றுக்கொள்ளலாமேயன்றி, ஜாக்கிரதையாகப் பரிசோதிக்குங்கால், அதற்கு ஆதாரமொன்றுமில்லையென விளங்கும். நான்கு வேதங்களையும் இயற்றிய முற்கால ரிஷிகள், தத்தம் அறிவு பூரணமானதல்லவென்றும், தாம் மற்றவர்கள்போல பாவாந்தகாரத்தில் சிக்கினவர்களென்றும் வழக்கமாய் ஒத்துக்கொண்டே அறிக்கையிட்டுவந்தார்கள். தங்களாலாகிலும் தங்கள் வேதநூலாலாகிலும், பாவநிவாரணமுண்டாகுமென்று அவர்கள் ஒருகாலும் உரைக்காமற்போனாலும், தங்கள் பாவங்களை மனதில் ஞாபகம்பண்ணி மனஸ்தாபமடைந்து தேவன் தங்களில் கருணைகூர்ந்து தங்கள் அபராதங்களைப் பொறுக்கும்படி முறையிட்டுவந்தார்கள் (ருக்வேதம், I. 115. 6. V. 85. 7, 8. VII. 86. 3. VIII. 56. 14. இன்னும் இவைபோன்றவை பார்க்கவும்.). அவர்கள் இயற்றிய வேதநூல்களைப் பரிசோதிக்கும்போது, அவர்கள் தங்கள் அநுபவத்தால் தங்கள் ஸ்திதிகதிகளைக் குறித்து கடவுளை நோக்கி முறையிட்டு, அவ்வகை ஸ்தோத்திர பிரார்த்தனைகளைக் கவிகளில் விவரித்துவந்ததாகக் காணப்படுமேயன்றி, தேவன் அவர்களுக்கு யாதாமோர் உத்தரவருளி அவர்களுக்கு நல்லவழி காண்பித்ததாய் எவ்வளவேனுங் காணப்படுவதில்லை. அந்த ஞானிகள் அதரிசனமான தேவனைத் தேடி அவர் தயவை எவ்வாற்றாலும் பெறவேண்டுமென்று பிரயாசப்பட்டாலும், அவர்கள் எழுதிய கிரந்தங்களைப் பார்க்கையில், அவர்கள் தங்கள் சந்தேகங்கள் அனைத்தையும் நீக்கி சத்திய ஞானமார்க்கத்தில் வழிபட்டவர்களென்று சொல்வதற்குக் கொஞ்சமாகிலும் இடங்கிடையாது. வேதங்களை எவ்வளவாய் ஆராய்ச்சி செய்திடினும், மோட்சவழியைத் தெரிவிக்

கிற வாசகம் ஒன்றுயினுங் காணப்படாது. இப்படியிருந்தும் அருணோதயத்திற்குமுன், அதின் கிரணங்கள் மேகங்கள்மேல் வீசி அதின் பிரகாசம் எத்தன்மையுடையதென்று சுட்டிக்காட்டும்வண்ணம் வேத நூல்களையும் வேதாசாரங்களையும் பிரகாசிக்கப்பண்ணுகிற சத்தியாவதார ஜோதி வேதங்களில் சிறுபான்மை பிரகாசிக்கின்றது.

வேதங்களை விசாரணைபண்ணும்போது, அவற்றில் முக்கியமாய் இரண்டு கோட்பாடுகள் காணுகின்றன. முதலாவது, இதில் மனிதர் யாவரும் பாவஞ்செய்து தேவனுடைய சிட்சைக்கு நியாயமாகப் பாத்திரராயிருக்கிறார்களென்பது. இரண்டாவது, யாகஞ்செய்தாலொழிய அப்பாவத்திற்குப் பரிகாரமில்லையென்பது. இந்த இரு உபதேசங்களையுங்கொண்டு, பூர்வகாலத்தவர்கள் நாலுவகை யாகாதிகளை நியமித்துக்கொண்டு அவற்றின் மூலமாய்ப் பிராயச்சித்தம் செய்யவேண்டுமென்று கருதி, எருதுகள், அசுவங்கள் முதலிய ஜீவஜந்துக்களை வெட்டி அவற்றின் ஜீவனைத் தேவதைகளுக்குப் பலியாகச் செலுத்தி வந்தார்கள். பலிகள் இன்றியமையாத அவசியமென்று பல வேத வாக்கியங்களால் வெளிப்படும். இதற்கு (ருக்வேதம், X. 31. 6.) 'யாகமென்னும் மார்க்கத்தின் மூலமாய்ச் சகல பாவங்களிலுமிருந்து எங்களை விடுதலைசெய்து பத்திரமாகக் கூட்டிக்கொண்டு போவாயாக' என்றுரைத்திருக்கிறது. சகல ஜனங்களும் யாகங்களை ஆதாரமாக்கிக்கொண்டு அவற்றால் மோட்சமடையலாமென்று ஆசையோடு நம்பினாலும், வேதங்களைக் கூர்ந்து பரிசோதிக்குங்கால், மனிதர் சாதாரணமாகச் செலுத்துகிற யாகங்களால் பாவபரிகாரமுண்டாகாதென்று தெளிவாய் விளங்கும். நமது ஜீவனைவிட முற்றிலுந் தாழ்ந்த ஜீவனைப் பலியிடுவதால், செய்த வினை தீருமென்று நம்புவதற்கு ஆதாரமில்லையாதலால், முற்காலத்திலுள்ள ரிஷிகளில் சிலர் இதை யறிந்து, திவ்ய யாகம் மகா அவசியமென்று சில சுலோகங்களில் வெளிப்படையாக விவரித்திருக்கிறார்கள். மேலுமவர்கள் அப்படிப்பட்ட* திவ்ய யாகம் நடந்ததென்று நம்பினார்கள் என்பதற்குச் சில திருஷ்டாந்தங்களுமுண்டு (இதைக்குறித்து கிறிஸ்துமதத்திற்கும் இந்துமதத்திற்கு முள்ள சம்பந்தமென்ற பத்திரிகையைப் பார்க்கவும்.). சாமவேதத்திலுள்ள தாண்டிய மகா பிராமணத்தில், சிருஷ்டிகர்த்தாவும் ஜகத்ரட்சகருமான பிரஜாபதியென்ற மூலபுருஷர், தம்மைத்தாமே பலியிட்



டார் என்றும், புருஷ சூக்தத்தில், தேவர்கள் பலிசெலுத்தி புருஷனென்றவரை பலி மிருகமாக வெட்டி, பசும்புல்மேல் ஆதியில் உற்பவித்த அப்புருஷனைப் பலியாகச் செலுத்தினார்கள் என்றும் சொல்லியிருக்கிறது. இதுவுமன்றி, சிருஷ்டிகர்த்தா சகல சிருஷ்டிகளையும் பலிசெலுத்தி கடைசியில் தம்மைத்தாமே பலிசெலுத்தினாரென்று வேறோர் சுலோகமும் உண்டு. பிரஜாபதி பாதி தேவனும், பாதி மனிதனுமாயிருந்து மகா பாவஞ்செய்ய திருவுளங்கொண்டு தாம் அந்த யாகத்திற்குத் தகுந்த வேடம் பூண்டுகொள்ளக் கோரினாரென்று பிரிகதாரண்ணியகோபநிஷதத்தில் கண்டிருக்கிறது. மேலும் பிரஜாபதியே யாகமென்று சதபத பிராமணம் வெளிப்படையாய்க் கூறுகின்றது. இவ்வித யாகஞ்செய்து தம்மைத்தாமே பலியாகச் செலுத்தினரட்சகருக்குப் புருஷனென்றும், விஸ்வகர்மா அல்லது சிருஷ்டிகர்த்தாவென்றும், பிரஜாபதி அல்லது பிரஜைகளை ஆண்டு நடத்துகிறவரென்றும், திரிநாமங்கள் கண்டிருக்கின்றன. இந்நாமங்களைக்கொண்டு யோசிக்கும்போது சகல லோகங்களையும் சிருஷ்டித்து பரிபாலித்துவாராநின்ற பரமேஸ்வரனே நரரூபம்பூண்டு தம்மைத்தாமே மரணத்திற்கு யாகமாக அர்ப்பணை செய்தாரென்று வெளியாகிறது.

இது மகா ரகசியம்; நாம் எவ்வளவு ஆராய்ச்சிசெய்தாலும் நான்கு வேதங்களிலும், புராணங்களிலும் இக்கருத்துகள் வெளிக்கு வரக்கூடியதல்ல. இந்துக்கள் ஆராதிக்கிற முப்பத்து மூன்றுகோடி தேவர்களில் தங்கள் பிரஜைகளுக்காக, தன்னைத்தான் பலியிட்டவரொருவருமில்லை யாதலால், இந்துமதஸ்தர் இந்தச் சித்தாந்தப்பொருளை வகையறுத்து அறிந்துகொள்ள ஏலாமல், இதைச் சாதாரணமாக மறந்துவிடுகிறார்கள். இந்து சாஸ்திரங்களைக்கொண்டு நமதாண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் திருஅவதாரச் சரித்திரத்தை விசாரிக்கும்போது, ஒருவரும் கிரகித்துக்கொள்ள முடியாத மறைபொருள் வெளிக்கு வரும். இயேசுநாதர் பூரண மனிதனானபோதிலும், அத்திருவுருவில் பூரண தேவதன்மை அமைந்திருக்கிறதென்பது மறுக்கக்கூடாத சத்தியம். 'நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்' என்று அப்பரம்பொருள் திருவுளம்பற்றினார். (யோவா. 10. 30.). மேலும் அவ்விண்ணிறைவன் தேவனாயிருந்து மனிதர் பாவநிவாரணம் அடையும்பொருட்டு மனுவேடம்பூண்டு தம்மைத்தாமே வெறுமையாக்கித்

தம்மை மரணத்திற் கொப்புக்கொடுக்கத் திருவுளங்கொண்டார். அப் பரோபகாரி சர்வலோக பாவங்களுக்கும் பிராயச்சித்தஞ் செய்யும் பொருட்டு தம் பிராணனைப் பூரண அர்ப்பணை செய்தாரென்று சத்தியவாசகர் திருமொழிகளால் வெளிப்படும். இதைக்குறித்து, 'தாம் அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்க வந்தார்' என்றும் (மத். 20. 28.), 'நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறார்' என்றும் அந்த ஜீவகாருண்ய பெருமான் (யோவா. 10. 11.) திருவாய் மலர்ந்தருளினார்.

இயேசு பெருமான் தாம் சொல்லிய வாக்குக்கு மறுவாக்கும், திருமொழிக்கு எதிர்மொழியும் இன்றி சொல்லியது சொல்லியபடி தம் அருமைத்திருவாக்குகள் அனைத்தையும் பூரணமாய் நிறைவேற்றினார். நரவடிவெடுத்து முப்பத்து மூன்றாண்டுகள் மனிதனாக ஜீவித்து எண்ணிறந்த நற்காரியங்களால் தமது அளவற்ற தயவையும் ஒப்பற்ற மகிமையையும் பிரத்தியட்சமாகக்காட்டிய பொன்னுலகிறைவன், நமது பாவபாரமனைத்தையும் தம்மேல் ஏற்றிக்கொண்டு நமது பாவப்பரிகாரத்தின்பொருட்டு சொல்லற்கரிய வாதையான மரணத்திற்குத் தம்மை ஒப்புக்கொடுத்தார். அத்திருமகன் செலுத்திய யாகம் ஆவிக்குரிய திவ்ய யாகமாகையால், அது பரிபூரணமும், சர்வலோக பாவங்களையும் நிவாரணஞ்செய்யும் வலிமையுமுடையது. வேறு யாகங்கள் இனி எவ்வளவேனும் அவசியமன்று. 'எந்த ஆசாரியனும் நாடோறும் ஆராதனை செய்கிறவனாயும், பாவங்களை ஒருக்காலும் நிவிர்த்திசெய்யக்கூடாத ஒரேவித பலிகளை அநேகந்தரம் செலுத்துகிறவனாயுமிருப்பான். இவரோ, பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி, என்றென்றைக்கும் தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்தார்' என்று (எபி. 10. 11, 12.) சத்திய வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இயேசுநாதர் மனுமக்கள் பாவங்களனைத்தையும் பரிகரிக்கும் இரட்சகராகையால், இந்த ரட்சணியமூர்த்தியால் வேதவாக்கியங்கள் யாவும் பரிபூரணமாய் நிறைவேறியிருக்கின்றன வென்பதற்குச் சந்தேகமில்லை.

நாம் மேற்கூறியபடி நான்கு வேதங்கள், அநேகாண்டுகளுக்கு முன் சத்தியாவதாரியின் விஷயத்தைக்குறித்துச் சுட்டிக்காட்டின



லும், இந்து மதாசாரிகள், அச்சங்கதியைச் சரிவர கிரகிக்காமல், கர்ம மார்க்கத்தை அனுசரித்து, பூர்வகாலந்தொட்டே யாகாதி கருமங்களை ஆதாரமாக்கிக்கொண்டு வந்தார்கள். புத்தமகாமுனி பூர்வாசாரங்களில் பயனில்லையென்று கண்டு, அவை யாவையுங் கண்டித்து, ஞானவழியைப் போதித்தபின்னர், இந்துமதக் குருக்கள் அவ்வழியைக்கொண்டு தமது சீஷருக்கும் ஞானோபதேசம் செய்யத் தலைப்பட்டார்கள். ஆதலால் விவேகிகள் பலர், தேவதாபூஜையினால் பயனில்லையென்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உணர்ந்து அதை நீக்கி, இருதய கமலவாசியான பரப்பிரமத்தைத் தியானிப்பதே முக்கியமென்று நிச்சயிக்கலானார்கள். இந்த தத்துவ ஞானத்தை அனுஷ்டித்த அறிஞர்கள், உபநிஷதங்களென்னும் நூல்களை இயற்றி அவற்றில் தம்முபதேசங்களை விவரித்தார்கள்.

உபநிஷதங்களில் அதிமேன்மையான விஷயங்கள் நிறைந்திருந்தாலும் பாவஜன்மிகளுக்கு அவற்றில் நம்பிக்கை யொன்றுமில்லையென்று விளங்கும். அவை அனுபவத்தை விட்டுவிட்டு, அதற்கு விரோதமான உபதேசங்களைப் புகட்டி, பாவநிவாரணம் தேடுகிறவர்களைப் பிரமிக்கப்பண்ணி தர்க்கமென்ற வீண் அலுவலில் அவர்களை மடக்கிப்போடுகிறது. அவ்வஸ்துவு நீயே என்று பொருள்படும் 'தத்வம் அஸி' என்னும் கோட்பாடு அவற்றின் முக்கிய ஸாரமாகையால், பரமாத்துமாவுக்கும், ஜீவாத்துமாவுக்கும் வித்தியாசம் ஒன்றுமில்லையென்று வெளிப்படையாக உபதேசிக்கின்றன. இவ்வுபதேசத்தின் பொருளையறிந்து அவற்றைக் கைக்கொண்டு நடந்தால், நமது பிறப்பு வகைகளுக்குத் தோன்றும் யாவும், நாம் மனதில் எண்ணுகிற யாவும், நம்மை மோசம்பண்ணுகிறவைகளென்று எண்ணவேண்டுமாதலால், சகலமும் நான்தானென்று அறிந்துகொள்ளும்வரையில், நமக்கு மோட்சபதவி கிடையாதென்று நிச்சயிக்கவேண்டும். பிரபஞ்சமெல்லாம் பரப்பிரமமென்றும், பரப்பிரமம் நான்தானென்றும் எப்போது அறிந்துகொள்வோமோ, அப்போது சகல கட்டுகளையும் அவிழ்த்துக்கொண்டு கர்மபந்தத்தினின்று விடுதலையாகி மோட்சபதவி அடைவோம். இப்படி சித்தியடைந்தவர்களுக்குச் சுகதுக்காதிகள் முதலிய கர்மக்கேடுகள் யாவும் தொலைந்துபோம். அவர்கள் பரமபதவி யடைந்தவர்களாய் அனுபவமொன்றுமின்றி, கடுநித்திரை செய்கிறவர்களுக்கு

மிஞ்சின இந்நிலைமைக்கு வந்தெட்டியபிறகு, தந்தை இனி தந்தையல்ல, மாதா இனி மாதாவல்ல, கர்மப்பலம் இனி கர்மப்பலமல்ல, தேவர்கள் இனி தேவர்களல்லர், வேதங்கள் இனி வேதங்களல்ல, திருடன் இனி திருடனல்ல, பிராயாணி இனி பிராயாணியல்ல, துறவி இனி துறவியல்ல, அவன் மனோதுக்கங்கள் யாவுந் தாண்டினவனானதால், அவனுடைய நன்மை தீமையாவது, புண்ணிய பாவமாவது, நற்கிரியை துற்கிரியையாவது அவனைப் பற்றித்தொடா சகலமும் நான்தானென்று தெரிந்துகொள்வதனால் இப்பெரும்பாக்கியம் பிராப்திக்கும் என்று சொல்வார்கள். (பிரிகதாரணியகோபநிஷதம் இவ்வாறு கூறுகிறது.)

இந்த உபதேசத்தை மேன்மேலும் பார்க்கையில் அதிக உத்தமமானதென்று காணப்பட்டாலும், அதினுட்பொருளை யூன்றி ஆராய்ந்தால், அதினால் மனிதர் சாதாரணமாய்ச் சீர்கெட்டவர்களாவார்களென்று விளங்கும். இதைக் கைக்கொண்டு நடந்தால், நாம் பாவிகளென்றுரைக்க வழியில்லை. சுயாதீனமென்பது நமக்கு அணுவளவாயினும் இராது. சகல காரியங்களையும் நடப்பிக்கிறவர் பரப்பிரமமே. இப்படியிருக்கையில் சில புண்ணிய கிரியைகளென்றும், சில பாவக் கிரியைகளென்றும் நினைப்பது பைத்தியக்குணமாகையால், நமது காரியாதிகளைக்குறித்து நாம் அணுவளவும் சிந்தியாமல், ஆத்தும விசாரணையை ஆதியோடந்தமாய் நிறுத்தி நிர்விசாரிகளாகவும், கவலையற்றவர்களாகவும் ஜீவிக்கலாமல்லவா? இப்படி நிஜஸ்திதியை நழுவவிட்டு தம் மனத்தோற்றமே திருவுளமெனச் சாதித்த மாயவாதிகள் தங்களுக்கு மோட்சங் கிடைத்ததென்றெண்ணி, கர்மவிடுதலையடையாமல், நரகத்திரத்தில் படுத்து நித்திரை செய்கிறார்கள். பெருஞ்சுமை சுமந்துகொண்டு போகிறவனை நோக்கி: 'நீயேன் இவ்வளவு கஷ்டப்படுகிறாய், உனக்குப் பாரமொன்று மில்லையே' என்று சொன்னால், அவன் நமது சொற்கேட்டு குதித்து கும்மாளம்போட்டுக்கொண்டு போவானோ? இவ்வாறே அறிவாளிகளும் புலவர்களும் பாவமில்லை யென்றுரைத்த தர்க்கித்தமாத்திரத்தில், பாவத்தைச் சுமக்க முடியாமல் அவஸ்தைப்படுகிற மானிடர் அவர்கள் சொல்லைச் சிறிதளவும் மதியாமல், தம் வாதையை எந்தவகையினாலாவது போக்கிக்கொள்ளவேண்டுமென்று பற்பலவகையாய்ப் போராடாதிருக்கமாட்



டார்கள். இக்காரணத்தையிட்டே இந்து மதஸ்தர்கள், பரப்பிரம உபதேசத்தினால் திருப்தியடைய இடமின்றி, நிர்க்குண பிரம்மத்திற்குப் பதிலாக, தங்களைப்போன்ற தேகிகளாய் மனுஷ காரியாதிகளை நடப்பிக்கும், பிரமன், விஷ்ணு, சிவன் என்றவர்களை ஆராதிக்கத் தலைப்பட்டார்கள். அவ்வகை தேவர்கள் தங்கள் ஜெபங்களைக் கேட்டுத் தங்களுக்குத் துணைபுரிகிறவர்களேயல்லாமல், ஞானசூனியமும், அறிவீனமும், நிர்க்குணமுமான ஓர் பரம வஸ்துவால் தங்களுக்குப் பிரயோஜனமில்லையென்று கருதி, சிலர் ஒரு தேவனையும், வேறு சிலர் மற்றொரு தேவனையும் தங்களுக்கு நியமித்துக்கொண்டார்கள்.

மனிதஜாதி இம்மட்டிலாகிலும் திருப்தியடையாமல், தம் பாவ நிலைமையைக்குறித்து ஆலோசித்து, அதிகத் திகில்கொண்டு, தேவர்கள் தம் திவ்யரூபத்தை விடாமல் எப்போதும் தேவலோகத்தில் வாசஞ்செய்தால் மனுமக்களுக்கு மோட்சபதவி கிடைக்காதென்று நிச்சயித்து, அவதார புருஷரின் கோட்பாட்டைத் தழுவத் தலைப்பட்டார்கள். இக்கோட்பாட்டைக்கொண்டு கல்விமான்கள் அநேகர் தங்கள் மதத்தை விளம்பரம்பண்ணும்பொருட்டு, வீண் தோற்றங்களைப் பின்பற்றி, எண்ணிக்கைக்கடங்காப் புராணங்களையும், இதிகாச கிரந்தங்களையும் கற்பனை செய்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட கட்டுக்கதைகளில் விவரித்திருக்கிற விஷயங்கள் நிஜமாக நடந்தவையென்று, தற்காலத்தில் யாரும் நம்புகிறதில்லையென்று காணப்பட்டாலும், முற்காலத்தில் சகல ஜனங்களும் அவற்றைச் சந்தேகமற அங்கீகரித்துவந்தார்கள். புராணங்களைப் பரிசோதிப்பதினால் அதிகப் பிரயோஜனம் இல்லாமற்போனாலும், சத்தியாவதாரியின் சுபாவ லட்சணாதிகளை விவரிக்கும் நூல்களையும், கிரந்தங்களையும் ஆராய்ச்சி செய்யுங்கால், மனிதர் எப்படிப்பட்ட அவதார புருஷனுக்காகக் காத்திருந்து பிரலாபித்துக்கொண்டு வந்தார்களென்பதை நாம் இலேசாய் அறிந்துகொள்ளலாம். இவ்விசாரணைக்குப் பகவத்கீதை முக்கியமானது. இதில் ஒரு பக்திமான் அறுவகைச் சித்தாந்தங்களை விவரிக்கிறதோடுகூட முக்கியமாய் அவதாரக் கொள்கையை வெகு தெளிவாக விளக்கிக் காட்டியிருக்கிறார். அதை வாசித்துப்பார்க்கையில் கிருஷ்ணன் தன்னைக்குறித்துச் சொல்லியிருப்பதாகக் காணப்பட்டாலும், அவனுடைய வாக்குகள், மாசணுகாதவரும் இகபர அதி

பதியுமாகிய இயேசுநாதருக்குச் செல்லுமேயன்றி மற்றொருவருக்கும் செல்லாது என்றுரைக்கச் சந்தேகமில்லை. பகவத்கீதை வாக்கியங்களையும், இயேசுகிறிஸ்துநாதர் திரு சரித்திரத்தையும் ஆராய்ந்துபார்க்கும் அளவிற்குத் தக்கதாய் இது வெளியாகும். இதைக்குறித்துச் சில கூறுபாடுகளை எடுத்துரைப்போம். பகவத்கீதை 5-ம் அத்தியாயம் 29-ம் சுலோகம், 'நான் யாகங்களையும் தபசுகளையும் அனுபவிக்கிறவரும், சர்வலோகாதிகாரம் பெற்றவரும், சகல ஜீவன்களையும் நேசிக்கிறவருமாயிருக்கிறேனென்று அறிகிறவன், ஆறுதலும் அமைதலும் அடைவான்' என்று சொல்லியிருக்கிறது. இச்சுலோகத்தின் பொருளை உள்ளபடி பரிசோதித்தால், நம்மை ஆண்டு நடத்தி பராமரிக்கும் சற்குரு, சகல லோகங்களையும் ஆண்டு நடத்தி, சகல ஜீவன்களையும் பரிபாலிக்கிற தேவனென்றும், அவர் தெய்வீகத்தை அறிந்தவர்கள் அவரால் சமாதானம் பெறுவார்களென்றும் வெளிப்படும். 3-ம் அத்தியாயம் 31-ம் 32-ம் சுலோகங்களில், 'பக்திமான்களாய், பொறுமையற்று திருவுளத்திற்கிணங்கி நடப்பவர்கள் யாரோ, அவர்களே தாம் கையிட்டுக்கொள்ளும் காரிய பலன்களிலிருந்து விடுதலை யடைவார்கள்; பகையும் அருவருப்பும் உடையவர்களாய், என் நோக்கத்திற்கு விரோதமாய் நடக்கிறவர்கள் யாரோ அவர்கள் சர்வஞான சூனியர்களாகி சந்தேக மனமுடையவர்களாவார்கள்' என்று கண்டிருக்கிறது. இதை விசாரணைசெய்துபார்க்கையில், சற்குரு துணையினால் மனிதர் கர்ம விடுதலை யடைவார்களேயன்றி, அவர் உதவியில்லாவிடில், அவர்கள் குழப்பமடைந்து சந்தேகசாகரத்தில் மூழ்கிப்போவார்களென்று விளங்குகிறது. 7-ம் அதிகாரம் 29-ம் வாக்கியத்தில், 'என்னையண்டி விருத்தாப்பியம் மரணம் என்பவற்றினின்று விடுதலையடைய பிரயத்தனம் பண்ணுகிறவர்கள் யாரோ, அவர்கள் சகல பிரபஞ்சத்திலும் சர்வவியாபியான பரப்பிரமத்தையும், சகல கர்மங்களையும் அறிந்துகொள்வார்கள்' என்று சொல்லியிருக்கிறதால், இந்த சுலோகத்தைக்கொண்டு, சற்குருவை யடுக்கிறவர்கள் யாரோ, அவர்களே அதரிசனமானவரும் அளவிடப்படாதவரும், சர்வவியாபியுமான பகவானை அறிந்துகொள்வார்களென்று கிரகிக்கவேண்டும். 9-ம் அதிகாரம் 30-ம் சுலோகத்தில் 'அதிக துன்மார்க்கனானாலும் வேறொன்றுமில்லாமல் என்மேல் பக்திவைத்து



என்னைச் சேவித்தால், அவன் சாந்தமும் என்மேல் பக்தியுமுடையவனாகி உத்தமனாவான்' என்று சொல்லியிருப்பதினால், அந்தச் சற்குருவை அண்டுவதினால் தீயோருங்கூட தம் துர்ச்சுபாவத்தை விட்டு மிருதுவான மனமுடையவர்களும் குணசாலிகளு மாவார்களென்று அறிந்துகொள்ளவேண்டும். இன்னும் 9-ம் அத்தியாயம் 31-ம் சுலோகத்தில் 'அப்படிப்பட்டவன் சீக்கிரத்தில் புண்ணியவானாகி சாஸ்வத அமைதலடைகிறான். துராசார மிருந்தபோதிலும் பக்திமான் நாசமடையான் என்ற வாக்கை நம்பவேண்டும்' என்று சொல்லியிருக்கிறது. பாபிஷ்டி சற்குரு பாதமடைந்தவுடனே குணசீலனாகி சன்மார்க்கத்தை ஓர்காலும் நெகிழவிடாமல், ஊழியூழிகாலமாய் சுகமாய் ஜீவிப்பானென்பது இதின் பொருள். 18-ம் அத்தியாயம் 66-ம் சுலோகத்தில் 'சகல கர்மங்களையும் வெறுத்துத் தள்ளி என்னைமாத்திரம் அண்டிக்கொள். நான் சகல பாவங்களிலுமிருந்து உன்னை விடுதலை பண்ணுவேன். ஆகலால் கவலைப்படாதே' என்று சொல்லியிருக்கிறது. இதில் பகவத்ஞானமெல்லாம் தொகுப்பாய் அடங்கியிருக்கிறது. சத்குருமூர்த்தி அத்தியந்த தயவுடையவராய், 'மற்ற சற்கருவிகளனைத்தையும் விட்டு விட்டு என்னை ஆதாரமாக்கிக்கொள்ளுங்கள். நான் உங்களை ரட்சித்து, உங்கள் பாவங்களெல்லாவற்றையும் சுத்திகரிப்பேன்' என்று சகல ஜனங்களையும் தம்மிடம் அழைக்கிறபடியால், பாவத்தினால் பிடியுண்ட மனுக்குல மனைத்தும் அவர் சரணடைந்து மோட்சகதி யடையலாமென்பதற்கு ஐயமில்லை.

மேற்கூறிய பகவத்கீதை வாக்கியங்களைச் செவ்வையாக ஆராயுங்கால், சகல மனிதருக்கும் பரகதியளிக்கும் சற்குரு, மனுவுருவெடுத்து இத்தரணியில் மனிதனாக ஜீவித்தவரானபோதிலும், முற்றிலும் திவ்ய லட்சணம் பொருந்தியவராதலினால், அவர் சகல லோகங்களையும் பரிபாலிக்கும் பகவான் என்பதற்குச் சந்தேகமொன்றுமே கிடையாதென விளங்கும். மேலும் ஜீவகாருண்யரான அப்பரோபகாரி, தம்மை யண்டினவர்களுக்குப் பாவ விடுதலை ஈந்து, அவர்கள் துர்ச்சுபாவங்களையும் தீயகுணங்களையும் மாற்றி அவர்களுக்கு நித்திய சுகமளித்து அவர்களைத் தேவனுடன் ஐக்கியப்படுத்துகிறாரென்று ரூபகாரமாகிறது. முன்னோர்கள், சத்தியாவதாரத்திற்கு இப்படிப்பட்ட குணலட்சணங்களைச் சூட்டியபோதிலும் அவர்கள் சாதாரண

மாகப் பின்பற்றின அவதாரபுருஷர்களின் சரித்திரங்களைப் பரிசோதனைபண்ணினால், இவ்வுத்தம குணங்கள் அப்புருஷர்களுக்கு எவ்வளவேனுங் கிடையாதென்று வெளிப்படும். பாகவதம் முதலிய புராண நூல்களை வாசித்துப் பார்த்தால், அவற்றிற் சொல்லிய அவதார புருஷர்கள் நம்மைப்போல் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் முதலியவை யுடையவர்களாய், திருட்டு விபசாரம் என்னும் அநேகத் தீயசெயல்களை நடப்பித்தார்களென்று காண்கிறது. இது சகலருக்கும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிந்தவிஷயமாகையால், இதை விரித்துரைக்க அவசியமில்லை. கிருஷ்ணன் தனக்குச் சத்தியாவதார லட்சணங்களை சூட்டிக்கொண்டாரென்று பகவத்கீதையினால் காணப்படுகிறதானாலும், பாகவதத்தைக் கையிலெடுத்து அவருடைய சரித்திரத்தை ஆழ்ந்து ஆராயுங்கால், அவர் காமியாய் அநேக அருவருப்பான தீயசெய்கைகளைச் செய்திருப்பதாய் வெளியாகிறது. அப்படிப்பட்ட வர்த்தமானத்தைச் செவியுற்றுக் கேட்பதும் அவமானமாகையால், அவற்றைக் கருத்தில் வைத்து இடைவிடாது தியானித்துவருகையில் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாகத் துராசைக்குள்ளானவர்களாகிக் குணக்கேடர்களாவோம். நம் புதல்வர், கிருஷ்ணன் சரித்திரத்தை வாசித்து அவர் காட்டிய மாதிரியைப் பின்பற்றி நடந்துகொள்ள தீர்மானித்தால், நமக்கெவ்வளவு ஆருத்துயர முண்டாகும். வெங்கடேஸ்வரன் சரித்திரத்தை வாசித்தால் அதுவும் அதிக விகாரமாய்த்தான் தோன்றுகிறது.

நீதிதவறி அக்கிரமமாகவும், பரிசுத்தமில்லாமலும் ஜீவித்தவனைச் சற்குருவென்று துத்தியம்பண்ணுவது எவ்வளவு மதியீனம். அப்படிப்பட்டவனின் கூட்டுறவால் நாம் குணங்கெட்டவர்களாகி, சீர்கெட்டுப் போவோமேயொழிய, ஒருக்காலும் குணசீலர்களாகப் போகிறதில்லை. பன்றியோடுகூடிய கன்றும் நரகல் தின்னும். தீயாரைக் காண்பதுவுந் தீதே; திருவற்ற தீயார்சொற் கேட்பதுவுந் தீதே; தீயார் குணங்க ளுரைப்பதுவுந் தீதே; அவரோ டிணங்கியிருப்பதுவுந் தீதே. மேலும் அவ்வளவு தூர்த்தனாய் ஜீவித்தவனை தேவனென்று கும்பிட்டால், நாம் தேவனுக்குத் துரோகிகளாகமாட்டோமா? தேவன் களங்கமற்றவர் என்றும், அவரில் பாவாந்தகாரம் அணுவளவாயினுங் கிடை-



யாதென்றும் சகல சாஸ்திரங்களும் ஏகோபித்துப் பகருகிறபடியால், நம்மைப்போல் பஞ்சமாபாதகங்களைச் செய்தவனைத் தேவனென்று கூறுவது கொடும்பாதகம் என்று உரைக்காதிருக்க வழியில்லை. இப்புவியில், அவதார புருஷர்களென்று சொல்லப்படுகிறவர்கள் வரலாற்றை, உற்று பரிசோதனைபண்ணினால், 1900 ஆண்டுகளுக்குமுன் மனுவுரு வெடுத்து, பலஸ்தீனாதேசத்தில் உதித்த இயேசுகிறிஸ்தென்னும் நீதிச் சூரியனிலேயன்றி, வேறே யாரிடத்திலும் திவ்ய லட்சணங்கள் பிரகாசிக்கவில்லை யென்று ஐயமறச் சாற்றலாம். அந்தச் சற்குரு மூர்த்தி முற்றிலும் களங்கமற்ற தூயராய், தம் சரணடைந்தவர்கள் பாவாந்தகாரத்தைப் போக்கி, அவர்களைப் பரப்பிரமத்தோடு ஐக்கியப்படுத்திவந்ததால், பகவத்கீதை வாக்கியங்கள் அவரிடத்திலேதான் நிறைவேறினவென்று ரூபிக்க ஆட்சேபனையொன்றுமில்லை.

சாஸ்திர விசாரணையை இம்மட்டில் நிறுத்தி, ஜனங்கள் வழக்கமாய் உபயோகிக்கும் பதங்களை விசாரிக்கும்பொழுது, சத்தியாவதார விசேஷங்கள் தெளிவாக விளங்கும். சாஸ்திரப்பயிற்சி செய்கிறவர்கள் அநேக நாமங்களை வழங்கினபோதிலும், பாமரர் வழக்கமாய் சமஸ்தத்தையும் சிருஷ்டித்த கடவுளுக்கு நாராயண மூர்த்தி என்ற நாமத்தைச் சூட்டினார்கள். இந்நாமத்தின் அர்த்தம் மனுதர்ம சாஸ்திரத்தில், விவரித்துக் காட்டியிருக்கிறது. அதில் 1—ம் அதிகாரம் 10—ம் சுலோகத்தில், ஆதியில் பிரபஞ்சத்தைச் சூழ்ந்திருந்த ஜனங்கள், நரவென்ற தெய்வத்தாலுண்டானதால், அவருக்கு நாரா என்ற பெயருண்டானது என்று சொல்லியிருக்கிறது. விஷ்ணு பக்தர்கள் இந்நாமத்தை விஷ்ணுவுக்கு வழங்கியபோதிலும், இது அவருக்கு எவ்வளவாகிலும் செல்லாது. நாம உற்பத்தியையாயினும், ஜனங்களுடைய வழக்கத்தையாயினும் பார்க்கில், நாராயணன் சிருஷ்டிகர்த்தாவும், சர்வலோகாதிபதியும், சகல பாவநாசருமான ஏகதேவனேயன்றி, முப்பத்து மூன்றுகோடி தேவர்களில் சேர்ந்தவரல்லவென்று, வெளிப்படும். நாராயணன் என்ற நாமத்துடன் மூர்த்தியென்ற பதம் சேர்வதால், அத்தேவன் நரரூபமெடுத்தாரென்று, அர்த்தமாகுமாகையால், சர்வ லோகங்களையுஞ் சிருஷ்டித்த கடவுள், நரவேடம்பூண்டு எழுந்தருளினாரென்று அப்பதத்தினால்

தெரியவருகிறது. அநேகர் இப்படி ஆலோசித்தபோதிலும், 'தேவன் எக்காலத்தில் மனுவுருவெடுத்து வந்தார்? எத்தேசத்தில் ஜென்மித்து வளர்ந்தார், என்ன நாமந் தரித்து ஜீவித்தார்? எவ்வழி ஸ்தாபித்துப் பரலோகத்திற் கெழுந்தருளினார்?' என்கிற இச்சங்கதிகளனைத்தும் அவர்கள் முற்றிலும் அறியாதவிஷயங்கள். நமதாண்டவர் இயேசு கிறிஸ்துநாதர் திருச்சரித்திரத்தை யெடுத்துத் திறந்து பார்த்தால்மாத் திரந்தான் இப்புதைபொருள் விளங்குமேதவிர, இந்து கிரந்தங்களனைத்தையும் ஆராய்ச்சிசெய்தபோதிலும் இது ஒருக்காலும் புலப்படாது.

தேவரூபியான இயேசுகிறிஸ்துநாதர் தன் மகிமையானந்தங்களைத் துறந்து மனுஜனனமெடுத்து இப்புவியிலுதித்துச் சகல சித்தாந்தங்களையுங் கண்டித்து, சகல சோதனைகளையும் ஜெயித்து சகல விஷயங்களிலும் மாசற்ற தூயராய் வாசம்பண்ணி மனுக்குலமனைத்துக்கும் மோட்சவழியை ஸ்தாபித்தார். இப்புண்ணியபுருஷரைத்தவிர இவ்வுலகில் பிறந்தவர்களில் ஒருவரும் பாவசாகரத்தைக் கடந்து புண்ணியராகவில்லை. முப்பத்து மூன்றுகோடி தேவர்களில் விசேஷித்தவரான இந்தப் பிரம்மா, விஷ்ணு, சிவன் என்ற திரிமூர்த்திகள் கர்மவினையில் மூழ்கினவர்களாயிருக்கையில், தேவர்களில் ஒருவராயினும் கடைத்தேறி பாவத்தால் தீண்டப்பட்ட ஜனங்களுக்குத் துணைபுரிய சமர்த்தரானார்களென்று நம்புவதற்கு இடம் இல்லையல்லவா? மனிதரை ரட்சித்துக் கடைத்தேறப் பண்ணுகிறவர் களங்கமில்லாத் தூயராயிருக்க வேண்டுமேயன்றி, பாவஜன்மியானவனெவனும் ஒருக்காலும் ரக்ஷாகர்த்தா வாகமாட்டான்.

மனிதர் இச்சத்தியத்தை அறியாமல் குருதீட்சையினிமித்தம் இங்குமங்குந் திரிந்து பிரயாசப்படுகிறார்கள். இது இல்லாமல் முக்தி மார்க்கம் கிடைக்காதென்று சகல ஜனங்களுக்கும் தெரியுமாதலால், அநேகர் சற்குருவை அறியாமல், தம்மைப்போன்ற பாவிகளை அண்டி அவர்களுக்குப் பாதபணிவிடை செய்கிறார்கள். அப்படிப்பட்ட குருபதேசத்தினால் கர்ம நிவாரணை மாகாதாகையால், பாவஜன்மிகளான மனிதர், அதினால் திருப்தியடைய முடியாமல், காரணக்குரு ஒருவர் இருக்கவேண்டுமென்று எதிர்நோக்காதிருக்கமாட்டார்கள். இதைக்குறித்து வேமன்னா 'உலகத்திற்குக் குரு உலகத்தாருக்கும்



குரு என்பதை யறிந்து மோட்சமடையக் கோரி குருவைக் காணாமல் நரகபாதாளம் அடைந்தார்கள்' என்று சொல்லியிருக்கிறார். இதுவுமன்றி இச்சற்குருவின் விஷயத்தைப் பரிசோதித்து, அவர் திவ்ய சொரூபியென்றறிந்து 'குருவென்றால் பரப்பிரமம்; அப்பரப்பிரமத்தின் சீஷனென்றால் மனுஜீவி, சீஷனுடைய ஜீவனைக் குருவின் ஜீவனுக்குச் சமானமாக்குகிறவனையே குருவெனத் தகும்' என்று வேறொரு பாடலில் சொல்லியிருக்கிறார்.

இவ்வாக்கு ஒப்புக்கொள்ளத்தக்கது. மனிதரில் யாதாமோர் பேதமுண்டாகும்பட்சத்தில், ஒரு மத்தியஸ்தர் வந்து பேதப்பட்டவர்களுக்குச் சமாதானமுண்டாக்கி, அவர்களை ஐக்கியப்படுத்தவேண்டுமல்லவா? அவ்வாறே, மனிதர் தேவனுடைய கட்டளையை மீறி, அவருக்குச் சத்துருக்களானதால், மத்தியஸ்தரானவர் ஒருவர் வந்து, அப்பேதத்தை நீக்கி, அவர்களைத் தேவனுடன் சமாதானப்படுத்துவது இன்றியமையாத அவசியமாயிருந்தது. இதைப்பற்றி, 'தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. மனிதனாகிய கிறிஸ்துஇயேசு அவரே' என்று சத்தியவேதத்தில் எழுதியிருக்கிறது (1 தீமோ. 2. 5.). மேலும் இயேசுநாதரில், 'தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக வாசமாயிருக்கிறது' என்றும் (கொலோ. 2. 9.), 'பிள்ளைகள் அதாவது மனிதர், மாம்சத்தையும் சரீரத்தையு முடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப் போலவே மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்' என்றும் (எபி. 2. 14.) அந்தச் சத்தியவேதம் வேறிடங்களில் தெரிவிக்கிறது.

இயேசுநாதரில் தேவதன்மையும் மனிததன்மையும் இரண்டுங் கலந்திருப்பதால், அத்திவ்ய புருஷன் பாவத்தினால் பிரிக்கப்பட்டநரைத் தேவனுடன் ஐக்கியப்படுத்தச் சமர்த்தரானார். அப்பரமகுரு உபதேசத்தையும் அவர் திருச்சரித்திரத்தையும் பரிசோதனைபண்ணி பார்க்குமிடத்தில், அவர் மனிதருடைய உத்தமமான வாஞ்சைகளனைத்தையும் நிறைவேற்றி அவர்களுக்கு வேண்டிய துணையை பரிபூரணமாய் அளிக்கிறவர் என்று வெளிப்படும். அப்பரோபகாரி மனிதருடைய விண்ணப்பங்களைச் செவியுற்று, அவர்கள் சந்தேகந் தீரும்படி, அவர்கள் விண்ணப்பங்களுக்குத் தகுந்த மறுவுத்

தாவுகளை அருளியிருக்கிறார். மனிதர் பாவாந்தகாரத்தில் சிக்கி, சத்தியமார்க்கத்தைக் கண்டுகொள்ள முடியாமல், இங்குமங்கும் தடவிக்கொண்டு திரிந்து, திவ்ய சகாயத்திற்காக வெகுவாகப் பிரலாபித்தார்கள். நாராயணசதகத்தை இயற்றிய பக்தன், தன் நிர்ப்பாக்கிய நிலைமையைக்குறித்து 'சிறிதாகிலும் பரிசுத்தமின்றி என் ஜன்மம், ஐயோ! வீணானது. தூய்மையான வழியை யெனக்குக் காண்பிக்கமாட்டாயோ! நாராயணா' என்று முறையிட்டாரல்லவா? 'யான் எனது' எனதென்னும் அகங்காரமும் மனிதர் சுத்த அறிவை அடைந்துகொள்ளாதபடி பெருந்தடையாம். அதைப்பற்றி தாயுமானவர் பின்வருமாறு சொன்னார்.

'எத்தனை விதங்கடான் கற்கினுங் கேட்கினுமென்
இதயமு மொடுங்கவில்லை
யானெனு மகந்தைதா னெள்ளளவு மாறவில்லை
யாதினும் மபிமானமென்
சித்தமிசை குடிகொண்ட தீசையோ டிரக்கமென்
சென்மத்து நானறிகிலேன்
சீலமொடு தவவிரத மொருகனவி லாயினுந்
தெரிசனங் கண்டுமறியேன்
பொய்த்தமொழி யல்லான் மருந்துக்கு மெய்ம்மொழி
புகன்றிடேன் பிறர்கேட்கவே
போதிப்ப தல்லாது சும்மா விருந்தருள்
பொருந்திடாப் பேதைநானே
அத்தனைக் குணக்கேடர் கண்டதாக் கேட்டதா
அவனிமிசை யுண்டோசொலாய்
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
ஆனந்தமான பரமே.'

இயேசுநாதர் இப்படிப்பட்ட முறையீடுகளைச் செவியுற்று, 'நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்' (யோவா. 14.6.) என்றும், 'என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்' (யோவா. 8. 12.) என்றும், 'என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவ னெவனும் இருளில் இராதபடிக்கு, நான் உலகத்தில் ஒளியாக வந்தேன்' (யோவா. 12. 46.) என்றும் திருவாக்குரைத்தார்.



மனிதர் தேவனுடைய கட்டளைகளை மீறினதினால் அவர்களுக்குப் பாவாந்தகாரமாத்திரமேயன்றி, பாவக்கறையும் உண்டாயிருக்கிறது. இக்கறையைப் போக்கடிக்கும்வரையில், அவர்கள் ஆறுதலமைதலின்றி கலக்கமடையாதிரார். எவ்வளவுதான் வேதாப்பியாசம் பண்ணியபோதிலும், ஆசாரங்களில் எவ்வளவுதான் மனதைச் செலுத்தினபோதிலும், மனத்தூய்மை இராவிட்டால் பிரயோஜனம் ஒன்றுமில்லை. இதற்கு வேமன்னா 'கபடம் உள்ளத்தில் இருக்கையில் ஜலத்தில் மூழ்குவதேன், அனுஷ்டானங்களை நிறைவேற்றுவதேன், நிஷ்டையாகத் தேவர்களை ஆராதிப்பதேன்' என்று சொல்கிறார். மனிதர் எவ்வளவு பிரயாசப்பட்டபோதிலும், தம் சுயமுயற்சி முதலியவற்றால் மனத்தூய்மை சம்பாதித்துக்கொள்ள முடியாதவர்களாகையால், தம் நிலைமையை உணர்ந்து அதிக வியாகுலத்திற்குள்ளாகி பூர்வகாலப் பக்தர்களைப்போல 'இகத்துக்குரிய மானிடதேக மெடுத்தும் நற்புத்தி அணுவளவுமின்றி, நிலையற்றதான சித்தத்தைப் பலப்படுத்தமாட்டாயோ, நாராயணா' என்று வழக்கமாய்க் கெஞ்சுகிறார்கள். நமதாண்டவராகிய இயேசுகிறிஸ்துநாதர், இவ்வகை முறைப்பாடுகளைக் கேட்டிருப்பதால், அப்பெருமானுடைய பரோபகாரத்தால் இப்பரம பாக்கியம் சகல மனிதர்களுக்கும் வாய்க்கக்கூடும். அத்திருமகன், நமது பாவங்களைப் பரிகரிக்கிறவராகையால், 'நமது பாவங்களை நாம் அறிக்கையிடும்பட்சத்தில், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்' (1 யோவா. 1. 9.) என்று சத்தியவேதத்தில் எழுதியிருக்கிறது. மேலும், அவ்வாண்டவர்தாமே, 'நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்' (யோவா. 15. 3.) என்று தம் சிஷருக்குரைத்தார். எவ்வளவு துரோகிகளாயினும், அவர் தம்மை நம்பினவர்களெல்லாரையும் விடுதலைபண்ணி சுத்திகரிக்கிறவராகையால் 'நான் நெறி தவறினவன், தீயச்செயல்களுடையவன், பாவியைப் பரிசுத்தனாக்குகிறவரே! என்னைப் பரிசுத்தனாக்கமாட்டாயா' என்று இயேசுநாதரை நோக்கிக் கூப்பிடும்போதுமாத்திரம் அந்த வரம் நமக்கு வாய்க்குமேதவிர, வேறே எவ்விதத்தாலும் உண்டாகப்போகிறதில்லை.

இயேசு என்ற நாமத்துக்கு இரட்சகர் என்று பொருளாதலால், இந்நாமத்தைக்குறித்து விசாரிக்கும்பொழுதுகூட, அப்புண்ணியபுருஷன் பாவநாசராய், சகல மனிதரையும் ரட்சிக்கிறவரென்று அறிந்துகொள்ளலாம். 'இழந்துபோனதைத் தேடவும் ரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்தார்' என்று (லூக். 19. 10.) அவர் தெளிவாய்த் திருவாய் மலர்ந்தருளினார். இது முற்றிலும் ஆறுதலளிக்கும் வாக்கு. மனிதர் பாவஜன்மிகளானதால், தம் நிஜஸ்திதியை எப்போது கண்டுகொள்வார்களோ, அப்போது பயமும் சந்தேகமும் அடைந்து வெகுவாக வியாகுலப்படுவார்கள். தேகபலமும் தாதுபுஷ்டியும் பொருந்தி சுகபோகிகளாக வாழ்கிறபோது, பெரும்பான்மையோர் நிர்விசாரிகளாயிருந்தாலும் மரணாவஸ்தை நேரிடும்போதோ, துஷ்டருக்கு நற்கதி கிடையாதென்றறிந்து, அதிக திகிலடைவார்கள். இதைக்குறித்து 'யமதூதரைக் கருத்தில் நினைந்த மாத்திரத்தில் என் குலை துடிக்கிறது. யமவாதைகளை நீக்கமாட்டாயா, எம் கைகண்ட பரிகாரியாகிய நாராயணா?' என்று நாராயண சதகத்தில் சொல்லியிருக்கிறது. இயேசுகிறிஸ்து நாதரென்னும் பரோபகாரியும் புண்ணிய புருஷனுமானவர், இச்சந்தேகத்தை நீக்கி, நமக்கு உறுதிவாக்களித்திருக்கிறார். அந்த ஜீவாதிபதியின் நண்பனொருவன், இறந்துபோனசமயத்தில், பந்துமித்திராதிகள் வெகுவாய் கண்ணீர் சொரிந்து பிரலாபிக்கையில், மாணாதிபதி யவர்களை நோக்கி, 'நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்' என்று திருமொழி கூறினார் (யோவா. 11. 25, 26.). மேலும், அவருடைய சீஷர்கள் கலங்கினபோது, மனத்துயர் மாற்றும் அச்சஞ்சீவி, அவர்கள் பயம் நீங்கும்படி 'உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்



படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன். நான் போகிற இடத்தை அறிந்திருக்கிறீர்கள், வழியையும் அறிந்திருக்கிறீர்கள்' என்று திருவாய் மலர்ந்தருளினார். (யோவா. 14. 1–4.)

பரோபகார மூர்த்தியாகிய இயேசுசுவாமி, தம்மடியாருக்கு இவ்வகை வாக்களித்து, அவர்கள் மரணபயத்தை நீக்கியிருப்பதினால், முன்னோர் காதலித்த ராஜவைத்தியன் இவர்தானென்று ஐயமில்லா நெஞ்சுடன் நம்புவதற்குச் சந்தேகமில்லை. அவ்வகிலாண்டநாயகர், 'தம்மூலமாய் தேவனிடம் வருபவர்களைப் பூரணமாய் ரட்சிக்கிறதற்கு வல்லமை யுடையவராயிருக்கிறார்' என்று (எபி. 7. 25.) அத்திவ்வியநாதரின் நட்பு மதுரத்தை ருசித்த ஒரு புண்ணியவான் சத்தியவேதத்தில் எழுதியிருக்கிறார். இதைக்குறித்து நாராயண சதகத்தில்—'நான் காமாந்தகாரத்தில் சிக்கி கணக்கில்லாக் கர்மங்களைச் செய்தவன், நின்னடைக்கலம் புகுந்தேன். நின் புகலடைந்தேன். என்மீது கருணை வைத்தருள்வாய் நாராயணா?' என்று எழுதியிருக்கிறது.

இயேசுமகிபன், இம்முறையீட்டைச் செவியுற்று இதற்குத் தகுந்த உத்தர வருளியிருக்கிறார். அவ்விண்ணுலகாதிபன் இம்மண்ணில் மனிதாவதாரஞ் செய்தகாலத்தில் தம்மிடம் வந்து தம் தோஷங்களை அறிக்கையிட்ட யாவரையும் ஏற்றுக்கொண்டு, தம்மிடஞ் சேர்த்து அவர்களுக்கு வேண்டிய உதவிபுரிந்தார். 'என்னண்டை வருகிறவர்களை நான் எவ்வளவாகிலும் புறம்பே தள்ளுகிறதில்லை' (யோவா. 6. 37.) என, வாக்குத்தவறாத சத்தியவாசகர், உறுதிவாக்குரைத்திருக்கிறார். மேலும் ஒருவரும் பயப்படாதபடி, 'பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை; நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன்' (லூக். 5. 31, 32.) என்று அச்சற்குரு திருவாய்மலர்ந்து உரைத்திருக்கிறார்.

பக்தரில் எண்ணிறந்தோர்கள் லோகஸ்திதியைக் கண்ணுற்று, நெஞ்சம் புண்ணாகி, இவ்வளவு அநியாயங்களும், இவ்வளவு அக்கிரமங்களும், எப்படி அடங்கி நாசமுறுமென்று மனநோவடைந்து, சகலத்தையும் சீர்திருத்தி செவ்வையாக்கி நீதி நியாயங்களை யெங்கும்

பாவச்செய்யும் ஆண்டவர் வருவாரென்று, ஆவல் என்னும் அடங்கா நீர்வேட்கை கொண்டிருக்கிறார்கள். இப்படி வரப்போகிறவருக்குச் சிலர், வீர வசந்தராயரென்னும் நாமத்தையும், சிலர் கற்கியென்னும் நாமத்தையும் சூட்டினபோதிலும், அவர்கள் என்னபேரிட்டழைத்தாலும், ரட்சகர் எப்படியாகிலும் வந்து சர்வ லோகத்தின் மேலும் நியாய பரிபாலனம் பண்ணுவாரென்று இத்தேசத்தார் யாவரும் வழக்கமாய்ச் சொல்லுகிறார்கள். ஆத்தும விசாரணை செய்கிறவர்கள், அவருடைய விஷயத்தைக்குறித்து, அவர் எக்காலத்தில் வருவார், எவ்விதமாய் தம் மகத்துவத்தைக் காட்டுவார் என்று நானாவிதங்களாய் யோசிப்பார்கள். பரம குருவான கிறிஸ்துநாதரின் போதனையை விசாரிக்குங்கால், இந்த ரகசியம் வெளிப்படும். இயேசுநாதர் மனுவுருவெடுத்து இப்பூதலத்தில் உதித்து, மனிதஜாதிக்கு மோட்சவழியை நியமித்தருளியபிற்பாடு இந்த உலகோர்க்குக் காணப்படாமற்போனாலும், அரூபியாய்த் தம் அடியாருக்குத் துணையாகவே இருந்துவந்திருக்கிறார். அவ்விண்ணிறைவன் தற்காலம் அதரிசனராயிருந்தபோதிலும், திரும்பப் பிரசன்னராகி, அக்கிரமங்களனைத்துங் காலின்கீழ் மிதித்து நசுக்கி, சகல பேதங்களையும் நீக்கி, மனுமக்கள் அனைவர்மேலும் நியாய பரிபாலனம் ஸ்தாபிப்பாரென்று வேதவாக்கியங்களினால் வெளிப்படையாகத் தெரியவருகிறது. 'மனுஷகுமாரன் தம்முடைய பிதாவின் மகிமைபொருந்தினவராய்த் தம்முடைய தூதரோடுங்கூட வருவார்; அப்பொழுது, அவனவன் கிரியைக்குத் தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார்' (மத். 16. 27.) என்றும், 'மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்குவரைக்கும் பிரகாசிக்கிறதுபோல; மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும்' (மத். 24. 27.) என்றும், அத்திவ்ய புருஷன் திருவாய் மொழிந்தார். ஆண்டவர் எப்போது வருவாரென்பதைப்பற்றி ஒருவருஞ் சொல்ல முடியாதாயினும், அச்சர்வலோக நியாயாதிபதி வரும்போது, சகலத்தையும் சீராக்கி, பரலோக பூலோகாதிகளைப் புதிதாக்குவாரென்று வேதவாக்கியங்கள் கூறுகின்றன (அப். 3. 21; 2 பேது. 3. 13; வெளி. 21. 1. இவற்றைப் பார்க்கவும்.). ஆகையால் இவ்வர்த்தமானத்தை விசாரிக்கையில், வருங்காலத்தில் வந்து சகலத்தையும் பரிஷ்காரம்பண்ணும் ஜகத் பரிபாலனான ஆண்டவர்,



முன்னே மனுவேடம்பூண்டு மண்ணிலுதித்தவர், விண்ணின் ராஜனான இயேசுநாதரேயென்று விளங்குகிறது. இவ்வாறு வந்து நியாயந்தீர்க்கப் போவதாய் அம்மேலோகராஜன் கூறியதுபோல், உலகத்தோற்றமுதல் தற்காலம்வரையில் சொன்னவர்கள் யாருமேகிடையாது.

நாம் இவ்வாறாக எவ்வளவு விசாரித்தபோதிலும், எவ்வளவோ சாஸ்திரங்களையும் தர்மநூல்களையும் ஆராய்ந்தபோதிலும், ஞானிகளுரைத்த திவ்ய வாக்குகளும், சகல மனுமக்களும் வாஞ்சிக்கிற வாஞ்சையும், இயேசுகிறிஸ்துநாதர் ஒருவரால்மாத்திரம் நிறைவேறுகின்றனவேயன்றி, வேறொருவராலும் நிறைவேறாவென்று புலப்படும். ஹிந்துக்கள் தங்கள் அனுபவத்தினால் தம் சாஸ்திரங்களைப் பரிசோதனைபண்ணினால், அவர்கள் இச்சங்கதிகளை யறிந்து, இயேசுபகவானே சத்தியாவதார புருஷனென்று ஒப்புக்கொள்ளாதிருக்க வழியில்லை. நாம் மேற்கூறியபடி, சத்தியாவதாரத்தில் களங்கம் என்பது சிறிதளவேனும் இருக்கக்கூடாது. பரம சற்குருமூர்த்தியாக வந்துதித்த ஜகத்ரட்சகர், சமஸ்த விஷயங்களிலும் பரிசுத்தமான பரிகாரமூர்த்தியாக இருப்பது இன்றியமையா அவசியம். மேலும் அவர் போதனைக்குருவாகமாத்திரமிராமல் முற்றிலும் காரணக்குருவும், தம் தொண்டரின் பாவங்களைச் சுத்திகரித்து அவர்களை மோட்சகரை சேர்ப்பதற்குச் சர்வவல்லமையுடையவராகவுமிருக்கவேண்டும். அந்தச் சற்குரு தெய்வசொரூபியாயிருந்தாலொழிய, இம்மேன்மையான தொழிலை நிறைவேற்றக் கூடாதவர் ஆவார்; ஆதலால், அவர் தெய்வீகமுடையவரென்று பூரண மனதோடு அறிக்கையிடுகிறதற்குச் சந்தேகமில்லை. மேலும் அந்த சற்குருவானவர் தேவனாயிருந்தபோதிலும், யாகம் முதலியவைகளின்றி, நம் பாவங்களை நிவிர்த்தியாக்கி, பஞ்சமாபாவிகளான நம்மை விடுதலை பண்ணுவதற்கு இடமிராதாகையால், ருக்வேதம் சொல்லுகிறபடி (viii. 42. 2.) தம்மைத் தாம் பலியாகப் படைப்பது அவசியமென்று விளங்குகிறது. அப்பலி சகல பாவங்களையுங் கடக்கப்பண்ணும் படவு ஆகையால், ரட்சகரான அக்கருவியை ஆதாரமாக்கிக்கொள்வோர் அனைவரும் அதின்வழியாய் பாவசாகரத்தைக் கடந்து சென்று மோட்சஸ்தலமென்னும் துறைமுகம் சேருவார்கள். சத்தியாவதார புருஷனே மோட்சவழியைக்

காட்டி நம்மை அம்மார்க்கத்தில் சேர்க்கிறவர்; அல்லாமலும், அவர் பாவக்கறை யாவும் நீங்கும்வண்ணம் நம்மைச் சுத்திகரித்து, மரண பயந் தீர்த்து நம்மைக் காப்பாற்றி நடத்துகிறவர் என்பதற்குச் சந்தேகமில்லை. இவ்வகை சற்குருவை இம்மேதினியில் எத்திசையினும் காண்ப தரிது. மானிடராகுலும், தேவர்களாகுலும் இப்புவியில் ஜன்மித்தோரனைவரும், கர்மத்தில் பிறந்து கர்மத்தில் மூழ்கினவர்கள். தசாவதார சரித்திரமுதலான இதிகாசமென்னும் பூர்வ கால பாரம்பரியங்களையும், நூல்களையும் பரிசோதனைபண்ணினுல், பெரும் புகழும் கீர்த்தியும் சிறப்பும்பெற்ற இந்த வீரசூரர்க ளனைவரும் நம்மைப்போல் துராசைகளுக் கடிமைகளாகி தங்காரியங்களைச் சீராக்கிக்கொள்ளக் கூடாமல், மாண்டுபோன மானிடர் என்றே விளங்கும். அவர்கள் சரித்திர நூல்களை வாசிப்பதாலும், அவர்கள் நடப்பித்த திருவிளையாட்டுகளைத் தியானிப்பதினுலும், நமது பாவம் சிறிதளவேனும் நீங்காது. அவர்கள் தீயசெயல்களை ஞாபகம் பண்ணுவதால், நம்மில் இயல்பாய் எழும்புகிற துராசைகள் அதிகரித்து, நமது பக்தி வைராக்கியம் முழுவதையுங் கெடுத்துவிடும். அவர்களும் நம்மைப்போல் நெறிதவறி இங்குமங்கும் திரிந்தவர்களானபடியால், நம்மைக் கைப்பிடித்து வழியில் கொண்டுவந்து சேர்க்க அவர்களுக்கு அதிகாரமில்லை. இயேசுகிறிஸ்துநாதரே சத்தியாவதாரி. பரிசுத்தமூர்த்தி களங்கமற்றவராய் சகல சோதனைகளையும் வென்று மேற்கொண்டு, தம்மடியாருக்கு ஜெயமளிக்கக் கூடியவர். அப்பரம புருஷனின் சுபாவ லட்சணங்களைப் பார்க்கும்போது, அவரில் மனுஷீகமும் தெய்வீகமும் கலந்திருந்ததென்று நிச்சயமாய்த் தெரியவருகிறது. மேலும் அந்த ஜகத்ரட்சகர் சர்வலோக பாவங்களையும் பரிகாரம் செய்கிறதற்கு பிராணத்தியாகம் செய்து, மரணத்தை ஜெயித்து, உயிரோடிருக்கிறவராய் ஜீவித்து, சகல மனிதரையுந் தன்னிடஞ் சேர்த்து, அவர்களுக்கு மோட்சதானமளிக்க ஆயத்தமாயிருக்கிறுர். இயேசுநாதரின் திருஅவதார சரித்திரம் பூர்வ சாஸ்திரங்களுக்கும், தம் பாவங்களைக் கண்டுணருகிறவர்களின் அனுபவத்திற்கும், இவ்வளவு ஆச்சரியமானவகையாய் ஒத்திருக்கையில் அவர் ஜகத் ரட்சகரென்று நிச்சயிக்கக்கூடாதா? அவர் சரித்திரத்தை வாசித்து நுட்ப பரிசோதனை செய்கிறதற்களவாக, வேதவாக்கியங்கள் சுட்டிக்காட்டும் பரமா



சாரியரும், பகவத்கீதை முதலான கிரந்தங்கள் வெளிப்படுத்துகிற சற்குருவும், சகல மனிதரும் ஆசையுடன் வாஞ்சிக்கிறவருமான அப்படிப்பட்ட இரட்சகர் இவரேயென்று நமக்கு நிச்சயமாகிறது. ஆகையால் இவ்வளவுகாலத்திலிருந்து காத்திருக்கிறவர்கள், தாம் விரும்பின ரட்சகர் யாரென்று கண்டுபிடித்து, தமது சந்தேகங்கள் யாவையும் விட்டுத் தள்ளி அவர் நியமித்த மார்க்கத்தைத் தழுவலாம்.

# III. அதிகாரம்

## தீர்க்கதரிசிகள் இயேசுகிறிஸ்துநாதரின் மனிதவதாரத்தைக் குறித்துக் கொடுத்த சாட்சி.

நாம் எத்தேசத்துச் சரித்திரத்தை விசாரித்தபோதிலும், அத்தேசத்தார்கள் அனுசரித்த மதக்கோட்பாடுகளினால் சத்தியாவதாரச் சித்தாந்தம் சிறிதளவு ரூபகாரமானாலும் இயேசுநாதர் ஜென்மித்த தேச சரித்திரத்தைச் செவ்வையாக விசாரிப்போமானால் அக்கோட்பாடு ஏற்றுக்கொள்ளப்படத் தக்கதே என்பது தெளிவாகிறது. இயேசுநாதர் சீரியா தேசத்தின் கீழ்த்திசையில் வாசஞ்செய்துவந்த யூதர் என்ற ஜனத்தில் பிறந்தவர். அந்த ஜனங்கள் பூர்வத்தில் யுத்தத்தினாலாவது வர்த்தகத்தினாலாவது கல்வியினாலாவது அவ்வளவு பெயர் பிரஸ்தாபமில்லாதவர்களாயினும், தேவானுக்கிரகத்தினால் மெய்ஞ்ஞானத்தைக் கைக்கொண்டு தமது பக்தி வைராக்கியத்தினால் நிலையான கீர்த்தியை அடைந்தார்கள். அவர்களுடைய வேதநூலைப் பரிசோதித்துப் பார்த்தால் தேவன் அவர்களுக்குத் தமது மகிமையை வெளிப்படுத்தி, அவர்களை அற்புதமாய் ஆண்டு நடத்திவந்ததாக தெளிவாய்க் காணப்படும். மற்ற ஜனங்களெல்லாரும் அஞ்ஞான அந்தகாரத்தில் சிக்கிக்கொண்டு, பல தேவர்களை ஆராதித்து, விக்கிரகாராதனை முதலிய அஞ்ஞான ஆசாரங்களைக் கைக்கொண்டு வந்தபோது, இந்த ஜனங்கள் ஏகேச்சுரவாத மதத்தைச் சேர்ந்து இரண்டாயிரம் வருஷங்களாக அம்மதக் கோட்பாட்டின்படி நடந்துவந்தார்கள். இயேசுகிறிஸ்துநாதர் ஜனனத்திற்கு 1900 – வருஷங்களுக்கு முன்னர் எகிப்து தேசத்திற்குப் போய் நாலு நூற்றாண்டுகளாய் அத்தேசத்



தாருக்கு அடிமைகளாய் இருந்து அதிக அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்தார்கள். அதன்பிறகு தேவன் அவர்கள்மேல் கடாட்சம் வைத்து, அவர்களுக்கு ஒரு விடுதலைக்கர்த்தனை நியமித்து, அவர்களுடைய ஹீனஸ்திதியிலிருந்து அற்புதமாக அவர்களை விடுவித்தார். அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட மோசே என்னும் பக்தசிரோமணி தெய்வ சகாயத்தினால் அநேக அற்புத அடையாளங்களைச் செய்து, எகிப்தியருக்கு அதிக பயமுண்டாக்கி, தமது ஜனங்களைப் பலஸ்தீனா தேசத்திற்கு வழிநடத்திக்கொண்டு போனான். அவர்கள் அத்தேசத்திற்குப் பிரயாணமாய்ப் போகும்போது தேவன் அவர்களைப் பராமரித்து, ஆதரித்து, சகல ஆபத்திலிருந்தும் காப்பாற்றி, வனாந்தரத்தில் அற்புதமாய் அவர்களுக்கு அமுதளித்துப் போதித்துவந்தார். அவர்கள் விக்கிரகாராதனையை முற்றிலும் தள்ளி புறஜாதியாருடைய தேவர்களைப் பணியாமல், ஏகதேவனான தம்மைமாத்திரம் ஆராதித்து வணங்கும்படி அவர்களுக்கு நீதிநெறி முறைகளை விதித்து, அநேக உபகாரங்களினால் தமது மாட்சிமையையும் அளவற்ற தமது தயவையும் காண்பித்தார். மேலும் பாவம் மிகக் கொடியதென்று அவர்கள் கண்டுணர்ந்து அதை முற்றிலும் வெறுக்கும்பொருட்டு பலி முதலிய ஆசாரங்களை நியமித்தார். அந்த ஜனம் நாற்பது வருஷங்களாய் வனவாசஞ்செய்து திவ்ய உபதேசங்களைப் பெற்று, கடைசியில் தேவதயவினால் தங்கள் சுயதேசஞ் சேர்ந்து, அதில் வாசம்பண்ணின புறஜாதிகளை ஜெயித்து அத்தேசத்தைச் சுயாதீனஞ் செய்துகொண்டனர்.

இந்த யூதர்கள் ஏறக்குறைய 1500 வருஷங்களாக அத்தேசத்தில் குடியிருந்து ஏகதேவ மதக்கோட்பாட்டைக் கைக்கொண்டு அதிசிரேஷ்டமான உபதேசத்தைக் காப்பாற்றிவந்தார்கள். அவர்கள் இடைக்கிடையே சத்தியத்தை விட்டு விலகி இதர தேசத்தாருடைய தீயவழிகளைக் கற்றுக்கொண்டு கெட்டுப்போனபோதிலும், தேவன் அவர்களை நெகிழவிடாமல் அநேக ஞானிகளையும் தீர்க்கதரிசிகளையும் தோன்றப்பண்ணி தம்முடையவர்களான அம்மனிதரால் அவர்களை எச்சரித்து அவர்களுக்கு சத்தியோபதேசங்களைத் தயவாய் அனுக்கிரகித்துக்கொண்டே வந்தார். காலஞ் செல்லச்செல்ல அவர்களும் அவர்களுடைய அரசர்களும் அதிகப் பெருமைகொண்டு தேவனுடைய கட்டளைகளை அற்பமாய் எண்ணி, தேவன் நியமித்த தீர்க்க

தரிசிகளுடைய வாக்குக்குக் கீழ்ப்படியாமல் முற்றிலும் கடின மனமுடையவர்களாய்விட்டதினால் அவர்களைத் தண்டிக்கும்பொருட்டு தேவன் அவர்களை அவர்களுடைய சத்துருக்களுக்கு ஒப்புக்கொடுத்துவிட்டார். இயேசுகிறிஸ்துநாதரின் திருஅவதாரத்திற்கு 600 வருஷங்களுக்கு முன்னர் பாபிலோன் என்னும் தேசத்தில் அரசியற்றிய நேபுகாத்நேச்சார் என்னும் மகாராஜன் சகல தேசங்களையும் ஒரு குடைக்குள்ளாக்கி யூதரையும் ஜெயித்து அவர்கள் தேசமனைத்தையும் பாழாக்கி, அவர்களைத்தன் தேசத்திற்குச் சிறையாக்கிக் கொண்டு போனான். அவ்வந்நியதேசத்தில் பரதேசிகளாயிருந்தகாலத்தில் அவர்கள் தங்கள் பாவங்கள் என்னென்ன என்று கண்டுணர்ந்து தங்கள் மனக்கடினத்தை ஒழித்துவிட்டுத் தேவனிடந் திரும்பினபடியால் எழுபது வருடங்கள் சென்றபிறகு தேவன் அவர்களுடைய முறையிடுதலைச் செவியுற்று அவர்களுக்கு இரங்க, அக்காலத்தில் அரசாண்டுவந்த கோரேஸ், அவர்கள்மேல் தயைகூர்ந்து அவர்கள் சுயதேசத்திற்கு அவர்களைத் திரும்பிவரச் செய்தான். சொந்ததேசம் வந்து சேர்ந்த பிறகு அவர்கள், வெகு பக்திவைராக்கிய முடையவர்களாய்த் தேவனை ஆராதித்து அவர்மேல் நம்பிக்கை வைத்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு எவ்வளவு துன்பங்கள் நேரிட்டபோதிலும், அவர்கள் பகைஞர் அவர்களுக்கு எவ்வளவு இடுக்கண்கள் உண்டாக்கினபோதிலும், அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய், தங்கள் சமயாசாரங்களையும் மதக்கோட்பாடுகளையும் சிறிதளவேனும் நெகிழவிடாமல், வெகு ஸ்திரமுடையவர்களாயிருந்தார்கள். இதர தேசங்களில் ஞானிகளும் கல்விமான்களும் ஏகதேவ மதக்கோட்பாட்டை ஒப்புக்கொள்ளுகிறவர்களானாலும் சாதாரண ஜனங்கள் வழக்கமாய்ப் பரமாத்மாவுக்குப் பதிலாக அநேக தேவர்களை நம்பி வழிபடுவார்கள். இதுவுமல்லாமல் இதர தேசங்களில் இப்படிப்பட்ட அவபக்தியை அவமதித்து அற்பமாய் எண்ணின சாஸ்திரிகள் ஏகதேவ மதக்கோட்பாட்டை அநுசரித்தபோதிலும், அவர்கள் கடவுளை ஆராதிக்காமல் சாதாரண ஜனங்களைப்போல பல தேவர்களைப் பூஜை செய்து விக்கிரகாராதனை முதலிய ஆசாரங்களைக் கைக்கொள்ளுவது வழக்கம். ஆனால் யூதர்கள் மாத்திரம் ஏகேஸ்வர மதக்கோட்பாட்டை நம்பி அச்சத்தியத்திற்கிசைய நடந்துகொண்டுவந்தார்கள். மேலும், மற்றவர்கள் தங்கள்



தேவர்களுக்கு இகழ்ச்சிக்குரிய அநேக விகாரகுணங்களைச் சூட்டியிருக்க, யூதர்களோ தேவனுடைய அளவற்ற மகிமைக்கு அணுவளவும் பழுதுசொல்லாமல், அவர் முற்றிலும் பரிசுத்தரும் களங்கமற்றவருமாய் இருக்கிறார் என்று வெகு பலமாய் நம்பிவந்தார்கள்.

யூதருடைய தர்மசாஸ்திர நூல்களைப் பரிசோதனை செய்தால் இக்கோட்பாடு எவ்வளவு முக்கியமானதென்று நமக்குத் தெளிவாய் விளங்கும். 'உங்கள் தேவனும் கர்த்தருமாகிய நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்' (லேவி. 19. 2.) என்றும், 'சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது' என்றும் (ஏசா. 6. 3.), 'கர்த்தர் நீதியுள்ளவர், நீதியின்மேல் பிரியப்படுகிறார்' என்றும் (சங். 11. 7.), 'கர்த்தர் தமது வழிகளிலெல்லாம் நீதியுள்ளவர்' என்றும் (சங். 145. 17.), யூதருடைய சாஸ்திர நூல்கள் அனைத்தும் ஏகோபித்துக் கூறுகின்றன. யூதர்கள் இச்சத்தியத்தை உணர்ந்ததினால் அவர்கள் விக்கிரகாராதனையை வெறுத்து உண்மையான தேவன்பேரில் வெகு பயபக்தி வைத்து அவரைப் பணிந்து ஆராதித்துவந்தார்கள். கிறிஸ்தவர்களும் மகமதியரும் அவர்களிடமிருந்தே ஏகதேவ உபதேசத்தைப் பெற்றுச் சகலத்தையும் சிருஷ்டித்த பரமேஸ்வரனை ஆராதித்துவர, மற்ற மதஸ்தர்களோ இச்சத்தியமார்க்கத்தை விட்டு விலகி, அநேகவிதமான ஆசாரங்களைக் கைக்கொண்டு வருகிறார்கள்.

இவ்விஷயத்தைக்குறித்து யோசிக்கையில், கடவுள் யூதர்களுக்குச் சத்திய உபதேசத்தைக் கையளித்து, அவர்கள் அதைக் கற்றறிந்து காப்பாற்றி சகல தேசங்களிலும் பிரபலம் பண்ணுகிறதற்கு அவர்களை நியமித்து, ஆண்டு நடத்தினார் என்று நிச்சயமாய் நம்பலாம்.

தங்களுக்கு எவ்வளவு துன்பங்கள் நேரிட்டாலும், யூதர்கள் தங்கள் தைரியத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிடவில்லை. மற்ற தேசத்தார் முற்காலத்தை மெச்சிக்கொண்டு தொன்று தொட்டு வழங்கின நீதிநெறியே சிரேஷ்டம் என்று கருதிவந்திருக்க, யூதர்கள் வருங்காலத்தை எதிர்நோக்கிக் கடவுள் தாம் நியமித்தகாலத்தில் சகலத்தையும் பூரணப்படுத்தி ஸ்திரமாக்கி நீதி நியாயங்களை எங்கும் பிரபலப்படுத்துவார் என்று உறுதியாக நம்பிவந்தார்கள். இக்காரியம் தங்கள் ஏற்பாடுகளால் நாளொரு மேனியும் பொழுதொரு

வண்ணமுமாக நிறைவேறுமென்று எண்ணாமல் திவ்ய புருஷர் ஒருவர் ஜன்மித்து, தமது மாட்சிமையால் சகல மனிதரையும் தம் வசப்படுத்தி சர்வலோகத்திலும் தமது அரசாட்சியை ஸ்தாபித்து நிலைநிறுத்துவாரென்று நிச்சயித்திருந்தார்கள். முற்பிதாக்கள் காலத்திலிருந்து அவர்கள் இந்த அபிப்பிராயத்தை அனுசரித்து, வரப்போகிற ஜகத் ரட்சகருக்காக எதிர்பார்த்திருந்தனர். விபத்துகள் நேரிட்டபோது, அவர்கள் கொஞ்சமாகிலும் தைரியத்தை விடாமல் காலம் பரிபூரணமானதால், கடவுள் தாமதம் செய்யாமல் தம் மகத்துவத்தை வெளிப்படுத்துவார் என்று ஊக்கமான மனதுடன் விசுவாசித்தார்கள். அவர்கள் ஆரம்பத்தில் இச்சங்கதியைத் தெளிவாய் அறிந்துகொள்ளாதவர்களா யிருந்தபோதிலும், பக்தர்கள் செய்த உபதேசங்களினாலும், தமக்குண்டான அனுபவங்களினாலும், அதைக் கொஞ்சங் கொஞ்சமாகத் தெரிந்துகொள்ளக் கூடியவர்களானார்கள். உபாத்தியாயர் மாணாக்கருக்குக் கொஞ்சங் கொஞ்சமாகவும் படிப்படியாகவும் கற்றுக்கொடுக்கிறதுபோல், தேவன் தமது திவ்ய திருவுளத்தை அவர்களுக்குப் படிப்படியாக வெளிப்படுத்திவந்தார். அவர்கள் தேசத்தில், திவ்ய புருஷரான தீர்க்கதரிசிகள் பலர் பிறந்து தேவனுக்கடுத்த விஷயங்களைப் பிரசுரஞ் செய்தார்கள். இத்தீர்க்கதரிசிகள் பரிசுத்த ஆவியால் ஏவுதலடைந்து ஞானதிருஷ்டியினால் திவ்ய நோக்கங்களைப் பகுத்தறிந்து, தங்கள் சொந்த வாக்குகளை யல்ல, தேவன் புகட்டிய வாக்குகளையே பிரசுரம் செய்து, தங்கள் சுயதேசத்தாருடைய நிலைமைக்குத் தக்கபடி அவர்களுடைய குற்றங் குறைகளை தாட்சணியமின்றி கண்டித்துணர்த்தி வந்தார்கள். சகல ஜனங்களும் கடவுளை மறந்து தம்மிஷ்டப்படி நடக்கையில் இப்பக்தர்கள் ஜீவனுள்ள தேவன்பட்சமாய் சாட்சிகொடுத்து, அவருடைய நியாயத்தீர்ப்பைக்குறித்து எல்லாரையும் எச்சரித்தார்கள். இதுவுமன்றி அவர்கள் தீர்க்கதரிசன வரத்தை யுடையவர்களாய் வரப்போகும் சங்கதிகளை அறிந்துகொண்டு, அவற்றை ஜனங்கள் நடுவில் வெளிப்படுத்திவந்தார்கள். அவர்கள் முன்னுரைத்தபடி யாவும் அதிக ஆச்சரியமாய் நிறைவேறிவந்தன. கடவுளுடைய கட்டளைகளை அவமதித்து, அற்பமாயெண்ணி, பெருமைகொண்ட மகாராஜர்களும், அடங்காத கொடிய மூர்க்கரும், சத்து



ருக்களால் முறியடிக்கப்பட்டுத் தோல்வியடைந்து நிர்மூலமானார்கள். உதவியின்றி முற்றிலும் எளிய நிலைமையிலுள்ள அகதிகள் தேவ கிருபையால், தம் வாதைகளையும் இக்கட்டுகளையும் மேற்கொண்டு பேர்பெற்றவர்களானார்கள்.

இந்தத் திவ்ய திருஷ்டிப் புருஷர்கள் முக்கியமாக வரப்போகிற ரட்சகரைக்குறித்து அதிக ஊக்கமாய் உபதேசித்து, தமது சுயதேசத்தார் அவருடைய வருகைக்காக எதிர்பார்த்திருக்கும்படி அவர்களைத் தூண்டிகொண்டே யிருந்தார்கள். அவர்கள் எழுதின தீர்க்கதரிசனங்களை ஆராய்ந்து பார்க்கும்பட்சத்தில் சிற்பாசாரிகள் உருவமற்ற கல்லை எடுத்துக் கொஞ்சங் கொஞ்சமாக வெட்டி அதற்கு உருவமும் சௌந்தரியமும் உண்டாக்குகிறதுபோல இத்திருத்தொண்டர்கள், தம்மாண்டவருடைய வரலாறுகளைப் படிப்படியாக வெளிப்படுத்தி வந்ததாகத் தெரியவரும். அருணோதயத்திற்குமுன் சூரியப்பிரகாசம் ஆகாயத்தில் பிரகாசிக்கும்வண்ணம் ரட்சகர் ஜன்மிக்குமுன் அப்பகலோனின் திவ்ய பிரகாசம் அடியார் இருதய கமலங்களில் ஒளி வீசிக்கொண்டிருந்தது. துவக்கத்தில் அது அவ்வளவு தெளிவற்றதாயிருந்தபோதிலும், காலஞ் செல்லச்செல்ல தேவன் அதைத் தம் பக்தர்களுக்கு விளக்கிக்காட்டித் தெரிவித்தபடியால் அவர்கள் ஒருவரைவிட ஒருவர் அவற்றின் விசேஷங்களைச் செவ்வையாக அறிந்து அவற்றை அதிக விபரமாக வெளியிட்டுவந்தார்கள். ஞானதிருஷ்டிப் புருஷன் ஒருவன் செய்த உபதேசத்தைப் பரிசோதனை பண்ணுவதால் நாம் முழுமையும் குறைவற அறியக்கூடாமற்போனாலும், முதலிலிருந்து கடைசிவரையில் ஆராய்ந்துபார்க்கில் சந்திரனுடைய உருவு தடாகத்தில் தோன்றுகிறதுபோல, திவ்ய திருஷ்டிப்புருஷர் இயற்றிய நூல்களில், ஜகத்ரட்சகருடைய சாயல் தெளிவாகக் காணப்படும்.

இயேசுகிறிஸ்து என்னும் திவ்ய பரஞ்சோதி இப்புவியிலுதிக்கப் பல ஆண்டுகளுக்கு முன்னர் இயற்றப்பட்ட நூல்களில் தேவன் அருளிய முதற்குறிப்புகள் காணப்படுகின்றன. சகல ஜனங்களும் அஞ்ஞானாந்தகாரத்தில் சிக்கிக்கொண்டு, சத்தியநாதனை அறியாமல், பல தேவர்களைப் பணிந்து, துராசாரங்களை அகோரமாய்ப் பின்பற்றியபோது, கடவுள் அவர்களுடைய நிர்ப்பாக்கிய ஸ்திதியைக் கண்ணுற்று, உள்ளங் கனிந்துருகி, கல்தேயர் தேசத்தில் வசித்த ஆபிர

காம் என்னும் ஒருவனைத் தெரிந்துகொண்டு அப்பக்தனுக்குத் தமது சுபாவ லக்ஷணங்களை வெளிப்படுத்தி, 'நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தாய் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ, நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி ஆசீர்வதித்து உன்பேரைப் பெருமைப் படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாயிருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவர்களைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்' (ஆதி. 12. 1–3.) என்று அவனுக்குத் திருவாக்கருளினார். ஆபிரகாம் கடவுளுடைய கட்டளையைக் கைக்கொண்டு, ஜனனதேசத்தை விட்டுப் பலஸ்தீன தேசத்திற்கு வந்தபிறகு, தேவன் இரண்டு மூன்றுதடவை அவனுக்குப் பிரத்தியட்சமாகி தம் வாக்கை ஸ்திரப்படுத்தினார். மேலும் ஒரு சந்ததிக்குப் பிறகு தேவன் ஆபிரகாமுடைய பேரனாகிய யாக்கோபுக்குப் பிரத்தியட்சமாகி, 'உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்' (ஆதி. 28. 14.) என்று திருவாக்கருளினார். யாக்கோபு காலஞ்சென்றபிறகு அவனுடைய சந்ததியார் நானூறு வருஷங்களாக எகிப்து தேசத்தில் வாசம்பண்ணி, பின்பு தேவகிருபையால் பலஸ்தீன தேசத்திற்கு வந்து சேர்ந்து, கொஞ்சங் கொஞ்சமாய்ப் பலுகிப் பெருகினார்கள். அத்தேசத்தில் ஏறக்குறைய நானூறு ஆண்டுகள் வாசஞ்செய்தபின்னர், தாவீது என்னும் மகாராஜன் பட்டாபிஷேகப்பெற்று ராஜ்ய பரிபாலனம் பண்ணி வந்தான். அவன் அதிக பக்திமானும் தீர்க்கதரிசன வரமுடையவனுமானதால் வரப்போகிற இரட்சகருடைய வர்த்தமானத்தைப் பலவாறாக வெளிப்படுத்திவந்தான். மேலும் அவன் தேவனுடைய அருள்பெற்றவனாகி தன் ராஜ்யம் ஸ்திரமாயிருக்கும்பொருட்டு அந்த ரட்சகர் தன் சந்ததியில் பிறக்கப்போகிறாரென்று தெரிந்துகொண்டான். இச்சங்கதியைக்குறித்து கிறிஸ்திறைவன் ஜனனத்திற்கு எழுநூறு வருடங்களுக்குமுன் ஜீவித்த ஏசாயா என்னும் ஞானதிருஷ்டிப் புருடன் தாவீதரசனின் தந்தையாகிய ஈசாயின் சந்ததியில் ரட்சகர் உற்பவிப்பார் என்று வெளிப்படுத்தினவித மெப்படியெனில், 'ஈசா என்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும், ஞானத்தையும் உணர்



வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார். கர்த்தருக்குப் பயப்படுதல் அவருக்கு உகந்த வாசனையாயிருக்கும்; அவர் தமது கண் கண்டபடி நியாயந்தீர்க்காமலும், தமது காது கேட்டபடி தீர்ப்புச்செய்யாமலும், நீதியின்படி ஏழைகளை நியாயம் விசாரித்து, யதார்த்தத்தின்படி பூமியிலுள்ள சிறுமையானவர்களுக்குத் தீர்ப்புச்செய்து, பூமியைத் தமது வாக்கின் கோலால் அடித்து, தமது வாயின் சுவாசத்தால் துன்மார்க்கரைச் சங்கரிப்பார்' (ஏசா. 11. 1–4.). இந்தவிதமாகவே தீர்க்கதரிசனம் அறிந்த திவ்ய திருஷ்டிக்காரரான முன்னோர்கள் ஜென்மிக்கப்போகிற சற்குருவின் வம்சவரிசையைத் தெரிவித்துக்கொண்டு வந்தார்கள். இதுவுமல்லாமல் அகிலாண்டநாயகர் பிறக்க எழு நூற்றாண்டுகளுக்கு முன் மீகா என்னும் திவ்ய திருஷ்டிக்காரன் இத்திவ்ய வரலாற்றை விசாரித்தறிந்து, அத்திருவுருவானவர் தாவீதின் பட்டணமாகிய பெத்லகேமில் ஜென்மிப்பாரென்று தெரிவித்து, 'எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார். அவருடைய புறப்படுதல் அநாதிநாட்களாகிய பூர்வத்தினுடையது' (மீகா. 5. 2.) என்று சொன்னான்.

தீர்க்கதரிசிகள் இவ்வளவு வெளிப்படையாகச் சொன்னதினால் அத்தேசத்தார்கள் ஜென்மிக்கப்போகிற மேலோக மன்னனுக்காக மிக்கக் காதலுடையவர்களாய் எதிர்நோக்கிக்கொண்டிருந்தார்கள். அத்திருமகன் விஷயம், அவருடைய ஜென்மஸ்தலம் என்பவை மாத்திரமேயன்றி, அத்திருச்சொரூபியின் குணலட்சணங்கள் கூட, தேவ அருளால் ஒருவாறு தெரியும்படியானது: முற்கால நூல்களைப்* பரிசோதனைபண்ணினால் இது விளங்கும். அந்த ரட்சகர் சற்குரு மூர்த்தியாக வந்துதித்து சகலருக்கும் சத்தியோபதேசங் கூறுவார் என்று மோசே என்னும் மாமுனி ஏறக்குறைய 1,500 ஆண்டுகளுக்குமுன் தெரிவித்தார். இதைப்பற்றி 'உன்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக அவர்கள் சகோதரர்களிலிருந்து எழும்பப்பண்ணி, என் வார்த்தைகளை அவர் வாயில்

அருளுவேன்; அவருக்குச் செவிகொடுப்பீர்களாக' (உபா. 18. 18.) என்று சொல்லியிருக்கிறார். மேலும் அந்த ரட்சகர் சத்தியமறை புகட்டுகிறவராக மாத்திரமேயன்றி சகல ஜனங்களையுந் தனக்குக் கீழாக்கி மகா வேந்தனைப்போல சகல தேசங்களையும் ஒரு குடையின்கீழ் அரசாளுகிறவருமாய் இருக்கிறார் என்று முன்னோர்கள் வெகு தெளிவாக உரைத்திருக்கிறார்கள்.

இதைப்பற்றி தானியேல் என்னும் தீர்க்கதரிசி ஆவிக்குள்ளாகி 'இராத்தரிசனங்களிலே நான் பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ, மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார்; அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து, அவர் சமீபத்திற்குக் கொண்டுவரப்பட்டார். சகல ஜனங்களும் ஜாதியாரும் பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி, அவருக்குக் கர்த்தத்துவமும் மகிமையும் ராஜரிகமும் கொடுக்கப்பட்டது; அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும், அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும்' (தானி. 7. 13, 14.) என்று சொன்னான். மேலும் கிறிஸ்துநாதர் ஜெனனத்திற்கு ஐந்து நூற்றாண்டுகளுக்குமுன், சகரியா என்னும் ஞானதிருஷ்டிக்காரன் சற்குருமூர்த்தியின் வருகையை எதிர்நோக்கி 'சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும், கழுதையின்மேலும் கழுதைக் குட்டியாகிய மறியின்மேலும் ஏறிவருகிறவருமாயிருக்கிறார். [அத்தேசத்தில் குதிரைகள் அதிகமாயிராததினால், ராஜாக்களும் மேன்மக்களும் அதிகாரிகளும் சாதாரணமாய் ஒருவகை நல்ல ஜாதி கோவேறு கழுதைமேல் ஏறிப்போவது தேச வழக்கம்.] அவர் ஜாதிகளுக்குச் சமாதானம் கூறுவார்; அவருடைய ஆளுகை ஒரு சமுத்திரந் தொடங்கி மறு சமுத்திரம்வரைக்கும் நதிதொடங்கி பூமியின் எல்லைகள் பரியந்தமும் செல்லும் (சகரி. 9. 9, 10.) என்று சொன்னான்.

இந்தத் திவ்ய இரட்சகர் சர்வாதிகாரமுடையவராய் சகல தேசங்களையும் ஆளுகிறவராயிருந்தபோதிலும், அம்மன்னாதி மன்னன் உலக அரசர்களைப்போல பலாத்காரமும் கொடுமையும் செய்யாமல் சகல மனிதரையுங் கடாட்சித்து, அவர்கள் பாவங்களுக்காக ஆசாரிய ஊழி-



யத்தை ஏற்றுக்கொண்டு, அவர்களுக்குப் பாவவிடுதலை யுண்டுபண்ணுவார் என்று அநேக திருஷ்டாந்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நாம் இதற்குமுன் ருக்வேதத்தை விசாரித்துப் பார்த்தபோது, பிரஜாபதி சகல லோகத்திற்காகவும் தன்னைத்தான் பலியாக்கினாரென்று பூர்வகால ரிஷிகள் தெரிவித்ததாகப் பார்த்தோமல்லவா? யூதேயா தேசத்திலுள்ள திவ்ய திருஷ்டிக்காரர் பிறக்கப்போகிற ரட்சகரின் வரலாற்றைப் பரிசோதித்து, அவர் மனிதருக்குப் பிராயச்சித்தம் உண்டுபண்ணி தன்னைத்தான் யாகஞ்செய்வாரென்று ருக்வேதத்திற் கிசைவாகவே சொல்லிவந்தார்கள். இதைக்குறித்து ஏசாயா என்னும் திவ்ய திருஷ்டிக்காரன் ஐந்நூறு அறுநூறு வருஷங்களுக்குமுன் வெகுவாய் விவரித்து எழுதினதாவது: 'எங்கள் மூலமாய் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது? இளங்கிளையைப்போலவும், வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப்போலவும் அவனுக்கு முன்பாக எழும்புகிறார்; அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமுமில்லை; அவரைப் பார்க்கும்போது, நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது. அவர் அசட்டை பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடனுபவித்தவருமாயிருந்தார்; அவரை எண்ணாமற்போனோம். மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைபட்டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார். அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை; அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போலவும், தன்னை மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார். இடுக்கணிலும்

நியாயத்தீர்ப்பிலுமிருந்து அவர் எடுக்கப்பட்டார்; அவருடைய வம்சத்தை யாரால் சொல்லிமுடியும்? ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டுபோனார்; என் ஜனத்தின் மீறுதலினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார். துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்கள்; ஆனாலும் அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார்; அவர் கொடுமை செய்யவில்லை; அவர் வாயில் வஞ்சனை யிருந்ததுமில்லை. கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார்; அவருடைய ஆத்துமா தன்னைக் குற்றநிவாரணபலியாக ஒப்புக்கொடுக்கும்போது, அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்தநாளா யிருப்பார்; கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும். அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்; என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்; அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொள்வார். அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்தில் ஊற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக்கொண்டதினிமித்தம் அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன்; பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக்கொள்வார்.' (எசா. 53. 1-12.)

இந்தத் தீர்க்கதரிசனங்களைப் பரிசோதிக்கையில். அதிக விகற்பமாகக் காணப்படுகின்றன. சர்வாதிகாரம் பொருந்திச் சகல ஜனங்களையும் ஆளும் ஆண்டவர் நிந்தையையும் அவமானத்தையும், அளவற்ற பாடுகளையும் பட்டு அதிகக் கொடுமையான மரணம் அடைவார் என்பது விந்தையல்லவா? என்றாலும் நாம் பரிசோதித்துப் பார்க்குமளவாக இதைவிட அதிக ஆச்சரியமான விஷயம் ஒன்று வெளியாகிறது, அதென்னவென்றால்;-இரட்சகருடைய விஷயத்தை வெளிப்படுத்தின ஞானதிருஷ்டிப் புருஷர்கள் அவ்விதப் பாடும் அவ்வகைக் கனமும்பொருந்திய ஆண்டவரில் தெய்வீகம் மனுஷீகம் இரண்டுங் கலந்திருக்கும் என்று நிச்சயித்தவிஷயமே. இதைக்குறித்து சகரியா என்ற ஞானதிருஷ்டிக்காரன், 'அந்த மகானுபாவன் தேவசம்பந்தமுடையவர்' என்று சொல்லுகிறார் (சக. 13. 7.). மேலும், ஏசாயா என்னும் தீர்க்கதரிசி 'நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு



குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்தியபிதா, சமாதானப்பிரபு என்று அவருக்குப் பெயரிடுவார்கள்' என்று உரைத்திருக்கிறார் (எசா. 9. 6.). இந்நாமங்களைப் பார்க்கும்போது அவற்றைத் தரிக்கத்தக்கவர் கடவுள் ஒருவரேயன்றி வேறொருவருமில்லை என்று வெளிப்படும். ஒவ்வொரு வாக்கியத்தையும் வெவ்வேறாக விசாரிக்கையில், அந்த ஞானிகளின் அபிப்பிராயத்தைப் பூரணமாயறிய இடமிராததென்றாலும் அவர்கள் இயற்றிய நூல்களனைத்தையும் நுட்பமாய்ச் சீர்தூக்கி ஆராய்ச்சி செய்கையில் அது வெளிப்படும். இப்படிப் பரிசோதித்து அவர்கள் காட்டிய குறிப்புகளையும் அடையாளங்களையும்கொண்டு விசாரிக்குமிடத்தில் அவ்வாண்டவரது வர்த்தமானம் நமக்குத் தெரியவரும். ரட்சிப்பின் விடிவெள்ளியான அம்மேலோன் ஆபிரகாமின் சந்ததியிலும் மகாராஜனான தாவீதின் கோத்திரத்திலும் ஜென்மித்து யூதேயா தேசத்திலுள்ள பெத்லகேம் என்னும் ஊரில் உதிப்பார் என்றும், குப்பையிலும் வைரக்கல் மங்காவண்ணம் தரித்திரநிலைமையில் பிறந்தாலும் தமது திவ்ய மகத்துவத்தால் சகல ஜனங்களையும் வசமாக்கி சர்வலோகத்தின்மேலும் தமது திவ்ய மகத்துவத்தை ஸ்தாபிப்பார் என்றும், அம்மகிமைச்சொரூபி இவ்வுலகத்தாரைப்போல பலவந்தம் பண்ணாமல், தமது சற்போதனையினாலும் மட்டற்ற தமது தயவினாலும் மனுக்குலத்தின் பாவாந்தகாரத்தை நீக்கி அவர்கள் எல்லாரையும் சன்மார்க்கத்தில் சேர்க்க ஏற்படுவார் என்றும், மகத்துவமான இப்பெருங் காரியத்தைச் செய்து நிறைவேற்ற அநேக பாடுகளை அனுபவித்துத் தமது ஜீவனை மரணத்துக்குத் தத்தம்பண்ணுவார் என்றும் முற்கால ஞானதிருஷ்டிப் புருஷரின் வாக்கியங்களால் பூரணமாய் வெளிப்படுகின்றன. மேலும் இவ்விதம் உற்பவித்து அவமானமான பாடுகளை அனுபவித்து மரணமடைந்த திவ்யநாதன் சாக்ஷாத் கடவுளும் அகிலாண்டங்களையும் ஆண்டு அழிக்கும் தேவனுமாயிருக்கிறார் என்று சொல்வதற்குப் பூர்வகாலத்து ஞானதிருஷ்டிப் புருஷர் கிஞ்சித்தேனும் பின்வாங்கவும் இல்லை, சந்தேகிக்கவும் இல்லை என்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் துலங்கும். யூதேயா நாட்டார் ஆதிமுதல் தீர்க்கதரிசிகளின் மொழிகளைத் திட்டமாய்க் கேட்டுத்

தமது தேசஸ்திதியைச் சீருக்குக் கொண்டுவரும் சிறப்புற்ற மன்னர் உற்பவிப்பார் என்று நம்பி, ஏறக்குறைய 1900 வருஷங்களுக்குமுன் அம்முனிவர்கள் சுட்டிக்காட்டி முன்னுரைத்த குறிப்படையாளங்களால் இரக்ஷகர்மேல் காதல்கொண்டு காத்துக்கொண்டிருந்தார்கள். அக்காலத்தில் ரோமர்கள் அவர்களுடைய தேசத்தைத் தங்களுக்குக் கீழ்ப்படுத்தி சுயாதீனம் பண்ணிக்கொண்டு அதை ஆளுகைசெய்து அவர்களிடமிருந்து கப்பம் வாங்கிவந்தார்கள். அவர்கள் இந்த அவமானத்தைச் சகிக்க முடியாமல் அதிக மனநோவடைந்து பிரலாபித்தபோதிலும், தாங்கள் பாரம்பரியத்தினால் கைக்கொண்டுவந்த அபிப்பிராயங்களைச் சிறிதளவேனும் விட்டுவிடாமல், தேவன் தமது வாக்கை நிறைவேற்றி உலக ரக்ஷகரைச் சீக்கிரம் அனுப்புவார் என்று நிச்சயித்திருந்தார்கள். இந்த லோக ஸ்திதியைக்கொண்டு காலக்குறிப்புகளை விசாரித்துப்பார்த்தால் இந்த ரக்ஷகர் உற்பவிக்குங்காலம் சமீபித்திருந்ததென்பதற்குச் சந்தேகம் இல்லை. சகல தேசத்தார்களும் பாவத்தைப் போக்கடித்து உண்மையான கடவுளைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்று பலவாறாகப் போராடி முயற்சிசெய்து, தமது பிரயத்தனங்கள் யாவும் வீணாயிற்றென்று அறிந்துகொண்டார்கள். சிலர் ஆத்தும விசாரணையை முற்றிலும் நிறுத்திவிட்டனர். சிலர் அற்புதவிதமாய் உண்டாகும் ஒரு தேவதுணைக்காக அங்கலாய்த்துப் பிரலாபித்துக் கொண்டிருந்தார்கள். அக்காலத்தில் இந்துதேசத்தில் புத்தமதஸ்தர்கள் தமது கோட்பாடுகள் எங்கும் பரவும்படி உபதேசித்து உலகத்தின் ஜனத்தொகையில் பாதிப்பேரைத் தங்கள் மதத்தில் சேர்த்துக்கொண்டபோதிலும், காலஞ்செல்லச்செல்ல அந்த ஜனங்கள் நிரீச்சுரவாத உபதேசத்தினால் திருப்தியடையாமல், தங்கள் எண்ணங்களையும் வேண்டுதல்களையும் அறிந்து தமக்கு உதவிபுரிகிற ரக்ஷகர் ஒருவர் இருக்கவேண்டும் என்று கோரி அம்மதத்தை விட்டுவிடுகிறதற்குக் கொஞ்சங்கொஞ்சமாய் ஆரம்பித்தார்கள். அத்துவிதம் முதலிய மதங்களைத் தழுவுகிற கல்விமான்கள் சிலர் இருந்தாலும், சாதாரண ஜனங்கள் இப்படிப்பட்ட உபதேசங்களினாலும் தாங்கள் சகஜமாய்க் கைக்கொள்ளுகிற ஆசாரங்களினாலும் தங்கள் பிரயத்தனங்கள் கிஞ்சித்தேனும் சித்திக்கா என்று உணர்ந்து ஜீவநதியும் அதரிசனமுமான தேவன் தம்மைத்தாம் எவ்வகையினும் வெளிப்படுத்தி, தங்கள் சந்தேகங்களை



நீக்கி தமது ஜெனனத்தை ஈடேற்றுவார் என்று எதிர்நோக்கி வந்தார்கள். ஆதலால் அறிஞர்களில் சிலர் மனுமக்களின் நிர்ப்பாக்கியத்தைக் கண்டுணர்ந்து, அவதார உபதேசத்தை எடுத்துக் கூறும்போது சகலரும் மிகுந்த அகமகிழ்ச்சிகொண்டு, அந்த உபதேசத்தைத் தழுவி அவதார புருஷரின் துணையால் கர்ம நிவாரணம் சம்பாதித்துக்கொண்டு, பாவ விமோசனம் பெற்றவர்களாவோம் என்று உறுதியாய் நம்பினார்கள்.

கிரேக்க தேசத்தில் முற்காலத்துப் புலவரும் கல்விமான்களும் மனுமக்களின் லக்ஷணங்களைச் செம்மையாகக் கூர்ந்து பரிசோதனை பண்ணி மனிதரைக்குறித்தும் தெய்வத்தைக்குறித்தும் வெகு மேன்மையாகப் போதித்துவந்தார்கள். அவர்களுடைய உபதேசங்கள் நாடுகள்தோறும் பிரபலமானதென்றாலும் காலஞ் செல்லச்செல்ல அவர்கள் தேசத்தார்கூட திருப்தியடைய ஏதுவிராமல் அதிக சந்தேகிகளாகி சத்தியத்தைச் சிறிதளவுகூட அறிந்துகொள்வது கூடாமை என்று தீர்மானித்து ஆத்தும விசாரணையை நிறுத்திவிட முயன்றார்கள். தமது முன்னோர் வழிப்பட்ட தேவர்களின் வரலாற்றைப் பார்த்து அருவருப்படைந்து சிலர் அத்தேவர்களை அற்பமாய் எண்ணி இகழ்ந்து பேசிவந்தார்கள். சிலர் அப்படிப்பட்ட தேவர்கள் உண்டென்று எண்ணுவதே முற்றிலும் மூடத்தனம் என்று நிச்சயித்தார்கள். ரோம ராஜ்யத்தில்கூட சகலமும் தாறுமாறாய்க் கிடந்தன. இந்தக்காலத்துக்குமுன் ரோமர்கள் நீதி நியாயங்களைக் கைக்கொண்டு, சுயாதீனமுடையவர்களாய் எவ்வரசனுக்காகிலும் எச்சக்கிரவர்த்திக்காகிலும் கீழடங்காமல் தங்கள் துரைத்தன காரியங்களைத் தாங்களே நடத்திக்கொண்டு வருவதுண்டு. இப்படியிருக்கையில் அவர்கள் வெகு விடாமுயற்சியுடையவர்களாய், தங்கள் பராக்கிரமத்தினால் மத்தியதரைக்கடலைச் சுற்றிலுமுள்ள சகல தேசங்களையும் ஜெயித்து சுயாதீனம் செய்துகொண்டார்கள். ஆயினும் இவ்வளவு கீர்த்திப்பிரதாபம் அடைந்தபிறகு, அவர்கள் தங்கள் வைபவத்தைக்குறித்து மனச்செருக்கடைந்து, நீதி நியாய நெறிமுறை தவறி அநேக துர்க்கிரியைகளைக் கையாடி சகல விஷயங்களிலும் கொடும்பாவிகளானார்கள். 1900 ஆண்டுகளுக்குமுன் அவர்கள் தங்களுக்கு முன்னிருந்த சுயாதீனத்தை இழந்துவிட்டு, ஒரு சக்கிரவர்த்திக்குக் கீழடங்கி, அவனுடைய சித்தத்துக்கு இசைந்து நடக்கக் கடமைப்பட்ட

வர்களானார்கள். மேலும் அவர்கள் கிரேக்கரைப்போலவே சந்தேக சாகரத்தில் மூழ்கி, பக்தி என்பதை முற்றிலும் நெகிழவிட்டு மதாபிமானத்தைத் தள்ளி அரசியற்றும் சக்கிரவர்த்தியைமாத்திரம் பூஜை செய்துவர ஆரம்பித்தார்கள்.

நாம் எத்தேச ஸ்திதியை விசாரித்தபோதிலும், சகல ஜனங்களும் தாங்கள் முற்காலத்தில் அனுசரித்த மதோபதேசங்களால் திருப்தியடையாமல் முற்றிலும் மனச்சோர்வடைந்து தளர்ச்சியுற்று அதிகச் சந்தேகிகளாகி அந்தகர்போல் அங்குமிங்குந் தடவிக்கொண்டு திரிந்ததாகக் காணப்படும். சகல ஜனங்களும் மனம் உடைந்து இவ்வண்ணம் அரும்பாடுபடுகையில் அவர்களில் அநேகர் காலக்குறிப்புகளைக் கொண்டு, மகாப்பெரிய மாறுதல் ஒன்று உண்டாகப்போகிறதென்றும், சகல ஆபத்துக்களையும் நிவாரணஞ்செய்யும் மகாத்மா ஒருவர் தோன்றப்போகிறாரென்றும் நினைத்துவந்தார்கள். மேற்கூறியபடி யூதேயாதேசத்தார் அதிக நம்பிக்கையுடையவர்களாய், தாங்கள் பூர்வத்திலிருந்து எதிர்நோக்கிவந்த உலகரட்சகர் உதயமாகும்வேளை நிறைவேறிற்றென்று நம்பினார்கள். மாரிகாலத்தில் மேகங்கள் எழும்பி ஆகாசம் முழுவதையும் மூடிக்கொள்ளுகையில், மழை பெய்யுமுன் சாதாரணமாக காற்று அடங்கி சிறிதுநேரம் அமைதலாயிருக்குமல்லவா? நாம் வியப்படைந்து என்ன நடக்கப்போகிறதோவென்று திகைத்துக் காத்திருக்கையில் மழைவாசனை அடிக்குமேயன்றி கொஞ்சநேரம்வரையில் ஒன்றுமே நடக்கிறதில்லை. பிறகு நின்றிருந்த காற்று திடீரென்று கிளம்பி ஜலநிதிகள், நீர்த்தாரைகள், நீரூற்றுகள் யாவுந் திறவுண்டு பாயும்வண்ணம் மழைத்துளிகள் பொட்டுப் பொட்டென சொட்டுச் சொட்டென விழும். 1900 ஆண்டுகளுக்கு முன்னே மனுமக்கள் ஸ்திதி இப்படியே இருந்தது. சகல மதங்களும் சிதைந்து சகல சாஸ்திரங்களும் பழிப்புக்கும், இகழ்ச்சிக்கும், பரியாசத்திற்கும் இடமானவைகளாயிருக்கையில், *சமஸ்த ஜனங்களும் உன்னதத்தை நோக்கி என்னென்ன நடக்கப்போகிறதோவென்று ஆவலுடன் வெகு ஆசைகொண்டு காத்துக்கொண்டிருந்தார்கள். இதற்குள் சகல ஜனங்களும் கோரின உலகின் வாஞ்சையான ஜெகத்ரட்சகர் யூதேயா தேசத்தில் பிறந்து இயேசு என்னும் நாமத்தைத் தரித்து தமது திவ்ய வர்த்தமானங்களை வெளிப்படுத்தத்



துவக்கினார். அதற்குமுன், சரீர இச்சைகள் அனைத்தையும் கண்டித்து, துறவறம்பூண்ட யோவான் என்னும் தீர்க்கதரிசி வனாந்தரத்தில் சகல ஜனங்களுக்கும் நீதிபோதனை செய்து, சகலரும் தங்கள் பாவங்களைக்குறித்து மனஸ்தாபப்பட்டு வரப்போகிற இரட்சகருடைய வருகைக்கு ஆயத்தப்படவேண்டும் என்று போதித்துக் கட்டியங்கூறினார். அநேகர் அவர் உபதேசத்தைக் கேட்டு ஜகத்ரட்சகர் இவர்தானோவென்று பேராவல்கொண்டு அவருக்குப் பின்சென்றாலும், அவரோ கொஞ்சமாகிலும் சம்மதிக்காமல் 'எனக்குப் பின் வருகிறவரோ, என்னிலும் வல்லவராயிருக்கிறார்; அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரனல்ல,' என்று வெளிப்படையாகக் கூறினான் (மாற். 3. 11.). திருச்சுதனான இயேசுபகவான் தமது சொந்த ஊரை விட்டு யோவானுடைய வாசஸ்தலத்திற்கு வந்தபோது, யோவான் அத்திருவுருவைக் கண்டு, 'எனக்குப் பின்வருகிறவர் எனக்கு முன்னிருந்தவர், ஆகையால் அவர் என்னிலும் மேன்மையுள்ளவரென்று நான் சொல்லியிருந்தேனே, அவர் இவர்தான்' என்று சத்தமிட்டுக் கூறினான் (யோவா. 1. 15.). மேலும் தனது சிஷர்களில் சிலர் பார்த்துக்கொண்டிருக்கையில், யோவான் அப்பரம்பொருளைச் சுட்டிக்காட்டி 'இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டி. ஆவியானவர் புறாவைப்போல வானத்திலிருந்திறங்கி, இவர்மேல் தங்கினதைக் கண்டேன். நானும் இவரை அறியாதிருந்தேன்; ஆனாலும் ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுக்கும்படி என்னை அனுப்பினவர்: "ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்தாவியினால் ஞானஸ்நானம் கொடுக்கிறவர்" என்று எனக்குச் சொல்லியிருந்தார். அந்தப்படியே நான் கண்டு இவரே தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்துவருகிறேன்' என்று உரைத்துவந்தான் (யோவா. 1. 29, 32, 33, 34.). முற்காலத்து ஞானதிருஷ்டிக்காரர் முன்னுரைத்தபடியே, திவ்ய புதல்வனான இயேசுநாதர் ஆபிரகாமின் சந்ததியிலும், மகாராஜனாகிய தாவீதின் கோத்திரத்திலும் உதித்தவராய் அவர்கள் அறிவித்த பெத்லகேம் என்னும் ஊரில் பிறந்தார். தாவீதின் கோத்திரத்தின் பாலசிங்கமான இயேசுராஜன் சகல மனிதரையும் ரட்சிக்கிறதற்கு அவதரித்து வந்தார் என்று அவருக்கும் ரட்சகரென்னும் பொருளமை

யும் இயேசு என்று பேரிட்டார்கள். அப்பரமகுரு தமது திருவாய் திறந்து திருமறை உபதேசம்பண்ண ஆரம்பித்தபோது பூர்வகால ஞானதிருஷ்டிப் புருஷர் இயற்றிய நூல்களை எடுத்துரைத்து அவை யாவும் தமக்கே சாட்சியாயிருக்கின்றன என்றும், அவர்கள் முன்னுரைத்துக் குறிப்பிட்ட காரியாதிகள் யாவையும் தாம் நிறைவேற்றுகிறவர் என்றும் வெகு தெளிவாக உறுதிப்படுத்தினார். சாஸ்திரிகளும், கல்விமான்களும் சந்தேகித்துத் தமது உபதேசத்தை அங்கிகரிக்காமல் போவதைப் பார்த்து சத்தியநாதர் அந்நூல்களைக்கொண்டே 'வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள், அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே' என்று திருவாக்கருளினார் (யோவா. 5. 39.). இம்மாமறை நாதனின் உபதேசத்தை விசாரிக்குமிடத்தில், அவர் சற்குருமூர்த்திதானென்று ஒத்துக்கொள்ளச் சந்தேகமில்லை. அதுவுமல்லாமல் அவர் எளிய நிலைமையில் பிறந்து, சகல விஷயங்களிலும் அடக்கமும் ஆவியில் சாந்தமும் உடையவராயிருந்தபோதிலும், தமது இயல்பான சுபாவத்தையறிந்து தாம் சர்வாதிகாரமுடையவராய் சர்வ ஜனங்களையும் தமது ராஜ்யத்தில் சேர்க்கும்பொருட்டு வந்தவரென்றும், உலகோர்க்கு உரைக்க அவ்வுன்னதநாதர் சிறிதளவேனும் சந்தேகித்துப் பின்வாங்கவில்லை. மனிதரில் எவரேனும் இவ்வளவு பெருமையாகப் பேசினால் அவர்கள் வாக்கு முற்றிலும் வீணானவை என்று சீக்கிரத்தில் காணப்படும் அல்லவா? உன்னத குருவான இயேசுநாதர், தமது மட்டற்ற தயவின் மாட்சிமையால் கடின இருதயங்களை அடக்கி, சகல ஜனங்களையும் தன் வசமாக்கி, தம்மதிகாரம் சர்வலோகமெங்கும் பிரபலமாகும்படி செய்துவந்தமையால், தமது மகத்தான வாக்குகளைப் பூரணமாக நிறைவேற்றியிருக்கிறார்.

மேலும் ஞானதிருஷ்டிக்காரரான பூர்வகாலத்துத் தீர்க்கதரிசிகள் உரைத்தபடி அந்த ரக்ஷண்யமூர்த்தி தமது மரணப்பாடுகளைக் குறித்து ஏற்கனவே சொல்லிவந்தார். தாம் அநேக பாடுகளையும் அவமானங்களையும் அடைந்து சிலுவையில் அறையுண்டு அகோர மரணமடையவேண்டுமென்று தமது சீஷர்களுக்கு வெளிப்படையாகச் சொல்லிக்கொண்டுவந்தார். இதுவுமன்றி, 'நான் ஆடுகளுக்கு நல்ல மேய்ப்பனானவர். என் ஆடுகளுக்காக என் பிராணனைக்



கொடுக்கிறேன்' என்று சொல்லியதால், தாம் பிறருக்காக எப்படி மரணமடைய நிச்சயித்துக்கொண்டார் என்பது விளங்கினது. ஏசாயா என்ற திவ்ய திருஷ்டிப்புருஷன் 600 வருஷங்களுக்குமுன் உரைத்தபடி அவர் அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, கொடும்பாவிகளால் காட்டிக்கொடுக்கப்பட்டவராய், அவமான மரணமடைந்து பிறகு ஐசுவரியவான்கள் வசத்திலிருந்த கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டார். நாம் எவ்வளவு ஜாக்கிரதையாக விசாரித்தபோதிலும், அத்திருமகன் சரித்திரம் முற்கால ஞானதிருஷ்டிப் புருஷர் முன்னுரைத்த தீர்க்கதரிசனங்களுக்கு மிகவும் வியப்பை பயக்கும்வண்ணமாய் பொருந்தியிருக்கிறதென்று தெளிவாகிறபடியால், அப்படிப்பட்ட குறிப்புகளையும் அடையாளங்களையும் கண்டு உலகத்தார் தலைமுறை தலைமுறையாக எதிர்நோக்கின இரக்ஷகர் ஒப்பற்ற மாட்சிமைதங்கிய இயேசுநாத ஸ்வாமியே என்று நிச்சயிப்பதவசியம். அருணோதயமாகிறபொழுது கீழ்த்திசையில் ஒருவகை லேசான வெளிச்சந்தோன்றி அத்திசையிலேயே அதிகப் பிரகாசமான சூரியன் உதிக்கப்போகிறதென்று குறிப்பிடுகிறதல்லவா? இவ்விதமே பூர்வகாலத்துத் தீர்க்கதரிசிகள் தேவ அருளால் இருதய கமலத்தின் சூரியனான இயேசுநாதரென்னும் ஜோதியை முன்னாகவே கண்டு, அப்பரஞ்சோதியின் அவதார லக்ஷணங்களை ஞானதிருஷ்டி என்னும் அகக்கண்ணால் கண்டு முன்னாகவே விவரித்துரைத்துவந்தார்கள். காலம் நிறைவேறினபொழுது அத்திவ்ய பரஞ்சோதி இப்பூதலத்தை வளைத்திருந்த பாவாந்தகார வல்லிருளைத் தமது நிகரற்ற ஞானப்பிரகாசத்தினாலே மங்கச்செய்து சகல மனிதருக்கும் தமது திவ்ய ஒளியை அருளும்பொருட்டு மறுவேடம்பூண்டு யூதேயா தேசத்தில் ஜென்மித்து, திவ்ய திருஷ்டிப்புருஷர் முன்னுரைத்த தீர்க்கதரிசனங்களை ஆதியோடந்தமாய் நிறைவேற்றி, தமது மட்டற்ற மகிமையைச் சகலருக்கும் வெளிப்படுத்தினார். ஆதலால் இவ்வடையாளங்களைப் பார்த்து பாவாந்தகர்களான நாம் எல்லாரும் சத்திய மாட்சிமைபொருந்திய பரோபகாரியான இரட்சகரைச் சரணடைந்து அப்புண்ணியமூர்த்தியின் பேரருளால் நமது பாவங்கள் நீங்கப்பெற்றவர்களாய் நித்திய சமாதான மடையவேண்டும்.

# IV. அதிகாரம்

## இயேசுகிறிஸ்துநாதர் மனுஷாவதாரச் சரித்திரம் நிச்சயமானது

புராணங்களையும் இதிகாச கிரந்தங்களையும் பரிசோதனைபண்ணிப் பார்த்தால், அவற்றிலுள்ள கதைகள் முற்றிலும் கற்பனைகளென்று சொல்வதற்கு ஐயமில்லை. புலவர்கள் சுபாவம் எப்படிப்பட்டதென்பது, சகலருக்கும் தெரிந்தவிஷயமே. அவர்கள் எப்போதும் வாசிப்போர் மதிப்புப் பெறும்படி வர்ணித்து சிறந்த பாஷைநடையில் வாக்குச் சாதுரியமாக எழுதவேண்டுமென்கிற நோக்கம் உடையவர்களாதலால் தாங்கள் கண்ணாரக்கண்ட சங்கதிகளைக்கூட தம் மனம்போனபடி தாம் புகழ்ந்து, மனிதர் அதிக விந்தையான காரியாதிகளை நிஜமாகச் செய்தார்களென்று, பல விநோதக் கதைகளை உண்டுபண்ணுவார்கள். தற்காலத்தில்கூட பெரிய மனிதரையடுத்த புலவர்கள் தங்களை சவரட்சணைசெய்யும் தர்ம கர்த்தாக்கள், காரியங்களைக்கொண்டு அவர்கள் மனிதருக்கு மேற்பட்ட காரியங்களைச் செய்ததாகவும், தம் மகத்துவத்தால் தாங்கள் தேவர்களென்று காண்பித்ததாகவும், நன்கொடையின்பொருட்டு மிதமிஞ்சி ஸ்துதி பேசிக் கொண்டாடுவார்கள். படிப்பாளிகள், தங்கள் கண்முன் நடக்கும் சங்கதிகளை இப்படியாக மாற்றும்போது, புராதன சரித்திரங்களை எடுத்து எழுதுகையில் அவர்கள் தங்கள் யுக்தியைக்கொண்டு மட்டுக்குமிஞ்சி எழுதுவார்களென்பதற்குச் சந்தேகமில்லை. சாதாரண சங்கதியாயினும், நாட்பட்டு காலஞ்செல்வதால் வெகு ஆச்சரியமாகும். ஓர் பட்டணத்தில் பராக்கிரமசாலியான ஒருவன் இருந்தால், அப்



பட்டணத்தார் அவனுடைய புகழ்ச்சிக்குரிய சிறப்புற்ற காரியங்களைக் கண்டு, துரும்பைத் தூணாக்கி, அவற்றைப் பதின்மடங்காய்ப் பெருக்கி, தாமேகும் எத்திசையிலும் அவன் கீர்த்தியைக்குறித்து வியந்து புகழ்ந்து, துத்தியம்பண்ணி பெருமைப்படுத்துவார்கள்; அவன் மாண்டபிறகு அவன் கீர்த்தி கொஞ்சங் கொஞ்சமாக அதிகரிப்பதினால் இரண்டு மூன்று தலைமுறையாகிறதற்குள் அவன் தன் வீரியம், ஆண்மை, சௌரியம் முதலானவற்றால் பாலசிங்கம் முதலியவற்றைப் பிடித்துக் கிழித்ததாகவும் பர்வதங்களைப் பெயர்த்துத் தூக்கிச் சுமந்து கொண்டு போனதாகவும், மகா நதிகளைத் தடுத்துத் தன் மனதின்படி பாயவிட்டதாகவும், பெரிய கீர்த்திக்குரிய வர்த்தமானங்கள் உண்டாகும். பூர்வகால அரசர்களின் சங்கதியை விசாரித்தாலும் இது தெளிவாகும். 2200 வருஷங்களுக்குமுன், கிரேக்கு தேசத்தை அரசாண்ட அலெக்சாந்தர் என்னும் மகா வேந்தன் மிகவும் பெயர் பெற்றவனாயிருந்தான். பாலியத்தில் பெரிய படையெடுத்து ஐரோப்பாக் கண்டத்தை விட்டு ஆசியாதேசம் முதற்கொண்டு இந்த இந்தியா தேசம்வரையில், சகல தேசங்களையும் ஜெயித்து, சகல ஜனங்களையும் கீழ்ப்படுத்தி 33 வயதில் பாபிலோன் என்னும் மாநகரில், விஷஜுரம் கண்டு தேகவியோகமானான். அக்காலத்தில் நூலாசிரியர்கள் அவ்வரசனுடைய சரித்திரம் முழுவதையும் விவரித்து எழுதினதால், அவர்களெழுதின நூல்களை வாசித்து அவனுடைய காலத்தின் விருத்தாந்தங்கள் யாவையும் செவ்வையாகத் தெரிந்துகொள்ளலாம். இக்கிரந்தங்களை நிறுத்தி, தொன்றுதொட்டு வழங்கிவந்த பாரம்பரியங்களை விசாரிக்குங்கால், நாமொரு சங்கதியையாகிலும் நிச்சயமாய்த் தெரிந்துகொள்ள முடியாதவிதமாய், யாவும் தாறுமாறாக இருக்கின்றன. அலெக்சாந்தருடைய கீர்த்தி மிகவும் பிரபலமானதால், அரபிதேசம் முதற்கொண்டு, ஹிமாலய பர்வதம்வரையில் உள்ள பாமர ஜனங்களெல்லாரும் அவ்வரசன்பேரைப் பற்றிக்கொண்டு, அவன் திவ்ய வல்லமை பொருந்தினவனாய் ராட்சதர்களை நிர்மூலம்பண்ணி, பர்வதங்களைப் பிடுங்கி, அநேக அற்புதங்களைச் செய்ததாக ஒன்றுக்கொன்றொவ்வாத விபரீத கதைகளைச் சொல்லுகிறார்கள். சகல தேசங்களிலும் கீர்த்தியடைந்தவர்கள் சரித்திரம் இப்படி விபரீதமடைகிறதென்றாலும், முக்கியமாய்க் கல்லாதவர்கள் எங்கேயிருக்கிறார்

களோ, அவ்விடத்தார் வீண் வர்த்தமானத்தைக்கொண்டு கொஞ்சக் காலத்தில் நடந்தவையிருக்க வீணானவற்றைக் கற்பனைசெய்து, நடந்த சங்கதிகளை விகாரப்படுத்தி, விபரீதக் கதைகளை யுண்டுபண்ணிக் கொள்வார்கள்.

இராமன், கிருஷ்ணன் முதலியவர்களுடைய விஷயங்களை விசாரிக்குங்கால், ஒரு சங்கதியையாயினும், நிச்சயமாய்க் காண ஆதாரமே ஒன்றும் இல்லை. அவ்வீரர்கள் இந்த யுகத்தில் ஜீவித்தவர்கள் அல்லராம். அவர்கள் எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் பிறந்து, தங்கள் தேசங்களை அரசாண்டு மாண்டுபோனவர்கள். அவர்கள் மாண்டு எத்தனையோ ஆயிர வருஷங்கள் சென்றபிறகு, இக்கலியுகத்தில் பிறந்த புலவர் யாரோ, பாரம்பரியங்களாய்வந்த விருத்தாந்தங்களைக் கொண்டு, மகாபாரதம் முதலிய நூல்களை இயற்றினார்கள். அப்புலவர்கள் கண்ணாரக் கண்டவர்களல்லர். பார்த்தவர்களிடத்திலாகிலும் காதாரக் கேட்டவர்களுமல்லர். அவர்கள் சாஸ்திரங்களையும் புராணங்களையும் பரிசோதித்து எழுதினதாய்க் காணப்படாமற்போனாலும், சகல ஜனங்களும் வழங்குகிற கதைகளை ஆதாரமின்றி அங்கீகரித்து, தங்கள் யுக்திக்குத் தோன்றுகிறபடி சிறப்பாக்கி, சிங்காரித்துச் சிறந்த செய்யுள் நடையில் வாக்குச் சாதுரியமாக தங்கள் காரியங்களை உண்டுபண்ணியதாகக் காணப்படுகிறது. இராமாயணத்தைச் சரியாகப் பரிசோதிக்குங்கால், நாம் என்ன அறிந்துகொள்ளலாம்? பூர்வகாலத்தில் இராமன் என்னும் நாமதேயமுடைய ஓர் மகா மன்னன், அதிக பராக்கிரமம் பொருந்தினவராய், தன் மனைவிபொருட்டு, குரூர குணமுள்ளவர்களான காட்டு வேடர்களுடன் சமர்புரிந்து வெற்றிகொண்டு பேரெடுத்தாரென்று நம்பலாமென்றாலும், அந்த ராயரே என்னென்ன காரியங்கள் செய்தார்; தமது பிரஜைகளுக்கு எவ்வித சட்டங்களை நியமித்தார்; ராஜரீகம் செய்து, பெயரெடுத்த பிறகு எவ்விதங் காலங்கழித்து இறந்தார். அவர் இறந்து எத்தனை ஆண்டுகளாயின; என்ற இவ்வித விஷயங்களைக்குறித்து நிச்சயிக்க ஆதாரம் ஒன்றுமே இல்லை.

கிருஷ்ணன் சரித்திரத்தைச் சீர்தூக்கிப் பார்த்தாலும், அது இன்னுந் தாறுமாறாயிருக்கிறது; நாம் எவ்வளவு வெட்டித் தோண்டித் தேடிப்பார்த்தாலும் அவனைப்பற்றிய கதைகள் முற்றிலும் விபரீத



மாயிருப்பதால், அவருடைய சங்கதியை எவ்வளவேனும் அறிந்துகொள்ள ஆதாரங் கிடையாது. புலவர்கள் உண்டுபண்ணின கதைகளை வாஸ்தவமென்று நம்பினால், அவர் சகல துராசைகளையும் வேண்டுமென்று பின்பற்றி, திருட்டு விபசாரம் முதலிய கிரியைகளை நடப்பித்து, துஷ்டத்தனத்தில் பேரெடுத்தாரென்றே சொல்லும்படி நேரிடுகிறது. ஆனாலும் கிருஷ்ணன் சரித்திரத்தை இயற்றினவர்கள், அவர் காரியாதிகளைக் கண்ணால் பார்த்தவர்களல்லர்; அவர்கள் வீணாலோசனைகளைச் சார்ந்து எழுதினபடியால் அவர்களே அவருடைய பெயரைக் கறைப்படுத்திக் கெடுத்தார்களேயன்றி அவர் பெரும்பாலும் அவ்வளவு துன்மார்க்கரல்ல என்று நினைக்கலாம்.

இயேசுகிறிஸ்துநாதர் சரித்திரத்திற்கும், புலவர் கற்பனைசெய்து இயற்றிய அவதாரபுருஷரின் சரித்திரங்களுக்கும் அனந்த வித்தியாசம் உண்டு. இராமர், கிருஷ்ணர் முதலியவர்களுடைய சரித்திரங்களை விசாரிக்கும்போது, காரிருள் நிறைந்த நெருக்கமான ஆரணியத்தில் தடவித் தடுமாறி இடறி விழுகிறவர்கள்போல் நிஜஸ்திதியைச் சிறிதளவாயினும் காணக்கூடாமல், சர்வகாலமும் சந்தேகப்படுவோம். அக்கற்பனைக் கதைகளை உதறிவிட்டு, இயேசுபகவான் சரித்திரத்தை எடுத்துப் பார்க்குங்காலத்திலோ, சூரிய ஒளியினால் பிரகாசிக்கிற பர்வதமேறி நாற்றிசைகளையும் தெளிவாகப் பார்க்கிறதுபோலிருக்கிறது. புண்ணியநாதர் திருச்சரித்திரத்தை விவரித்துரைக்கும் புதிய ஏற்பாடு என்னும் வேதநூலை விசாரித்துப் பார்க்குங்கால், அவ்வாண்டவரின் விருத்தாந்தத்தை வெளிப்படையாய்க் கண்டறியலாம். அந்நூலை இயற்றிய ஆசிரியர் அத்திருமகன் வரலாற்றை விரித்துரைத்திருப்பதால், காலம், ஸ்தானம் என்னுங் கூறுபாடுகள் யாவும் தெரிந்துகொள்ளத் தடையொன்றுமில்லை. நாகரீகத்தில் பெயர்பெற்ற சகல ஜனங்களும் இயேசுகிறிஸ்துநாதர் ஜென்மித்தது முதற்கொண்டு வருஷங்களைக் கணிப்பதால், ஜகத்ரட்சகர் புவியில் அவதரித்து 1900 வருஷங்களாயிற்றென்பது நிச்சயமாகத் தெரிந்தவிஷயம். உலகரட்சகர் ஜென்மித்தகாலத்தில், அகுஸ்துராயன் என்னும் சக்கிரவர்த்தி ரோமாபுரிக்குக் கீழான தேசங்களை ஆண்டுவந்தான். சீரியா தேசத்துக்கு சிரேனியு என்பவன் தேசாதிபதியாயிருந்தான். மேலும் யூத மதஸ்

தருக்கு அன்னு என்பவன் பிரதான ஆசாரியனாயிருந்தான். ஏரோது மகாராஜன் யூதேயா சமஸ்தானத்திற்கு ராஜாவாய் இருந்தான். மேற்கூறியவர்களுடைய காலத்தில், இயேசுநாதரின் பெற்றோர் கலிலேயா தேசத்திலுள்ள நாசரேத்து என்னும் ஊரில் வாசம்பண்ணினார்கள். அவர்கள் நிலைமை வெகு எளிமையாயிருந்தபோதிலும் அவர்களுடைய வம்ச வரிசையை விசாரித்து பார்க்குமளவில், அவர்கள் பூர்வத்திலிருந்த தாவீது மகாராஜாவின் சந்ததியைச் சேர்ந்தவர்களென்று தெளிவாய் ரூபகாரமாகும். இயேசுநாதர் மாதாவின் நாமம் மரியாள். அந்த அம்மாள் விவாகம் நடந்துவிட்டபோதிலும் இல்லற வாழ்க்கைக்கு இன்னும் வரவில்லை. அம்மாதுசிரோமணியின் கணவன் பேர் யோசேப்பு. அவன் சில நாட்களுக்குள் தன் இல்லாளை அழைப்பித்துக்கொள்ள யோசனையாயிருக்கையில், ஒருநாள் தேவதூதன் அம்மாதுக்குப் பிரத்தியட்சமாகி, நமஸ்காரம்பண்ணி, அந்த அம்மாள் புருஷனுடைய சம்பந்தம் இல்லாமலே சர்வ வல்லவரின் வல்லமையால் கர்ப்பந்தரித்து ஒரு குமாரனைப் பெறுவாள் என்றும், அக்குமாரன் தீர்க்கதரிசிகள் முன்னுரைத்த ரட்சகராய்ச் சகல மனிதருக்கும் மோட்சவழியை வெளிப்படுத்துவாரென்றும் தெரிவித்தார். தேவதூதன் வாக்குப்படி மிகப் பரிசுத்தமான இக்கன்னிகை கர்ப்பவதியானாள். அதின்மேல் யோசேப்பு அந்தச் சங்கதியை அறிந்து அதிகமாய் விசனப்பட்டு, அந்த அம்மாளைத் தள்ளிவிடவேண்டுமென்று யோசித்தபோது, திவ்ய வெளிப்படுத்தலால் உண்மையான ஸ்திதியைக் கண்டறிந்து தன் சந்தேகமனைத்தையும் அகற்றி, அந்த அம்மாளைத் தன் மனைவியாகச் சேர்த்துக்கொண்டார். அக்காலத்தில் குடிமதிப்பு எழுதுகிறதற்குக் கட்டளை பிறந்ததால் சுயஸ்தலத்தில் தம் பெயரை எழுதிவைக்கும்படி யோசேப்பு தன் மனைவியான மரியம்மாளைக் கூட்டிக்கொண்டு, தான் வாசம்பண்ணின நாசரேத்தை விட்டு, தென்தேசத்திலுள்ள பெத்லகேம் என்னும் ஊருக்கு வந்தான். அவர்கள் அவ்வூருக்குச் சமீபத்திலிருந்த ஒரு சத்திரத்தில் இறங்கித் தங்கியிருக்கையில், அம்மாது பிரசவித்துத் தன் குமாரனைப் பெற்றாள். வெகுஜனம் அச்சத்திரத்தில் இறங்கியிருந்ததினாலும், வெகு நெருக்கமாயிருந்ததினாலும், மரியம்மாள் ஒரு மூலையில் படுத்துக்கொண்டு தன் சிசுவை மாட்டுத்தொட்டிலில் படுக்கவைத்தாள்.



இங்ஙனம் இருக்கையில் அவ்வூருக்கு அருகிலுள்ள வயலில் தங்கள் ஆடுகளைக் காவல்காத்துக்கொண்டிருந்த சில இடையருக்குச் சொல்லற்கரிய ஆச்சரியமான ஓர் காட்சி யுண்டானது. அவர்கள் மெய் நடுங்கி, விண்ணோக்கிக் கண்ணாரப் பார்க்கையில், தேவதூதர்கள் ஆகாசமார்க்கமாய் வந்து, 'இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் ரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தியிருக்கக் காண்பீர்கள்; இதுவே உங்களுக்கு அடையாளம்' என்று அறிவித்தார்கள் (லூக். 2. 11, 12.). அம்மேய்ப்பர்கள் வெகு வியப்படைந்து, சத்திரத்திற்கு வந்து, அக்குழந்தையைக் கண்டு, அதற்குச் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, பணிந்து, தேவதூதர்கள் தங்களுக்குத் தெரிவித்த வர்த்தமானத்தை எத்திசையிலும் பிரசித்தம்பண்ணினார்கள். மேலும் அக்காலத்தில் கீழ்தேசத்தில் சகல சாஸ்திரங்களிலும் நிபுணரான ஜோதிட சாஸ்திரிகள், அக்காலக் குறிப்புகளைப் பரிசோதித்தபோது, அதிகப் பிரகாசமான ஒரு புதிய நட்சத்திரம் தோன்றினதால், அந்நட்சத்திரம் தோன்றின திசையில், ஒரு மகாத்மா பிறந்திருக்கிறார் என்று நிச்சயித்து, அம்மகா புருஷனைத் தரிசிக்கும்படியாக, சுயதேசத்தை விட்டு யூதேயா தேசத்திற்குப் பிரயாணஞ் செய்துவந்தார்கள். அத்தேசத்திற்கு வந்து விசாரிக்கையில், வரப்போகிற ரட்சகர் பெத்லகேம் என்னும் ஊரில் உதிப்பாரென்று, வேதசாஸ்திரிகளால் அறிந்துகொண்டு, பெத்லகேமுக்குப் போய், நவமாய்ப் பிறந்திருந்த பாலகனையும் மாதாவையுங் கண்டு, அப்பாலகனுக்கு முன்பாக சாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்காரம் செய்து வணங்கி, பொன், தூபவர்க்கம், வெள்ளைப்போளம் என்னும் வஸ்துக்களை அச்சிசுவுக்குக் காணிக்கையாகப் படைத்தார்கள். இந்த ஞானிகள் தூரதேசத்திலிருந்து ஒரு நட்சத்திரத்தால் வழிநடத்தப்பட்டு பெத்லகேமில் திருக்குழந்தை ஜென்மித்திருந்த ஸ்தலத்திற்குப் போய், இவ்வளவு மரியாதை செய்து சுயதேசத்திற்குத் திரும்பினார்களென்று ஏரோதுராஜன் கேள்விப்பட்டு, உக்கிர வெறிகொண்டு, அச்சிசுவை எப்படியாகிலும் தேடி கண்டுபிடித்து கொல்லும்படி, தன் போர்ச்சேவகருக்குக் கட்டளையிட்டான். அவர்கள் ராஜ கட்டளையை நிறைவேற்றும்பொருட்டு, அவ்வூரிலும் அதற்குச் சமீபத்திலுள்ள ஊர்களிலு

முள்ள எல்லாச் சிசுக்களையும் அநியாயமாகச் சங்காரம்பண்ணினார்கள்.
என்றாலும் அக்கொடிய கொலைபாதகத்தால் ராஜனின் துரோக
சிந்தை நிறைவேறவில்லை. போர்ச்சேவகர் அவ்வூருக்கு வருமுன்னே,
யோசேப்பு தேவ ஏவுதலால் எச்சரிக்கப்பட்டு, இரவில் எழுந்து, சுய
தேசத்தை விட்டு, குழந்தையுடன் மாதாவையுங் கூட்டிக்கொண்டு,
எகிப்து தேசத்திற்கு ஓடிப்போனான். அவர்கள் அத்தேசத்தில்
சேர்ந்து, சிறிதுகாலஞ் சென்றபின்னர், கொடுங்கோன் மன்னன்
மாண்டுபோனதால் அவர்கள் தங்கள் ஜென்ம தேசத்திற்குத் திரும்பி
வந்து, தாங்கள் அதற்குமுன் வாசம்பண்ணின நாசரேத் என்னும்
ஊருக்குப் போய்ச் சேர்ந்தார்கள். (மத். 2. அதி.)

முப்பது வயதாகுமளவும் திருக்குமாரனை இயேசுநாதர் தம்
பெற்றாரிடம் இருந்து அவர்களுக்கு உதவியாகத் தச்சுவேலை செய்து
கொண்டிருந்தார். அவர் இக்காலத்தில் தமது மகிமையைக் காண்
பித்ததாகக் காணப்படாவிட்டாலும் தம் பெற்றாருக்குக் கீழடங்கி,
'ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவி
லும் அதிகமதிகமாய் விர்த்தியடைந்தார்' என்று சத்திய வேதத்தில்
சொல்லியிருக்கிறது (லூக். 2. 52.). முப்பது வயதானபோது, தாம்
அவதரித்துவந்த நோக்கத்தை நிறைவேற்றும்பொருட்டு, அப்பரப்
பொருள் லௌகிகத்தொழில்களனைத்தையும் ஒழித்துத் தமது திருப்
போதனையைச் சாற்றவும் தம் திவ்ய மகத்துவத்தைச் சகலருக்குங்
காண்பிக்கவும் தொடங்கினார். ஆரம்பத்தில் வனாந்தரத்தில் உப
தேசம்பண்ணின யோவான் என்பவனிடம் போய், அவனால் ஞானஸ்
நானம்பெற்று, இந்தத் தீட்சையினால் தம்மைத்தாமே திவ்ய பணி
விடைக்கென்று பிரதிஷ்டையாக்கிக்கொண்டு தமது உத்தியோகத்தில்
பிரவேசித்தார். யோவான் அத்திருச்சுதனை இன்னாரென்று இனங்
கண்டுபிடித்து, அவர் அவதரித்துவந்த ஜகத்ரட்சகரென்று சாட்சி
கொடுத்தான்.

அதின்பிறகு அத்திவ்ய புத்திரன், பரிசுத்தாவிக்குள்ளானவராய்,
தனிமையாய் வனத்திற்சேகி, நாற்பதுநாள் உபவாசம் செய்கையில்,
சாத்தான் மாசணுகா அப்பராபரவஸ்துவில் துராசையை உண்டாக்கி
ரட்சண்யமூர்த்தியின் நோக்கத்தை எவ்வகையிலும் குலைக்கவேண்டு
மென்று கருதி, அநேக தந்திர உபாயங்களைச் செய்தபோதிலும்



பாவமறியா அப்பரப்பொருள் சாத்தானுடைய துர்ச்சிந்தையைத் தமது
திவ்ய திருஷ்டியால் அறிந்து, அவனை மேற்கொண்டு, சகல சோதனை
களிலும் வெற்றிவேந்தனானார். பிறகு அவர் திரும்பத் தம் சுயதேசத்
திற்கு வந்து, பன்னிரு சிஷர்களைத் தெரிந்துகொண்டு, அவர்களுடன்
தேசங்கடோறும் சஞ்சரித்துச் சுற்றித் திரிந்து, தமது திவ்யோபதேசத்
தைச் சகலருக்கும் பிரசுரம் செய்துகொண்டுவந்தார்.

இவ்வண்ணம் போதிப்பதோடுகூட அவ்வற்புதநாதர் அநேக
அதிசயக் கிரியைகளால், தமது திவ்ய மாட்சிமையை விளங்கச்செய்
தார். வியாதியஸ்தர் யார்வந்தபோதிலும், அப்பரம பரிகாரி அவர்
களைத் தமது அருட்கண்ணால் கடாட்சித்து, அவர்கள் நோய்களைச்
சுகப்படுத்தினார். ஆதலால் அப்பரோபகாரி எத்திசையேகினும்
அந்தகர், சப்பாணிகள், குஷ்டரோகிகள் முதலியவர்கள் அநேகர்
அத்திவ்யோத்தமரைத் தேடித் தரிசிக்க வந்து, அப்பெருமானின்
பேரருளால் தமது கோரிக்கை ஈடேறிச் சுகமடைந்தார்கள். இதுவு
மன்றி, அந்த ஜீவாதிபதி மாண்டோரையும் தமது மட்டற்ற திவ்ய
வல்லமையால் இமைப்பொழுதில் ஜீவனுள்ளவர்களாக்கினார். இப்
படிப்பட்ட வல்லமைகளைக் கண்ட அத்தேசத்துச் சாதாரண ஜனங்கள்
அற்புதநாதரின் வாய்மையால் கவர்ச்சியடைந்து, கற்கண்டை ச
எறும்புகள் மொய்க்கிறதுபோல், அவ்வல்லவரைச் சூழ்ந்துகொண்டு
அவரால் திவ்ய தீட்சை பெற்றார்கள். அவர்கள் அதிக ஆவலுடைய
வர்களாயிருந்தபோதிலும், அத்திவ்ய புதல்வனின் திருப்போதனையை
அவ்வளவு நுட்பமாய் அறிந்துகொண்டவர்களல்லர். ஆகையால்
புராதன நூல்களின் வசனங்களில் சிலவற்றைத் தள்ளி, சிலவற்றை
ஏற்றுக்கொண்டு, தம் பரமகுரு தமது பராக்கிரமத்தால் சகல சத்து
ருக்களையும் வென்று, மிகச் சிறப்புப்பொருந்திய ராஜ்யத்தை ஸ்தா
பித்து, சகல தேசங்களையும் ஒரு குடைக்கீழ் ஆளுவார் என்று நிச்ச
யித்து, அப்பராக்கிரம புருஷனைப் பலவந்தத்தினாலாகிலும் தமது
ராஜனாக்கவேண்டும் என்று மிகுதியாய் முயன்றார்கள். மூவுலகோர்
துதிபெறும் அகிலாண்ட நாயகரான இயேசு சுவாமி அந்த ஜனங்
களின் அபிப்பிராயத்திற்கு சிறுபான்மையும் இணங்காமல், தாம்
அடிமையின் ரூபமெடுத்ததற்குக் காரணம் ஏதோ, அதை யவர்களுக்
குக் கொஞ்சங் கொஞ்சமாய்ப் புலப்படும்படி வெளிப்படுத்திக்

கொண்டுவந்தார். அதை அப்பரமராஜனின் சிஷர்கள்கூட சரியாக உணராமல்போனபோது, அவர் அவர்களுடைய தப்பெண்ணங்களைக் கண்டித்து, தாம் இந்த லோக மகிமையை முற்றிலும் துறந்து, சகல மனிதரின் பாவப்பாரத்தையும் சுமந்து, அவமானமும் பாடுகளு மடைந்து, அகோர மரணத்தை யுத்தரித்து, கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம்நாளில் திரும்ப ஜீவனுடையவராய் உயிர்த்தெழுந்து; மனிதர் யாவருக்கும் மோட்சவழியை நியமிக்கவேண்டுமென்று, ஒளிவுமறைவின்றி வெளிப்படையாய்க் கூறினார். அறிவீன ஜனங்கள் பரமகுருவின் போதனையைக் கேட்டு அவ்வற்புதநாதரை வெகுவாய் கௌரவம்பண்ணி மேன்மைப்படுத்திப் புகழ்ந்து கொண்டாடினபோது, அத்தேச அதிகாரிகளும் சாஸ்திரிகளும் அவர்மேல் வெறுப்படைந்து, அவரைப் பகைத்து, பாவமில்லா அப்பரிசுத்தன்மேல் ஏதோ ஓர் குற்றம் சுமத்தி, அவரைக் கெடுக்கவேண்டுமென்று, பலவாறாய்ப் போராடினார்கள். அவர்கள் எவ்வளவாய்த் தேடினபோதிலும், வாக்கிலும் கிரியையிலும் யாதொரு குறையுங் காணப்படாததால் மூர்க்கவெறிகொண்டவர்களாய்ச் சத்தியத்திற்கு அணுவளவாயினும் பயப்படாமல் மாசற்ற தூயர்மேல் அநியாயக் குற்றங்களைச் சாற்றி அவரை எவ்வகையிலும் மடிவிக்கவேண்டுமென்று தம்மால் இயன்ற முயற்சி பண்ணினார்கள். மதுரமொழியான அவருடைய மாமறையைச் சகல ஜனங்களும் கேட்டு, அவரில் மனமகிழ்ச்சி கொண்டதால் இவ்வஞ்சகப் புத்தி கொஞ்சக்காலம்வரையில் நிறைவேறாவிடினும், சிறிதுகாலம் சென்றபிறகு அப்பரலோகநாதர் யுத்தஞ் செய்யாமலும், ராஜரீகத்தை ஏற்றுக்கொள்ளாமலும் இருந்ததால், அவர் ஒரு பரமகுருமாத்திரமே என்று நினைத்து, சாதாரண ஜனங்கள் தமது நிலையில்லாப் புத்தியினால் உறுதியில்லாமல் தங்கள் அபிமானங்களை அகற்றிவிட்டார்கள். அப்போது குற்றமற்ற ரட்சகருடைய சத்துருக்கள் பயமின்றி, இரட்சகர் தமது சிஷர்களோடுகூட எருசலேம் பட்டணத்திற்குச் சமீபத்திலுள்ள ஓர் நந்தவனத்தில் தியானித்து ஜெபம்பண்ணிக்கொண்டிருக்கும் தருணங்கண்டு, திரள் ஜனத்துடன் சென்றனர். தம்மேல் கைபோட அவர் இடங்கொடுக்கவே, தீயர் அவரைப் பலவந்தமாகப் பிடித்து, அத்தேசத்தையாண்ட பொந்தியுபிலாத்து என்னும் தேசாதிபதியிடங் கட்டிக்கொண்டுபோய் அவர் பரம



ஜனங்களைத் தமது வசமாக்கி, தம்மைத்தாமே ராஜாவாக்கிக் கொள்வதற்கான பிரயத்தனம் செய்ததாகப் பொய்ப்பிரியாது பண்ணினார்கள்.

அப்பொந்தியுபிலாத்துச் சிறிதாயினும் நீதிநெறியுடையவனல்லாதவனா யிருந்தபோதிலும், இயேசுநாதர் சங்கதியை விசாரித்தபோது, அவர் நிரபராதி என்று கண்டு அவரை எவ்விதத்திலும் விடுதலைபண்ணவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டான். ஆகிலும் அவன் அதற்குமுன் நடப்பித்திருந்த அக்கிரமங்கள் யாவருக்கும் பட்டப்பகல்போல வெட்டவெளிச்சமாகத் தெரியுமாகையால், அவன் விண்ணிறைவன்மேல் பிரியாதுசெய்த அதிகாரிகளுக்குப் பயப்பட்டு, நியாயவிசாரணை செய்யாமலே கொஞ்சநேரம் காற்றினால் அடியுண்ட நாணல்போல் முன்னும் பின்னும் அசைவாடி எல்லாரையும் சமாதானம் பண்ணவேண்டுமென்று போராடிக்கொண்டிருந்து, கடைசியில் அவ்விடத்தில் கூடிய ஜனங்கள் அதிகமாய்க் கூக்குரலிட்டு அமளிபண்ணி, ‘இவனை விடுதலைசெய்தால் சகல ராஜ்யங்களையும் ஆளும் சக்கிரவர்த்திக்கு நீ சிநேகிதனல்ல, தான் ராயனென்று சொல்லிக்கொள்ளும் ஒவ்வொருவனும் ராயனுக்கு விரோதமாக எதிர்பேசுகிறவனேயன்றி வேறல்ல’ என்று இரைச்சலிட்டதால், அவன் அதிகமாய்ப் பயப்பட்டு அவர்களுக்குக் கீழடங்கி, அவர்கள் கோரியபடி சர்வலோக நியாயாதிபதியான இயேசுநாதருக்கு மரணசிட்சை விதித்தான் (யோவா. 19. 12.). பிலாத்து விசாரணை செய்கிறபோது அவனுடைய போர்ச்சேவகர்கள் பரலோகசேனை போற்றிப் பணியும் பொன்னுலகாதிபனை அடித்து முகத்தில் துப்பி பரியாசம் செய்தார்கள். அவ்வதிபதி சிட்சை விதித்துக் கூறினவுடனே, அவர்கள் க்ஷணப்பொழுதாகிலுங் காலதாமதம் பண்ணாமல், அம்மாசற்ற மன்னனைப் பட்டணத்திற்கு வெளியே கொல்கதா என்னும் ஓர் மலைக்கு நடத்திக்கொண்டுபோய், அங்கே சிலுவை ஸ்தம்பம் நாட்டி, நன்மை செய்வதற்கு விரைந்தோடிய திருப்பாதங்களையும் சொல்லற்கரிய புண்ணியங்களைப் பொழிந்த திருக்கரங்களையும் பெரிய ஆணிகளினால் சிலுவை ஸ்தம்பத்தில் சேர்த்துக் கடாவினார்கள். மேலும் அப் நமானை அவமானம் பண்ணும்பொருட்டு அவர் வலதுபக்கத்தில் ருவனும், இடதுபக்கத்தில் ஒருவனுமாக இரண்டு திருடர்களை அ ருடன் சிலுவையில் அறைந்தார்கள். இக்காலத்தில் துரைத்

தனத்தார் மரணசிட்சையாக தூக்கில் போடுகிறதைவிட, ரோமர்கள் அக்காலத்தில் விதித்த சிலுவை மரணம் அகோர வாதையுள்ளது. சிலுவையி லறையுண்டோர் சீக்கிரத்தில் மரணமடையாமல் சாதாரணமாக இரண்டொரு நாட்கள் அகோர வாதைப்பட்டு மாளுவார்கள். மானுதிபதியான இயேசுநாதர் சிலுவைமேல் தொங்கி அகோர வாதைப்படுகையில் எண்ணிறந்த ஜனங்கள் சமீபத்தில் நின்று அப்பரோபகாரியின் அகோர காட்சியைக் கண்டு, நெஞ்சம் புண்ணாகித் திகைத்து நின்றார்கள். தம்மிறைவனைத் தீயபாவிகளுக்கு ஒப்புக்கொடுத்த அதிகாரிகளும் சாஸ்திரிகளும் அப்புண்ணியநாதனை நோக்கி, 'இவன் மற்றவர்களை ரட்சித்தாலும், தன்னைத்தான் ரட்சிக்க ஏலாதவன்' என்றார்கள். இப்படிச் சொல்லியதால் அப்பரோபகாரி மற்றவர்களை ரட்சித்தாரென்று விசுவாச காதகராகிய அதிகாரிகள் சாட்சி கொடுத்தார்கள். இவன் 'இஸ்ரவேலின் இறைவனான கிறிஸ்துவானால், இப்போதே சிலுவையிலிருந்து இறங்கி வரட்டும்' என்று பரிகாசம்பண்ணினார்கள். அவர்கள் எவ்வளவுதான் தூஷித்தாலும் சாந்தமூர்த்தியும், பொறுமைவடிவும், இரக்கத்தினூற்றும், நன்மைச்சொரூபியும், தீமைக்கு நன்மைசெய்யும் திவ்யகுணமுடைய திருச்சுதனுமான தேவசீலன், அக்கொடிய பாவிகளைத் தமது சினம் என்னும் அக்கினியால் தகனிக்காமலும், சாபம் என்னும் தழலினால் சாம்பலாக்காமலும், அவர்களுக்கோர் பதில் மொழியும் உரைக்காமலும், தம் பிதா அவர்களைத் தண்டியாமல் கடாட்சித்து அவர்கள் தோஷங்களை க்ஷமிக்கும்படியாக அவரை நோக்கி விண்ணப்பஞ்செய்தார். மத்தியானம் வரையில் திரள் ஜனம் இப்படிப் பார்த்துக்கொண்டிருந்தாலும் மதியத்தில் பூமியதிர்ச்சி உண்டாகி, கதிரவன் தன் ஒளி வீசக்கூடாமல் தேசமெங்கும் அந்தகாரம் மூடியதால், ஜனங்கள் ஏதுமறியாமல் பிரமைகொண்டு, என்ன நடக்குமோவென்று பிரலாபித்து ஏங்கி நின்றார்கள். சூரியன் அந்தகாரமானபிறகு முத்திமார்க்கத்திற்கு மூலாதாரமான இயேசுநாதர் மூன்றுமணிநேரம் சிலுவையில் தொங்கி, சொல்லற்கரிய அகோர வாதையடைந்து கடைசியில் சாயங்காலம் மூன்றுமணி நேரத்தில், 'பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்' என்று திருவாய் திறந்து கூவி பிராணத்தியாகஞ்செய்து தேகவியோகமானார். (லூக். 23. 46.)



மன்னுயிருக்காகத் தம்முயிரைத் தத்தம்பண்ணிய ஜீவாதிபதியான இயேசுநாதர் பிராணத்தியாகஞ்செய்து தேகவியோகமானபிறகு, சிலுவைகளுக்கு காவற்காரரான நூற்றுக்கதிபதியும் போர்ச்சேவகரும் சிலுவையில் தொங்கிய திவ்யபெருமானின் மட்டற்ற பொறுமையைக் கண்டு, அவர் உண்மையாகவே தேவனுடைய திருச்சுதனென்று ஒப்புக்கொண்டு அறிக்கையிட்டார்கள் (மத். 27. 54.). மேலும் அக்காட்சியைப் பார்க்கும்படி கூடிவந்த திரள் ஜனம் நடந்தவற்றைப் பார்த்து, அகோர திகில்கொண்டு, துக்கசாகரத்தில் மூழ்கி, தமது மார்பிலடித்துக்கொண்டு வீடுகளுக்குப் போனார்கள். அவர்கள் போனபிறகு இயேசுநாதருடைய சீஷரில் சிலர் அதிகாரியிடம் போய், உத்தரவு பெற்று, தமதாண்டவரின் திருமேனியைக் குருசிலிருந்திறக்கி, மெல்லிய வஸ்திரத்தில் சுற்றி, அந்த ஸ்தலத்திற்குச் சமீபத்திலுள்ள ஒரு தோட்டத்திற்குக் கொண்டுபோய், கன்மலையில் வெட்டப்பட்ட புதுக் கல்லறை ஒன்றில் அடக்கம்பண்ணினார்கள். மறுநாள் உதயத்தில் யூதர்களுடைய அதிகாரிகள் பிலாத்துவினிடம் போய், 'அந்த எத்தன் உயிரோடிருக்கையில், மூன்றுநாளில் திரும்ப ஜீவனோடெழுந்திருப்பேனென்று சொன்னதினால், அவனுடைய சீஷர்கன் வஞ்சகம் பண்ண இடமிராதிருக்கும்படி, போர்ச்சேவகரை கல்லறைக்குக் காவல் வைக்கவேண்டும்' என்று கேட்டுக்கொண்டதினால், பிலாத்து கல்லறைக்கு முத்திரைபோட்டுக் காவல் வைத்தான். இயேசுநாதர் ஜீவனோடிருக்கையில் தாம் உயிரோடெழுந்திருப்பேனென்று சொன்னதாகச் சத்துருக்களான அதிகாரிகள் ஒத்துக்கொண்டார்கள். மூன்று தினங்களாகிறவரையில், இயேசுநாதர் கல்லறையி லிருந்தபோதிலும், மூன்றாம்நாள் பொழுதுவிடிகிற நேரத்தில் ஜீவனடைந்து, உயிர்த்து, கல்லறையிலிருந்து வெளியே வந்தார் (மத். 27. 62, 66.). இப்படியிருக்கையில் அவருடைய பிரேதாலங்காரத்திற்காக சுகந்தவாசனைத் திரவியங்களைக் கல்லறைக்குக் கொண்டுபோன சில ஸ்திரீகள் அக்கல்லறை வெறுமையாயிருப்பதைக் கண்டு, அதிக ஆச்சரியப்பட்டுத் திரும்பிப் போனார்கள். அவர்களில் மகதலேனா மரியாள் என்றவள் மற்றவர்கள்கூடப் போகாமல், துக்கசாகரத்தில் அமிழ்ந்து, அவ்வனத்தில் நின்று, கண்ணீர் சொரிந்துகொண்டிருக்கையில், துக்கிப்போரை ஆற்றும் தேற்றரவாளனான இயேசுபகவான், அவளுக்குக் காட்சியளி

த்து, தாம் மரணத்தை ஜெயித்து உயிர்த்தெழுந்ததாகச் சீஷருக்குப் போய்த் தெரிவிக்கும்படி, திருவாக்குரைத்தார். அவள் சீஷரிடம் போய், அதிக வியப்புக்குரிய இச்சங்கதியைத் தெரிவித்தபோதிலும், அவர்கள் நம்பவில்லை. ஆயினும் அத்தினத்தின் அஸ்தமனவேளையில் அவர்களெல்லாரும் ஒரு வீட்டில் கூடிக் கதவை யடைத்துக் கொண்டு, ஒருவரோடொருவர் பேசிக்கொண்டிருக்கும் சமயத்தில் ஜீவாதிபதியான இயேசுநாதர் சடுதியாய் அவர்கள் நடுவில் எழுந்தருளி, பிரத்தியட்சமாகி 'உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக' என்று அவர்களை ஆசீர்வதித்தார். கல்லறையிலிருந் தெழுந்தபிறகு ஜீவாதிபதி நாற்பது நாள்வரையில் தமது சீஷரைச் சந்தித்துக் காட்சியளித்து, அவர்களுக்குத் திருமறையோதி, திவ்யோபதேசம் செய்து வந்தார். அநேகர் அந்த ஜீவாதிபதியைக் கண்ணாரக் கண்டு, அவருடன் முகமுகமாய்ப் பேசி சம்பாஷித்தபடியால், அவர் ஜீவனடைந்து, கல்லறையிலிருந்து உயிர்த்தாரென்று உரைப்பது பொய் என்று சாதிக்க எவ்வளவேனும் ஆதாரம் இல்லை. நாற்பதுநாள் சென்றபின்னர், அம்மேலோக மன்னன், தமது சீஷரைக் கூட்டிக்கொண்டு எருசலேமுக்குச் சமீபத்திலுள்ள ஒரு மலையின்மேல் ஏறி அவர்களெல்லாரையும் நோக்கி, 'வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்தாவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்' என்று கட்டளை கொடுத்து, அவர்களெல்லாரும் பார்த்துக்கொண்டிருக்கையில், ஆகாய மார்க்கமாய் மேகவாகனத்தில் எழுந்தருளி விண்மண்டலப் பிரவேசம் செய்து மறைந்தார் (மத். 28. 18–20. லூக். 24. 50, 51. அப். 12. 11). பரலோகநாதர் எழுந்தருளி, விண்ணிற் பிரவேசித்து, மகிமையின் சிங்காசனத்தில் ஜெயாதிபதியாக வீற்றிருந்தபிறகு, அப்பரமகுருவின் திருத்தொண்டர்கள், பரிசுத்தஆவியினால் ஏவப்பட்டவர்களாய் தம் ஆண்டவரின் வரலாற்றை எத்திசையிலும் வெளிப்படுத்தித் தம்மிறைவனின் மாட்சிமையைக்குறித்துச் சாட்சி கொடுத்து, சகலரும் அவரை



நம்பி, அப்புண்ணியநாதர் மூலமாய்ப் பாவநிவாரணம் அடையும்படி வெகுவாய்ப் பிரயாசப்பட்டு அரும்பாடுற்றார்கள்.

முன்னே சுருக்கமாய் விவரித்த இயேசுகிறிஸ்துநாதரின் திருச்சரிதை இடையில் உண்டானதல்ல, அது ஆதியிலிருந்தே பாரம்பரியமாக வந்தது. இயேசுநாதரின் சீஷரில் சுவிசேஷகர்களான மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என்ற நால்வரும் இயற்றிய சரித்திராகமங்கள் எங்கும் பிரபலமானவை யாகையால், யாவரும் அவற்றை வாசித்து அவற்றிலுள்ள ஒவ்வொரு விஷயத்தையும் வெகு நுட்பமாய் ஆராய்ச்சிசெய்தால் இது விளங்கும். நாம் ஜாக்கிரதையாக பரிசோதனை பண்ணும்போது இந்நூல்கள் கட்டுக்கதைக ளல்லவென்றும் அவற்றை இயற்றினவர்கள் புலவர்கள் அல்லவென்றும் பூரணமாய்ப் புலப்படும். அவர்கள் பாஷை நடை கவர்ச்சிகொள்ளும் இனிய தன்மையுடையதல்ல. அவர்கள் அப்போதைக்கப்போது, இலக்கண விதிகளை மீறி, பாமர ஜனங்களின் பாஷைநடையில் எழுதினதாக விளங்கும். மேலும் அவர்கள் இயற்றிய நூல்களில், நயவசனிப்பு ஒன்றாகிலும் கிடையாது. அவர்கள் தம் பரம குருவான பரலோக நாதனை வியந்து புகழ்ந்து பேசாவிடினும், எவ்வித புகழ்ச்சியும் இச்சகமும் நயவசனிப்பும் இல்லாமலே தங்கள் ஞாபகத்திற்கு வந்தமட்டில் அவரது திருச்சரிதையை விவரித்துக் கூறினார்கள். அவர்கள் எழுதியவற்றைப் பார்க்கும்போது அவர்கள் கண்ணாரக் கண்டு, காதாரக் கேட்டு, தாங்கள் கண்டவைகளும் கேட்டவைகளுமான யாவையும் மனப்பாடமாகக் கூறியதுபோல் காணுமேயன்றி, கவனமும் ஜாக்கிரதையுமாக யோசித்து உண்டுபண்ணி எழுதியதுபோல் தோன்றாது.

திருச்சுதனின் திவ்ய சரித்திர நூல்களை எழுதிய திருத்தொண்டரின் சரித்திரத்தை விசாரிக்கையில், அவர்கள் பூரண அனுபவசாலிகளாய் அந்நூல்களை இயற்றியதாகக் காணப்படும். அவர்களில் மாற்கு என்பவன் பேதுரு என்பவனுக்கு முக்கிய நண்பனாயிருந்து, அவனுடன் இணைபிரியாத தோழனுமாய் இருந்தான். பேதுரு என்பவன் இயேசுநாதர் தெரிந்துகொண்ட பன்னிரண்டு சீஷரில் விசேஷித்தவனாகையால், அவன் நானாதேசங்களுக்குப் போய் தன் ஆண்டவரைப்பற்றிப் போதிக்கையில், மாற்கு என்பவனும் அவனோடுகூட தேசாந்தரியாய்த் திரிந்து அவன் உபதேசித்த விருத்தாந்தங்களைக்

கொண்டு தன்பேரால் விளங்கிய சுவிசேஷ ஆகமத்தை எழுதினான். பிறகு பவுல் அப்போஸ்தலனைப் பின்பற்றின லூக்கா என்னும் ஓர் வைத்தியன் லோகரட்சகரின் திருச்சரித்திரத்தை இன்னும் அதிகத் தெளிவாய் எழுதவேண்டுமென்று தன்பேருடைய சுவிசேஷாகமத்தை எழுதினான். மாற்கு, லூக்கா என்னும் இவ்விருவரும் இரட்சகருடைய முக்கிய சீஷர்களுடன் சகவாசிகளா யிருந்ததைத்தவிர ஆண்டவருடன் எவ்வளவும் கூட்டுறவு உடையவர்களல்லர். மத்தேயு, யோவான் என்ற மற்ற இருவரும் ஆண்டவரின் தோழர்களே. மத்தேயு என்பவன் துரைத்தன உத்தியோகத்திலிருந்தாலும், இயேசுநாதர் 'எனக்குப் பின்சென்று வா' என்று கட்டளை கொடுத்ததால், எல்லாவற்றையும் விட்டு, அவ்வாண்டவரையண்டி, அவர் பரலோகத்திற் கெழுந்தருளும்வரையில், அவருடன் சஞ்சரித்துவந்தான் (மத். 9. 9.). இயேசுநாதர் செய்த கிரியைகளும், அவர் உரைத்த உபதேசங்களும் மத்தேயு என்பவனுக்குப் பூரணமாய்த் தெரிந்தவையானதால், அவ்விதக் கிரியை உபதேசங்களைப் பூரணமாய் விவரித்துரைத்திருக்கிறான். இயேசுநாதரின் சீஷர் எல்லாரிலும் யோவான் என்பவன் தன் உன்னதக் குருவிற்கு உற்ற நண்பன். இயேசுநாதர் இவ்வுலகை விட்டுப் பரமேற வேண்டியவேளை வந்தபோது அவர் தம் மாதாவை யோவான் வசமாக்கினார். அவர் பரலோகத்திற் கெழுந்தருளியபின்னர், யோவான் அநேக வருஷங்கள் ஜீவனோடிருந்து பூரண வயதுடையவனாய், எபேசு என்னும் ஒரு பட்டணத்தில் வாசஞ்செய்து, தன் ஆண்டவரின் சற்போதனையைச் சகல ஜனங்களுக்கும் வெளிப்படுத்திவந்தான். இப்படியிருக்கையில் ஒருநாள், அவர் உபதேசங்கேட்ட சீஷர்கள் அவரிடம் வந்து, 'ஐயா உம்மைத்தவிர லோகரட்சகரைக் கண்ணாரக் கண்டவர்களெல்லாரும் காலஞ்சென்று போனார்கள். நீர் முழுவதும் விருத்தாப்பியராய் கொஞ்சக்காலத்தில் எங்களை விட்டுப் பிரிந்துபோவீராகையால், நீர் கண் மூடுமுன், நீர் கண்டவற்றையும் அனுபவித்தவைகளையும், தயவாய் எழுதித் தரவேண்டும்' என்று விண்ணப்பஞ் செய்தார்கள். யோவான் அவர்கள் கேட்டுக்கொள்ளுதலுக்கு இல்லை என்று மறுக்காமல் அதற்கு இணங்கி மற்ற மூன்று சுவிசேஷகர்களும் எழுதிய சங்கதிகளில் சிலவற்றைமாத்திரம் எடுத்துரைத்தும், அவர்கள் எழுதாமல் விட்ட அநேக காரியங்களை விவரித்தும் ஒரு ஆகமம் எழுதினான்.



மற்ற மூவரும், இயேசுநாதர் சகல ஜனங்களுக்கும் முன்பாக பகிரங்கமாய்ச் செய்த கிரியைகளை விவரித்திருக்கையில், யோவான் ஆண்டவர் தமது சீஷருக்குத் தனிமையாய்ச் செய்த உபதேச காரியங்களை விரித்துரைத்திருக்கிறான். இயேசுநாதரின் சரித்திரத்தை எழுதின இந்நால்வரும் சிறிதேனும் தங்கள் சொந்த மனோபாவனையையும் அபிப்பிராயங்களையும் தழுவி எழுதாமல், நடந்தவை நடந்தபடியே எழுதினார்கள். இதற்கு யோவான், தானெழுதிய ஆகமத்தின் முடிவில், 'இச்சங்கதிகளைக்குறித்துச் சாட்சியிட்டு, இவைகளை எழுதிய சீஷன் இவனே, இவன் சாட்சி சத்தியமென்றறிவோம்' என்று ஒரேவார்த்தையில் குறிப்பிட்டு சுட்டிக்காட்டி எழுதியிருக்கிறான் (யோவா. 21. 24.). மேலும் அவன் தன் உபதேசத்தைக் கேட்டு விசுவாசிகளான கிறிஸ்தவர்களுக்கு எழுதிய நிருபம் ஒன்றுண்டு. அந்நிருபத்தின் முதல் வாக்கியத்தில், அவன் தானும் தன் உடன் ஆகமக்காரர்களும் எழுதிய நோக்கத்தைப்பற்றி 'ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப் பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவவார்த்தையைக்குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம்' என்று எழுதியிருக்கிறான் (1 யோவா. 1. 1.). பேதுரு என்னும் மகா பக்தன்கூட இதைக்குறித்து வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறான். அதிகாரிகள் அவனைச் சிறைச்சாலையில் போட்டதினால், மரணசிட்சைக்கு அவன் காத்திருக்கும்போது, கிறிஸ்தவ பக்தர்களை அவன் எச்சரிக்கும்பொருட்டு ஒரு நிருபம் எழுதியனுப்பினான். அதிலுள்ள சங்கதிகளினால் 'நாங்கள் தந்திரமான கட்டுக்கதைகளைப் பின்பற்றினவர்களாக அல்ல, அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக் கண்டவர்களாகவே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமையையும் வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம் என்று சொல்லுகிறான். (2 பேது. 1. 15, 16.)

இயேசுநாதரின் இரட்சணிய சரித்திரமடங்கிய ஆகமங்களை ஆராய்ந்துபார்க்கையில், அவற்றில் கூறிய விஷயங்கள் உண்மையாய் நடந்தவை என்று சொல்வதற்குச் சந்தேகமில்லை. நாலு சாட்சிகள் நியாயஸ்தலத்துக்குப் போய் யாதாமோர் காரியத்தைக் குறித்துச் சாட்சி சொல்லும்போது, அவர்களெல்லாரும் வித்தியாசம் ஒன்றும் இல்லாமல் ஒவ்வொரு விஷயத்தையும் ஒரேவகையாய் வாக்குமூலம் கொடுக்

கும்பட்சத்தில் யாராகிலும் அவர்கள் பேசும் விதத்தைக் கற்றுக்கொடுத்திருக்கவேண்டுமேயொழிய அவர்கள் தங்களுக்குத் தெரிந்தபடி சொல்லவில்லை என்று சாதாரணமாக நிச்சயிப்போம். ஆயினும் நாலுபேரில் ஒவ்வொருவனும் மற்றவர்கள் சொன்ன சங்கதிகளில் சிலவற்றை விட்டு, சிலவற்றைச் சொல்லி, அற்ப சங்கதிகளில் கொஞ்சம் பேதத்தைக் காட்டி, முக்கிய விஷயங்களில் எல்லாரோடும் ஒத்துச் சொல்லும்பட்சத்தில், அந்தச் சாட்சி நம்பிக்கைக்குரியதென்று தெளிவாகும். இவ்விதிப்படி மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என்னும் நான்கு ஆகமக்காரர்களும் கொடுத்த சாட்சியை விசாரணைபண்ணினால், அது பலமான சாட்சி என்று நிச்சயிப்பது அவசியம். அவர்கள் எழுதின ஆகமங்களில் சொற்ப பேதங்கள் இருப்பதால், அவர்கள் ஒருவரோடொருவர் சம்மதித்து தம்மாண்டவர் சங்கதியை உண்டுபண்ணி எழுதினதாகத் தோன்றாது. ஒவ்வொருவரும் தங்கள் சொந்த வார்த்தைகளை உபயோகித்து, தம் அபிப்பிராயப்படி சில சங்கதிகளை எடுத்துச்சொல்லி, சிலவற்றை விட்டுவிடுவதுண்டு. மேலும் ஒரு காரியத்தை விவரிக்கும்போது, அவர்கள் அதைப் பலவாறாய் விவரிக்கிறார்களேயன்றி சகல விஷயங்களிலும் ஒரேவிதமாய் விவரிக்கிறதில்லை. என்றாலும் அற்ப சொற்ப பேதங்கள் இருந்தபோதிலும், முக்கிய பொருட்களில் விரோதமில்லாமல் ஒற்றுமையிருப்பதால் அவர்கள் கொடுக்கும் சாட்சியைத் தள்ளிப்போட எவ்வளவேனும் இடமில்லை.

மேற்கூறிய காரணமேயன்றி இப்பக்தர்கள் தங்கள் ஆகமங்களில் பகரும் சாட்சி நம்பிக்கைக்குரியதென்று கூற வேறொரு காரணமும் உண்டு. அதென்னவென்றால், அவர்கள் தம்மிடத்திலுள்ள குறைவுகளையும் தாம் செய்த தப்புகளையும் மறைக்காமல், அவை யாவையும் விவரித்து எழுதியிருக்கிறார்கள். தாமும் தமது உடன்சீஷர்களும், தமதாண்டவர் செய்த உபதேசத்தைச் சரியாய் அறியாமல் அவர் இகத்துக்குரிய மன்னர்போல் கொடிய போர்புரிந்து, சுற்றுப்பட்ட தேசங்களைச் சுயாதீனஞ்செய்து, தங்களுக்கு மிக உயர்ந்த உத்தியோகங்களை ஈவாரென்று அவிவேக எண்ணங்கொண்டதாக வெளிப்படையாய் எழுதியிருக்கிறார்கள். இதுவுமன்றி அத்தேசத்து அதிகாரிகள் தமது பரமகுருவுக்கு விரோதமாக எழும்பி வந்து, அவரைப் பலவந்தமாய்ப் பிடித்துக்கொண்டுபோன சமயத்தில், தாமும் சீஷர்குழாம் யாவும்



திகில்கொண்டு குருத்துரோகிகளாய்த் தமதாண்டவரை விட்டு ஓடி, விசுவாசகாதகம் பண்ணினதை விவரமாய் எழுதியிருக்கிறார்கள். மேலும் அவ்வதிகாரிகள் சர்வலோக நியாயாதிபதியான இயேசுநாதரைத் தம் சபைமுன் நிறுத்தி, விசாரணை செய்தபோது, பேதுரு என்பவன், விசுவாசகாதகம்பண்ணி, 'இம்மனிதனை நான் அறியேன்' என்று மும்முறை மறுதலித்ததாக, பேதுருவின் கூட்டாளியாகிய மாற்கு என்பவனும், மற்றவர்களும் ஒளிவுமறைவின்றி, வெளிப்படையாக எழுதியிருக்கிறார்கள் (மாற். 14. 66, 72.). அச்சீஷர்கள் எத்தராய் இருக்கும்பட்சத்தில், அவர்கள் சாதாரணமாக தமது தப்பிதங்களை ஒளித்து, தம்மை உயர்த்தி வியந்துகொள்வார்கள் அல்லவா? ஆனால் அதற்கு மாறாய் அவர்கள் அவ்வகை நோக்கத்தை முற்றிலும் தள்ளி, தமது சிற்றறிவையும், பக்தியின்மையையும், தமது அதைரியத்தையும், குருத்துரோகத்தையும் எழுத்துமூலமாய் வெளிப்படுத்தியிருப்பதால், அவர்கள் எழுதிய வர்த்தமானங்கள் உண்மையாய் நடந்தவையேயன்றி எவ்வளவேனுங் கற்பனையல்லவென்று கலக்கமற நிச்சயிக்கவேண்டும்.

மேற்கூறிய நான்கு சீஷரைத்தவிர, இன்னும் அநேக சாட்சிகள் உளர். அந்நால்வரும், கிறிஸ்துபக்தர்களெல்லாருக்கும் உண்மையாய்த் தெரிந்த சங்கதிகளைத்தவிர, வேறே யாதொன்றையும் எழுதவில்லை. இதைக்குறித்துப் பவுல் என்னும் பக்தசிரோமணி, தானெழுதிய ஓர் நிருபத்தில் 'நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி, மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்து, கேபாவுக்கும், பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார். அதன்பின்பு அவர் ஐந்நூறுபேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒரேவேளையில் தரிசனமானார்; அவர்களில் அநேகர் இந்நாள்வரைக்கும் இருக்கிறார்கள், சிலர்மாத்திரம் நித்திரையடைந்தார்கள்' என்று எழுதியிருக்கிறான். (1 கொரி. 15. 3–6.)

இயேசுநாதரின் திவ்ய மாட்சிமையைக் கண்ணாரக் கண்டதினால் சீஷர்கள் அதிக ஆசையும் ஊக்கமும் உற்சாகமும் எழுப்புதலுமுடையவர்களாய், தம்மாண்டவர் விருத்தாந்தத்தை எத்திசையிலும் தெரி

யப்படுத்திக்கொண்டு போனார்கள். தங்கள் உபதேசம் ஸ்திரப்படும்படி, தமதாண்டவர் திருச்சரிதையையும் இரட்சணியக் கிரியைகளையும் விவரிக்கும் ஆகமங்களையும் நிருபங்களையும் இயற்றிப் பிரசுரம் செய்தார்கள். அவர்கள் விஷயத்தை விசாரிக்கும்போது அவர்கள் புலவரைப்போல, ஆதாயத்தினிமித்தம் எழுதினவர்களல்ல என்பது தெளிவாகும். கவிராயர்கள் விநோதக்கதைகளை உண்டுபண்ணி, மனதை வசப்படுத்தும் இனிய காரியங்களை இயற்றுவார்களேயன்றி, கேட்கிறவர்கள் வெறுப்புற்று, தங்களை இகழ்ச்சிபண்ணி, இம்சிக்க ஏற்படும்பட்சத்தில், அவர்கள் மௌனம் சாதிப்பார்கள் அல்லவா? தம்மாண்டவர் சித்தாந்தத்தைப் பிரசுரம் செய்வதால், அப்போஸ்தலருக்கு அவமானமும் பாடுகளும் பிராணபாயமும் உண்டானதேயொழிய கீர்த்தியாகிலும் லாபமாகிலும் உண்டாகவில்லை. முதலாவது யூதர்களும், அதிகாரிகளும் விரோதிகளாகி அவர்களைப் பிடித்துச் சிறைச்சாலையில் போட்டு அவர்களை நானாவிதமாய்ப் பயமுறுத்தி, அவர்கள் இயேசுநாதருடைய பேரைக்குறித்து ஒன்றும் சொல்லக்கூடாதென்று கண்டிப்பாய்க் கட்டளையிட்டார்கள். அவர்கள் எவ்வளவு பயமுறுத்தினபோதிலும், சீஷர்கள் மனந்தளராமலும், மாற்றானுக்கு இடங்கொடாமலும், விடாமுயற்சியும் வைராக்கியமுமுடையவர்களாய், 'தேவனுக்குச் செவிகொடுக்கிறதைப்பார்க்கிலும் உங்களுக்குச் செவிகொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோவென்று நீங்களே நிதானித்துப் பாருங்கள். நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக்கூடாதே' என்று உத்தரவுகொடுத்து, தமது ஆண்டவரின் விஷயத்தை இன்னுமதிகமாய் வெளிப்படுத்திவந்தார்கள் (அப். 4. 18, 20.). இதுகண்டு அதிகாரிகள் சீறிச் சினங்கொண்டு, தங்கள் கட்டளையை அற்பமாய் எண்ணி, அவமதித்த கிறிஸ்தவ பக்தர்களை எவ்வகையிலும் மடக்கி அடக்கி, கீழ்ப்படுத்திக்கொள்ளவேண்டும் என்று நோக்கங்கொண்டு அவர்கள் ஆஸ்தியாவையும் அபகரித்துப் பிடுங்கி, அவர்களைச் சிறைச்சாலையில் அடைத்து, அவர்களில் அநேகருக்கு மரணசிட்சை விதித்துவந்தார்கள். ஸ்தேவான் என்னும் பக்திமானை, மகாசபைக்குமுன் இழுத்து விசாரிக்கையில், அச்சபையிலுள்ளோர் அவனுடைய வார்த்தைகளைச் சகிக்கமுடியாமல், அவனுக்கு விரோதமாய் எழும்பி கல்



லால் அடித்துக் கொன்றார்கள் (அப். 7. 54–60.). மேலும் அத்தேசத்தையாளும் ஏரோது என்னும் கொடுங்கோன் மன்னன், யாக்கோபு என்னும் அப்போஸ்தலனைப் பிடித்துப் பட்டயத்தால் சிரச்சேதம் செய்வித்தான். இவ்வகைத் துன்பங்கள் எவ்வளவுண்டானாலும், சீஷர்கள் தைரியங்கெடாமல், தங்கள் ஆண்டவர்மேல் தங்களுக்குள்ள பக்தி வைராக்கியம் கொழுந்துவிட்டு எரிந்தமையால், எருசலேம் என்னும் பட்டணத்தில் வாசம்பண்ண முடியாமல், நானாதேசங்களுக்கும் சிதறியோடிப்போய், தாங்கள் சிதறிப்போன இடங்களிலெல்லாம் தம் ஆண்டவரின் மாட்சிமையைச் சகல ஜனங்களுக்கும் போதித்துவந்தார்கள். பிறகு சொல்லிமுடியாத துன்பங்கள் அவர்களுக்கு நேரிட்டபோதிலும் அவர்கள் அவைகளை ஒருபொருட்டென்றெண்ணாமல், ஆராதனைக்கும் வணக்கத்திற்கும் பாத்திரரான தம்மாண்டவரின் மகத்துவத்தைக்குறித்து சாட்சியிட்டு, தங்கள் பரமகுரு நாட்டிய மார்க்கத்தை வெகு தைரியமாகப் போதித்து, தமது உதிரத்தைச் சபைக்கு விதையாகச் சிந்தினார்கள். சுவிசேஷத்திற்காக யார் இவ்வளவு கஷ்ட நஷ்டங்களைச் சகிக்கச் சம்மதிப்பார்கள். லாபத்தின்பொருட்டு மனிதர் பொய் பேசுவார்களேதவிர, பொருள் நஷ்டமும் மானநஷ்டமும் ஜீவநஷ்டமும் அடைய ஒருவரும் பொய் பேசமாட்டார்கள். இயேசுநாதர் நாமத்தைக்குறித்து போதிப்பதால் அவர் அடியாருக்கு அவமானமும் பாடும் சடுதிமரணமும் நேரிட்டபோதிலும் அவர்கள் சிறிதாயினும் பின்வாங்காமல் அவருடைய சுவிசேஷத்தை எங்கும் பிரசித்தம் பண்ணியபடியால், அவர்கள் இவ்வளவாகத் துணிந்து போதித்தது நம்பிக்கைக்குரியதென்று ஒத்துக்கொள்ளாதிருக்க விதியில்லை. அவர்கள் இயற்றிய வேதாகமங்களை ஆராய்ச்சி செய்தால், அவர்கள் குருவான இயேசுநாதர் திருச்சரித்திரம் யாவும் நமக்குத் தெளிவாய் விளங்கும். ஆதலால் அவருடைய மகத்துவத்தைக் கண்டு, அவர் உண்மையாக அவதரித் துதித்த ஜகத்ரட்சகர் என்று நம்பவேண்டும்.

# V. அதிகாரம்

## இயேசுநாதருடைய சுபாவலட்சணங்கள் தேவசம்பந்தமானவை.

ஒருவனுடைய விஷயங்களை எடுத்து விசாரணைபண்ணிப் பார்க்கையில், முக்கியமாய் அவனது சுபாவ லட்சணங்களை ஜாக்கிரதையாகப் பரிசோதித்துத் தெரிந்துகொள்ளவேண்டும். அவன் சுபாவ லட்சணங்கள் உத்தமமானவைகளானால், அவனைக் கனப்படுத்துவோமேயன்றி அவை இழிகுணங்களாயின் அவன் இழிஞன் என்று தீர்ப்போம். இயேசுகிறிஸ்துநாதரின் விஷயத்தை, நாம் இப்படியே விசாரிக்கவேண்டும். அம்மகிபனின் சுபாவ லட்சணங்கள் தேவசம்பந்தமுடையவைகளா யிருக்குமாயின், அவர் ரக்ஷண்யாவதாரமூர்த்தி என்று தீர்மானித்து, அவர்மேல் பயபக்திவைத்து, அவ்விறைவனின் திருப்பாதப் பணிவிடையை ஏற்றுக்கொள்ள வேண்டுமேயன்றி அவருடைய சுபாவ லட்சணங்கள் திவ்ய சம்பந்த மற்றவைகளாகும்பட்சத்தில், அவர் நம்பிக்கைக் குரியவரல்லர் என்று எண்ணவேண்டும். அப்பரமகுருவே தமது சீஷருக்கு இவ்விதியை ஏற்படுத்தினார். அவர் 'வஞ்சகர் வார்த்தைகளைக் கேட்டு மோசம்போகாதபடி, கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்.' 'அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்' என்று எச்சரித்தார் (மத். 7. 15, 16.). இப்படிப்பட்ட விசாரணை நியாயமானதால், இவ்விதியைத் தழுவி இயேசுகிறிஸ்துநாதரின் திருச்சரிதையைப் பரிசோதிப்போம்.

இயேசுநாதரின் காரியங்களை ஆராய்ச்சிசெய்தால், முதலாவதாக, அவர் தமது நிலைமைக்கு முற்றிலும் மேலானவர் என்று தெரியவரும்.



எளிய நிலைமையில் பிறந்து, தமது பராக்கிரமத்தினாலாயினும், தமது வித்வ சாமர்த்தியத்தினாலாயினும், கீர்த்திப்பிரஸ்தாபம் அடைந்து வெகு கனமாக ஜீவித்தவர்கள் எண்ணிறந்தவர் இருந்தபோதிலும், அவர்களுக்கும் இத்திவ்ய புருஷனுக்கும் அனந்த வித்யாசமுண்டு. அவர்கள் தமது பூர்வ நிலைமையை விட்டுக் கனத்துக்குரியவர்களாய் இருக்க, விண்ணிறைவனோ வறிய நிலைமையில் ஜன்மித்து, அந்த ஸ்திதியைத் துறவாமல், அதிலேயே அத்தியந்த கனமுடையவரானார். மேலும் மற்றவர்கள் கீர்த்தியடைந்தபோதிலும், அவர்கள் சாதாரணமாக தாம் பிறந்த கால ஸ்தல நிபந்தனைகளுக்கு உட்பட்டவர்களாய், தேசாபிமானத்தையும் குலாபிமானத்தையும் விடமுடியாமல், தமது சொற்களினாலும் தமது கிரியைகளினாலும், தமது பூர்வ நிலைமையின் குறைவுகளைச் சமயாசமயங்களில் வெளியிடுவார்கள். புத்தமாமுனி குலபேதங்களைக்குறித்து முற்றிலும் இகழ்ந்துபேசி, சகலமானபேர்களையும் தன் மதத்தில் சேர்க்கவேண்டுமென்று முயன்றாலும், அவர் சரித்திரத்தை விசாரித்தால் அவர் அக்காலத்தில் பிரபலமாயிருந்த கோட்பாடுகளைத் தள்ள முடியாதவராய் சமஸ்தவிஷயங்களிலும், தன் தேசவழக்கங்களைத் தழுவியே நடந்துகொண்டதாய்க் காணப்படும். மகமது நபிகூட தேசாபிமானத்திற்கு மாறாக நடக்கமுடியாமல், அரபி தேசத்திற்கேயன்றி வேறெந்த தேசத்திற்கும் ஏற்காத சட்டங்களை நியமித்து விதித்தார். அவர் தேசக் கட்டுப்பாடுகளுக் குட்பட்டவராய்த் தன் சொந்த ஜாதியின் சகஜமான குணங்களை அடிக்கடி காண்பித்துவந்தபடியால் மற்றத் தேசத்தாருக்கும் அவருக்கும் அவ்வளவு சம்பந்தமிராது.

இவ்விஷயத்தில் இயேசு பகவானுக்கும், மதபரிபாலன கர்த்தாக்களான மற்றவர்களுக்கும், அனந்த வித்தியாசமுண்டு. அவர் பிறந்த ஸ்திதியின் எளிமைத்தனத்தையும் அவர் சுபாவத்தின் மேன்மையையும் பெருந்தன்மையையும் விசாரிக்குமிடத்தில், நமக்குச் சொற்கடங்கா வியப்பு உண்டாகும். அவ்விண்ணிறைவன் பெயர் பிரஸ்தாபம் இல்லாத ஒரு சிறு தேசத்திலுள்ள ஒரு கிராமத்தில் வளர்ந்து தமது ஜீவகாலம் முழுவதும் எளிய நிலைமையில் ஜீவித்தார். ஞானத்தின் ஊற்றான அவர் பெயர்பெற்ற ஞானிகளிடத்தில் கல்விப்பயிற்சியடையாதவரானபோதிலும், இளம்பிராயத்திலிருந்து தமது ஜனனதேசத்தை

விடாமல், தச்சுத் தொழில்செய்த தமது தந்தைக்கு உதவிபுரிந்துவந்தார். வாலிபகாலத்தில் அவரது நண்பர் யாவரும் கல்லாதார். மேலும் அவர் பாலிய பருவத்தைக் கடந்து, திருத்தொண்டுசெய்ய ஏற்பட்ட பிறகுகூட ஏழைகளுடன் கலந்து கூட்டுறவாடி, கல்வியறிவில்லாத நாட்டுப்புறத்தாரில் தம் சீஷரைத் தெரிந்துகொண்டார். இப்படியிருக்கையில், அம்மேலோகநாதன், நாட்டு ஜனங்கள்போல் அவபக்தியுடையவரும் பிறருடைய குணலட்சணங்களைச் செவ்வையாக சீர்தூக்கிப்பார்க்க முடியாததினால், அவர்களுக்கு ஏற்றபடி போதிக்க முடியாதவருமாய் இருக்கலாம் என்று சாதாரணமாய் தப்பெண்ணங்கொள்ளலாமல்லவா? இதற்கு மாறாக, விலைமதியா முத்தும், ஆன்மா ஆசிக்கும் புதைபொருளுமான அவ்வன்பனைத் தரிசிக்கும்பொருட்டு வருந்தும் தொண்டரில் யாராயினும், அவரது திருச்சரித்திரத்தைத் திறந்து ஆராய்கில், இத்தப்பெண்ணத்திற்கு ஆதாரமே இல்லை என்று துல்லியமாய்க் காணலாம். அப்பரப்பொருளை நாடும் ஜீவான்மாவுக்கு அப்பரம ரகசியம் வெளிப்படும். அத்திவ்ய புருஷனைக் காணப் போராடும் திருத்தொண்டனுக்கு அவர் தம்மை வெளிப்படுத்துவார். 'தேடுங்கள் கண்டடைவீர்கள்.' இத்திவ்ய சத்தியவிஷயத்தில் தாங்கள் ஞானிகள் என்று பெருமைபண்ணாமல், ஒன்றுமறியா பாலகர் போல அவர் பாதத்தில் சாஷ்டாங்கமாய் விழுவோருக்கு அவ்வுன்னத ஜோதி உதயமாகுமேயன்றி, அறிந்தவரென்று கர்வம் படைப்போருக்கு அந்த அமலன் அருள் கிட்டாது. இயேசுநாதர் நாட்டில் வளர்ந்தபோதிலும், அவர் நாட்டுப்புறத்தானல்ல. பிதாவின் மடியிலிருந்தவரும், பிதா பரிசுத்தம்பண்ணி இப்பூதலத்திற்கு அனுப்பியவருமான பூபதி மேற்குத் தேசத்தானோ? கிழக்கு தேசத்தானோ? விண்ணாட்டானோ? மண்ணாட்டானோ? லோகோற்பத்திக்குமுன் பிதாவுடன் சமானமான மகிமையுடையவர் எவ்விதம் நாட்டுப்புறத்தானாகக்கூடும். ஆம் அவர் வேஷத்தில் அடிமை ரூபமே. மனுஷீகத்தில் நாட்டுவாசியே. ஆனால் தெய்வீகத்தில் மகிமையின் ஆண்டவர். பரலோகத்திலிருந்திறங்கிய பாத்துக்குரியவர். அவர் யூதேயா தேசத்தில் ஜீவித்து, வாசஞ்செய்துவந்த ஓர் யூதன்மாத்திரம் அல்ல. அவர் தன் ராஜ்யம் உலகத்திற்குரியதல்லவென்று பிலாத்துக்குச் சொன்னபோது, அவன் பயப்பட்டான். பிதாவின் மகிமைபொருந்தியவராய்



மேகவாகனத்தில் எழுந்தருளிவந்து, மகிமையின் சிங்காசனத்தில் வீற்றிருப்பதாய் மகாசபைமுன் விளம்பினார். தாம் தேவலோகத்துத் திவ்ய புருஷன் என்று மித்துருக்கள் சத்துருக்கள் அதிகாரிகள் பிரஜைகள் விசுவாசிகள் அவிசுவாசிகள் அனைவர் முன்னும் மனந்தடுமாறித் திகைத்துப் பின்வாங்காமல் தம் தெய்வீகத்தை வெளியிட்டார். தற்காலத்தில் உலகத்தார் யாவருக்கும் தாம் திரிலோகநாதரின் சிரேஷ்ட புதல்வன் என்று, அவர் திருச்சரித்திரமடங்கிய நான்கு சுவிசேஷங்களின் மூலமாய்க் கூறுகிறார். அக்காலத்து யூதர்கள் மூடவைராக்கியம் உடையவர்களாய், மூர்க்கவெறிகொண்டு, தம் ஆசாரங்களில் பிடிவாதமும் மிதமிஞ்சிய சாதனையும் பாராட்டி, தங்கள் ஜாதியைக்குறித்து மட்டுக்குமிஞ்சி பெருமைபேசி, புறஜாதியாரை அற்பமாய் எண்ணி, அவமதித்து வந்தார்கள். அவர்கள் தம் சுயதேசத்தை விட்டு நாற்றிசைகளிலும் சிதறி, ஏறக்குறைய 1800 ஆண்டுகளாகின்றன. ஆயினும் அவர்கள் எத்தேசத்திலிருந்தாலும் அவர்கள் இயற்கைக்குணங்கள் தற்காலம்வரையில் மாறாமலிருப்பதால், நாம் எங்கேபார்த்தாலும், அவர்களுக்கும் மற்ற ஜனங்களுக்கும் அதிக வித்தியாசமுண்டென்று காணலாகும். இயேசுநாதருக்கு இப்படிப்பட்ட வித்தியாசமான லட்சணங்களில்லை. அவர் தமது தேசத்தார் தலைமுறை தலைமுறையாகக் கைக்கொண்ட அபிப்பிராயங்களைக் கண்டித்து, அவர்கள் பெருமையைக் குற்றப்படுத்திப் பேசி, அவர்கள் நீதியை முக்கியமாக்கிக் கொள்ளவேண்டுமேயொழிய, தங்கள் ஜாதியை எவ்வளவாகிலும் ஆதாரமாக்கக் கூடாதென்று வெளிப்படையாய்க் கூறிவந்தார். மேலும் அவர் இப்படிப் போதிப்பதோடுகூட, தமது நடக்கையில் சிறிதும் பட்சபாதம் காட்டவே இல்லை. யூதேயா தேசத்திற்குச் சமீபமான சமாரியா தேசத்தாருக்கும், யூதருக்கும் விரோதமிருந்ததென்றாலும் இயேசுநாதர் அத்தேசத்திற்குப் போய், சிகார் என்னும் பட்டணத்திற்குச் சமீபத்திலுள்ள ஒரு கிணற்றண்டை உட்கார்ந்தபோது, ஒரு ஸ்திரீ குடம் எடுத்துக்கொண்டு, கிணற்றுக்கு வருகையில், 'தாகத்திற்குத் தா' என்று தாகமில்லா அப்பூமான் அவளைக் கேட்டார். அவள் திகைத்து 'நீங்கள் எங்களுடன் சம்பந்தம் செய்கிறவர்கள் அல்லவே, அப்படியிருக்கையில் "தாகத்திற்குத் தா" என்று எப்படிக் கேட்கிறீர்' என்று வினவினபோது, அவர் அதிகத்

தயை கூர்ந்து, மனிதர் யாவரும் பேதமின்றி, ஆவியான கடவுளுக்கு ஆவிக்குரிய வணக்கம் செலுத்தவேண்டுமேயன்றி அவர்கள் எத்தேசத்தை ஆயினும் எந்த ஸ்தலத்தையாயினும் முக்கியமானதாய் எண்ணக்கூடாது என்று அவளுக்கு உபதேசம் செய்தார் (யோவா. 4. 1–29.). இதுவுமன்றி அவர் ஜனத்திற்குப் புறம்பாகத் தள்ளப்பட்டவர்களுடன் கூடியுறவாடி ஐக்கியம் பண்ணினதால், சாஸ்திரிகள் அவரைக் குற்றப்படுத்தி நிந்தித்தபோது, ஆண்டவர் அவர்கள் கடினகுணத்தின் நிமித்தம் அவர்களைக் கண்டித்து 'நோயாளிகளுக்கேயன்றி சுகமுடையவர்களுக்கு வைத்தியன் தேவையில்லை. நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்கவந்தேன்' என்று விடை கொடுத்தார் (மத். 9. 12, 13.). மேலும் அந்த ஜனங்களில் அநேகர் அற்பசொற்ப விஷயங்களைக்குறித்து வாதித்து புறஆசாரங்களை முக்கியமானவை என்றெண்ணியபோது, அவர்களுடைய மடமையைக் கண்டு 'போஜன பானபாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தமாக்குகிறீர்கள்; உட்புறத்திலோ, அவைகள் கொள்ளையினாலும் அநீதத்தினாலும் நிறைந்திருக்கிறது. போஜன பானபாத்திரங்களின் வெளிப்புறம் சுத்தமாகும்படி, அவைகளின் உட்புறத்தை முதலாவது சுத்தமாக்குங்கள்' என்று பரமகுரு மொழிந்தார். (மத். 23. 25, 26.)

இயேசுநாதரின் உபதேசத்தை எவ்வளவு பரிசோதனைபண்ணினாலும், அதில் தூர்அபிமானம் ஒன்றுமில்லையென்பது திண்ணம். அது சகல மனிதரும் வியப்புறும்படியாக ஒத்திருக்கிறது. இயேசுநாதர் எண்ணிறந்த பேதங்களைக் கைக்கொள்ளும் தேசத்தில் பிறந்தபோதிலும் எத்தேசத்தாராயினும் அவரது திருச்சரித்திரத்தை விசாரிக்கையில் அவர் தமக்குச் சம்பந்தமுடையவர் என்றே அறிந்துகொள்வார்கள். அவ்வாண்டவர் ஏதோ ஒரு தேசத்துக்குரியவரென்றாகிலும், அல்லது ஏதோ ஒருகாலத்தில் ஜீவித்தவரென்றாகிலும் காணப்படாமல், சகல காலங்களுக்கும் சமஸ்த தேசங்களுக்கும் சம்பந்தம் உடையவர் என்று கூற சந்தேகமில்லை. அதனால் அவர் தரித்துக்கொண்ட மனிதகுமாரன் என்னும் நாமம், அவருக்கு வெகு சிறப்பாய்ப் பொருந்துகிறது. நாகரீகமுடையோராயினும் நாகரீக மற்றோராயினும், கற்றோராயினும் கல்லாராயினும், எத்தேசத்தாராயினும் எந்நிலைமையுடையோராயினும், சகல மனிதருக்கும் இயேசுபகவான் சம்பந்தப்



பட்டவரே; அவரது வாக்கிலும் கிரியையிலும் யாருக்கும் சரிப்படாதவை ஒன்றாகிலும் இடையாது.

சகல விஷயங்களிலும் இயேசுநாதர் தாம் ஜன்மித்த கால ஸ்தானங்களுக்கு மேற்பட்டவரே என்று விளங்குகிறது. ஆகிலும் அவர் மற்றவர்களைப்போல தமது எளிய நிலைமையைத் துறந்து, கீர்த்தியடையவேண்டும் என்று முயன்றவரல்லர். உலக சுகத்தையாயினும், கனத்தையாயினும் எவ்வளவேனும் தேடாமல், ஈனஸ்திதியைத் தழுவி, வறிஞர் வழக்கமாய்ப் படுகிற கஷ்டங்கள் யாவும் பட்டு, தமது ஜீவகாலம் முழுவதையும் வெகு வறுமையான நிலைமையில் கழித்தார். அத்தேசத்திலுள்ள பெரியோர் இப்பரமராஜனை அற்பமாயெண்ணி பலவாறாய் அவரை இகழ்ச்சி செய்தார்கள். கடைசியில் அவர் சொல்லற்கரிய அவமானமடைந்து குற்றவாளிகள் அடைகிற மரணத்திற்குட்பட்டு உயிர் நீத்தார். ஜகத்ரட்சகர் இவ்வளவு எளிய நிலைமை உடையவராய் இவ்வகைக் கஷ்டங்களை அனுபவித்தபோதிலும், அவர் ஆதியிலிருந்து தமது திவ்ய மகத்துவத்தைக் காண்பித்துக்கொண்டே வந்தார். அவர் பன்னிரண்டு வயதுள்ளவராயிருக்கையில், ஒரு சமயத்தில் பெற்றோரை விட்டு எருசலேமிலுள்ள மகா தேவாலயத்திற்குப் போய் சாஸ்திரிகளோடு சம்பாஷித்து, அவர்களை வினவி, அவர்களுடைய வினாக்களுக்குத் தகுந்த விடை பகர்ந்தபோது, கேட்டோர் யாவரும் அவருடைய புத்தியையும், அவர் சொன்ன மாறுத்தரங்களையும் குறித்துப் பிரமித்தார்கள் (லூக். 2. 46–50.) என்று வேதாகமத்தில் எழுதியிருக்கிறது.

இயேசுநாதர் முப்பது வயதுடையவராய் அத்தேசமெங்கும் சுற்றித்திரிந்து சகல ஜனங்களுக்கும் போதனைசெய்ய ஆரம்பித்தபிறகு, அப்பெருமானின் பெருந்தன்மை, மேன்மை, சிறப்பு, மாட்சிமை முதலியவற்றைக் கண்ணாரக்கண்ட மாந்தர் யாவரும் பயமும், வியப்பும் உடையவர்களானார்கள். இயேசுநாதர் மிகுந்த தயாளமுடையவராய்த் தம் சீஷர்களை மிகுதியாய் நேசித்து, அவர்களுடன் இணைபிரியாத கூட்டுறவு செய்துவந்தார். அவர்கள் அப்பெருமான் பிறந்த ஸ்திதியை அறிந்தார்கள். தம்மாண்டவர் தம்மைப்போன்ற தரித்திரனாய் யௌவனகாலத்தில் தச்சுத்தொழில் செய்து ஜீவித்தாரென்னும் விஷயம் அவர்களுக்குத் தெரிந்த சங்கதியே. மேலும் அவர்கள் அவ

ருக்குப் பின்சென்றபோது, அவர் மற்ற மனிதரைப்போலவே பசி தாகத்தால் களைப்படைந்ததையும், மற்ற மனிதரைப்போலவே நானு துக்கங்களை அனுபவித்ததையும், ஒருசமயத்தில் சந்தோஷப்பட்டும் வேறொருசமயத்தில் துக்கப்பட்டும் இருந்ததையும் கண்டறிந்துவந் தார்கள். அவர் சகலவிஷயத்திலும் தம்மைப்போலொத்தவர் என்று அவர்களுக்குத் தெளிவாய் விளங்கினாலும், அவர்கள் தமதாண்டவரும் எஜமானுமானவரை எவ்வளவோ நன்றாக அறிந்தவர்களாயிருந்த போதிலும், பலமுறை அவருடைய மகத்துவத்தைக் கண்டு பயமடைந் தார்கள். பேதுரு என்பவன் அவர்கள் எல்லாரிலும் துணிகரமுடைய வனுயிருந்தபோதிலும், அவன் ஒருசமயத்தில் தன் ஆண்டவர் செய்த அற்புதத்தைப் பார்த்து அவருடைய பாதத்தில் விழுந்து, 'ஆண்ட வரே, நான் பாவியான மனுஷன், நீர் என்னைவிட்டுப் போகவேண்டும்' என்று முறையிட்டான் (லூக். 5. 8,9.). வேறொரு சமயம் கொடிய புசல் அடித்தபோது, பஞ்சபூதங்களின் கர்த்தாவாகிய இயேசுபக வான் காற்றையும் சமுத்திரத்தின் அலைகளையும் அதட்டி, அமைதல் உண்டாக்கியதால் அவர்களெல்லாரும் பார்த்து 'இவர் எப்படிப்பட் டவரோ, காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே' என்று ஒருவ ரோடொருவர் சொல்லிக்கொண்டு மிகவும் பயந்தார்களென்று எழுதி யிருக்கிறது (மாற். 4. 37–41.). இதுவுமன்றி, தமது தெய்வீகத்தை மனு ஷீகத்தில் அடக்கியிருந்தவரும் பிதாவின் மகிமை பொருந்தினவரு மாகிய அந்த அமலர் பெருமான் ஒருநாள் தமது மகிமையை வெளிப் படுத்தி அவர்கள்முன் மறுரூபமானபோது, அத்திருப்புதல்வன் தமது திவ்ய ஒளியையும் தம் தந்தையோடு தமக்கு உள்ள மகிமையையுங் காட் டித் தரிசனம் அளித்ததினால், அவருடைய முக்கிய சீஷர்கள் மாண்ட வர்போலாகி, ஒன்றும் சொல்லமுடியாமல், மிகவும் பயந்து முகங்குப் புற விழுந்தார்கள் (மத். 17. 1–6.). மேலும், அவ்வதிசயநாதன் அற்புதக் கிரியைகள் செய்யும் சமயங்களில் மாத்திரமேயல்லாமல் சீஷர்கள் சாதா ரண சமயங்களிலும் அவருடைய மகிமையைக் கண்டு சிறிதளவு பயப் பட்டுவந்தார்கள். இரண்டு மூன்றுதடவை அப்பரமகுருவின் உப தேசங்களில் சிலவற்றைச் சரியாய் விளங்கிக்கொள்ளாமல், அவற்றைப் பற்றி அவரைக் கேட்க விரும்பினபோதிலும், பயமடைந்து கேட்பதற் குத் தைரியம் இல்லாதவர்களானார்கள். (மாற். 9. 32: 10. 32.)



இயேசுநாதரின் சீஷர்கள்மாத்திரம் அல்ல, அப்பரமகுருவைப் பார்த்தவர் யாவரும் அவருடைய மகத்துவத்தைக் கண்டு பயப்பட்டார் கள். அவர் இருமுறை எருசலேமிலுள்ள மகா தேவாலயத்திற்குப் போய், அதின் பிராகாரத்தில் மிருகங்களை விற்றும் காசுமாற்றியும் வியாபாரஞ்செய்கிறவர்களை அதட்டி, அவர்களை வெளியே துரத் தினார். அவர்கள் பெரியவர்களும், தேவஸ்தான அதிகாரிகளின் அனுமதியுடன் அவ்விடத்தில் வியாபாரம் செய்தவர்களுமா யிருந்த போதிலும், அவரை எதிர்த்து ஒரு வார்த்தையும் சொல்லமுடியாமல் ஓடிப்போனார்கள் (மாற். 11. 15–18. யோவா. 2. 13–17.). இரண்டு மூன்றுதடவை, அவர் சத்துருக்கள் அவர் முகத்தைப் பார்க்கமுடியா மல், பயமும் திகைப்பும் உடையவர்களாய்ப் பின்வாங்கினார்கள். அவர் கெத்செமனே என்னும் வனத்தில் ஜெபம் பண்ணிக்கொண்டிருக்கை யில், அநேகர் கூட்டங்கூடி ஆயுதங்களுடன் அவருக்கு விரோதமாக வந்தபோதிலும், அவர் எதிர்கொண்டுபோய், அவர்களுடன் பேசின வுடனே, அவர்கள் பின்னிட்டுத் தரையிலே விழுந்தார்கள் என்று யோவான் சுவிசேஷத்தில் எழுதியிருக்கிறது (யோவா. 18. 3, 6.). அக்கொடியவர்கள் அவரைப் பிடித்துக்கொண்டுபோய், பொந்தியு பிலாத்து என்னும் தேசாதிபதிமுன் நிறுத்திக் குற்றஞ்சாட்டியபோது, பிலாத்து அவருடைய சங்கதியைச் சிறிதளவு விசாரித்துப் பயமடைந் தான். பிலாத்து தேவனுக்குப் பயப்படாதவனும், மனிதரை மதியாத வனுமாயிருந்தபோதிலும், இயேசுநாதருடைய திருவாக்கைக் கேட்டு, அவருடைய மேன்மை, பெருந்தன்மை, மாட்சிமை, மகத்துவம் என்ப வற்றைக் கவனித்து, அதிக வியப்புற்று, அவரை விடுதலை செய்வதற்கு வெகுவாகப் பிரயத்தனம்பண்ணினான். இவ்வகைச் சங்கதிகளை விசா ரிக்கும்போது, இயேசுநாதர் தமது நிலைமைக்கு மேற்பட்டவராய், தமது இயல்பான பெருந்தன்மையினாலும் தமது அத்தியந்த மகிமையி னாலும் தம்மைச் சேர்ந்தவர்கள் எல்லாரிடத்திலும் பயபக்தியை உண் டாக்குகிறவர் என்று வெளியாகிறது. இவ்வளவு மாட்சிமைதங்கின வராயிருந்தபோதிலும், அவர் முற்றிலும் சாந்தமும் தாழ்மையுமுடைய வராயிருந்தார். அவர் அகங்காரம் ஆணவம் ஒன்றும் படைக்காமல், தமது ஜீவகாலமெல்லாம் தரித்திரருடன் நெருங்கிக் கூட்டுறவு பண்ணி, அவர்களை ஆற்றித் தேற்றி ஆதரித்துவந்தார். அவர் ஒரு

வரையும் அற்பமாய் எண்ணி இகழாமல், தம்மிடம் வந்தவர்களை ஏற்றுக்கொண்டு, அவரவர் அவசரத்திற்கு ஏற்றபடி அவர்களுக்குத் துணை புரிந்தார். அவர் பிள்ளைகளிடத்தில் பட்சமுள்ளவரானதால், அவர்களில் அதிகமாய் அன்புகூர்ந்தார். ஒருசமயம் சில ஸ்திரீகள் தங்கள் குழந்தைகளை அவரிடம் கொண்டுவந்தபோது, சீஷர்கள் அவர்களை அதட்டினாலும், இயேசுநாதர் சீஷர்கள்மேல் கோபமடைந்து, 'சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள், அவர்களைத் தடைபண்ணாதிருங்கள். தேவனுடைய ராஜ்யம் இப்படிப்பட்டவர்களுடையது' என்று மொழிந்து, அப்பிள்ளைகளை அணைத்துக்கொண்டு ஆசீர்வதித்தார் (மத். 19. 13–15.). அவருடைய தயாளத்தைப் பார்த்து, அறிவீன ஜனங்கள் சந்தேகமொன்றுமில்லாமல், அவருடைய பாதசந்நிதிக்கு வந்தார்கள். ஆண்டவர் அவர்கள்மேல் மனதுருகி அவர்கள் மேய்ப்பனில்லா ஆடுகளைப்போல் சிதறிப்போனார்களென்று (மத். 9. 36.) மிகுதியாய்த் துக்கித்து, அவர்களுக் குபதேசம் பண்ணி, அவர்களுடைய அறியாமையை நீக்கி, அவர்கள் பாவங்களைப் பரிகரித்து, எப்படியாகிலும் மோட்சவழியில் சேர்க்கவேண்டுமென்று, இரவுபகலாய்ப் பிரயாசப்பட்டுவந்தார். கிருபாநிதி அவர்கள்மேல் கிருபைகூர்ந்து, அவர்களுக்கு நேரிட்ட நோய்களையும் பிணிகளையும் தமது திவ்ய வல்லமையால் சுகப்படுத்தினார். அந்தகருக்குப் பார்வையையும், சப்பாணிகளுக்கும் முடவருக்கும் நடையையும் அருளி, ஊமையரைப் பேசப்பண்ணி, குஷ்டரோகிகளை சர்வாங்க சுகமடையச்செய்து, பிசாசினால் பிடிபட்டிருந்தவர்களிலிருந்து அவைகளைத் துரத்தினார். இவ்வண்ணம் ஊண் உறக்கமற்று, மெய்வருந்தச் செய்த ஊழியத்தால் களைப்புத் தவிப்பு அடைந்திருந்தகாலத்திலும் எவ்வித முக்கியமான வேலையிருந்தகாலத்திலும் நிர்ப்பாக்கியமான ஜனங்கள் தம்மிடம் வருவதைக் கண்டவுடனே, அக்கருணாநிதி உள்ளங்கனிந்து அகமுருகி இருதயமடை திறந்து அன்பு ஆறாய்ப்பெருகி, தாமதிக்காமலும் காலங்குறிக்காமலும் இஷ்டம் வரும்வரையில் காக்கப்போடாமலும் மனங்கோணப் பேசாமலும் அதட்டி அதிகாரம்பண்ணாமலும், தம்முயிர்போல் மன்னுயிர்க்கிரங்கி, அந்தட்சணமே எழுந்தருளி, அவர்கள் முறைப்பாடு என்ன என்று வினாவி ரட்சிப்பளித்தார். இதினால் தாம் அடிமைரூபத்தில் தோன்றினாலும், தமது நிஜஸ்திதி எத்தன்மையுடையதென்று விளக்கிக்காட்டி



னார். மாணிக்கச் சுடரை மண் மறைக்கும்வண்ணம் அடிமையின் ரூபம் அருணோதயச் சுடரை மறைத்து அவ்வகதிகள் காண, அவர்கள் அக இருள் ஒழிய, அவர்கள் நேத்திரந் திறந்து தம்மினங் கண்டுகொள்ள பரஞ்சோதி தம்மை யண்டினபேர்க்குத் தம்மைக் காட்டாமல் காட்டி, பிதாவின் மகிமையை ஒத்த மகிமைப்பர்வதமாய் அவர்கள் முன் விளங்கி நின்றார்.

இயேசுபகவான் பஞ்சமாபாதகரையும் இகழ்ச்சிபண்ணாமல், அவர்களுக்கும் தயவுகாண்பித்து, அவர்கள் துர்க்குணத்தை மாற்றி, அவர்களை குணசீலராக்கும்படி பிரயாசப்பட்டுவந்தார். அப்படிப்பட்டவர்களில் யாராகிலும் மனஸ்தாபப்பட்டு, அவர் பாதத்தண்டை வந்தபோது, அக்கிருபாநிதி களிப்படைந்து அவர்கள் பாவங்கள் யாவையும் மன்னித்து ஆசீர்வதித்தார். ஒருசமயம் ஆண்டவர் ஒரு அதிகாரியின் வீட்டில் போஜனபந்தியிலிருந்து விருந்துண்கையில், பாவியான ஓர் ஸ்திரீ தன் பாவங்களைக்குறித்துக் கிலேசமடைந்து அவர் சந்நிதியில் வந்து, அவர் பாதத்தில் விழுந்து, அவைகளை முத்தமிட்டு, அதிகமாய் அழுதாள். அதை அவ்வீட்டெஜமான் கண்டு 'அவர் தீர்க்கதரிசியாயிருந்தால், இந்த ஸ்திரீ இப்படிப்பட்டவளென்று அறியமாட்டாரா?' என்று தன் அகத்தில் சந்தேகப்பட்டபோது, பாவிகளைத் தள்ளாத தயாள புருஷன், கெட்டுப்போன ஆட்டை விட்டுவிடாத நல்ல மேய்ப்பன், பாவிகளுக்காகப் பாவமான பரமசுதன், அவளுடைய விசுவாசத்தைப் புகழ்ந்து, 'உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன' என்று பாவ விமோசனங்கூறி அவளை ஆசீர்வதித்தார் (லூக். 7. 36–50.). அவர் இப்படி நடந்துகொண்டதினால் நீதிநெறி முறையுடன் ஜீவிக்கிறவர்கள் அவரைப்பார்த்து 'அவர் பாவிகளுக்குச் சிநேகிதன் அல்லவா' என்று பாவமறியாத பரிசுத்தரைப் பரியாசம்செய்து, குறைவாய் எண்ணினார்கள் (லூக். 7. 34.). அவர்கள் எவ்வளவு இகழ்ச்சிசெய்தபோதிலும், ஆண்டவர் அந்த நிந்தை அனைத்தையும் கேட்டுங் கேளாதவர்போல் நடந்து, அவர்கள் இகழ்ந்துபேசிய இழிஞருடன் சகவாசம்பண்ணி, பஞ்சமாபாதகருக்கும் தமதன்பின் ஊற்றைத் திறந்தார். அவர் குருசில் தொங்கி மரணவஸ்தையில் இருக்கையில் அவருடன் சிலுவையில் அறையுண்ட ஒரு கள்ளன் தான் நடப்பித்த தோஷக்கிரியைகளை நினைத்து, வெகுவாய்ப் பயந்து, கலங்கி, அம்மகிமையின் ஆண்டவருடைய மகத்துவத்

தைத் தெரிந்துகொண்டு, அவரை நோக்கி, 'ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது, அடியேனை நினைத்தருளும்' என்று முறையிட்டான். பிறர் பாவம் தாங்கும் சுமைதாங்கியும், லோகப்பாவங்களைச் சுமக்கும் தேவாட்டுக்குட்டியுமான பொன்குருட்டநியன், சொல்லுக்கடங்கா வாதையடைந்து சர்வலோகப் பாரத்தையும் சுமந்தவராய் இருந்தபோதிலும், தம்மிடம் முறையிட்ட அத்துன்மார்க்கனுடைய விசுவாசத்தைக் கண்டு, 'இன்று நீ என்னுடன் பரதீசிலிருப்பாய்' என்று இனியமொழி கூறிப் பேரின்ப பதவியை அவனுக்கு வாக்களித்தார். (லூக். 23. 39–43.)

தனக்கு விரோதம் பண்ணினவர்களுக்கும் தீமைசெய்யாமல், அவர்களுக்குச் சமயோசிதமான உபகாரம் செய்வதே இயேசுநாதரது முழுநோக்கம். 'உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காக ஜெபம்பண்ணுங்கள்' என்று தமது சிஷருக்குக் கட்டளைகொடுத்து, தாமே அந்நீதிநெறியைக் கைக்கொண்டு நடந்தார். எருசலேம் என்னும் மகாநகரில் வசித்த பிரஜைகள், அப்பரமகுருவின் திருமறையைக் கேவலமாய் எண்ணி, அத்திருச்சுதனை ஏற்றுக்கொள்ளாமல் இகழ்ச்சிசெய்தபோது, அவர் அந்நகரைப் பார்த்து அதற்குச் சம்பவிக்கப்போகும் அழிவு அவஸ்தைகளை முன்னறிந்து, துக்கசாகரத்தில் மூழ்கி கண்ணீர்விட்டார் (லூக். 19. 41.). மேலும் கொடிய பாதகர் அவரை பலவந்தமாய்ப் பிடித்துக்கொள்ளவேண்டும் என்று, ஆயுதபாணிகளாய் அவருக்கு விரோதமாக வந்தபோது, பேதுரு என்றவன் துணிந்து பட்டயத்தை உருவி மல்குஸ் என்னும் ஓர் வேலைக்காரனை காதற வெட்டினபோது, தீமைக்கு நன்மைசெய்யும் திருமகன், 'இம்மட்டில் நிறுத்துங்கள்' என்று சொல்லி, காயப்பட்டவனின் செவியைத் தொட்டு, அதைச் சொஸ்தப்படுத்தினார். (லூக். 22. 50, 51.)

இதுவுமன்றி பொருத்தியுபிலாத்து மரணத்தீர்ப்பு விதித்தபிறகு, போர்ச்சேவகர் அவரைப் பட்டணத்திற்கு வெளியே கொண்டுபோய், சிலுவை ஸ்தம்பத்தில் கைகால்களை ஆணிகளால் அடித்தபோது, சாந்தமூர்த்தி அவர்களைச் சபியாமல் 'பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே' என்று பிதாவிடம் விண்ணப்பஞ்செய்தார். (லூக். 23. 34.)



இயேசுநாதரின் சகிப்பும் அவருடைய அளவற்ற தயவும் விவரிக்க முடியாதவை. அப்புண்ணியநாதர், ஒரு சமயத்தில்மட்டும் தயவுபாராட்டினவராயிராமல், எப்பொழுதும் தயாநிதியாகவே இருந்து, தமது சுய சுகதுக்கத்தை ஒருக்காலும் கருதாமல், எப்போதும் பிறர் சுகதுக்கங்களையும் அவசரங்களையும் கவனிக்கும் பரோபகாரியாய்ச் சுற்றித்திரிந்தார். அப்பரமகுருவின் சீஷரில் பெயர்ப்பிரஸ்தாபம் உடைய ஒருவன், அவருடைய திருச்சரித்திரம் முழுவதையும் ஆராய்ந்தறிந்து அவருடைய முக்கிய நோக்கத்தைக் கிரகித்து, 'கிறிஸ்துவும் தமக்கே பிரியமாய் நடந்துகொள்ளவில்லை' என்று எழுதியிருக்கிறான் (ரோம. 15. 3.). இயேசுநாதர் பிறர் லாபத்தின்பொருட்டுச் சகலத்தையும் துறந்து இக்கற்றவர்போல் தேசங்கள்தோறும் சுற்றித்திரிந்தார். 'நரிகளுக்குக் குழிகளும், ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு; மனுஷகுமாரனுக்கோ, தலைசாய்க்க இடமில்லை' என்று சர்வ மகிமைச்சம்பன்னரும், சர்வ தயாநிதியுமான சிருஷ்டிகர்த்தா தம்மைக்குறித்துச் சாட்சியிட்டார் (மத். 8. 20.). அவருடைய அவதாரத்தின் நோக்கத்துக்குரிய வேலைகளைச் செய்ய ஆரம்பித்தபோது, சகல ஜனங்களும் அவர்மேல் அவாக்கொண்டு, அவ்வித மேன்மைதங்கிய மகா புருஷனைத் தமது வேந்தனுக்கிக்கொள்ள முயற்சி செய்தபோது, அவர் சம்மதியாமல், அவர்களை விட்டு ஏகாந்தமாக வனாந்தரத்திற்குப் போனார். திருச்சுதன் திருவுளங்கொண்டால் திரண்ட திரவியம் தேடிக்கொண்டு மகா மன்னனைப்போல் சுகமாகவும் கனமாகவும் ஜீவிக்கிறதற்கு தடையொன்றுமே இராது. என்றாலும், அப்பரோபகாரி வறியோர்படும் கஷ்டங்களைப் பட்டு, சகல விஷயங்களிலும் அவர்களைப்போல ஜீவிக்கத் தீர்மானித்து, தரித்திரத்திற்குள்ளாகி, தரித்திருடன் சகவாசம் செய்து, தரித்திருடன் தன்னைச் சமானமாக்கி, அவர்கள் சுமக்கும் சுமை யாவையும் தாமே சுமந்துகொண்டுவந்தார்.

ஆத்தும நேசராகிய இயேசுநாதர் பிறர்பொருட்டுப் புதுமைகள் அநேகம் செய்தாலும், தம்பொருட்டுத் தமது மகத்துவ வரங்களை ஒருக்காலும் கையாடினவரல்ல. குறைவை நிறைவாக்கும் அக்குபோன் ஓர் தருணம் ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் திருக்கரமேந்தி ஆசீர்வதித்து, பெருகப்பண்ணி, பசியால் வருந்திய ஐயாயிரம்பேர் சாப்பிட்டு, மீதியாகும்படி அவற்றை நிகரற்ற தமது சர்வ வல்லமையை

விளங்கப்பண்ணியபோதிலும், தாமோ பலமுறை அன்னம், பானமின்றி
பசியால் வருந்தினார். ஜீவகாருண்ணியர் அநேகதடவை தம்மிடம் வந்த
வர்களுடைய கஷ்டங்களை நீக்கி மகிழ்ச்சிகொள்ளும்படிச்செய்தாலும்,
தாம் களைப்புத் தவிப்புற்று மெய்வருந்தியபோது, தமது திவ்ய சக்தி
யைக் கையாடாமல், நம்மைப்போல் அவ்வாதைகளைச் சகித்து உத்
தரித்தார் (யோவா. 4. 6.). தேற்றரவாளன் பிறரைத் தேற்றி அவர்க
ளுக்கு ஆறுதலும் அமைதியும் உண்டுபண்ணினாலும், லோகத்தார் நிந்
திப்பதாலும் தமது நண்பர் ஸ்திரமின்றிப் பின்வாங்கிப் போனதினா
லும், அப்பாசற்ற மன்னனின் உள்ளம் வெகுவாய் நொந்து புண்ணா
னது (மத். 26. 56. மாற். 3. 6. யோவா. 6. 64.). அப்பாப புருஷ
னின் திருச்சரித்திரத்தை ஸ்திரமாய் விசாரிக்குங்கால், அவர் தம்மைத்
தாம் வருத்தி, தம்மைத்தாம் வெறுத்து, நாம் சுமக்கும் சகல பாரத்தை
யும் தாமே பூரண மனதோடு சுமக்கச் சித்தங்கொண்டார் என்று புலப்
படுகிறது. லோகரட்சகருடைய பிராயச்சித்த மரணத்தை விசாரிக்
குங்கால் இது அதிகத் தெளிவாய் விளங்கும். அவர் மரணவஸ்தையி
லிருந்து தப்பித்துக்கொள்ள முடியாமல், சடுதி மரணமாய் மரித்தவரா
யிராமல் மனிதஜாதிக்கு மோட்சவழியைத் திறக்க ஏற்பட்டதுமுதல்
தம்மைத்தாம் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கத் தீர்மானித்துக்கொண்
டார். அவர் வாக்கினால் இது விளங்கும். பலதடவை ஆண்டவர்
தமக்கு நேரிடப்போகிற பாடு மரணங்களைக் குறித்துத் தமது சீஷ
ருக்கு முன்னறிவித்துவந்தார். ஒரு தருணத்தில் ஆண்டவர் சீஷ
ருடன் கூடியிருக்கையில் அவர்களைப் பார்த்து, நான் ஆடுகளுடைய
நல்ல மேய்ப்பன், ஆடுகளுக்காக என் ஜீவனைக் கொடுக்கிறேன்,
'ஒருவனும் என் ஜீவனை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ள
மாட்டான். நானே அதைக் கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும்
எனக்கு அதிகாரம் உண்டு. அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும்
எனக்கு அதிகாரம் உண்டு' என்று திருமறையோன் வெகு தெளி
வாய்க் கூறினார். (யோவா. 10. 14–18.)

ஜீவாதிபதியும் ஜீவகாருண்யருமான இயேசுபகவான் மரித்
தோரை எழுப்பினதால் தம் ஜீவனைக் காப்பாற்றிக்கொள்ள வல்லமை
யுடையவர் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆகிலும் அவர் தம் சத்து
ருக்கள் கைகளிலிருந்து தம்மைத் தப்புவித்துக்கொள்வதற்கு விரும்



பாமல், அவர்கள் உண்டுபண்ணிய துன்பங்களைக் கடைசிவரையில்
சகித்து உயிர்விட மனங்கொண்டார். அச்சத்துருக்கள் விதித்த மரண
தண்டனை மிகு கொடியதென்றாலும், ஜகத்ரட்சகர் யாவும் முன்
னறிந்தவராய் கொஞ்சமாகிலும் பின்வாங்காமல், அவ்வாதை, அவ
மானம் முதலியவற்றை மனப்பூர்வமாய்ச் சகித்தார். அவர் மரணப்
பாடுகளைப் பரிசோதித்தால், ஏசாயா என்னும் தீர்க்கதரிசி, 500
ஆண்டுகளுக்கு முன்னுரைத்தவை அவரில் நிறைவேறின என்று
விளங்கும்.

'மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு நம்
முடைய துக்கங்களைச் சுமந்தார். நாமோ அவர் தேவனால் அடி
பட்டு வாதிக்கப்பட்டு சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். நம்
முடைய மீறுதல்கள்நிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்
கிரமங்கள்நிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்குச் சமாதானம்
உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்
புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப்போல் வழி
தப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம். கர்த்த
ரோ, நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணி
னார்' என்பவையே (ஏசா. 53. 4–5.). இதைக்குறித்து 'நாம் பாவங்
களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே
தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல்
சுமந்தார்' என்று பேதுரு என்னும் அப்போஸ்தலன் எழுதியிருக்
கிறான் (1 பேது. 2. 24.). மேலும் யோவான் என்னும் மற்
றோர் அப்போஸ்தலன், 'அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக்
கொடுத்ததினாலே, அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்' என்று
தன் அநுபவத்தைக்கொண்டு சாட்சி கொடுக்கிறான் (1 யோவா. 3.
16.). பவுல் என்னும் மகாயோகியும் இச்சங்கதிகளைக்குறித்து,
'அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்
பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே
வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்.
அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது
சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே
தாழ்த்தினார்' என்று சொல்லுகிறான் (பிலி. 2. 6–8.). இச்சங்கதிகள்

யாவையும் விசாரிக்கையில் இயேசுநாதர் முற்றிலும் பரோபகாரியாய், பிறர்பொருட்டுத் தம் மேலோக மகிமை அனைத்தையும் துறந்து, அவமானத்தையும் பாடுகளையும் அகோரமரணத்தையும் மனப்பூர்வமாய்ப் பட்டு உத்தரித்தார் என்பது தெளிவு. அவரில் சொல்லி முடியா மாட்சிமையும் அளவற்ற பொறுமையும் எல்லாப் புத்திக்கும் மேலான இரக்கமும் அதிக வியப்புக்குரிய விதமாய்ப் பிரகாசிக்கின்றன.

இயேசுநாதரென்னும் பெருமான் பூரண சற்குணராய் மனிதருடைய நற்கிரியைகளுக்கு மேலான சற்காரியங்களைச் செய்தாரென்று ஒப்புக்கொள்ளுவது போதுமென்று எண்ணலாமோ? அப்பரம்பொருளின் திருச்சரிதையைப் பூரணமாய் விசாரிக்குங்கால், அவர் மனிதரெல்லாரிலும் பூரண சற்குணரென்று ஒப்புக்கொள்வது மாத்திரமல்ல, அவர் முற்றிலும் பாவமற்ற தூயரும் களங்கமற்ற பரிசுத்தவானுமாயிருந்தார் என்று அறிக்கையிடுவது அவசியமாயிருக்கிறது. இவ்விஷயத்தில் இவருக்கும் மற்றெல்லா மனிதருக்கும் எண்ணிறந்த வித்தியாசமுண்டு. "அவர் திருச்சரிதையை எவ்வளவு நுட்பமாய்ப் பரிசோதித்தபோதிலும் அவரில் யாதொரு பாவமாயினும், யாதொரு குறையாயினும் காணப்படாது;" இது சொல்லற்கரிய ஆச்சரியமானது. துன்மார்க்கர் ஒருக்கால் தாம் செய்த அபராதங்களை எண்ணாமல், தம்மில் தோஷம் ஒன்றுமில்லை என்று வாதித்து வழக்காடினும், மனிதர் சற்குண அபிவிர்த்தி அடைய அடைய அவர்கள் சாதாரணமாய் தம் பாவத்தின் அகோரத்தைக் கண்டு உணர்ந்து வெகுவாய் மனஸ்தாபப்பட்டுக் கிலேசப்படுவார்கள். சதுர்வேதங்களை இயற்றிய ரிஷிகள் தாங்கள் பாவமற்றவர்களென்று எண்ணாததுமல்லாமல்,

'அதிதி, மித்திரா, வருணா! நாங்கள்
உங்களுக்கு விரோதமாய்ச் செய்த
பாவங்களையும் குற்றங்களையும்
மன்னியுங்கள்!' என்றும்,

(ருக்வேத. ii. 27. 14.)

'நாங்கள் உங்களுக்கு விரோதமாய்ச் செய்த
பாவங்களினின்று எங்களை மீட்டுக்கொள்ளும்' என்றும்

(ருக்வேத. vii. 86. 5.)



வேண்டிக்கொண்டு தம் பாவங்களை அறிக்கையிட்டு, தேவன் கருணை கூர்ந்து மன்னிக்கவேண்டுமென்று முறையிட்டார்கள். மேலும் அவர்களில் ஒருவன் தன் பாவத்தைக்குறித்து வெகு விசாரத்துக்குள்ளாகி, துக்கசாகரத்தில் மூழ்கி, 'பாவிகளிலெல்லாம் நான் பெரும்பாவி' என்று விளம்பினான். மகமதுநபி தான் பாவி என்றறிந்து, தேவனிடம் தன் தோஷங்களை அறிக்கைபண்ணினதற்குக் கொரானில் அநேக உதாரணங்கள் உண்டு. தேவன் அவரை நோக்கி, 'உன் ஆண்டவரைத் துதித்து, உனக்கு மன்னிக்கவேண்டும் என்று அவரைக் கேள்' என்று கட்டளை கொடுத்ததாய் நசர் என்னும் சுருற்றிலுள்ள மூன்றும் அதுவில் எழுதியிருக்கிறது. மேலும் 'தேவன் உன் பூர்வ பாவத்தையும், அதற்குப் பின்னான பாவத்தையும் மன்னிக்கலாம்' என்று ஃதாவென்ற சுருற்றிலுள்ள இரண்டாவது அதுவில் எழுதியிருக்கிறது. பைபில் என்னும் சத்திய வேதாகமத்தை விசாரித்தால், அதை எழுதிய பக்தர்கள்கூட தம் தோஷங்களை அறிக்கையிட்டு மனஸ்தாபப்பட்டார்கள் என்று வெளிப்படையாகக் காணப்படும். அநேக திவ்ய சங்கீதங்களை இயற்றிய தாவீதென்னும் ராஜரிஷி வெகுவாய் மனத்துயரடைந்து, 'என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும். என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன்; என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது. தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து, உமது கண்களுக்கு முன்பாக பொல்லாங்கானதை நடப்பித்தேன்' என்று தன் பாவங்களைக்குறித்து தேவனிடம் முறையிட்டான் (சங். 51. 2–4.). மேலும் இயேசுகிறிஸ்துநாதர் கிய
மித்த, ஆதிச்சீஷரில் அதிக கீர்த்திமானாகிய பவுல் என்னும் மகோத்தமன் தன் நண்பனுக்கு எழுதிய நிருபத்தில் நான் பாவிகளில் பிரதான பாவி என்று சொல்லுகிறான். (1 தீமோ. 1. 15.)

நாம் எந்த சாஸ்திரத்தைப் பரிசோதிக்கினும், சகல மனிதரும் துரோகிகளும் பாபிஷ்டிகளுமா யிருக்கிறார்களென்று விளங்கினும், இயேசுநாதர் திருச்சரிதையை ஆராய்ந்து பார்த்தால், அவர் முற்றிலும் பாவமற்றவர் என்று உரைக்கச் சந்தேகமில்லை. இப்பெருமான் பாவ புண்ணியங்களைக்குறித்து வெகு வெளிப்படையாய் உபதேசித்துப் பகிரங்க பாவங்களை மாத்திரமல்ல, அந்தரங்கத்திலுள்ள

67678

தோஷங்களையுங்கூட கண்டுபிடித்து, அவைகளைக் கண்டித்தார். தமது சீஷருக்குப் போதித்தபோது, அப்படியே, அவர்களுக்குச் சுலுவான சட்டங்களை நியமிக்காமல் 'பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்' என்று கண்டிப்பான கட்டளை கொடுத்தார் (மத். 5. 48.). இச்சட்டத்தைப் பார்க்குங்கால், மனிதர் யாவரும் அதை மீறினவர்களென்று வெளிப்படுமாதலால், மனிதர் எவ்வளவு கனமாகவும் எவ்வளவு சிறப்பும் செல்வமும் பெருமையு மாகவும் வாழ்ந்தபோதிலும், அவர்களெல்லாரும் பாவஞ்செய்தவர்க ளென்றல்லவா நிச்சயிக்கவேண்டும்? தாங்கள் நீதியான்களென் றெண்ணி, மற்றோரை அற்பமாய் எண்ணுகிறவர்களை இயேசுநாதர் வெகு கடினமாய்க் கண்டித்தார். அப்படிப்பட்டவர்கள் திருட்டு விப சாரம் முதலிய கேடுகளைச் செய்யாமல் தமது பதாசார விஷயங் களில் வெகு நீதிநெறியாக நடந்தவர்களானபடியால், மனிதர் அவர்கள் பக்தி வைராக்கியத்தை மெய்ச்சி அவர்களைப் புகழ்ந்தார்கள். இயேசு நாதரோ அவர்களுடைய அந்தரங்க ஸ்திதியைப் பரிசோதித்து, அவர்கள் அகத்திலுள்ள அகங்காரம் ஆணவம் என்னும் பொல்லாப் புகளைக் கண்டு அவர்கள் வேஷக்காரரென்றும் சர்ப்பத்தின் சந்ததியார் என்றும், வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள் என் றும் வெளிப்படையாகக் கூறினார் (மத். 23.). தாங்கள் பாவிகள் அல்ல என்று பெருமை பாராட்டுகிறவர்களின் துர்ச்சிந்தையைக் கண்டித்து அவர்களைக்குறித்து, அநேக பழமொழிகள் எடுத்துரைத் தாலும், தம்மில் ஒரு பாவமாகிலும் உண்டென்று அவர் ஒருக்காலும் அறிக்கையிட்டுக் கூறியவரல்லர். அத்தேசத்ததிகாரிகளும், சாஸ்திரி களும், அவரைப் பகைத்து அவருடைய பிரயத்தனங்களை வீணாக்கி, அவரை எதிலாகிலும் ஓர் பாதகத்திற் குட்படுத்தவும், எதாகிலும் ஓர் பழியை அவர் தலைமேல் சுமத்தவும் வேண்டும் என்று முயற்சிசெய்து காத்திருக்கையில், பழுதற்ற அப்பராபர னென்று சிறிதேனும் சந்தேகிக் காமல், 'என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என் னைக் குற்றப்படுத்தக்கூடும்' என்று அவர்களை வெளிப்படையாகக் கேட்டார் (யோவா. 8. 46.). அவருடைய சீஷர்கள் வெகு உத்தம குணசீலர்களானாலும் அவர்கள் தாங்கள் தோஷமற்றவர்களென்



றெண்ணாமல் தங்கள் குறைவுகளை அறிந்துகொள்ளும்பொருட்டு, 'உங் களுக்குக் கட்டளையிடப்பட்ட யாவற்றையும் செய்தபின்பு, "நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர், செய்யவேண்டிய கடமையை மாத்திரம் செய்தோம்" என்று சொல்லுங்கள்' என்று அவர்களுக்குக் கட்டளை விதித்தார் (லூக். 17. 10.). சீஷருக்கு இவ்விதக் கட்டளை கொடுத்தாலும், தம் விஷயத்தைக்குறித்துப் பேசியபோது, சம்பாஷ ணைத் தொடர்ச்சியை வேறுவிதமாக மாற்றி, தேவ சந்நிதியில் தாம் பிரயோஜனம் அற்றவர் என்று அறிக்கைபண்ணாமல், தேவனுக் கிஷ்டமான காரியங்களையே எப்போதும் செய்கிறேன் என்று ஐயந்திரிபற யூதருடைய திரள் ஜனக்கூட்டத்தின்முன் கூறினார். (யோவா. 8. 29.)

இயேசுநாதர் திருச்சரிதையைப் பரிசோதனை செய்கிறபோது, அவர் முற்றிலும் பாவமறியாதவர் என்று புலப்படும். பெரும் பான்மையோர் மனிதர்முன் தம் ரகசியங்களை மறைத்தபோதிலும், தேவ திருச்சந்நிதி சேர்ந்து ஜெபிக்கையில் தமது குற்றங்களை அறிக்கை யிடாதிருக்க வழியில்லை என்று கண்டு, தங்கள் பாவங்களெல்லா வற்றையும் அவரிடம் அறிக்கைசெய்து மன்னிப்புக்காக வேண்டிக் கொள்ளுவார்கள். அவர்கள் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு மன் னிப்புக் கேட்பது, மனிதர் யாவருக்கும் இன்றியமையாத அவசியம் என்பது இயேசுநாதருக்கு நிச்சயமாய்த் தெரிந்த விஷயமாதலின், தமது தொண்டர்களுக்கு ஜெபஞ்செய்யக் கற்றுக்கொடுத்தபோது, அவர்கள் 'எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும்' என்று கெஞ்சும்படி கட்டளையிட்டார். ஜெபத்தைக் கேட்கும் அகிலாண்ட நாயகர் தம்மடியாருக்கு இவ்வண்ணம் விதித்தபோதிலும், தாம் இந்தப்பிரகாரம் ஒருக்காலும் ஜெபித்தவரல்லர். அவர் தேவனைக் குறித்து தியானம்பண்ணிப் பலமுறை ஜெபித்தபோதிலும், ஒரு முறையாயினும் பாவ அறிக்கை செய்து மன்னிக்கவேண்டுமென்று மன்றாடவில்லை. இது அதிக வியப்புக்குரியதல்லவா? ஒருவன் ஒருவேளை தன்னைத்தான் வஞ்சித்து இவ்வண்ணம் பெருமை பாராட் டினாலும், ஆபத்துக்காலம் நேரிடும்போது, அவன் சாதாரணமாக தன் பெருமை யாவையும் நீக்கி, உண்மையான தன் நிலைமையை அறிந்துகொண்டு, வெகு பயமும் வெட்கமும் அடைவான். இயேசு

பகவான் தம் ஜீவியகாலம் முழுவதும் ஒரு குற்றத்தையாகிலும், பாவத்தையாகிலும் அறிக்கைபண்ணுமல், தாம் பூரணமாய் பாவ மற்றவர் என்று சாதித்துக்கொண்டே வந்தார். அப்போஸ்தலர் விபரீதங்கள் ஒன்றின்மேல் ஒன்றாக நேரிட்டபோதிலும், வாக்கு மாருத அவ் வண்ணமையாளர் இச்சாதனையை நெகிழவிடவில்லை. மரணுவஸ்தை சமீபித்தபோது, தமது சீஷரெல்லாருங் கேட்டுக்கொண்டிருக்கையில், திவ்ய நேத்திரங்களைப் பரத்திற்கு நேராக உயர்த்தி, பிதாவே, வேளை வந்தது, நீர் உம்முடைய குமாரனுக்குச் செய்யும்படி, நியமித்த கிரி யையைச் செய்து முடித்தேன். பூமியிலே நான் உம்மை மகிமைப்படு த்தினேன் என்று தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தினர் (யோவா. 17. 1—4.). அல்லாமலும் சிலுவையில் தொங்கி மரணத்திற்கு எதிர் பார்த்திருக்கையில், தமது சத்துருக்களின் தோஷங்களை மன்னிக்க வேண்டுமென்று, விண்ணப்பஞ் செய்தாரேயன்றி, தமது தோஷங் களை மன்னியும் என்று எவ்வளவாயினும் வேண்டிக்கொள்ளவில்லை. ஜீவாதிபதி பிராணத்தியாகம் செய்தபோது, தம்மிடத்தில் ஏதோ குற்றங் குறைவு இருந்தாற்போல் துக்கித்துக் கவலைப்பட்டுக் கலங் காமல், பூரண அமைதலும் சமாதானமு முடையவராய், 'முடிந்தது' என்று உரைத்துக் கடவுளுக்குத் தமதாவியை ஒப்புவித்தார். (யோவா. 19. 30.)

இயேசுநாதர் நம்மைப்போல் பாவசம்பந்த முடையவராயிருந் தால், அவர் திருச்சரிதை முழுவதும் விளங்காத விடுகதையாயிருக் கும். தம்மில் பாவம் ஒன்றுமில்லை என்று அவர் வெளிப்படையாய்ச் சொன்னதால், அப்பரிசுத்தமூர்த்தி மற்ற மனிதர்போல் தேவ கட்ட ளையை மீறி, பாவஞ்செய்தவரா யிருந்தபட்சத்தில், அவர் தமது ரகசிய பாவங்களை மறைத்து, உலகத்தை வஞ்சித்தாரென்றாவது, தமது நிஜஸ்திதியை அறியாமல் தம்மைத்தாமே வஞ்சித்துக்கொண் டாரென்றாவது தீர்மானிப்பது இன்றியமையாத அவசியம். ஆண்ட வருடைய திருச்சரித்திரத்தை பரிசோதித்தால், அவர் சகல சற்கு ணமும் ஒருங்கு நிறைந்த நிர்மலர் என்று அவரது நற்கிரியைகள் சற்போதனைகள் பாசமேதாத ஜீவியம் இவற்றால் விளங்குகின்றமை யால், அவர் எவ்வளவேனும் அவிவேகி என்றாவது வஞ்சகர் என்றா வது எண்ண இடமில்லை. அக்கிர்மல பெருமான் நம்பிக்கைக்குரிய



வர் என்பதற்குச் சந்தேகமில்லை யாதலின், அவர் திருவாய் மலர்ந் தருளியபடி பாவமற்றவரும் பாவஞ்செய்யாதவருமாயிருந்தார் என்று அங்கீகரித்தல் இன்றியமையா அவசியம். அப்பரன் மகன் தாம் களங்கமற்ற கர்த்தாவென்று கருதினரென்னும் விஷயம், சகல ஜனங் களுக்கும் சாதாரணமாகத் தெரிந்ததானதால், அவர் அபிப்பிராயம் அபத்தமானபட்சத்தில், யாராகிலும் அவரில் ஓர் குறையைக் கண்டு, அதை வெளிப்படுத்தி அவரை அவமானத்திற்குள்ளாக்கி இருக்க லாம். அத்தேசத்தாரில் அநேகர் அவரைப் பகைத்து, அவரை ஏதாகிலும் ஒரு குற்றத்திற் குள்ளாக்கவேண்டும் என்று அவரைப் பின்தொடர்ந்து, அவரது வாக்குக், கிரியை, போக்கு, வரத்து யாவை யும் வெகு பத்திரமாய்க் கவனித்துப் பரிசோதித்து வந்தார்கள். அவ் வீணர்கள் தந்திரோபாயங்கள் பண்ணி, அவரை வார்த்தையிலாகிலும் குற்றத்திற்குள்ளாக்கப் பலவாறாய்த் தம்மாலியன்ற பிரயத்தனம் செய்தபோதிலும், அவர்கள் எவ்வளவு பரிசோதித்தும், எத்தனையோ விதங்களாய்ப் பிரயத்தனங்கள் பண்ணினபோதிலும், அவர்மேல் ஒரு குற்றமும் சாட்ட இடங்கிடைக்காமல்போயிற்று. அக்கீழ்மக்கள் அம் மேலோனை பலவந்தமாய்ப் பிடித்து, பொந்தியுபிலாத்துவினிடம் பிரியாது செய்தபோது, அவன் எவ்வளவு விசாரித்தபோதிலும், அக் கொற்றவனிடத்தில் எக்குற்றமும் காணப்படாமையால், அந்நியாயாதி பதி அபிப்பிராயக்காரனுனபோதிலும், இயேசுநாதரின் களங்கமின்மை யைக் கண்டுகொண்டு, அவரில் தோஷமொன்றுங் காணவில்லை என்று மூன்றுமுறைத் தீர்ப்புச் சொன்னன். மேலும் அக்காலமுதல் தற்காலம்வரையில் கோடிக்கணக்கான மாந்தர் அவருடைய சரிதை யை விசாரித்துப் பரிசோதித்தாலும், அவரில் யாதொரு குற்றமும் குறைவும் காணவில்லை. அநேகர் கிறிஸ்து மார்க்கத்தைக் கண்ட னம்பண்ணக் கருதி, கிறிஸ்து மதஸ்தரிடத்திலுள்ள குறைவுகளைப் பற்றி வாதாடினலும், இயேசுநாதர் திருச்சரிதையைப்பற்றி எவ்வ ளவேனும் நிந்திக்க முடியவில்லை.

இயேசுநாதரின் குணலட்சணங்கள் அவர் சீஷருக்குப் பூரண மாய்த் தெரியும். அவர்கள் மூன்று வருஷங்களாக இரவும் பகலும் விடாமல் அவருடன் கூட்டுறவு செய்து, மெய்க்காவலர்போல் அவருடன் சுற்றித் திரிந்து, எந்நேரமும் அவரது திருச்சந்நிதியில்

திருத்தொண்டு செய்து நின்றவர்கள். சுகதுக்கங்களில் அவரது கிரியைகளைக் கண்டு, அவர் திருமறையைச் செவியுறக் கேட்டவர்கள். மானிடர்க்குரிய பாவக்கறையான மாசுமறு அத்திவ்ய புருஷனில் தலைகாட்டியிருக்குமானால், அவர்கள் அதைத் தப்பாமல் கண்டிருப்பார்கள். அவர்கள் பாவத்தைக்குறித்து வெகு கண்டிப்பாய் உபதேசித்து, தம் ஆண்டவருடைய விசேஷத்தை எடுத்துப் பேசியபோது, அவர் முற்றிலும் பாவமற்ற மாண்புடையவர் என்று அனைவரும் ஒருமொழியாய்ச் சாற்றுகிறார்கள். யோவான் என்னும் சுவிசேஷகன் மனிதருடைய நிலைமையைக் குறித்து, 'நமக்குப் பாவமில்லை என்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம். சத்தியம் நமக்குள் இராது' என்று தனது முதல் நிருபத்தில் (1 யோவா. 1. 8.) எழுதியிருந்தாலும், அதே நிருபத்தில் இயேசுநாதருடைய பிரஸ்தாபத்தை எடுத்துரைக்கையில், 'நமது பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டார் என்று நீங்கள் அறிவீர்கள். அவரிடத்தில் பாவமில்லை' என்று தெளிவாய்ச் சொல்லுகிறான் (1. யோவா. 3. 5.). பேதுரு என்பவனும், 'கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார். அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை' என்று கிறிஸ்தவர்களுடைய எச்சரிக்கைக்கென்று தமதாண்டவரின் களங்கமின்மையைக்குறித்துச் சாட்சியிட்டு எழுதினான் (1 பேது. 2. 21, 22.). பவுல் என்னும் யோகி மனிதருடைய பாவ நிலைமையைக்குறித்து வெகு விவரமாய் எழுதி 'எல்லாரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களானார்கள்' என்று திருஷ்டாந்தப்படுத்தியிருக்கிறான் (ரோ. 3. 33.). அல்லாமலும் நாம் மேலே பார்த்தபடி அத்திருத்தொண்டன் தனது அநுபவத்தை யொட்டி, தான் பாவிகளில் பிரதானமான பாவி என்று (1 தீமோ. 1. 15.) தன்னைத்தான் தாழ்த்தித் தன் பாவங்களை அறிக்கையிடுகிறான். தான் அண்டின அடைக்கலநாதரான இயேசுபகவானைக் குறித்துப் பேசுகிறபோதாவது, எழுதுகிறபோதாவது அணுவளவும் சந்தேகியாதவனாய், 'எல்லாவிதத்திலும் நம்மைப்போலச் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கு இருக்கிறார்' என்று ஒளிமறைவில்லா



மல் பகிரங்கமாய் உலகோர்க்குச் சாற்றினான் (எபி. 4. 15.). இதுவுமன்றி, இயேசுகிறிஸ்துநாதரை அண்டிக்கொண்டு, அவர் பாதாரவிந்தத்தை ஆதாரம் பண்ணிக்கொள்ளுகிறவர்கள் எல்லாரும் அப்பரிசுத்த மூர்த்தியின் மகத்துவத்தால் தம் பாவக்கறையைப் போக்கடித்து பரிசுத்தராவார்களென்று வெகு தெளிவாய் வெளிப்படுத்தினான் (ரோம. 8. 2. 1 கொரி. 5. 13.). நாம் எவ்வளவு ஆராய்ச்சி செய்தாலும், இது மறுக்கமுடியாத சாட்சி. மனிதர் யாவரும் துராசையைப் பயிற்சிசெய்து பாவஞ்செய்கிறவர்களாயிருக்க, இயேசு கிறிஸ்துநாதர் ஒருவர்மாத்திரம் முற்றிலும் பாவமறியாதவராய், மனோ வாக்குக் காயங்களினால் ஒரு பாவமும் செய்யாதவர் என்று நாம் நிச்சயிக்கலாம்.

ஆத்ம நாயகராகிய இயேசு சுவாமி, பலவிஷயத்தில் மனுமக்கள் சகஜமாகப் பின்பற்றும் அபிப்பிராயங்களைத் தள்ளி, புதிதான நீதி நெறியை அநுசரித்து நடந்தார். பாவவிஷயத்தில் மனிதர் இரண்டு விதமாய் நடந்துகொள்வார்கள். துராசைகளைப் பின்பற்றித் தேவ கட்டளைகளை அற்பமாய் எண்ணி மீறுகிறவர்கள், காரியா காரியங்களைச் சீர்தூக்கிப் பாராமல் தாமும் மற்றோரும் செய்யுந் துர்க்கிரியைகளை வெகு அற்பமாய் எண்ணுவதால், துன்மார்க்கரை நிந்தியாது அவர்களுடன் ஒருமித்து தோழமை செய்வார்கள். பகிரங்க பாவங்களை வெறுத்துத் தள்ளி, மரியாதையாகவும் கௌரவமாகவும் ஜீவனஞ் செய்வோர், காரியா காரியங்களைச் செவ்வையாகச் சீர்தூக்கிப் பார்த்து, இழிஜனங்களைக்குறித்துக் குறைவாய் எண்ணி அவர்கள் சகவாசத்தை நீக்கி, அவர்களை முழுப்பகையாய்ப் பகைப்பார்கள். திவ்ய குருவான மேலோக மன்னன் சகல பாவங்களையும் கண்டித்தபோதிலும் பாவஞ்செய்தவர்களை எவ்வளவேனும் அருவருத்தவரல்லர். கிறிஸ்துநாதர் பாவமே சகல ரோகங்களையும்விட அதிகக் கேடுள்ளதென்றும் சரீராத்துமத்துடன் மனிதரைப் பூரணமாய் நாசத்திற்குள்ளாக்குகிறதென்றும் எண்ணி அதை மிகவும் அருவருக்கிறவரா யிருந்தபோதிலும், எவ்வளவு கொடிய பாவிகளையும் அக்கருணாநிதி அருவருக்காமல் அவர்கள்மேல் அத்தியந்த கிருபைவைத்து, அவர்களுடன் நெருங்கிக் கூட்டுறவுசெய்து, அவர்களை எவ்வாற்றாயினும் குணப்படுத்தத் திருவுளங்கொண்டு வெகு பொறுமையைக் கையாடி பிரயாசப்பட்டுவந்

தார். மற்றவர்கள் மனங்கொள்ளாமல் அருவருத்து பின்வாங்கிடினும் வைத்தியர்கள் பரிகாரம் பண்ணவொண்ணாத நோக்கத்தைப் பார்த்துச் சுகப்படுத்துவதற்குப் பிணியாளியிடம் வலியப் போகும் வண்ணம், பரிகாரமூர்த்தியான பரலோக பண்டிதர் மானிடரின் பாவரோகத்தைப் பார்த்து, மனதுருகி, நிர்ப்பாக்கிய பாவிகளனைவரையுந் தன்னிடஞ் சேர்த்துக்கொண்டு வந்தார். சகலராலும் இகழப்பட்ட அதிதுன்மார்க்கரையும் அக்கிருபாசமுத்திரபதி தள்ளாமல், அத்தீயோரும் தேவகுமாரர்களானதால் தேவ உதவியினால் குணசாலிகளாவார்கள் என்று திடமாய் நம்பினார். சகல பாவங்களையும் இவ்வளவு கண்டிப்பாய் அருவருத்தவரும், நிர்ப்பாக்கிய பாவிகளை இவ்வளவாகக் கடாட்சித்தவருமான இவரைப்போல இம்மேதினியில் தோன்றினவர் வேறொருவரும் இல்லை என்று கூற சந்தேகமில்லை.

எம்பெருமானான இயேசுநாதருடைய திவ்ய சுபாவ லட்சணங்களைப் பரிசோதனை செய்யச்செய்ய, நமக்கு அதிக வியப்பு உண்டாகிறது. அவ்வகிலாண்டநாயகர் சகல விஷயங்களிலும் நம்மைப் போன்றவராய் மண்ணில் உதித்து, முப்பத்து மூன்று ஆண்டுகள் மனுமகன் ஒருவனைப்போல் மானிடர் குழாங்களுடன் ஒருமித்துக் கூட்டுறவுசெய்து வந்தவராயினும், தோஷமொன்றும் அறியாதவராய்த் தமது ஜீவகாலம் முழுவதும் முற்றிலும் பரிசுத்தராய் ஜீவியம் செய்தார். அவர் களங்கமற்றவரும், பாவத்தைச் சகிக்கக்கூடாதவரும், பாவத்தைப் பகைத்து அதை அருவருக்கிறவருமாயிருந்தபோதிலும் அப்புண்ணியமூர்த்தி நீசரையாயினும் துன்மார்க்கரையாயினும் அற்பமாய் எண்ணாமலும் இகழாமலும், அப்படிப்பட்டவரை நேசித்து, அவர்களுடன் ஒருமித்து சகவாசம் செய்து, அவர்களைச் சீர்ப்படுத்திக் குணப்படுத்தவேண்டும் என்று பிரயாசப்பட்டார். அவர் எளிய நிலைமையில் பிறந்தபோதிலும், அதினால் அம்மகிபனுக்குக் குறைச்சல் ஒன்றுமில்லை. மாறாத மாண்புடைய அம்மகிமைச்சொரூபி அந்தஸ்திதியைத் துறவாமல் அதிலிருந்துகொண்டே தமது நிகரற்ற மகிமையை வெளிப்படுத்தினார். அப்பரமகுரு மிகவும் மேன்மையும் பெருந்தன்மையும் சிறப்புமுடையவராயினும், எவ்விஷயத்திலாயினும் சுயநயமும் தன் காரியப்பிரியமும் தற்சிநேகமுமுடையவராயிராமல், பிறருக்காகத் தம்மைத்தாமே வெறுத்து பிறரை அரவணைத்து,



ஆதரித்து, ஆற்றித் தேற்றும்பொருட்டு, இரவு பகலாய் ஊண் உறக்கமற்று, மெய்வருந்த வேலைசெய்து தம்முயிர்போல் மன்னுயிர்க்கிரங்கினார். அப்பரம பரிகாரி சகல ரோகங்களையும் சொஸ்தப்படுத்தவும், மாண்டோரை உயிர்ப்பிக்கவும், சக்தி சாமர்த்தியமுடையவராயிருந்தபோதிலும் தம்மேல் வரும் ஆபத்தை முன்னறிந்தும் தம் ஜீவனை காத்துக்கொள்ள சிறிதளவேனும் கருதாமல், வேண்டும் என்கிற மனதுடன் சொல்லிமுடியா வாதையடைந்து மரணத்திற்குள்ளானார். இப்படிப்பட்ட லட்சணங்களைச் சிந்திக்குமிடத்தில், இவை தேவசம்பந்தமானவையேயன்றி, மனித சம்பந்தமானவையல்ல என்று தீர்மானிக்கச் சந்தேகமில்லை. 'என் பிதாவின் கிரியைகளை நான் செய்யாதிருந்தால், நீங்கள் என்னை விசுவாசிக்க வேண்டியதில்லை; செய்தேனேயானால், நீங்கள் என்னை விசுவாசியாதிருந்தாலும், பிதா என்னிலும் நான் அவரிலும் இருக்கிறதை நீங்கள் அறிந்து விசுவாசிக்கும்படி அந்தக் கிரியைகளை விசுவாசியுங்கள்' என்று கிறிஸ்துபகவான் தமது சீஷருடன் திருவாய் மலர்ந்தருளினார் (யோவா. 10. 37, 38.). இது தவறாத நீதியும், ஆட்சேபனைக்கிடமில்லாத சத்தியமுமானதால், இதையொட்டி விசாரிக்கையில், நமக்கு சத்தியா சத்தியங்கள் புலப்படும். இந்நெறியைத் தழுவி கிறிஸ்துபகவான் சரித்திரத்தைப் பரிசோதித்தால் அவர் உண்மையாய் உலகில் அவதரித்து உதித்த திவ்ய ரட்சகர் என்றே நிச்சயிக்கவேண்டுமாகையால், நாம் அவருடைய அத்தியந்த தயாளத்தைக் கண்டு சந்தேகமனைத்தையும் அகற்றி, அவரை அண்டிக்கொள்ளவேண்டும்.

# VI. அதிகாரம்.

## இயேசுநாதர் தம்மைக்குறித்துக் கொடுத்த சாட்சி.

கிறிஸ்துபகவானின் விஷயத்தைப் பரிசோதிக்கையில், மற்றவர்கள் கொடுத்த சாட்சியை மாத்திரமல்ல, பொய்யுரையா அச்சத்திய வாசகர் தம்மைக்குறித்துப் பகர்ந்த சாட்சியையும் விசாரிப்பது உத்தமம். பிறர் நமது பகிரங்க காரியங்களைக்கொண்டு, நமது சுபாவ லட்சணங்களை நிதானித்துக் கூர்ந்துபார்த்து, நுட்பமாய்ப் பரிசோதனை செய்வதால் அறிந்துகொள்ளக் கூடியதாயினும் இருதயத்தைப் பூரணமாக அறிந்துகொள்ளக் கூடியவர் ஒருவருமில்லை. ஆதலால் ஒருவனது அந்தரங்க நிலைமையைச் செவ்வையாக அறிந்துகொள்ள ஆசிக்குங்கால், அவனுடைய வெளிப்படையான காரியங்களைக் கூடியவரையில் ஆராய்ந்து அறிந்தபிறகு அவனுடைய அபிப்பிராயங்களை ஜாக்கிரதையாக விசாரித்து அவன் சத்தியவானானால் அவனுடைய சொற்களால் அவன் இதயத்திலுள்ள காரியங்களை நிச்சயிக்கலாகும். மற்ற மனிதருடைய சங்கதியை விசாரிக்கையில், நாம் சாதாரணமாக இவ்வாறு விசாரிப்போம். திருப்புதல்வனான இயேசுநாதரின் விஷயங்களைச் செம்மையாக அறிந்துகொள்ள ஆவல்கொண்டால், இப்படிப்பட்ட விசாரணை வெகு அவசியமானதென்று விளங்கும். நாம் மேலே பார்த்தவண்ணம் இயேசுநாதர் மனிதரில் யாரும் தமக்கு ஒப்புவமையில்லாதவர் ஆதலால் நமது சாமானிய அனுபவத்திற்கு மேற்பட்ட பரப்பொருளின் சுபாவலட்சணங்களை அறிய விரும்பினால் அம்மாமறைநூலன் தம்மைக்குறித்து வெளியிடக் கருணைகொண்ட இனியமொழிகளை வெகு ஜாக்கிரதையாக விசாரித்தாலொழிய, அம்



மேலோனின் நிஜஸ்திதியைத் தெரிந்துகொள்வதற்கு இடமில்லை. இயேசுநாதருடைய திருச்சரித்திரத்தை ஆராய்ச்சி செய்யும்பட்சம், அவர் தம்மைக்குறித்துத் திருவாய்மலர்ந்தருளின சாட்சி அங்கிகரிக்கத் தக்கதேயென்பதற்குச் சந்தேகமே கிடையாது. அப்பரப்பொருளில் மோசமாவது வஞ்சனையாவது கிஞ்சித்தும் இல்லாமையால், எல்லா விஷயங்களிலும் சத்தியசொரூபமாகவே விளங்கினார். தமது தேசத்தாரின் அபிப்பிராயங்களுக்கடங்கி, அவர்கள் இஷ்டப்படி தேசத்தோடொத்து நடந்திருப்பாரேயானால், அவர் புகழும் கீர்த்தியும் அடைந்து, மகிமைதங்கிய மகா மன்னரைப்போல் தமது ஜீவகால முழுவதும் வெகு கனமும் சுகமுமாக ஜீவித்திருக்கக்கூடும். ஆனால் அம்மகோத்தமன் சத்தியமார்க்கத்தை அழிக்கக் கருதாமல், அதை நிலைநிறுத்தும்படி நோக்கங்கொண்டு தம் கருமமே கண்ணாகி, கனத்திற்குப் பதிலாய் அவமானத்திற்கும், மிக கொடிய சாவுக்கும் தம்மைத் தாம் ஆளாக்கினார். எவ்வளவு அபாயம் நேரிட்டாலும், துன்பத்தின்மேல் துன்பம் வந்தாலும், நீதிவழுவாத அச்சத்தியபரன் அணுவளவாயினும் சத்தியம் தவறவில்லை. தமக்கு விரோதமாய் நூற்றுக்கணக்கான ஆயுதபாணிகள் வந்தபோது மாளும்பொருட்டு மனப்பூர்வமாய்ப் பிணைபட்ட பரமோத்தமன் சாவைக்கண்டு வீரியங்குன்றி புகலிடம்தேடிப் பின்வாங்காமல், ஆயுதபாணிகள் மனநடுங்கி மெய்மறந்து தரையில் விழத்தக்கதாக 'நீங்கள் தேடுகிறவர் நான்தான்' என்று வெளிப்படையாய்ச் சொன்னார் (யோவா. 18. 4, 5.). மேலும் பிரதான ஆசாரியன் மகாசபையில் சபாநாயகனாய் வீற்றிருந்து விசாரணைசெய்தபோது, அவர்கள் எவ்வளவு பயமுறுத்தினாலும் சத்தியவாசகர் அணுவளவாகிலும் தமது நிஜஸ்திதியை மறைக்காமல் திறந்துகாட்டி வெளியிட்டு விளம்பரஞ்செய்தார். மேலும் சர்வலோக நியாயாதிபதியாக மேகவாகனனாய் வரும் மேலோகநாதனை யூதருடைய அதிகாரிகள் பிலாத்துவினிடம் கொண்டுபோய், பொய்ப்பிரியாது செய்தபோதிலும், திரிலோகநாதனும் சாத்தானை தம் திவ்ய சந்நிதியில் திகைப்புற்று நடுங்கச்செய்தவருமான அவ்விண்ணுலகிறைவன், அந்தத் தேசாதிபதிக்குப் பயப்படாமல், அவனுக்கு வியப்பைப் பயக்கும் தமது நிஜஸ்திதியை உள்ளது உள்ளபடி தெரிவித்தார். பிலாத்து அவ்வார்த்தைகளால் திகைப்பும் வியப்புமுற்று, செய்வது இன்னதென்று

தோன்றாமல், 'நீ ராஜனா' என்று வினவியபோது, அத்திருமகன் 'நீர் சொல்லுகிறபடி நான் ராஜாதான்; சத்தியத்தைக்குறித்து சாட்சி கொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்' என்று சாட்சி கொடுத்தார் (யோவா. 18. 36, 37.). நாம் எவ்வளவு விசாரித்தபோதிலும் இயேசுநாதர் சத்தியபரன் என்று அறிக்கையிட சந்தேகமில்லையாதலின் அவர் தம்மைக்குறித்துக் கூறியிருக்கிறவை எவைகளோ அவை அனைத்தும் சத்தியமென்று கூறச் சந்தேகமில்லை.

மேலோகர் தம்பிரானாகிய இயேசுநாதர் தம்மைக்குறித்து விரிவாகப் பேசிவந்தார். இவ்விஷயத்தில் அப்பரமகுருவுக்கும் மற்ற சமய பரிபாலன கர்த்தாக்களுக்கும் அனந்தபேதம் உண்டு. யூதருக்கு நியாயப்பிரமாணம் அமைத்தளித்த மோசே என்னும் முனிசிரேஷ்டன் தம்மைக்குறித்து ஒன்றும் சொல்லாமற்போனாலும், தேவன் நியமித்த சட்டதிட்டங்களை நுட்பமாயும் விவரமாயும் உபதேசித்தான். புத்தமகாமுனி மரணத்தறுவாயில் தமது சீஷர்கள் வெகுவாய் அழுவதைக் கண்டு 'என்னை மறந்து மார்க்கத்தைமாத்திரம் கருத்தில் வையுங்கள்' என்று அவர்களுக்குக் கட்டளை கொடுத்தார். மகமதுநபி தன் ஜனங்களுக்குப் பல சட்டங்களை நியமித்துச் சகலரும் தன் வாக்குப்படி நடக்கவேண்டுமென்று வற்புறுத்தி சொன்னபோதிலும், மனிதர் தன்னை நம்பி தன்னை ஆதாரம் செய்துகொள்ளவேண்டும் என்று ஒருக்காலும் போதித்தவரல்லர். நீதிநெறிகளையும் மதசித்தாந்த கோட்பாடுகளையும்விட கிறிஸ்துபகவான் முக்கியமாய் தம்மைக்குறித்தே மிகுதியாய் வெளிப்படுத்திக்கொண்டே வந்தார். வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோர் சகலருடைய பூஜையையும் பெறும் மூவுலகிறைவன் அதிகத் தாழ்மையுடையவரானாலும், தமது சீஷர் தம்மை எவ்வளவு கனமுடைய நாமத்தினால் அழைத்தாலும், சகல கனத்திற்கும் பாத்திரரான அக்கர்த்தன் அவர்களைக் கடிந்துகொள்ளவில்லை. 'நீங்கள் என்னைப் போதகரென்றும் ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள்; நீங்கள் சொல்வது சரியே. நான் அவர்தான்' என்று ஒரு சமயத்தில் திருவாய்மலர்ந்தருளினார் (யோவா. 13. 13.). மேலும் பேதுரு என்னும் அப்போஸ்தலன் தன் ஆண்டவரின் திவ்ய மகத்துவத்தைக் கண்டு, 'நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து'



என்று ஸ்துத்தியம்பண்ணி அறிக்கையிட்டபொழுது, தேவப்பிறவியான திரிலோகநாதன் அவ்வப்போஸ்தலனை மெச்சிக்கொண்டு, நீ தேவனுடைய அருளால் இவ்விதம் அறிந்துகொண்டாய் என்று அப்போஸ்தலர் அனைவருக்கு முன்னும் வெளிப்படையாய் விளம்பினார் (மத். 16. 17.). தமது சீஷர் சூட்டிய நாமங்களை அங்கிகரிக்கிறவராக மாத்திரமல்ல, மனிதருக்குச் சாதாரணமாகப் பொருந்தாத நாமங்களையும் அவர் தமக்குத்தாமே வைத்துக்கொண்டு வழங்கிவந்தார். தம்மைக்குறித்துப் பேசினபோது பெரும்பாலும் **மனுஷகுமாரன்** என்கிற நாமத்தைச் சூட்டிக்கொண்டார். முற்காலத்தில் தீர்க்கதரிசிகள் இந்நாமத்தை அடிக்கடி வழங்கினாலும், இயேசுநாதர் ஜன்மித்த காலத்தில் ஜனங்களெல்லாரும் அப்பேரை வரப்போகிற ரட்சகருக்குமாத்திரம் வழங்கினார்கள். இவ்வழக்கத்திற்கிசைய தாம் மனிதரைச்சேர்ந்த மனிதனே என்று சுட்டிக்காட்டும் பொருட்டு இயேசுநாதர் இப்பேரைத் தமக்குத் தரித்துக்கொண்டார். அநேக சமயங்களில் அவர் தாமே இப்பேரைப் பிரயோகித்து வழங்கினார். சில சமயங்களிலே அதைச் சொல்லாமல் விட்டு, அதைவிட உயர்ந்த நாமமான **தேவகுமாரன்** என்னும் நாமத்தைத் தமக்கு வழங்கினார். எல்லா மனிதரும், தேவபுத்திரர் என்று சொல்வதற்குச் சந்தேகமில்லையாயினும், இயேசுநாதர் இப்படிப்பட்ட வழக்கமான அர்த்தத்தில் தாம் தேவகுமாரன் என்று சொல்லிக்கொள்ளவில்லை. அப்பரோபகாரி தமது சீஷரைத் தமது பிராணசிநேகிதராய் பாவித்தபோதிலும், தேவனுடைய நாமத்தை எடுத்துப் பேசியபோது, உங்கள் பிதாவென்றும் என் பிதாவென்றும் வித்தியாசப்படுத்திப் பேசினாரே ஒழிய நமது பிதாவென்று ஒருக்காலும் சொல்லாததினால் அவருக்கும் தேவனுக்கும் இணைபிரியாத ஐக்கியம் இருப்பதாய்ப் புலப்படுகிறது. அவர் சாமானிய அர்த்தத்தில் வழங்கினால், கேட்டோர் சிறிதளவாயினும் சந்தேகியாமல் ஒப்புக்கொள்ளுவார்கள். ஆயினும் கிறிஸ்துபகவான் அந்நாமத்தைத் தரித்து வழங்கியபோது, அவருடைய வார்த்தைகளைக் கேட்டவர்கள் கொஞ்சமாகிலும் அவற்றை ஒப்புக்கொள்ளாமல் அவர் தம்மைத் தேவனுடன் சமானமாக்கிக்கொண்டதாய்க் கருதி, தேவதூஷணம் சொன்னாரென்று நிந்தித்தார்கள் (யோவா. 10. 33.). அவர்கள் வாஸ்தவத்தில் தெரிந்துகொள்ளாதவர்களானால்

ஆண்டவர் அவர்களுடைய தப்பான அபிப்பிராயத்தைக் கண்டு, ஒரு வார்த்தையிலேயே தமது உண்மையான அபிப்பிராயத்தை வெளிப்படுத்தியிருப்பார். ஆனால் சர்வஞானியான ரட்சகர் மௌனமாயிருந்ததினால் அவர்கள் கொண்ட கருத்துச் சரியானதே என்று விளங்குகின்றது. இதுவுமன்றி யூதருடைய அதிகாரிகள் அவரைப் பிடித்து விசாரணைசெய்தபோது, இத்தேவதூஷணைக்காகவே ஜீவாதிபதிக்கு மரணசிட்சை விதிக்கவேண்டுமென்று தீர்மானித்தார்கள் (மத். 26. 60–66.). அப்பரன்மகன் மற்ற மனிதரைப்போல தேவகுமாரனாயிருக்கும்பட்சத்தில் அச்சங்கதியை விளக்கிக்காட்டி தம்மேல்வந்த நிந்தையைச் சுலுவாக நீக்கிக்கொள்வார். பிராணபாயம் நேரிட்டாலும், அவர் இப்படிப்பட்ட சாதாரணமான அர்த்தத்தை ஏற்றுக்கொள்ளாமல் யூதர் எண்ணியபடியே அப்பேரைத் தரித்ததினால் அவர் தம்மைத் தேவனுடன் சமானமாக்கிக்கொண்டாரென்று தீர்மானித்து நம்புவது அவசியம்.

கிறிஸ்துபகவான் இம்மேன்மையான நாமங்களைத் தரித்துக்கொண்டதுமாத்திரமேயன்றி, அவற்றிற்குத் தக்கபடி பேசி நடந்துகொண்டும் வந்தார். தேவனைப்பற்றிப் பேசியபோது அப்பரமகுரு மற்ற மனிதரைப்போல் ஒருக்காலும் பேசவில்லை. நாகரீகமில்லாத ஜனங்கள் அவர் உபதேசத்தைக் கேட்டு, பரமகுரு வேதபாரகர் பரிசேயர்போல் அல்ல, அதிகாரமுடையவராகப் போதிக்கிறார் என்று ஆச்சரியப்பட்டார்கள் (மத். 7. 29.). அவர்கள் உன்னதகுருவின் உபதேச விசேஷங்களைச் செவ்வையாகக் கிரகித்து இவ்வண்ணம் சொன்னார்கள். நாம் பூர்வகாலத்துத் தீர்க்கதரிசிகளின் திவ்ய சுபாவ லட்சணங்களைப் பலவாறாய் ஆராயும்போது காண்கிறபடி அவர்களை தேவசம்பந்தமான விஷயங்கள் தங்கள் புத்திக்கு மேலானவை என்றுணர்ந்து சந்தேகத்துடனே போதித்துவந்தார்கள். புத்தமாமுனி சந்தேக சாகரத்தில் மூழ்கி, கல்விமான்கள் பின்பற்றின கோட்பாடுகளனைத்தையும் நிராகரித்து, தெய்வத்தைக்குறித்துப் பரிஷ்காரமாய் உபதேசிக்க முடியாமல், பிரபஞ்சத்தில் நீதியண்டை வழிநடத்துகிற ஏதோ ஒன்றிருக்கிறதென்றாலும், அது எப்படிப்பட்டதென்று அறிந்துகொள்வது கூடாமை என்று போதித்தார். பரமகுருவான இயேசுநாதர் போதித்தபோது, தமக்கு இப்படித் தோன்றுகிறதென்றாகிலும் அப்-



படித் தோன்றுகிறதென்றாகிலும் ஒருக்காலும் சொல்லாமல், எல்லா விஷயங்களிலும் நிச்சயமாகவும் பரிஷ்காரமாகவும் திருமறையோதி உபதேசித்துவந்தார். ‘வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை’ என்பதாக இயேசு தமது சீஷருடன் ஒருசமயம் திருவுளம்பற்றினார் (மாற். 13. 31.). அப்பரமகுரு உபதேசத்தை ஆராய்ச்சி செய்கையில், திவ்ய அம்சமான அவர் அரும்பிரயாசத்துடன் தெய்வ விஷயங்களை வேதநூல் மூலமாய் விசாரணைசெய்து கற்றுக்கொண்டாரென்று காணப்படாமல், தேவனை அனுபவத்தால் அறிந்ததாய்ப் புலப்படுகிறது. தம்மைத்தவிர வேறு யாரும் தேவனை அறியவில்லை என்று அப்பகலோன் பரிஷ்காரமாய்க் கூறினார். ‘சகலமும் என் பிதாவினால் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது; பிதாதவிர வேறொருவனும் குமாரனை அறியான்; குமாரனும், குமாரன் எவனுக்கு அவரை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறானோ அவனும் தவிர, வேறொருவனும் பிதாவை அறியான்’ என்று அந்த திவ்யபுருஷன் தமது சீஷருக்குத் திட்டமாய்த் தெரிவித்தார் (மத். 11. 27.). மேலும் தாம் தேவனைப் பூரணமாய் அறிந்தவர் என்று முழு நிச்சயங்கொண்டு ‘பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறதுபோலவும், நான் என் ஆடுகளை அறிந்திருக்கிறேன்’ என்று அப்புருஷோத்தமன் வேறொரு சந்தர்ப்பத்தில் கூறினார் (யோவா. 10. 14, 15.). தேவனைப் பரிபூரணமாய் அறிந்திருக்கிறவராக மாத்திரமல்ல, தேவனுடைய சுபாவ ரகசியங்களை வெளிப்படுத்துகிறதற்கு அதிகாரம் உள்ளவராகவும் இருப்பதாய் அவர் வழக்கமாய் உபதேசித்துக்கொண்டுவந்தார். ‘நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல், என்னை அனுப்பிய பிதாவினுடையதாய் இருக்கிறது’ என்றும் (யோவா. 14. 24.), ‘நான் என் சுயமாய் ஒன்றும் செய்யாமல், என் பிதா எனக்குப் போதித்தபடியே இவைகளைச் சொன்னேன்’ என்றும் (யோவா. 8. 28.), ‘நான் அவரிடத்தில் கேட்டவைகளையே உலகத்திற்குச் சொல்லுகிறேன்’ என்றும் (யோவா. 8. 26.), ‘நாங்கள் அறிந்திருக்கிறதைச் சொல்லி நாங்கள் கண்டதைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறோம்’ என்றும் (யோவா. 3. 11.), அப்பரமகுரு திரும்பத் திரும்பத் தமது அருமைச் சீஷருக்குத் திருவாய் மலர்ந்தருளினார்.

தமது உபதேசத்தினால் மாத்திரமல்ல, தமது கிரியையினாலும் தாம் தேவனுடைய விஷயங்களை வெளிப்படுத்துகிறவர் என்று அநேக சமயங்களில் தாராளமாகக்கூறி உரைத்தார். 'பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி வேறொன்றையும் தாமாய்ச் செய்கிறதில்லை' என்று ஒருசமயம் மாற்றார் எதிரில் மறைக்காமல் மொழிந்தார் (யோவா. 5. 19.). மேலும் அவர்கள் தம்மை நிந்திக்கையில் 'என் பிதா இதுவரையில் கிரியை செய்துவருகிறார்; நானும் கிரியை செய்துவருகிறேன்' என்று அவர்களுக்கு பதில்மொழி கூறினார் (யோவா. 5. 17.). தேவன் தம்முடன் பிரத்தியட்சமாக இருக்கிறார் என்பது இயேசுவுக்குத் தெளிவாய்த் தெரிந்தவிஷயமானதால் 'நானும் பிதாவும் ஒன்றாய் இருக்கிறோம்' என்று கூறியுரைக்க அவர்கள் சந்தேகிக்கவில்லை (யோவா. 10. 30: 14. 11.). மேலும் மனிதரெல்லாரும் சாதாரணமாக விரும்புகிறபடி, அவருடைய சீஷரில் ஒருவன் தேவனைப் பார்க்கவேண்டுமென்று விரும்பி 'ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும்' என்று கேட்டபோது, கிறிஸ்து அவர்களை நோக்கி 'என்னைக் கண்டவன் பிதாவை கண்டான். அப்படியிருக்க பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படிக் கேட்கிறாய்' என்று விடையருளினார் (யோவா. 14. 8, 9.). இவ்வார்த்தைகளை ஆழ்ந்து சீர்தூக்கிப்பார்த்துச் செவ்வையாகக் கிரகித்தால், இயேசுநாதர் தம்மைக்குறித்து தாம் எப்படிப்பட்டவரென்று எண்ணினார் என்பது நமக்கு விளங்குகின்றது. அவர் எவ்வளவேனும் சந்தேகிக்காமல் தமது அனுபவத்தைக்கொண்டு தாம் தேவசொரூபியாயிருந்து தமது உபதேசத்தினாலும் தமது கிரியையினாலும் தமது திவ்ய சுபாவலட்சணங்களைத் தகுந்தபடி வெளிப்படுத்துகிறதற்கு அதிகாரமுடையவர் என்பதை நிச்சயித்து அவ்வபிப்பிராயத்தை அனுசரித்து அதின்படி நடந்துகொண்டார் என்பதற்குச் சந்தேகமில்லை.

கிறிஸ்துபகவான் எவ்வளவேனும் மேன்மை பாராட்டுகிறவரல்லவெனினும், எம்பெருமான் எப்போதும் தமது மகத்துவத்தை அறிந்தவராய்ப் பிரபஞ்சத்தை ஆண்டு பரிபாலிக்கிறவர்போல் நடந்துகொண்டார். தேவன் நியமித்தபடியே, அத்திவ்ய பெருமான் எல்லாருக்குங் கட்டளை கொடுத்துவந்தார். பூர்வகாலத்தார் நியமித்த நீதிநெறிகளுக்கும் அனுஷ்டான கிரியைகளுக்கும் முடிவுண்டாக்கி, தமது



சுயேச்சைப்படி புதிய நீதிநெறிமுறைகளையும் அனுஷ்டான முறைகளையும் நியமித்தார். இவ்வண்ணம் விதித்தபோது பரமகுரு பலவாறாய் வாதித்துத் தர்க்கித்து மனிதருக்கு மனநோவுபண்ணக் கருதாமலும் அவர்கள் நெஞ்சைப் புண்ணாக்க எத்தனிக்காமலும் 'பூர்வத்தாருக்குச் சொல்லப்பட்டது என்று நீங்கள் கேட்டிருக்கிறீர்கள்; ஆனாலும் நான் உங்களுக்கு இப்படிச் சொல்லுகிறேன்' என்று ஒரு மொழியில் எல்லாவற்றையும் சுருக்கி ஸ்திரப்படுத்தினார். இதற்காக மத். 5. 21, 30, 31, 33, 38. காண்க. தமது வாக்கே பிரதானமானதென்றெண்ணி 'என் கட்டளைகளைக் கைக்கொண்டு நடவுங்கள்' என்று தமது சீஷருடன் பலமுறை திருவாய் மலர்ந்தருளினார் (யோவா. 14. 15, 21, 23: 15. 10, 14.). மேலும் தமது சீஷர்மாத்திரமேதவிர, சகல மனிதரும் தமது கட்டளைகளுக்குக் கீழடங்கவேண்டும் என்று அவர் நிர்ணயித்து விதித்ததாக அவர் வாக்கினால் விளங்கும். அப்பரம புருஷன் மண்ணுலகத்தை விட்டுப் பிரிந்து விண்ணுலகுக்கு எழுந்தருளும் சமயம், தமது சீஷரை நோக்கி, 'வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள்' என்று கட்டளையிட்டார் (மத். 28. 18-20.) கிறிஸ்துபகவான் மனிதர்மேல் கொண்ட அதிகாரம் அளவிடப்படாதது. அவ்விண்ணிறைவன் அப்பரமகுரு நியமித்து விதித்தாற்போல், எவ்வரசனாகிலும் ஒருக்காலும் நியமிக்கவும் விதிக்கவுமில்லை. சிலர் தமது சீஷரை முற்றிலும் பூரணமாகக் கீழ்ப்படுத்திக்கொள்ளவேண்டும் என்று விரும்பி, தம்மை அண்டினவர்களுக்கு வெகு கண்டிப்பான நிபந்தனைகள் செய்து, அவர்கள் செய்யும் ஒவ்வொரு அற்பசொற்ப காரியங்களில்கூட அவர்களை ஒடுக்கி மடக்கி இடுக்கணுக்குள்ளாக்கி இருக்கிறார்கள். ஆனால் இப்பரமகுரு மனச்சோர்பு தளர்ச்சி வெறுப்பு என்பவற்றைப் பயக்கும் ஏற்பாடுகளையும் நியம நிஷ்டைகளையும் விதியாவிடினும், தமது சீஷர் தம்மில் பூரண குருபக்தியுடையவர்களாக வேண்டும் என்று கண்டிப்பாய்க் கட்டளையிட்டபடியால் அக்கட

வுனுக்குச் சரீராத்துமங்களைச் சம்பூரணமாய் ஒப்புக்கொடுத்தாலன்றி அவருடைய கட்டளைகளை நிறைவேற்ற முடியாது. நாம் நமது பெற்றோரில் பயபக்தியுடையவர்களாய், அவர்களை நேசித்து சவரட்சணை செய்து ஆதரிக்கவேண்டும் என்று அவர் கட்டளை கொடுத்தாலும், அந்நீதியைக் கைக்கொள்வதைவிட, தம்மை நேசித்து சேவிக்கிறது இன்றியமையாத அவசியமென்றெண்ணி 'தகப்பனையாகிலும் தாயையாகிலும் என்னைவிட அதிகமாக நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரனல்ல' என்று விதித்தார் (மத். 10. 37.). தமது சீஷர் தங்கள் சுயேச்சைகளை முற்றிலும் துறந்து, தம்பொருட்டுத் தனத்தையும் கனத்தையும், தாம் மதிக்கும் யாவையும், அற்பமாய் எண்ணி, சகல விஷயங்களிலும் தமது சித்தப்படி நடக்கவேண்டுமென்று பரமகுரு விரும்பினார். இதைப்பற்றி 'உங்களில் எவனாகிலும் தனக்குண்டானவைகளை எல்லாம் வெறுத்துவிடாவிட்டால், அவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்' என்று அவர் தமது சீஷருக்குரைத்த வாக்குத் திருஷ்டாந்தமானது (லூக். 14. 33.). அந்தச் சத்தியவாசகருடைய வாக்குகளைப் பரிசோதிக்குங்கால், ஒவ்வொருவனும் தன் ஜீவனையும் ஒருபொருட்டாயெண்ணாமல் வெறுத்து அவசியமானபட்சத்தில் தமதாண்டவர் பொருட்டு ஒப்புக்கொடுக்கவேண்டும் என்று விளங்குகிறது (லூக். 14. 26.). இவ்வளவதிகாரம் படைத்தவராய் இவ்வகைக் கண்டிப்பான கட்டளைகளைக் கொடுத்தவரை எப்படிப்பட்டவரென்று நினைக்கவேண்டும். நமது மனோவாக்குக் கிரியைகள்மேல் இவ்வளவு அதிகாரம் உடையவர் நம்மைப்போன்ற மனிதனாகமாத்திரம் இருக்கும்பட்சத்தில் நாம் அவர் வாக்கை நிராகரித்து, அற்பமாய் எண்ணி அசட்டைசெய்து, நாம்தேவனுக்கேயன்றி மற்றொருவருக்கும் எங்களைக் கீழ்ப்படுத்துவது தர்மமல்லவென்று நியாயமாகவே சொல்லுவோம். மற்ற மனிதர் எவ்வளவு உயர்ந்தோரும் பெரியோருமானபோதிலும், இவ்வண்ணம் பேசியபட்சத்தில் அவர்கள் முற்றிலும் அளவுகடந்தோர் என்றெண்ணுவோம். ஆனாலும் கிறிஸ்துபகவான் திருச்சரிதையைச் சீர்தூக்கிப்பார்க்கில் இச்சிறப்பும் மகிமையும் தங்கிய மொழிகள் பூரணமாக அப்பரமராயருக்குமட்டே பொருந்தும் என்று நிச்சயிக்காதிருக்க இடமில்லை.

கிறிஸ்துபகவான் திவ்ய அதிகாரம் பூண்டு, மனுக்குலத்துக்குக் கண்டிப்பான கட்டளை கொடுப்பது மாத்திரமேயன்றி, அவர் தமது



அதிகாரத்தினால் எல்லா மனிதரையும் நியாயம் விசாரித்து, அவரவர் கிரியைகளுக்கேற்றபடி தீர்ப்பிடுகிறவர் என்றும் பரிஷ்காரமாய்ப் பிரசித்தம்பண்ணினார். இதைப்பற்றி 'பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்பு செய்யாமல், நியாயத்தீர்ப்பு செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்' என்று (யோவா. 5. 22.), சர்வலோக நியாயாதிபதி ஒருசமயம் அருளிச்செய்தார். மனிதகுமாரனாகிய தாம் அத்தியந்த மகிமை தரித்து, தேவதூதர் சமேதராய், மகிமைமயமான தமது சிம்மாசனத்தின்மேல் வீற்றிருந்து மனிதஜாதியைத் தம்முன் நிறுத்தி மேய்ப்பன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்குமாப்போல் சன்மார்க்கரையுந் துன்மார்க்கரையும் வேறுவேறாகப் பிரித்துச் சன்மார்க்கருக்கு மோட்சபதவியைத் தானம்பண்ணி, துன்மார்க்கருக்கு நாசதண்டனை விதிப்பதாய் வேறோர் தருணத்தில் வெகு விவரமாய் விரித்துரைத்தார். (மத். 25. 31–46.)

இயேசு இறைவன் பாவங்களை மன்னிக்கும் அதிகாரத்தையும் தரித்திருந்தார். ஒருதினம் பற்பல பாவங்களை நடப்பித்து அக்கிரமமான பாவஜீவியம் செய்துவந்த ஓர் துன்மார்க்க ஸ்திரீ நெஞ்சுபுண்ணாக மனவேதனையடைந்து மாசணுகாத இயேசுவின் பாதத்தில் முகங்குப்புற விழுந்து, கண்ணீர் சொரிகையில், நொறுங்குண்ட இருதயத்தின் பெருமூச்சைப் புறக்கணியாத அன்பின்மூர்த்தி, கிருபாநதி அவன்மேல் பாயும்வண்ணம் அருள்கூர்ந்து 'உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன' என்று பாவவிமோசனம் செய்து அவளை ஆசீர்வதித்தார். இத்திருவாக்கைக் கேட்டவர்கள் வெகு வியப்புற்று 'பாவங்களை மன்னிக்கும் இவர் யார்' என்று தம்முள்ளத்தில் தப்பெண்ணங்கொண்டார்கள் (லூக். 7. 48, 49.). பரமகுரு திருவுபதேசம் செய்த வேறொரு சமயத்தில் பாயும் படுக்கையுமாய்க்கிடந்த திமிர்வாதரோகியொருவனை நாலுபேர் கட்டிலின்மேல் சுமந்து சுகமளிக்கும் உன்னத மூலிகையாகிய கிறிஸ்து என்னும் பரிகாரியிடம் கொண்டுவந்தார்கள். உள்ளத்தின் ஆழத்தை இமைப்பொழுதில் அளவிட்டறியும் உன்னதபரப்பொருள் அவர்கள் விசுவாசத்தைக் கண்டு களிப்புற்று, 'மகனே, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன' என்று திருவுளம் மலர்ந்து கூறினார். அங்குள்ள சாஸ்திரிகள் முதலானவர்கள் 'இவர் என்

இப்படிச்சொல்லி தேவதூஷணம் பேசுகிறார், தேவனொருவரே தவிர பாவங்களை மன்னிக்கிறதற்கு அதிகாரமுடையவன் யாவன்' என்று தங்கள் உள்ளத்தில் அத்தூயருக்கு விரோதமாய் முறுமுறுத்து மனவெறுப்படைந்தார்கள். இருதயத்தின் உள்ளிந்திரியத்தையும் அறிந்த பரமஞானி அந்த அந்தகருடைய அகத்திருளை நொடிப்பொழுதில் அளவிட்டு திவ்யஞான திருச்சுடர் அவரது வல்லிருள்மீது வீசி, ஆணவமாகிய தீக்குணங்கள் மங்கியோடும்படி தமது திவ்ய மகிமையைக் காட்சியளிக்கத் திருவுளங்கொண்டு, தீயர் தம்முள்ளத்தில் தூயனைத் துணிந்து தூஷித்தது தமது திருஷ்டிக்குப் புலப்பட்டதென்று குறிப்பிட்டு, அவர்கள் மனச்செருக்கழிய, அவர் வாய்மதம் அடங்க, தாம் இருதயக் கண்ணன் என்னுந் தமது திவ்யலட்சணத்தை உலகோர்க்கு வெளிப்படுத்த 'நீங்கள் ஏன் இப்படி யோசிக்கிறீர்கள்' என்று கேட்ட கேள்வியினால் சர்வ ஞானி என்னும் தமது நிஜஸ்வரூபத்தில் உலகத்தின் கண் விளங்கினார். தூயனுக்கு விரோதமாய்த் துணிவுகொண்ட தீயரை நோக்கி, 'உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன' என்று சொல்வதெளிதா? 'நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட' என்று சொல்வதெளிதா? 'ஆகிலும் பூமியில் பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் இருக்கிறதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும்' என்று சொல்லித் திமிர்வாதக்காரன் பக்கம் திரும்பி அவனை நோக்கி 'நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு உன் வீட்டுக்குப் போ' என்று கொடிய வேதனைக்குள்ளானவனுக்கு மறுபிறப்பளித்தார். 'வெளிச்சம் உண்டாகக்கடவது' என்றவுடனே வெளிச்சம் உண்டானது. 'இரையாதே அமைதலாயிரு' என்றவுடனே ஆழ்கடல் அடங்கினது. 'அவனை விட்டுப் புறப்பட்டுப்போ' என்று மொழிந்தவுடனே பிசாசு புறப்பட்டது. 'வாலிபனே, சிறுபெண்ணே, லாசருவே, எழுந்திரு, வெளியே வா' என்று ஜீவாதிபதி செப்பியவுடனே மாண்டோர் ஜீவனுடையோராய் மகிபனுக்கெதிர் நின்றார். 'படுக்கையை எடுத்துக்கொண்டு நட' என்றவுடனே திமிர்வாதரோகி எழுந்து கிறிஸ்துபகவானின் மகிமை விளங்க, பரப்பொருள் அடிமைரூபத்தில் எழுந்தருளியிருக்கிறார் என்று கண்டோர் உணர, அகத்தறிவை அளவிடும் அளவற்ற ஞானி இவரே என்று சூழ்ந்தோர் காண, வாக்கால் பிணிதீர்க்கும் விண்ணமிர்தம் இவரே என்று சுற்றுப்பட்டவர்களுக்



குத் தோன்றி, திரள் ஜனம் ஈஸ்வரனைத் துதிக்க, திமிர்வாதரோகி உள்ளங்களித்து, தன் பரிகாரியின் நிகரற்ற திவ்ய வல்லமையைத் தெருதோறும் தெருதோறும் விளம்பரம்பண்ணி, நாட்டார் நகரத்தார் வீட்டார் அனைவரும் கண்குளிரக்கண்டு மனம்பூரிக்க, அப்பரோபகாரியின் மகிமையை எத்திசையினும் விஸ்தரிக்கும்படி அத்திமிர்வாதரோகி அவ்விடத்தினின்று பிரஸ்தானமானான் (மத். 9. 1–8. மாற். 2. 1–12. லூக். 5. 18–26.). இவ்வற்புதத்தைக்குறித்து ஆராய்கையில், இயேசுநாதர் அவர்களுடைய எண்ணங்களை உள்ளம் ஊடுருவ அறிந்து, தாம் உண்மையாகவே தேவனென்று காண்பித்தார் என்பது வெளிச்சமாகிறது. அவர் தேவனாயிராதபட்சத்தில் தேவாதிகாரத்தை அநியாயமாய்ச் சொந்தமாக்கிக்கொண்டாரென்று கூச்சமற சொல்வதற்கு ஐயமொன்றுமில்லை.

இயேசுபகவான் ஒப்புயர்வற்ற தமது மகிமையைக்குறித்துப் பகிரங்கமாகப் போதித்துவந்தார். சாஸ்திரிகளில் அநேகர் பரமகுருவின் உபதேசத்தைப் பரிசோதிக்க வந்தபோது, அவர் தமது விஷயத்தைக்குறித்து, தாம் முற்கால முடிமன்னரையும் தீர்க்கதரிசிகளையும் விட உயர்ந்தவரென்று சிறிதும் பயமின்றி வெளியிட்டார் (மத். 12. 38–42.). பூர்வகாலத்தோர் தமது வருகைக்காக எதிர்நோக்கியிருந்தார்களென்றும் (யோவா. 8. 56–58.), அவர்கள் தம்மைக்குறித்து எழுதினார்களென்றும் (யோவா. 5. 46.), அவர்கள் இயற்றிய வேதாகமங்கள் யாவும் தம்மைக்குறித்துச் சாட்சியிடுகின்றன என்றும் (யோவா. 5. 39.), திண்ணமாய் மொழிந்தார். மேலும் அத்தேசத்தாருடைய எதிர்நோக்கத்திற் கிசைவாக பூமியின் குடிகள் தலைமுறை தலைமுறையாக வாஞ்சித்த ரட்சகர் தாமே என்று அவர் தாராளமாகத் தெரிவித்தார் (யோவா. 4. 25, 26.). மகிமையினுண்டவர் மனிதனாய் ஜென்மித்த விஷயம் பொதுவாய் ஜனங்களுக்குத் தெரிந்த வர்த்தமானமானாலும், அது சகலருக்குந் தெரியவேண்டியதென்று அறிந்து, முற்பிதாக்கள் காலத்திற்கு முன்னாகவே தாம் இருந்ததாக அந்த நித்திய தேவன் தமது நிஜஸ்திதியைக்குறித்து நிலைவரமாய்க் கூறினார் (யோவா. 8. 58.). முத்திமார்க்கத்தை வெளிப்படுத்தி உபதேசிக்கையில் பரம பாதையான தம்மைக்குறித்தே பெரும்பாலும் விரித்துரைத்தார் 'நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்; என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே

நடவாமல், ஜீவ ஒளியை அடைந்திருப்பான்' என்று அப்பி[illegible]ஞ்சோதி திருவாய்மலர்ந்து கூறினார் (யோவா. 8. 12.). அல்லாமலும் சகல ஜனங்களும் வெகுகரிசனையும் ஆவலும் உடையவர்களாய்த் தம்மண்டை வருவதை அவர் திவ்யநேத்திரங்கண்டு 'ஜீவ அப்பம் நானே, என்னிடம் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான். என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்' என்று ஆவி விரும்பும் யாவற்றையும் அளிக்கும் கற்பகநிதியான அற்புதவஸ்து மனுமக்களுக்கு மறைவான பொருளை மாட்சிமையாய் வெளியிட்டார் (யோவா. 6. 35.). இதுவுமன்றி தமது தொண்டர் பரலோகத்திற்கு வழிநடத்தும் பிரமபாதையைப்பற்றிச் சந்தேகித்து வினவியபோது 'நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்' என்று உலகோர் அறியாத புதைபொருளை திரிலோகநாதர் தமது தொண்டருக்கு உபதேசிக்கையில், மதசித்தாந்த விஷயங்களையும் மதாசார விஷயங்களையும் அவ்வளவு பரிஷ்காரமாக போதியாவிடினும் அனைவரும் தம்மையே நம்பித் தம்மையே ஆதாரம் செய்துகொள்ளவேண்டும் என்னும் முத்திக்கு வித்தான மூலபாடத்தை முன்னவன் கூறினார். மனுஜாதி எக்காலத்திலும் தரிசிக்க முடியா அரூபியான மகாதேவன் நரவிழிகாண மனுவேடம் பூண்டு மாநிலத்தில் உதித்து கண்காணாததும் காது கேட்டறியாததும் நருள்ளத்தில் தோன்றாததுமான வாசகங்களைக் கூறியது எவ்வளவு மாண்புக்குரியவை. 'வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே, நீங்களெல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்' என்று பாவத்தால் கட்டுண்ட யாவரையும் தம்மிடம் அழைத்தார் (மத். 11. 28.). மேலும் 'நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவன் எவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்' என்று திருவுளம்பற்றி மரணபயத்தைத் தீர்த்து தம்மடைக்கலமானோர்க்கு உறுதிமொழி யுரைத்தார். (யோவா. 11. 25, 26.)

கிறிஸ்துபகவான் தமது மரணத்தைக்குறித்து விளம்பிய திருமொழிகள் வியப்புக்குரியவை. திரிகால சம்பவங்களை முன்னறியும் ஞானக்களஞ்சியமான அவர் ஆதிமுதல் சடுதி மரணத்திற்கு எதிர்நோக்கிக்கொண்டிருந்தார். தமது மரணத்தால்மாத்திரம் தம் திருப்பணி



நிறைவேறுமேயன்றி மற்றப்படி அது ஒருக்காலும் முற்றுப்பெறாதென்று நித்தியவாசகன் இரண்டு மூன்றுமுறை தமது தொண்டருக்குக் கூறினார் (யோவா. 3. 14, 15; 12. 23, 24.). சற்குருவின் சீஷர் மனந்தடுமாறி வேதனையால் நெஞ்சம் புண்ணாகி மனமுடைந்து அவமான மரணம் தம்மருங்குருவுக்கொருக்காலுந் தகாதென்று பிரார்த்திக்கையில், சகலமுமறிந்த சர்வஞானியான அச்சற்குரு அவர்களை அதட்டிக் கண்டித்து அவ்வகைப்பாடனுபவிப்பது இன்றியமையாத அவசியமென்று தம் சீஷர்களுக்குப் புத்தி பயக்கும்படி உணர்த்துவித்தார் (மாற். 10. 32, 34.). அல்லாமலும் தாம் அக்காரணம்பற்றியே அவதரித்து வந்ததாகவும் வெளிப்படையாய் விளம்பினார் (யோவா. 12. 27.). தமக்கு முன்னிருக்கும் மரணம் வெகு அவமானமுடையதாயினும் பெருமைதங்கிய அப்பேரானந்தமூர்த்தி அணுவளவும் சந்தேகிக்காமல் அம்மரணத்தினாலேயே தமக்கு மகிமை விளையப்போகிறதென்று தீர்மானமாய் திருவுளம்பற்றினார் (யோவா. 13. 31.). மேலும் தாம் செய்த சகல காரியங்களிலும் தமது மரணத்தியாகமே அதிமுக்கியமானதென்று உணர்ந்து தம்மடியார் அதை எப்போதும் ஞாபகம் பண்ணவேண்டுமென்று அத்திவ்ய புருஷன் திருவாய் மலர்ந்தருளினார். இது வியப்புக்குரிய விஷயம். ஒருவன் நல்லுபதேசஞ் செய்து சகல ஜனங்களையும் சத்தியவழியில் திரட்டவேண்டுமென்று, கருமமே கண்ணாய், தன்னால் இயன்றமட்டில் போராடுகையில், அவனுபதேசங் கேட்போர், அதைச் சிறிதேனும் அங்கிகரிக்காமல் இகழ்ந்து அவனைக் கொலைசெய்தால், அவன் தன் நோக்கத்தை நிறைவேற்றமாளாமல் முற்றிலும் தோல்வியடைந்தானென்று சொல்லவேண்டுமல்லவா? அப்படிப்பட்டவனுக்குச் சீஷரிருந்தால், அவர்கள் அவனுடைய சத்தியோபதேசத்தை ஞாபகம் பண்ணுவார்களேயன்றி, அவனுக்கு நேரிட்ட அவமானத்தை மதிப்பாய் எண்ணார்கள். கிறிஸ்துநாதருடைய அடியார் சிறிதுகாலம் இவ்வெண்ணங் கொண்டபோதிலும், சிறியோர் செய்த பெரும்பிழையைச் சற்குருநாதர் திருத்திச் சீராக்கி, அவர்கள் தமது மரணப்பாடுகளை நித்தியமும் ஞாபகம்பண்ணத் திட்டமாய் சட்டம் விதித்தார். அவர்கள் அம்மரணத்தை ஒருக்காலும் மறவாதபடி, **கர்த்தருடைய பரிசுத்த இராப்போஜனம்** என்னும் ஏற்பாட்டை நியமித்து தம்மை யண்டுவோர் அனைவரும் அத்திவ்ய

முறையை உலக முடிவுவரையில் கைக்கொள்ள வேண்டுமென்று வெளியரங்கமாகக் கட்டளை விதித்தார் (மத். 26. 29. மாற். 14. 22–25. லூக். 22. 19, 20. 1 கொரி. 11. 23–25.). அந்நியமத்தை அனுசரிக்கிறவர்கள் சிலுவையில் அறையுண்ட அத்திவ்ய வஸ்துவின் திருமேனியைக் குறிப்பிடும் அப்பத்தைப் புசித்து, சிந்தப்பட்ட திருவுதிரத்தைக் குறிப்பிடும் திராட்சரசத்தைப் பானம்பண்ணி, பிரஜாபதியான ரட்சண்யமூர்த்தியடைந்த மரணப்பாடுகளை ஞாபகம்பண்ணுகிறார்கள்.

இயேசுநாதர் தமது மரணத்தின் அருத்தத்தை விளக்கிக் காட்டியிருக்கிறார். நாம் மேலே பார்த்தவண்ணம் பரன் மகன் தமது ஜீவனைக் கைமாறின்றி இலவசமாய்ப் பிராணத்தியாகம் பண்ணினாரேயன்றி அதைக் காப்பாற்றிக்கொள்ளக் கூடாமையினால் மாண்டுபோனாரென்று கூறுவது பொருந்தாது. சர்வஜீவ சிருஷ்டிகர்த்தாவும் ஜீவகாருண்யருமான அவர் தமது ஜீவனைத் தத்தம்பண்ணின காரணம் யாதென்று விசாரிக்குமிடத்தில், 'அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்க மனிதகுமாரன் வந்தார்' என்று விண்ணின் வேந்தன் மானிடவேடத்தில் மரித்த நோக்கத்தை வெளிப்படுத்தினார் (மத். 20. 28.). மேலும் கர்த்தருடைய பரிசுத்த இராப்போஜனம் என்னும் நியமத்தை ஏற்படுத்திய போது தமது திருமேனி நரருக்காகக் கொடுக்கப்பட்டதென்றும் தமது திருவுதிரம் அவர்களுக்காகச் சிந்தப்பட்டிருக்கிறதென்றும் தமதடியாருக்கு விவரமாக வெளியிட்டார். தம்முடைய திவ்ய திருமரணப்பாட்டின் மாட்சிமையால் மனுக்குலம் அனைத்தையும் தம்மிடம் இழுத்துக்கொண்டு எத்திசையிலும் தமது ராஜ்யத்தைப் பரவச்செய்யும்பொருட்டு அம்மகிமையின் ஆண்டவர் மரணத்திற்குள்ளானார் (யோவா. 12. 32.). மரணாவஸ்தையில் இவ்வகை எண்ணம் சகஜமாக யாருக்காகிலும் உண்டாகுமா? ஒருவன் எளிய நிலைமையில் பிறந்து, தன் வாழ்நாளெல்லாம் வறுமையுடையவனாய் ஜீவித்து, சற்போதனையை சர்வதேசத்திலும் போதிக்க ஏற்பட்டுப் பெரியோரை மனம் நோகப்பண்ணக் கருதாமல், அறிவீனரான சிலரைமாத்திரம் தன் சிஷராக்கி, யௌவனத்தில் அதிகாரிகளால் இகழப்பட்டு, அவர்கள் திருஷ்டியில் குற்றவாளியாகத் தீர்க்கப்பட்டு, கொலைபாத



கன்போல் மரணதண்டனையடைய நேரிட்டால், அவன் எவ்வளவேனும் சந்தேகிக்காமல் தான் மாளுவது அவசியமென்றும், அதினால் மனுஷர்கள் சீரடைந்து குணசாலிகளாவார்களென்றும், தன் சிஷர் அதை எப்பொழுதும் ஞாபகம்பண்ணி சகலருக்கும் வெளிப்படுத்தவேண்டுமென்றும் உபதேசித்தால், அவன் முற்றிலும் பைத்தியக்காரனென்றல்லவா எண்ணுவோம். இயேசுநாதர் தமது மரணத்தைக்குறித்து இப்படியே உபதேசித்தாரென்பது வழுவாத சத்தியமானதால், அவர் அவதரித்துவந்த லோகரட்சகராகாவிட்டால் அவர் மதியீனன் என்றே தீர்க்கவேண்டும்.

தமது மரணத்தைக்குறித்து மாத்திரமல்ல, தமது சகல விஷயங்களைக்குறித்தும் மேலுலகிறைவன் இவ்வளவு மேன்மையாகவே சம்பாஷித்துப் போதித்துவந்தார். நாம் எவ்விஷயத்தைப்பற்றி விசாரித்தபோதிலும் சகல விஷயங்களிலும் தாம் திவ்யாதிகாரமுடையவராயிருப்பதாகவே திருச்செயலை விளங்கப்பண்ணி நடந்துகொண்டார் என்பதற்குச் சந்தேகமில்லை. தேவனைக்குறித்து திருவுபதேசம் பண்ணியபோது தாம் தேவனைப் பூரணமாய் அறிந்தவராகவும் தமது வாக்குக் கிரியைகளினால் தேவனுடைய லட்சணங்களைப் பூரணமாய் வெளிப்படுத்தினவராகவும் தெரிவித்துக்கொண்டே வந்தார். மனுக்குலத்திற்கு நீதிநெறிகளையும் மார்க்க அனுஷ்டான முறைகளையும் நியமித்தபோது, அப்பரமகுரு திவ்யாதிகாரம் தரித்துக்கொண்டு, கண்டிப்பாகக் கட்டளை விதித்து, சகல மனிதரும் தமக்குக் கீழ்ப்பட்டு, தம்மை முழுமனதுடன் சேவிக்கவேண்டும் என்று கூறினார். மேலும் மனிதஜாதி யாவற்றுக்கும் நியாயத்தீர்ப்பு செய்து அவரவர் கிரியைகளுக்கேற்றபடி அவர்களுக்குத் தீர்ப்பு விதிக்கவும், தம்மை அண்டினவர்களைக் கடாட்சித்து அவர்கள் பாவங்கள் அனைத்தையும் பொறுக்கவும் தமக்கு சர்வாதிகாரம் உண்டு என்றும் அத்திவ்ய நியாயாதிபதி திறந்து வெளியிட்டார். இதுவுமன்றி அப்பரஞ்சோதி ஒரு கிராமத்தில் ஜென்மித்து தம் ஜீவகாலமெல்லாம் எளியவர்களுடன் நெருங்கிய சகவாசம் செய்த ஒரு சாமான்ய புருஷனானபோதிலும், தாம் தேவகுமாரன் என்னும் நாமம் பூண்டு, தம்மைத் தேவனுடன் சமானமுடையவராக்கி தம்மாலேயன்றி வேறே யாராலும் மனுமக்களுக்கு மோட்சபதவி சித்திக்காது என்று உலகோர்க் குரைத்தார். இதைப்பற்றி நாம் என்

னத்தை நிச்சயிக்கிறது? நாம் முந்தின அதிகாரங்களில் கூறினபடி இயேசுபகவான் மாசணுகாத தூய பராபரப்பொருள், களங்கமற்ற கர்த்தன் என்று உரைக்க சந்தேகம் ஒன்றுமில்லை. ஆதலால் வான் கோழி மயிலெனப் பாவித்ததுபோலவும், காகம் அன்னநடைக்கு ஆசைப்பட்டதுபோலவும், மோட்ச வழிகாட்டியானவர் தமக்கு இவ்வித தன்மை உரியதுபோல் மாயம்பண்ணி வேஷம்போட்டு உலகோரை வஞ்சிக்க இம்மோசத்தொழில் பண்ணினார் என்று மனதாரச் சொல்ல இடமில்லை. கிறிஸ்துபகவானின் பகைவர் இவ்வகை தீதுமொழி கூறினாலும் திருச்சேயன் திவ்ய சந்நிதியில் தைரியசாலிகளாய் மாசணுகாத பராபரவஸ்துவின்மேல் எப்பாதகத்தையுஞ் சுமத்த அவர்களுக்கு ஆதாரம் ஒன்றுமில்லாமற் போனது (யோவா. 7. 12.). தேவாதி தேவனும் ராஜாதி ராஜனும் கர்த்தாதி கர்த்தனுமாகிய கிறிஸ்துபகவானின் திருச்சரிதையை நாம் ஆராய்ந்து பார்த்தால், மாட்சிமைதங்கிய அவருடைய திரு உள்ளத்தில் வஞ்சகப்புத்தி கொஞ்சமும் இல்லை என்று மனுக்குலம் அனைத்தும் மறுக்காமல் அறிக்கையிடவேண்டியது வழுவாத சத்தியமே. தமது சீஷருக்காயினும் மற்றோருக்காயினும் திருமறை கூறியபோதெல்லாம் தமது நிஜஸ்திதியைக்குறித்து சகல விஷயங்களிலும் தமது உண்மையான அபிப்பிராயங்களைத் தெரிவித்துக்கொண்டேவந்தார் என்பது பகிரங்கமாய் விளங்குகிறது. இப்படியிருக்கையில் அந்த நிர்மலன் தம்மைத்தாம் வஞ்சித்து வீண்செருக்கும் வீண்மதமும் தற்புகழ்ச்சியும் படைத்து இவ்வீண் தோற்றத்திற்கும் இவ்விபரீதக் கொள்கைக்கும் இடங்கொடுத்தாரென்று சொல்லத் துணியலாமா? மாசணுகாத மகிமைப்பிரதாபன்மேல் இப்பழியைச் சுமத்தினால், அத்தோஷத்தை எப்படித் தொலைப்போம். துவக்கத்தில் அகிலாண்ட நாயகனின் பந்துக்கள் அப்பராபரவஸ்துவின் கிரியைகளைக் கண்டு, அவர் யார் என்று அறியக்கூடாமல் அவர்கள் மனம் அறிவீனம் என்னுந் திரையினால் மூடப்பட்டிருந்தமையால் அவருக்குப் புத்தி மாறாட்டமானது என்று சந்தேகித்தாலும், பிறகு அவர்களே வியப்பை பயக்கும் அவரது திவ்ய ஜீவியத்தின் மகத்துவத்தைக் கண்ணுற்றவர்களாகி, அவரைப் பற்றிக்கொண்டிருந்த தப்பெண்ணத்தை விட்டு அவரில் பக்தி விசுவாசங் கொண்டார்கள் (மாற். 3. 21. யோவா. 7. 5.



கலா. 1. 19.). சர்வஞானியான இயேசுநாதர் புத்திமாறாட்டமும் வீண்பக்தியும் கொண்டவர்போல் நடந்துகொண்டவரல்ல. திரிலோகவாசிகளின் துதிக்கும் புகழ்ச்சிக்கும் வணக்கத்திற்கும் பணிவிடைக்கும் பாத்திரரான அப்பரப்பொருள் வீண்பக்தியுடையவராயிருந்தால், மனுமக்கள் இச்சகவார்த்தையைச் செவிகுளிரக் கேட்டு, அவர்கள் விரும்பியபடி ராஜரீகத்தைப் பூண்டுகொள்வார். மேலும் பஸ்கா என்னும் உற்சவகாலத்தில் லட்சக்கணக்கான ஜனங்கள் கிறிஸ்து மகாராஜனுக்கு ராஜகோலப் பவனி செய்வித்துப் புகழ்ந்து ஆர்ப்பரித்துத் தோத்திரம் பாடினபோது, அகிலாண்டநாதரின் திருத்தொண்டர் அகம்பூரிக்க மகிழ்ச்சிகொண்டு தமது பிரயத்தனங்கள் யாவும் சித்திபெற்றதென்று பெருமைகொண்டாலும், மாறாலட்சணமுடைய மன்னன் எவ்வளவேனும் செருக்கடையாமல் தமக்கு வரப்போகிற மரணாவஸ்தையைக்குறித்துச் சிந்தித்து தாம் இகழ்ச்சியும் அவமானமும் சொல்லிமுடியா பாடுகளும் அனுபவித்தாலொழிய, தாம் எண்ணிய கருமம் நிறைவேறாதென்று தம் தொண்டரின் மனம் உடைய நெஞ்சம் புண்ணாக ரட்சண்யமூர்த்தி பூட்டகத்தைத் திறந்து, புதைபொருளை வெளிச்சமாக்கினார் (யோவா. 12. 12-33.). முகஸ்துதி, இச்சகவாக்கு, நயவசனிப்பு என்பவை இயேசுவானவருக்கு எவ்வளவேனும் இதமானவையல்ல. ஜனங்கள் வெகு ஆவலும் பிரமிப்புங்கொண்டு, திரள்திரளாய்த் திரண்டுவந்தபோது, இருதய ஆலோசனைகளை வகையறுக்கும் வியப்புக்குரிய ஞானி, அவர்கள் மாறுந்தன்மையையும் ஸ்திரமில்லா மனதையும் தமது திவ்ய ஞான திருஷ்டியால் அளவிட்டு, ஆபத்துக்காலத்தில் பற்றுதலின்றி பின்வாங்குவார்களென்று முன்னறிந்தார். இதுவுமன்றி விண்ணுலகாதிபன் தமது தேசத்தாரின் குலாபிமானத்தை உணர்ந்து, அவர்கள் தங்கள் அதிகாரிகளுக்கு விரோதமாய் எழும்பித் தமக்கும் தங்கள் தேசத்திற்கும் பெரும் பொல்லாப்பை வருவித்துக்கொள்வார்களென்று முன்னாகவே அவர்களை எச்சரித்துவந்தார். திருச்சுதனின் திருமறையை ஆராய்ச்சி செய்யுமளவாக அவர் முற்றிலும் மிதமாகவும் மிருதுவாகவும் பேசிவந்ததாகவே காணப்படுகிறது. அப்பரப்பொருளின் திருக்கிரியைகளைப் பரிசோதிக்குங்கால், அவர் வையகத்தாரில் வீணாசைகளைப் பிறப்பிக்காமல் வெகு ஜாக்கிரதையாக

நடந்துகொண்டாரென்று தெளிவாய் விளங்கும். மகிமைச்சொரூபி தமது மகத்துவத்தை ஆரம்பத்திலேயே வெளிப்படுத்தாமற்போனா லும், தமது அடியார் அதைக் கிரகிக்கத் திராணியடைகிறதற்குத் தக்கதாக கொஞ்சங் கொஞ்சமாய் நாளாவட்டத்தில் அதை வெளி யிட்டுவந்தார். எண்ணிறந்த ஜனம் தம்மிடம் வந்தபோதிலும் ஒரு சமயத்தில் அவர்கள் தமது திருமறையைச் செவ்வையாகக் கிரகிக்கா மல் வீணாசைகொண்டு வந்தவர்களென்று அறிந்து, சிறிதுகாலம் அவர்கள் பார்க்க ஒரு அற்புதமாயினும் நடப்பிக்கவில்லை. இவை போன்ற விஷயங்களைப் பரிசோதிக்கையில், திவ்ய சொரூபி பூரணா னுபவமுடையவராய், தமது நிஜஸ்திதியை உள்ளது உள்ளபடி வெளிப்படுத்தினாரேயொழிய, மற்றப்படி வீண்பெருமைகொண்டு உரைக்கவில்லை என்று நிச்சயிக்கலாம். இவ்வண்ணம் நிச்சயிக்குங் கால் அப்பரமகுரு தம்மைக்குறித்துப் பகர்ந்த சாட்சியை அங்கி கரித்து அவரே ரக்ஷண்யாவதார புருஷன் என்று நம்புவது அவசிய மாகிறது.

# VII. அதிகாரம்

## இயேசுநாதர் தமது வாக்கின் மகிமையால் தமது திவ்ய மகத்துவத்தை ரூபித்தல்.

அவரவர் அனுபவம் அவரவர்க்கே தெரியுமாதலால், இயேசு
கவான் நம்பிக்கைக் குரியவரானபட்சத்தில் அவர் தம் அனுபவத்தை
யாட்டி மொழிந்தவற்றை ஆட்சேபிக்கிறதற்கு இடமில்லை. அவ்
ண்ணிறைவனின் குணலட்சணங்களைச் சீர்தூக்கி ஆராய்ந்து பார்க்
ம்போது, அவர் முற்றிலும் நம்பிக்கைக் குரியவரென்றே விளங்
ும். ஆதலின் அச்சத்தியநாதர் கொடுத்த சாட்சியை அங்கிகரித்து
வர் திவ்ய ரட்சகரென்று தீர்மானியாதிருக்க இடமில்லை. இப்
டிச் சொல்வது ஆட்சேபனையற்றது என்றாலும், கிறிஸ்துபகவான்
ணிந்துகொண்ட அதிகாரம் வெகு அற்புதமானதும் மனித அனுப
த்திற்கு மிஞ்சியதுமாயிருப்பதால் வெகுபேர் அதைக்குறித்துச் சந்
தகிப்பதுண்டு. இயேசுபகவான் திருச்சரிதையை அறியாதார் இப்
டி சந்தேகிக்கலாமேயன்றி அம்மேலோனது திருச்சரிதையை உள்
படி பரிசோதித்தவர்கள் இவ்வகைச் சந்தேகங்களை அகற்றி அவ
டைய கிரியைகளினால் அவரது சாட்சி உண்மையானது என்று
ப்புக்கொள்ளாதிருக்க இடமில்லை. பரமகுருவின் திருச்சுருதியும்
வர் கிரியைகளும் திவ்ய சம்பந்தமானவைகளேயன்றி மனித சம்
ந்தமானவை அல்ல. ஆதலால், அவற்றைப் பரிசோதிக்குமளவாக
வர் சத்தியாவதாரப் புருஷன் என்பது நிலைவரமாகும்.

இயேசுகிறிஸ்து பண்டிதனும் புலவனுமாயிராவிடினும் அவ
டைய உபதேசம் சகல சாஸ்திரங்களுக்கும் மேலானது. அப்பரம

குரு திருவாய்மலர்ந்து திருமறையோதியபோது, கேட்டவர் யாவரும் அவரது வாக்கு மாட்சிமையையும் வாக்குச் சாதுரியத்தையும் குறித்து மிகவும் வியப்புற்று இவனுக்கு இந்த ஞானமும் பலத்த செய்கைகளும் எப்படி வந்தன. இவனுக்கு அளிக்கப்பட்ட ஞானம் எப்படிப்பட்டது என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள் (மத். 13. 54. மாற். 11. 18; 6. 2. லூக். 4. 32.). அவருடைய சீஷர் மாத்திரமேயன்றி அவரது சத்துருக்கள்கூட இப்படி ஒப்புக்கொண்டு அறிக்கைபண்ணி வந்தார்கள். ஒரு தருணத்தில் இயேசு திரள்ஜனங்களுக்கு உபதேசித்துக்கொண்டிருக்கையில், யூதருடைய அதிகாரிகள் அவரைப் பிடிக்கும்பொருட்டு சேவகரை அனுப்பியபோது அந்த சேவகர் அப்பரமகுருவின் உபதேசத்தைக் கேட்டு மிகவும் பயமடைந்து தம்மை யனுப்பின அதிகாரிகளிடம் திரும்பிவந்து 'அந்த மனிதன் பேசுகிறதுபோல் ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை' என்று பதில் சொன்னார்கள் (யோவா. 7. 44–46.). அவருடைய உபதேச விஷயங்களைப் பரிசோதனைபண்ணினால் அவை சத்தியமென்று நாமும் ஒப்புக்கொள்ளவேண்டும். இயேசுபகவான் எவ்வளவேனும் பட்சபாதமில்லாதவராகையால் அவரது திருப்போதகம் சகல மனிதருக்கும் மிக்க வியப்பைப் பயக்கும்வண்ணமாய்ப் பொருந்துகிறது. இவ்விஷயத்தில் ஹிந்துமதக் குருக்களுக்கும் பரமகுருவுக்கும் அனந்த பேதமுண்டு. ஹிந்துமதக் குருக்கள் எளிய நிலைமையிற் பிறந்தவர்களை இகழ்ந்து அஞ்ஞான அந்தகாரத்திற்கு இரையாகிறார்கள். மேலும் அவர்கள் அவ்வந்தகாரத்திலிருந்து விடுதலை அடையாதபடி பிரம்ம க்ஷத்திரிய வைசியர்கள் மாத்திரம் வேதத்தைக் கற்றுக்கொண்டு, யாகாதிகளைக் கையாடலாமேயன்றி, சூத்திரர்கள் அவ்வகைக் காரியங்களைச் செய்யக்கூடாதென்று கண்டிப்பான சட்டம் உண்டாக்கியிருக்கிறார்கள். இதுவுமன்றி மனிதருக்குள் பல வேதங்களை யுண்டுபண்ணி அவர்கள் ஒருவரோடொருவர் கூடிக்கலந்து கூட்டுறவுசெய்து அந்நியோந்நியமாயிராதபடி கட்டுப்பாடு செய்திருக்கிறார்கள். இவ்வகை கோட்பாடுகளைக் கவனிக்கும்போது, ஹிந்துமதக் குருக்கள் முற்றிலும் பட்சபாதமுடையவர்களாய், பாமர ஜனங்களை அற்பமாயெண்ணி தள்ளிவிட்டார்களென்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் வெளிச்சமாகி



றது. இயேசுபகவானுக்கு இப்படிப்பட்ட கடினமனம் சிறிதேனும் கிடையாது. அந்த ஞானசொரூபி மனிதருடைய நிலைமையைப் பரிசோதித்து அவர்கள் நிர்ப்பாக்கிய பாவிகள் என்று அறிந்து பட்சபாதமின்றி சகல மனிதருக்கும் முத்திவழியைமட்டுத் திட்டமின்றித் தாராளமாக உபதேசித்தார். அப்பரோபகாரி முக்கியமாய் பாமர ஜனங்களோடும் இழிஞரோடும் சகவாசஞ்செய்து அவர்களை எவ்விதத்திலும் சேர்க்கவேண்டுமென்று தம்மாலியன்ற பிரயத்தனம்பண்ணிவந்தார். பெரிய மனுஷர் பார்த்து நிந்தித்தபோதிலும் இயேசுநாதர் சந்தேகப்படாமல் 'பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல், சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை. நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்கவந்தேன்' என்று மறுமொழி கூறினார் (லூக். 5. 31, 32.). சாஸ்திரிகள் புல்லறிவாளரை இகழ்ச்சிசெய்து அற்பமாயெண்ணி அவர்கள் மிருககுணமுடையவர்களும் எவ்வளவு உபதேசித்தாலும் கிரகிக்க முடியாதவர்களுமா யிருக்கிறார்கள் என்று பாவித்துவருகையில் இப்பரமகுரு இந்தக் கோட்பாட்டை கண்டித்து அப்புல்லறிவாளர்க்கே தமது திருமறையை உபதேசித்துக்கொண்டுவந்தார். அவர் மனித சுபாவத்தைப் பூரணமாய் அறிந்தவரானதால், தமது உபதேசம் மிகவும் சிறப்பும் மேன்மையும் உள்ளதுமாயிருந்தும் சகலரும் அவற்றை அறிந்து விளங்கிக்கொள்ளத்தக்கதாய் அவற்றைத் தெளிவாக்கி விஸ்தரித்து விளக்கிக் காட்டிக்கொண்டுவந்தார். இதினால் பரமகுருவின் வாக்கு வலிமையும் சாதுரிய மாட்சிமையும் பகிரங்கமாய்க் காணப்படும். ஞானிகளுக்கும் புலவர்களுக்கும் உபதேசிப்பது சுளுவானாலும் சிற்றறிஞருக்கு ஞானோபதேசம் செய்வது அரும்பிரயாசமும் பயனற்றதுமாம். ஆனால் இயேசுவானவர் மனிதருடைய இரகசியங்கள் யாவையும் பூரணமாய் அறிந்தவராதலின் அவர் திருவாய்மலர்ந்து திருமறை கூறினபோது புல்லறிவாளர்கூட சாதாரணமாக விளங்கிக்கொண்டார்கள். அப்பரமகுருவின் உபதேசம் தமக்குச் சித்தியாது என்று ஒருவரும் சந்தேகியாமல் எவ்வளவு சிற்றறிஞரும் அவர் திருப்போதனையின் விசேஷங்களை சிறிதளவாயினும் கிரகித்து அறிந்து மிகவும் களிப்படைந்தார்கள். இயேசுவின் உபதேசம் தற்காலத்திற்கூட சிற்றறிஞருக்கு முற்றிலும் மனோகரமாய்

விளங்கி அவர்கள் அவிவேகத்தை நீக்கி அவர்களில் நூதன மனதை உண்டுபண்ணுகிறது. மிகவும் வியப்பைப்பயக்கும் இவ்விஷயத்தைப் பார்க்கும்பொழுது அவர் சகல மனிதருக்கும் மேற்பட்டவர் என்று நிச்சயிக்காதிருக்க விதியில்லை. கற்றோருக்கும் கல்லாருக்கும் நாகரீகமுடையவர்களுக்கும் மிலேச்சருக்கும் எவ்வகை நிலைமையிலுள்ள மனிதருக்கும் பரமகுருவின் உபதேசம் பூரணமாய்ப் பொருந்துகிறது.

இயேசுநாதரின் திருப்போதனையில் சகல சத்தியமும் அடங்கியிருக்கிறது. நாம் எவ்வளவு பரிசோதனைபண்ணி தேடிப்பார்த்தாலும் குற்றமாகிலுங் குறைவாகிலும் ஒன்றும் கிடைக்காது. அது தேவனுடைய விஷயத்தைச் செம்மையாக வெளிப்படுத்தி, மோட்ச வழியைத் தெளிவாகக் காட்டுகிறதென்று சொல்லுவதற்கு ஐயமில்லை. மானிடர் அறிந்தும் அறியாமலும் எச்சத்தியத்தை அறிந்திருக்கிறார்களோ அச்சத்தியம் யாவும் கிறிஸ்துபகவான் உபதேசத்தினால் சம்பூரணமாகிறது. மேலும் மனிதர் ஆத்தும விசாரணைசெய்து எதின் பொருட்டு மிக்கப் பிரயாசப்பட்டு போராடியிருக்கிறார்களோ, அவை யாவும் அப்போதனையினால் அவர்களுக்குச் சித்தியாகிறது. அப்பரமகுரு சற்போதனையில் ஹிந்துக்கள் அனுசரித்த மூன்று மார்க்கங்கள் சந்தித்து, சமாதானமடைகின்றன. சாமானிய ஜனங்கள் சாதாரணமாய்க் கர்ம மார்க்கத்தைப் பின்பற்றுவார்கள். நீதியைத் தழுவி நற்கிரியைகளைப் பூரணமனதுடன் நடப்பித்தாலொழிய மோட்சங் கிடையாதென்கிற சத்தியத்தை அறிந்திருக்கிறார்களென்றாலும் மனதைப் பற்றியிருக்குந் துராசை பந்தத்துக்குள்ளானவர்களாய் தேவசித்தத்திற்கேற்ற நற்கிரியைகளை நிறைவேற்றமுடியாமல் யாகங்கள் முதலான ஆசாரங்களை முக்கியப்படுத்தி தங்கள் காலத்தை வீணாய்க் கழிக்கிறார்கள். இயேசுபகவான் இந்தக் கோட்பாட்டைக் கண்டித்தாரேயொழிய நற்கிரியைகளை எவ்வளவேனும் குறைவுபண்ணாமல் அவை அதிக முக்கியமானவை என்று வெளிப்படையாகப் போதித்தார். 'பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை' என்று அவர் ஒருசமயத்தில் தமது சீஷருடன் திருவுளம்பற்றினார் (மத். 7. 21.). மேலும் வெளிப்படையான



அனுஷ்டானங்களில் மனதைச் செலுத்தினவர்களின் வேஷத்தைக் கண்டு, 'வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள்' என்று வேறோர் வேளை வெளிப்படையாய் வெளியிட்டார் (மத். 5. 20.). இயேசுகிறிஸ்து துறவறத்தைத் தழுவி சரீரத்தொழில்களை ஈனப்படுத்தி கண்டியாமல், சகல மனிதரும் தத்தம் தொழில்களில் சுறுசுறுப்பும் ஜாக்கிரதையும் உடையவர்களாய் மெய்வருந்தி நியாயமாய் கஷ்டப்பட்டு ஜீவிக்கவேண்டுமென்று திருவாக்கிட்டார். மனிதர் லௌகீககாரியங்களை நிறைவேற்றி இல்லற கிருத்தியங்களை நடப்பித்தபோதிலும் உலகத்தின்மேல் மனதை முழுவதும் செலுத்தி இந்த ஜீவிய வாழ்க்கை முக்கியம் என்றெண்ணலாகாது. இதைக் குறித்து 'என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள். இவைகளை எல்லாம் அஞ்ஞானிகள் நாடித் தேடுகிறார்கள்; இவைகள் எல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்' என்று அவரே தமது சீஷருக்குத் திருவுளம்பற்றினார். (மத். 6. 31–33.)

நீதிமார்க்கத்தை உபதேசித்தபோது, இயேசுபகவான் கருகலாகக் கூறாமல் கைக்கொள்ளவேண்டிய அனுஷ்டானங்கள் நீதிநெறிகள் எவைகளோ அவற்றை வெகு தெளிவாக விரித்துரைத்தார். அவர் மனிதரைப்போல் புறஸ்திதியைக்குறித்து மாத்திரம் விசாரிக்காமல் நீதியைப் பின்பற்றக் கோருகிறவர்களின் அந்தரங்க ஸ்திதி சரியாயிருப்பது அவசியமெனத் திட்டமாய்ப் போதித்தார். 'மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, போஜன பானபாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தமாக்குகிறீர்கள். உட்புறத்திலோ அவைகள் கொள்ளையினாலும் அநீதத்தினாலும் நிறைந்திருக்கிறது. குருடனான பரிசேயனே! போஜன பானபாத்திரங்களின் வெளிப்புறம் சுத்தமாகும்படி அவைகளின் உட்புறத்தை முதலாவது சுத்தமாக்கு' என்று புறம்பான ஆசாரங்களை முக்கியப்படுத்துகிறவர்களைக் குறித்து ஓர் பழமொழி மொழிந்தார் (மத். 23. 25, 26.). இயேசுநாதர் தமது

அடியாருக்கு நியமித்த நீதிநெறிகள் அகக்கிரியைகளுக்கு உரியவைகளேயன்றி, புறக்கிரியைகளுக்கு அடுத்தவை அல்ல. எளிமையான மனமுடையதாயிருப்பதும், பாவஸ்திதியைக்குறித்துத் துக்கப்படுவதும், பொறுமையுடையவர்களாயிருப்பதும், நீதியினிமித்தம் ஆவல்கொண்டு பிரயாசப்படுவதும், பிறரிடத்தில் இரக்கமுடையவராயிருப்பதும், மனத்தூய்மை யடைவதும், கபடத்தைவிட்டு விரோதிகளைச் சமாதானப்படுத்துவதுமான இவைமுதலிய குணங்களைச் சம்பாதித்துக் கொண்டவர்கள், பாக்கியவான்களென்று அப்பரமகுரு தெரிவித்தார் (மத். 5. 1–9. லூக். 6. 20, 21.). இந்த நெறிகள் மனிதர் அபிப்பிராயங்களுக்கு மேற்பட்டவைகளும் நாம் சாதாரணமாக கையாடும் வழக்க பழக்கங்களுடன் சம்பந்தப்படாதவைகளுமா யிருக்கின்றன. அல்லாமலும் அவை இவ்வுலக வழக்கங்களுக்கும் அப்பியாசங்களுக்கும் ஆசாரங்களுக்கும் விரோதமானவை என்று சந்தேகமின்றிக் கூறலாம். என்றாலும் இவ்விதிகளைத் தழுவி நடந்துகொள்ளுகிறவர்கள் சமாதானமடைந்து வெகு அமைதலாகவும் சுகமாகவும் வாழ்வார்கள் என்பது சகலரும் ஒப்புக்கொள்ளவேண்டியதே.

இயேசுவானவருடைய உபதேசம் வெகு சுருக்கமானது. சாஸ்திரிகளும் பண்டிதரும் எண்ணிக்கையில்லா நீதிமுறைகளை நியமித்திருந்தாலும் அப்பரமகுரு சகல நீதியும் அடங்கின ஓர் சூத்திரத்தை பிரசித்தம்பண்ணி வெளிப்படுத்தியிருக்கிறார். அதென்னவெனில், ‘உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் ‘அன்புகூருவாயாக; உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக’ என்பதே (மத். 22. 37–40.). இச்சூத்திரத்தின் பொருளையறிந்து அதின்படி நடக்க விரும்புகிறவர்கள் யாரோ, அவர்கள் தேவனுடைய கட்டளைகளை ஒருக்காலும் மீறாமல் மற்ற மனிதருக்கு நன்மையேயன்றி கெடுதி சிறிதேனும் செய்யமாட்டார்கள். பிறருக்கு அபகாரம் செய்யாதிருப்பது போதும் என்று எண்ணாமல் நமது திராணிக்குத் தக்கதாய் சகல மனிதருக்கும் உபகாரஞ்செய்வது அவசியம் என்பது இதினால் தெரியவருகிறது. தேவன் சன்மார்க்கருக்கும் துன்மார்க்கருக்கும் சகல மனிதருக்கும் உபகாரம் செய்யும்வண்ணம் நாமும் சத்துருவானாலும் மித்துருவானாலும் சகல மனிதருக்



கும் வேண்டுமென்கிற மனதுடன் நன்மைசெய்வது அவசியம் என்று பரமகுரு பகிரங்கமாய் திருவுளம்பற்றினார் (மத். 5. 44–47.). இப்பரம முறையை நியமிப்பதால் இயேசுநாதர் கர்மவழியிலுள்ள குறைவுகளை நீக்கி அதிலுள்ள உத்தம பொருட்களைப் பூரணப்படுத்தி ஸ்திரப்படுத்தினார்.

முக்திவழிகாட்டியான இயேசுவின் உபதேசத்தில் ஞானவழியும் சேர்ந்திருக்கிறது. கடவுளைத் தெரிந்துகொள்வதும் அவர்மேல் தியானம் செய்வதுமே புண்ணியக்கிரியை யாவற்றிற்கும் முதன்மையானது என்பது ஞான நிலையில் நடக்கிறவர்களுடைய மேலான கொள்கை. கிறிஸ்துபகவான்கூட இவ்வபிப்பிராயமுடையவராய் ‘ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்’ என்று திருவாக்குரைத்தார் (யோவா. 17. 3.). பரமகுரு இவ்வளவாக ஞானநிலையைச் சார்ந்து உபதேசிப்பதோடுகூட அதைப் பின்பற்றுவோர் சாதாரணமாய்க் கொள்ளும் தப்பெண்ணங்களைக் கண்டு அவற்றைக் கண்டித்து அவ்வழியிலுள்ள சத்தியத்தை சித்தியாகும்படி செய்தார். இத்தேசத்தில் ஞானநிலையை அனுசரிப்போர் நோக்கம் நல்லதாயினும் அது பயன்படும் வழி அவர்களுக்குக் கொஞ்சமாகிலும் தெரியாது. ‘தேவனுடைய அந்தரங்க ஞானத்தை நீர் ஆராய்ந்து சர்வ வல்லவருடைய சம்பூரணத்தை நீர் அறியக்கூடுமோ’ என்று பூர்வத்திலுள்ள ஓர் ஞானவான் மொழிந்திருக்கிறார் (யோபு 11. 7.). தேவன் நமது தர்க்கம் அனைத்துக்கும் மேற்பட்டவராகையால் நாம் எவ்வளவு ஆராய்ச்சி செய்தாலும் அவரது அளவற்ற அகண்ட பரிபூரணத்தை வகையறுத்து அறிய முடியாது. மேலும் நாம் எல்லாரும் பாவ அந்தகாரத்தில் சிக்கிக்கொண்டு முற்றிலும் வீணாகி சந்தேக சாகரத்தில் மூழ்கினவர்களாகையால் பரிசுத்தமூர்த்தியாகிய அந்தப் பரமாத்துமாவைத் தகுந்தபடி அறிந்துகொள்வது கூடாமை. பிறர் கஷ்டம் அறிந்த பரோபகாரியான இயேசுபகவான் மானிடர் பலவீனத்தை உணர்ந்து நமக்குத் தகுந்த உதவிபுரிந்து, நாம் அறியமுடியாத தேவனுடைய விஷயத்தைப் பரமகுரு வெளிப்படுத்தியிருக்கிறபடியால் அப்புண்ணியரான புருஷனை நேசித்து, அவரது கட்டளைகளைக் கைக்கொண்டு நடக்கிறவர்கள் தேவனையறிந்து அவரைச் சமீபித்து அவருடன் ஐக்கியமடைவார்கள்.

இயேசுநாதர் இவ்விருவழிகளிலுமுள்ள முக்கிய பொருட்களை இம்மட்டுந் தழுவி உபதேசித்தாலும் அவர் விசேஷமாக உபதேசித்த வழி, பக்திவழி. 'அவர் மனிதருடைய குறைவுகளைப் பூரணமாய் அறிந்த பேரறிஞன் என்று இதினால் வெளியாகிறது. ஞான நிலையைத் தழுவிப் போராடினாலும் தேவனைத் தகுந்தபடி தெரிந்துகொள்வது கூடாமை. கர்மநிலையில் எவ்வளவு ஊக்கமாயும் நீதிவழுவாமலும் நடந்தாலும் பாவத்தை மேற்கொண்டு நீதியைத் தழுவி பரிசுத்தத்தை அனுசரித்து நடந்துகொள்வதற்கு நமக்குத் திராணியில்லை. பக்திவழியைத் தழுவி நடந்தால் நம்மால் ஏலாதது சித்தியாகும். இயேசுபகவான் தமது சீஷருக்குத் திருவுளம்பற்றின வண்ணம், 'விசுவாசிக்கிறவர்களுக்குச் சகலமும் கூடும்' (மாற். 9. 23.). நமது சுயமுயற்சியால் துர்இச்சைகளை வெல்லமுடியாதவர்களாயினும் சற்குருவை விசுவாசிக்குங் காலமுதல் அவருடன் ஐக்கியமுடையவர்களாகி, அவருடைய கிருபாகடாட்சத்தால் புதுப் பலமடைந்து, முந்தின தீவினைகளை கொஞ்சங்கொஞ்சமாகத் தள்ளி, பரமகுருவுக்குரிய உத்தமகுணங்களைப் படிப்படியாகச் சுதந்தரித்துச் சொந்தமாக்கிக் கொள்ளுகிறவர்களாவோம். அந்தப் பரமகுரு இப் பக்தி நிலையை விளக்கிக் காட்டுகிறதுமன்றி தாமே அந்த சற்குரு மூர்த்தி என்று அறிந்து மனிதர் எல்லாரும் தம்மையண்டித் தம்மாலேயே தம் பிரயத்தனங்களைப் பயனாக்கிக்கொள்ளலாம் என்றும் உபதேசித்தார். இதைக்குறித்து அவர் வெகு தெளிவாக உரைத்திருக்கிறார். தம்மை அண்டுவோர் பாவ அந்தகாரத்திலிருந்து விடுதலை அடையும் விஷயத்தைக்குறித்து 'நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன். என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்' என்று உரைத்தார் (யோவா. 8. 12.). மேலும் மனிதர் தங்கள் விருப்பங்களை நிறைவேற்ற முடியாமல் வியாகுலப்படுவதைக் கண்டு 'ஜீவ அப்பம் நானே. என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான்; என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலுந் தாகமடையான்' என்று அவர் திருவாக்குரைத்தார் (யோவா. 6. 35.). இதுவுமன்றி தம்மை நம்பினோர் கர்மநிவாரணம் சம்பாதித்துக்கொண்டு, தேவன் பாவிகளுக்கு விதிக்குந் தண்டனைக்கு நீங்கலாவார்கள் என்றும்,



அவர்கள் ஒருக்காலுங் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடைவார்கள் என்றும் அப்பரமகுரு திருவுளம்பற்றினார். (யோவா. 3. 16–18; 6. 47.)

ஹிந்துக்களின் பக்திமார்க்க உபதேசம் நல்லதானாலும் அவர்கள் சத்தியாவதார விஷயத்தை நன்றாய் அறியாமல், நம்பத்தகாதவர்களை ஆதாரஞ் செய்துகொண்டு தம் நோக்கங்களைச் சித்தியாக்கிக்கொள்ள ஏலாமல் உளுத்துப்போன தெப்பச் சுரைக்காயைக் கட்டிக்கொண்டவன்போல் பாவசாகரத்தில் நீந்தமுடியாமல் அமிழ்ந்து போகிறார்கள். இயேசுநாதர் சத்தியாவதாரப் புருஷராய், தம்மை நம்பினோரை விடுதலைபண்ணிக் கடைத்தேற்றுவதற்குச் சர்வாதிகாரமுடையவராயிருப்பதால், அவர் நம்மில் தயைகூர்ந்து 'என்னையண்டிக்கொள்ளுங்கள்' என்று திருவாய்மலர்ந்து திருவுளம்பற்றுகையில் அக்கருணாநிதியின்பேரில் பக்திவைத்தால் நமது ஜனனம் சித்தியாகும் என்பதற்குச் சந்தேகமில்லை. அவர் திருப்பாத சரணடைந்தால் கர்மநிவாரண நீதியை நிறைவேற்றக் கூடியவர்களாவோம். ஆகையால் கிரியைநிலைப் பலாபலமும் நமக்கு உண்டாகும். மேலும் அப்பெருமானை ஆதாரம் செய்துகொள்வதால் நாம் பாவ அந்தகாரத்தினின்று விடுதலையடைந்து பரமாத்துமாவை அறிந்து அவரோடு ஐக்கியப்படுவோம். ஆகையால் ஞானநிலைப் பலமுங்கூட பெற்றவர்களாவோம். பரமகுருவின் உபதேச விசேஷங்களை உள்ளபடி ஆராய்ந்தறியுங்கால் அவ்வுபதேசம் மனிதரின் சமஸ்த புத்திக்கும் மேலானதாய், அவர்கள் விருப்பங்களை நிறைவேற்றி, அவர்கள் பிறவியை பயன்பெறச் செய்கிறதென்று தெளிவாகுமாதலால், உசிதமான உபதேசத்தைக்கண்டு இயேசுபகவான் அவதரித்துவந்த ஜகத்ரட்சகரென்று நிச்சயிப்பது அவசியமானது.

இயேசுநாதருடைய உபதேசம் அதிகச் சிரேஷ்டமும் மாண்பும் உடையதும் சகல சாஸ்திரப்பொருளும் அடங்கியுள்ளதுமாய் இருக்கிறதென்று ஒப்புக்கொண்டு அறிக்கையிடுவதுமாத்திரம் போதுமா? எவ்வளவேனும் போதாது. கிறிஸ்துபகவானின் திருச்சரிதையைப் பரிசோதிக்குங்கால், அவர் நிஷ்காரணமாக உபதேசித்தவராயிராமல் தம்போதனையைப் பூரண பயனுள்ளதாக்கினார் என்பது தெளிவாகிறது. இதில் போதனைக் குருவுக்கும் காரண

குருவுக்கும் உள்ள வித்தியாசம் புலப்படுகிறது. சத்திய மார்க்கத்தைப் போதிக்கும் குருக்கள் அநேகர் இருந்தாலும் காரணக்குரு ஒருவரே. போதனைக் குருக்கள் மோட்சவழியைக் காட்டுகிறவர்களேயானாலும், காரணக் குருமாத்திரமே கெட்டுப்போன பாவியைக் கைப்பிடித்து அம்மார்க்கத்தில் சேர்த்து ஆயுள்காலம் முழுவதும் நடத்திக் காப்பாற்றுகிறார். போதனைக் குருக்கள் பாவ அந்தகாரத்தைப் போக்கடிக்கும் பரம ஜோதியைக்குறித்து சாட்சி கொடுக்கிறவர்களாய்மட்டும் இருக்க, காரண குருவோ தம்மை யண்டினவர்களைப் பாவ வல்லிருளிலிருந்து விடுதலைபண்ணி அவர்களில் திவ்ய சுடர் பிரகாசிக்கச் செய்கிறார். இயேசுபகவான் போதித்தது எப்படியோ அப்படியே தம்மடைக்கலமானோர்க்கு அருளும் அளித்துவந்தார். அப்பரமகுரு நியமித்த பன்னிரண்டு முக்கிய சீஷரின் காரியங்களை விசாரித்தால் இது தெளிவாகும். அவர்கள் அவருடைய பாதசேவையில் பிரவேசித்தபோது நாட்டுப்புறத்தாரும் மிலேச்சருமாயிருந்தாலும், தம் குரு கூட்டுறவால் தம் மிலேச்சத்தனம் யாவையும் போக்கடித்து ஞானசம்பன்னரானார்கள். பரலோகநாதர் விண்ணிற்கேகிய பின்னர் அவர்கள் மிகவுந் தைரியசாலிகளாகித் தம்மாண்டவருடைய சுவிசேஷத்தை எத்திசையினும் பிரசுரஞ்செய்து வரும்போது பார்த்தவர் கேட்டவர் யாவரும் அவர்கள் தைரியத்தையும் வாக்குச் சாதுரியத்தையுங் கண்டு வியப்புற்று அவர்கள் கல்லாதாராயினும் கிறிஸ்துபகவானுடைய சகவாசம் அவர்களை அந்த ஸ்திதிக்கு உயர்த்தினது என்று கூறினார்கள் (அப். 4. 13, 14.). அறிவீனர் ஞானசம்பன்னராவது கூடாமையேயானாலும், பாவத்தினால் பிடியுண்டவர்கள் தம் பாவபாரத்தைப் போக்கடித்து மனச் சமாதானமடைவது அதைவிட அதிக ஆச்சரியமான காரியம். நாம் எத்தனை ஆகமங்களை வாசித்தபோதிலும் எத்தனை விரதங்கள் செய்தபோதிலும் கர்மபார விடுதலையின்றி அதின் வாதைக் கொருக்காலும் நீங்கலானவர்களாகமாட்டோம். நாம் உள்ளத்தில் வளர்த்துக்கொண்ட துராசைகள் சர்ப்பத்தைப்போல நம்மைச் சுற்றிக்கொண்டு நமது சாரத்தை எல்லாம் உரிந்து நமது ஜீவனை வெகுவாய் வாதிக்கின்றன. இதைக்குறித்து 'ஆசைப் பிசாசு பிடித்து, வைராக்கிய வாசனை முதலியன சேரவிடாது, அவை என்னை



வாதிக்கின்றன. நான் என்னசெய்வேன்' என்று நாராயணசதகத்திற் சொல்லியிருக்கிறது. சில ஆண்டுகளுக்கு முன்னர் யோகாப்பியாசப் பயிற்சிசெய்துவந்த ஓர் சேணியனோடு நான் சம்பாஷணை செய்தபோது அவன் இச்சங்கதியைக் குறித்துத் தன் அனுபவத்தைப் பூரணமாக வெளியிட்டு உரைத்தான். அவன் அநேக சாஸ்திரங்களை வாசித்தவனானாலும் அவற்றின் பலாபலனைத் தியானிக்கையில் துஷ்டருக்குச் சமாதானமில்லை என்று ஓர் தொனி அவன் செவிகளில் தொனித்து முழங்கிக்கொண்டிருந்தது. அவன் சாஸ்திரநூல்களை விட்டுவிட்டு யோகநிலையில் நுழைந்து ஆசனவாயின் மூலமாய்ச் சுவாசம்விடும் வழியை அப்பியாசித்தான். என்றாலும் அதிபயங்கரமான அத்தொனி முழங்குவது ஒழியவில்லை. கடைசியில் அவன் வீடுவாசலை விட்டு வனத்துக்கேகி ஓர் குகையில் வனவாசஞ்செய்து பல தினங்கள் உபவாசாதிகள்பண்ணி தன் தேகம் மெலிவடையும்படி செய்து இப்படியே எவ்வகையாகப் போராடினாலும் 'துஷ்டருக்குச் சமாதானமில்லை, துஷ்டருக்குச் சமாதானமில்லை' என்னும் தொனி ஒழியாமல் தொனித்து அவனை முற்றிலும் திகிலுக்குள்ளாக்கிக்கொண்டே இருந்தது. இப்படிப்பட்ட அநுபவத்தைக்குறித்து வேமன்னா என்பவரும் சொல்லுகிறாரல்லவா:—'வாக்குச் சாதுரியமாய்ப் பேசலாம், ஆனால் மனதை நிறுத்தலாகாது; தெரிவிக்கலாம், ஆனால் தன்னை அறியலாகாது; மந்திரவாளைக் கையில் பிடிக்கலாம், ஆனால் கோழை பராக்கிரமசாலியாக முடியாது.' தமிழ் ஞானியாகிய தாயுமானவரும் இவ்வாறே கூறுகிறார்:

கந்துக மதக்கரியை வசமாய் நடத்தலாம்
கரடிவெம் புலிவாயையும்
கட்டலாம் ஒருசிங்க முதுகின்மேற் கொள்ளலாம்
கட்செவி எடுத்தாட்டலாம்
வெந்தழலின் இரதம்வைத் தைந்து லோகத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணாமல் உலகத்து லாவலாம்
விண்ணவரை ஏவல்கொள்ளலாம்
சந்ததமும் இளமையோ டிருக்கலாம் மற்றொரு
சரீரத்தினும் புகுதலாம்

சலமேல் நடக்கலாம் கனல்மேல் இருக்கலாம்
தன்னிகரில் சித்திபெறலாம்
சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற
திறம்அரிது, சத்தாகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே.

மனதை நிறுத்தி அதிலுள்ள தீவினைகளைச் சங்கரிப்பது மனிதருக்குக் கூடாமையாயினும் சர்வ வல்லமைபொருந்திய இயேசுபகவான் தம்மையண்டிய ஜனங்களில் செய்வதற்கரிய இக்காரியத்தை நிறைவேற்றி அவர்களுக்கு மனச்சமாதானம் அளித்துக்கொண்டு வருகிறார். அப்பகவன் இம்மானிலத்தில் மனிதனைப்போல் வசித்தகாலத்தில் ஒருதடவை விபசாரியான ஒரு ஸ்திரீ தன் பாவத்தைக்குறித்துக் கவலைகொண்டு தாங்காக் கிலேசத்துக்குள்ளாகி அவரிடம் வந்து அவர் திருப்பாதத்தண்டை விழுந்து முறையிடுகையில், அப்பரிசுத்தமூர்த்தி அவளுடைய பாவங்களை மன்னித்து அவளுக்குப் பாவ நிவாரணம் அளித்து மனச்சமாதானம் உண்டாக்கினார் (லூக். 7. 37-50.). வேறொரு சமயத்தில் பரிதானம் வாங்கினதால் திரண்ட செல்வம் சம்பாதித்த ஓர் உத்தியோகஸ்தன் தான் செய்துவந்த அநியாயத்தை உணர்ந்து அப்பரமகுருவைத் தரிசிக்க மிக்க ஆவல்கொண்டு வந்தான். அகத்தின் ஆழத்தை ஆராய்ந்தறியும் அச்சர்வஞானி அவன் நோக்கத்தைக் கண்டறிந்து அவன்மேல் இரக்கங்கொண்டு அவனுக்கு மங்கல வாக்குரைத்தவுடனே, அவன் மனந்திரும்பி தன் சம்பாத்தியத்தில் பாதியைத் தரித்திரருக்குத் தானம்பண்ணி தான் அநியாயமாகத் திரட்டின செல்வத்திற்கு நாலுமடங்கு திரும்பச் செலுத்திவிடத் தீர்மானித்தான் (லூக். 19. 1-9.). மேலும் நமதாண்டவர் சிலுவைமேல் தொங்கி மரணவேதனைகளை அனுபவிக்கிறபோது, தம்மைப்போல் மரணசிட்சையடைந்த கொள்ளைக்காரனான ஓர் கள்வன் அப்பெருமானால் நன்மை பெற்றவனானான் (லூக். 23. 40-43.). இயேசுநாதருடைய அடியார் இப்படிப்பட்ட காரியங்களைக் கண்டு, அதிக வியப்படைந்தார்கள். ஒரு தருணத்தில் அவர்களில் பேதுரு என்பவன் தன்னாண்டவரின் திருவாக்கு மாட்சிமையைப்பற்றி 'ஆண்டவரே, யாரிடத்தில் போ



வோம்; நித்திய ஜீவவசனங்கள் உம்மிடத்தில் உண்டே' என்று சொன்னான் (யோவா. 6. 68.). இயேசுபகவான் அக்காலத்தவர்க்கு மாத்திரமே இவ்வகை வரங்களை அளிக்கிறவர் அல்ல. இக்காலத்திலும் எக்காலத்திலும் தம்மை யண்டுவோர்க்கு, இப்பரம பாக்கியத்தைத் தானம்பண்ண சமர்த்தராயிருக்கிறார். அப்பெருமானை அடுத்தவர்கள் யாரானாலுஞ்சரி, அவர்கள் அனைவரும் அவரது தயவினால் பாவ விடுதலையடைந்தவர்களாய் சொல்லற்கரிய சமாதானமடைந்திருக்கிறோம் என்று சாட்சியிடுகிறார்கள். இது வெகு முக்கியமான விஷயமாகையால் வேறோர் அதிகாரத்தில் இதைக்குறித்துப் பூரணமாக விவரித்துரைப்போம். நாம் விசாரித்தமட்டில் இயேசுபகவான் திருமறை மாட்சிமையுடையதென்றும், அவர் காரணக்குருவாகத் தம் சரணடைந்தவர்களுக்குப் பாவ விமோசனம் அளிக்கிறவர் என்றும் வெளியானது.

மேற்கூறிய அத்தாட்சிகளைக்குறித்து சிலர் சந்தேகிக்கிறதுண்டு. பாவத்தினால் பிடிபட்டவர்கள் கிறிஸ்துபெருமான் திவ்ய துணையால் தம்பாவத்தைப் போக்கடித்து மனச்சமாதானம் அடைந்தார்களென்று சொல்லும்பட்சத்தில் அவரவர் அனுபவம் அவரவர்க்கே தெரியுமாகையால் ஒருவன் வேறொருவனுடைய மனதில் நடந்ததை ஆதாரமாக்கி நம்புவது எப்படி என்று ஆட்சேபனை செய்வார்கள். இப்படிப்பட்டவர்கள் கண்ணுக்கெதிரில் தோன்றுகிற அற்புதங்களைப் பார்த்தபோதிலும் சாதாரணமாக ஒப்புக்கொள்ள மாட்டார்கள். இயேசுநாதர் திருச்சரிதையைப் பரிசோதித்துப் பார்க்குங்கால், இப்படிப்பட்டவர்கள் சந்தேகம் நீங்கும்படியாக பகிரங்கமான திருஷ்டாந்தங்கள் அநேகம் வெளிக்குவரும். அவை இயேசுபகவான் நடப்பித்த அற்புத காரியங்களே. அப்பரமகுரு நடப்பித்த அற்புதங்களுக்கும் மனிதர் செய்யும் புதுமைகளுக்கும் அனந்த வித்தியாசமுண்டு. மனிதர் எவ்வளவு நிபுணரும் அறிஞருமாயிருந்தாலும் அவர்கள் இயற்கைப் பிரமாணங்களுக்குக் கீழ்ப்பட்டவர்களேயாதலின், அச்சட்டங்களை எவ்வளவேனும் மீற முடியாதவர்களாயிருக்கிறார்கள். இயற்கைப் பிரமாணத்தை வெகு நுட்பமாய் கவனித்துப் பகுத்தறிந்து அவற்றை வசப்படுத்திக்கொள்வதினால் மனிதர் அதிக விநோதமான யந்திரங்களை உண்டுபண்ணி, நீராவி

மின்சாரம் முதலியவற்றை வசப்படுத்தி அவற்றினால் அதிக வியப்புக்குரிய வேலைகளை நடப்பிக்கிறார்கள். கண்ணுக்குப் புலப்படா மின்சாரத்தினால் வண்டிகளை ஓட்டுவதும் அதிகப் பிரகாசமான ஒளி வருவிப்பதும் எவ்வளவோ தூரத்திலிருந்து தந்தி சமாசாரம் அனுப்புவதுமான இப்படிப்பட்ட காரியங்கள் அதிக வியப்புக்குரியவைகளே. பாமர ஜனங்கள் இவற்றைக் கண்டு வெகு பிரமை கொண்டு இவை தெய்வ சம்பந்தமான காரியங்கள் என்றும் மனிதரால் ஆகக்கூடியவைகளல்ல என்றும் பாவித்து அதிசயிப்பார்கள். இது முற்றிலும் வீண் எண்ணம் என்பது நமக்குச் சாதாரணமாகத் தெரிந்தவிஷயமே. மனிதர் ஆதியிலிருந்து போராடி படிக்கட்டின்மேல் ஏறுகிறவர்களைப்போல் படிப்படியாக அபிவிர்த்தியடைந்து வந்திருக்கிறதால், ஒரு காரியம் எவ்வளவு கஷ்டமாய் இருந்தாலும் அது மனிதருடைய பிரயத்தனங்களுக்கு மேற்பட்டதென்று ஆட்சேபிக்கிறதற்கு இடமில்லை. இயற்கைப் பிரமாணத்தை அறிந்துகொள்வதற்குத் தக்கதாய் மனிதர் இன்னும் எண்ணிறந்த கருவிகளை அமைத்து அவற்றால் இன்னும் அதிக ஆச்சரியமான காரியங்களை நிறைவேற்றுகிறவர்களாவார்கள். ஆனாலும் அவர்கள் எவ்வளவு சாஸ்திர வித்தையைத் தேடி சம்பாதித்துக்கொண்டபோதிலும் கருவிகளின்றி ஒரு காரியத்தையாகிலும் நிறைவேற்றுகிறதற்கு அவர்களுக்குத் திராணியில்லை. அவர்கள் இயற்கைப் பிரமாணத்தில் சிருஷ்டிக்குரிய சக்திகளையே பிரயோகித்து அவற்றைத் தமது இஷ்டப்படி நடப்பிக்கக் கூடியவர்களேயன்றி, தமது மனோபாவனையினால் ஒரு காரியத்தையாயினும் நிறைவேற்றிக்கொள்ள முடியாதவர்களாய் இருக்கிறார்கள். ஒரு வண்டியை இயற்றுவிக்க விரும்புங்கால் அவ்வண்டிக்குக் குதிரையாயினும் மாடாயினும் கட்டவேண்டும். இல்லாவிடில் ஏதோ ஓர்விதமான யந்திரத்தை நிருமித்து அவ்வண்டியில் மாட்டி நீராவியாலாகிலும் மின்சாரத்தினாலாகிலும் அதை நடப்பித்து ஓட்டவேண்டும். இவ்வண்ணமே யாதாயினும் ஒரு ரோகத்தைச் சுகப்படுத்த நினைக்கும்போது ஏதாகிலும் ஒரு அவிழ்தத்தைக் கொடுத்து அந்நோயை போக்கடிக்கவேண்டுமல்லவா? மனிதர் எக்காரியத்தைச் செய்திடினும் கருவிகளினாலேயே அக்கர்மங்களை முற்றுப்பெறச் செய்யவேண்டும். அக்கருவிகளைக் கண்டுபிடித்து



உண்டுபண்ணுவது கஷ்டமானாலும் அவற்றைக் கண்டுகொண்ட பிறகு யாராகிலும் அவற்றைப் பிரயோகித்து அவற்றாலுண்டாகும் பலாபலனைச் சகஜமாய் முடித்துக்கொள்ளலாம். மனிதர் எவ்வளவு ஆச்சரியமான கருமங்களைச் செய்தபோதிலும் தமது சுபாவமான குணத்தினால் தகுந்த கருவிகளைக் கண்டுபிடித்து உண்டுபண்ணிக்கொள்ளுவார்களேயன்றி வேறே எவ்விதத்தாலும் செய்யமுடியாதாகையால் ஒருவன் ஒரு கருவியுமின்றி தன் வாக்கு மகத்துவத்தால் ஏதோ ஓர் மகத்தான கர்மத்தை நிறைவேற்றும்பட்சத்தில் அவன் மகிமையுடையவன் என்று நிச்சயிக்காதிருக்க விதியில்லை. நாம் எவ்வளவு பரிசோதித்தாலும் எத்தனை வித்தைகளையும் சாஸ்திரங்களையும் அப்பியாசித்தாலும் அப்படிப்பட்ட மகத்துவம் நமக்கில்லாமையால் அதை உடையவன் மனிதருக்கு மேலானவன் என்று உரைக்கச் சந்தேகமில்லை. அப்படிப்பட்ட மகானுபாவன் செய்யுங் கருமங்கள் சாதாரண கிரமச்சட்டங்களைச் சேராமல் நமக்குப் புலப்படாதவிதமாய் நடக்கும். இது ஒரு விந்தை. ஒரு தேசத்திலுள்ள ஜனங்கள் யாவரும் அந்தகர்களாயிருக்கும்பட்சத்தில் நேத்திர திருஷ்டியுள்ள ஒருவன் வந்து அவர்களுடன் கூடிக்கலந்து கூட்டுறவுசெய்தால் அவர்கள் அவன் செய்கிறவைகள் யாவும் அற்புதங்கள் என்று எண்ணுவார்கள் அல்லவா? அவர்கள் எதையாயினும் பரிசோதிக்க விரும்பினால் அதின் சமீபத்தில்போய் அதை முழுதும் தடவிப் பார்க்கவேண்டுமேயன்றி கொஞ்சத்தூரத்திலிருந்தால் ஒன்றையும் அறிந்துகொள்ள முடியாதவர்களாய் இருக்க அவனோ தன் பார்வையினால் தூரப்பொருட்களைச் சுளுவாகக் கண்டு அவற்றைத் தொடாமலும் அவற்றிற்குச் சமீபமாய்ப் போகாமலுமே அவற்றின் விசேஷங்கள் யாவையும் சாதாரணமாய் எடுத்துரைக்கக்கூடும். அவன் இப்படிச் செய்வதைக் கவனித்து அவர்கள் அதிக பிரமிப்படைந்து அவன் முற்றிலும் மகத்துவமுடையவன் என்று நிச்சயித்துக்கொள்வார்கள் அல்லவா? அவன் செய்கிறது இயற்கைப் பிரமாணத்திற்கு விரோதமானதாயிராவிடினும் அது அவர்கள் சக்திக்கு மேற்பட்டதினால் அவர்கள் அவ்வாறு நிச்சயிப்பது இயல்பே. சத்தியாவதாரப் புருஷனுடைய விர்த்தாந்தத்தைப் பற்றி விசாரிக்கையில் அது இவ்வாறே இருக்கும் என்பதற்குச் சந்

தேகமில்லை. அந்த சத்தியாவதாரி தேவ சொரூபியாய் மனுஷீகத்தை அணிந்து மனிதருக்குள் மனிதனாக ஜீவிக்கிறபோது தம் திவ்ய மாட்சிமையால் மனிதர் வல்லமைக்கு மேற்பட்ட காரியங்களை இயல்பாகவே செய்து முடிப்பார். அவ்வகைக் காரியங்கள் அப்பரப் பொருளுக்குச் சாதாரணமானவையானபோதிலும் நாம் எவ்வளவாக விசாரித்தாலும் அவை நடக்கும்விதத்தை அறிந்துகொள்ள நமக்கு வழி வகை இராது. மேலும் நாம் அவற்றை எவ்வளவாகப் பரிசோதித்தாலும் அவை நமக்கு எப்போதும் அசாத்தியமாகவே புலப்படும்.

இயேசுபகவான் மனிதவல்லமைக்கு மேற்பட்ட அற்புதக்காரியங்களைச் செய்ததால் அவ்வற்புதநாதரின் அரிய கிரியைகளைக் கண்ணாரக்கண்டவர்கள் பலமான சாட்சி கொடுக்கிறார்கள். அப்பரமகுரு இரண்டொருதடவை மாத்திரமேயல்லாமல் பலதடவை தமது மகத்துவத்தை அற்புதமானபிரகாரமாகக் காண்பித்தார். அவர் அக்காரியங்களை ஒளிப்பிடத்தில் செய்யாமல் சகல ஜனங்களும் பார்த்திருக்க அவற்றைப் பகிரங்கமாகச் செய்தார். அவர் தாம் நடப்பிக்கும் மாட்சிமையான காரியங்களை அவ்வளவு பெரிதாக எண்ணி அவற்றை ஆத்திரப்பட்டுச் செய்யாமல் பொறுமையாகவும் அமைதலாகவும் நிறைவேற்றிவந்தார். மேலும் அவர் கஷ்டப்பட்டு நிறைவேற்றாமல் மற்றவர்கள் சாதாரணமான வேலைகளைச் செய்கிறதுபோலவே அவர் அற்புத காரியங்களை நிர்வகித்துவந்தார்.

கிறிஸ்துபகவான் நடப்பித்த அற்புதகாரியங்களனைத்தையும் விரித்துரைப்பது அவசியம் அன்று. அகிலாண்டநாயகர் இயற்கை வல்லமை அனைத்தின்மேலும் அதிகாரமுடையவராய் மனிதருக்கு அசாத்தியமான கிரியைகளை ஏராளமாகச் செய்துவந்தார். ஒரு சமயத்தில் அப்பரமகுரு தமது சீஷர் சமேதராய்ப் படவேறி கலிலேயாக் கடல் மார்க்கமாய் யாத்திரைசெய்கையில் பெரும் புசலும் கடல் கொந்தளிப்பும் திடீரென்று தோன்றி தோணி அமிழக்கூடிய ஸ்திதியிலிருந்தது. விண்ணோர் போற்றும் மேலுலகநாதர் களைப்பு தவிப்பு நீங்கி இளைப்பாறும்பொருட்டு கப்பலின் பின்னணியத்தில் படுத்து நித்திரைசெய்தார். சீஷர்கள் அதிகமாய் பயப்பட்டு தம் எஜமானை எழுப்பி ‘ஆண்டவரே, நாங்கள் மடிந்துபோகிறோம்; உமக்குக் கவலை இல்லையா?’ என்று முறையிட்டார்கள். சராசரங்களின் ஆண்டவர் எழுந்து புசலை



அதட்டி ‘அமைதலாயிரு’ என்று கட்டளைகொடுத்தார். உடனே கொந்தளிப்பு அடங்கி அமைதலுண்டானது (மாற். 4. 35–41.). வேறொரு சமயத்தில் திரள்ஜனம் அப்பரமகுருவின் திருவாக்கைக் கேட்க காதல்கொண்டு அவரைத் தேடி வனாந்தரத்தில் அவரைக் கண்டுபிடித்து, ஆவலோடு அவரது அமிர்த மொழிகளை நாள்முழுதும் கேட்டுக்கொண்டிருந்தார்கள். சாயங்காலமானபோது அவர்கள் தத்தம் வீடுகளுக்குப் போகும்படி நேரிட்டாலும் வீடுகள் தூரமாக இருந்தமையால் அவர்கள் ஆகாரமில்லாமல் அதிக அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்க அவர்களுடைய கஷ்ட நிலைமையைக் கண்டு சீஷர்கள் தம்மாண்டவரிடம் வந்து விண்ணப்பம்பண்ணினபோது சகல ஜீவகோடிகளையும் போஷிக்கும் ஜீவகாருண்யபெருமான் தம் ஜனங்கள்மேல் மனதிரங்கி, ‘நீங்களே எப்படியாகிலும் அவர்களுக்கு ஆகாரம் கொடுக்கவேண்டும்’ என்று தம் தொண்டருக்குத் திருவுளம்பற்றினார். பெண்டீர் பிள்ளைகள் தவிர ஏறக்குறைய ஐயாயிரம் புருஷர் இருந்தமையால் அவர் சீஷர் வெகு வியப்புற்று ‘ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களுந் தவிர எங்களிடத்தில் வேறொன்றுமில்லை; நாங்கள் எங்கிருந்து கொண்டுவந்து இவர்களுக்குப் போஜனங் கொடுப்போம்’ என்று விடை கொடுத்தார்கள். வையகமும் வானகமும் பரிபாலித்துப் பராமரிக்கும் பரமபுருஷன் ‘ஜனங்களெல்லாரையும் பந்தியில் உட்காரவையுங்கள்’ என்று கட்டளையிட்டு, அந்த ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் எடுத்துக்கொண்டு அவற்றை ஆசீர்வதித்து ஜனங்களுக்குப் பரிமாறும்படித் தமது சீஷர் கரமளித்தார். சீஷர்கள் பரிமாறிக்கொண்டிருக்கையில் அப்பங்களும் மீன்களும் அற்புதமாகப் பெருகினதால் சகலரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள். அற்புதமூர்த்தியாகிய இயேசுபகவான் இருமுறை இவ்வண்ணமாக ஆகாரத்தைப் பெருகப்பண்ணித் தம்மை அண்டினோர்களுக்குப் பசியை அற்புதமாய் நீக்கினார் (மத். 14. 13–21. மத். 15. 32–39.). பரமகுருவாகிய இயேசுநாதர் செய்த அற்புதங்கள் யாவையும் தமது பரோபகார சிந்தையினால் செய்தாரேயன்றி தற்புகழ்ச்சியின்பொருட்டும் தமது மகத்துவத்தைக் காட்டும்பொருட்டும் ஒருக்காலுஞ் செய்தவர் அல்லர். யூதர்களுடைய அதிகாரிகள் உலக அடையாளத்தைப்பார்க்க விரும்பினபோது, இயேசுகிறிஸ்து அவர்களுடைய அவிசுவாசத்திற்காக

அவர்களை அதட்டி, கண்டித்தாரேயொழிய அவர் அவர்களுக்கு ஒரு அடையாளமாகிலுங் காட்டவில்லை. இதுவுந்தவிர யூதர்கள் அப் புண்ணிய மூர்த்தியை ஏரோது என்னும் மகாராஜனிடம் கொண்டு போய் குற்றஞ்சாட்ட முயன்றபோது அந்த ஏரோதுராஜன் வெகு வாய் மகிழ்ச்சிகொண்டு அவர் செய்யும் அற்புதத்தைக் கண்டு தன் நீண்டகால ஆசையை நீக்கிக்கொள்ள எண்ணங்கொண்டு அவரைப் பலவாறு வினவுகையில், வானவர் பணியும் சேனையின் ஆண்டவர் வாய்திறவாமலும் மறுமொழிகூறாமலும் மண்டலாதிபன்முன் மௌனம் சாதித்தார் (லூக். 23. 6–9.). மந்திரவாதிகள் தங்கள் வல்லமையைக் காட்ட பல வித்தைகளைச் செய்கிறதுபோல் வீணான விந்தைகளையும் அற்புதக்கிரியைகளையும் செய்கிறதற்கு விண்ணின் ராஜன் சிறிதளவேனும் திருவுளங்கொள்ளாமல் மனிதர்படுங் கஸ்திகளைக் கண்ணுற்று அவர்கள் வாதையை நிவாரணம்பண்ணும் விஷயமாய்மாத்திரம் தமது மாட்சிமையை வெளிப்படுத்த திருவுளங்கொண்டார். முக்கியமாய் அப்பரோபகாரி நோயாளிகள்மேலும் அங்கப்பழுதுள்ளவர்கள்மேலும் மனதுருகி உள்ளங்கனிந்து அவர்கள் குறையை நிறைவாக்கிச் சுகப்படுத்த அநேக அற்புதங்கள் செய்தார். அற்புதநாதருக்கு எந்த நோயானாலும் எவ்வகைப் பிணியானாலும் கூடாமை அன்று. தமது சிஷராகிய பேதுரு என்பவரின் மாமி ஜுரத்தினால் அதிக வாதையடைந்து கஷ்டப்பட்டபோது அப்பரம பரிகாரி அவளிருந்த ஸ்தலம் சேர்ந்து ஜுரத்தை அதட்டி ஓர் நிமிஷத்தில் அவள் நெடுநாள் வாதை நீங்கச் சுகம் அளித்தார் (மாற். 1. 30–31.). சொல்ல ஆகவும் கட்டளையிட நடக்கவும்செய்ய வல்லவரான இரக்ஷணிய மூர்த்தி வேறொருசமயத்தில் எருசலேம் என்னும் நகரிலுள்ள ஓர் குளத்திற்குப் போய், அதின் அண்டையிருந்த மண்டபத்தில் சுகத்தின் பொருட்டு நெடுநாட்களாய் காத்திருக்கும் எண்ணிறந்த ரோகிகளில் முப்பத்தெட்டு வருஷங்களாய்த் திமிர்வாதத்திற் கிரையாகி படுக்கையைவிட் டெழுந்திருக்கமாளாத ஓர் மனிதனைப் பார்த்து, உள்ளம் உருகி ‘நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட’ என்று மொழிந்த தக்ஷணமே இந்நெடுநாள் ரோகி பகிரங்கமாய் எழுந்து படுக்கையைச் சுமந்து பரனைத் துதித்து நடந்து சென்றான் (யோவா. 5. 1–9.). இப்படிப்பட்ட சகஜமான நோய்களை மாத்திரமேயல்லாது



இவ்வுலகத்தின் வைத்தியருக்கு அசாத்தியமான பிரமாண்ட பிணிகளையும், அவ்வற்புதமூர்த்தி அணுவளவுங் கஷ்டமின்றி நிவர்த்தியாக்கி வந்தார். ‘அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும். கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டன’ (சங். 33. 6–9.). குஷ்டரோகம் சமஸ்த ரோகங்களையும்விட வெகு கொடியது. இது சுகப்படுத்துதவுதற்கு அசாத்தியமான தென்பதற்கு அணுவளவேனும் ஐயமில்லை. என்னென்ன முறைகளையும் பக்குவங்களையும் கையாடினாலும் என்னென்ன அவிழ்தங்களைப் பிரயோகித்தாலும் ஓர்க்காலும் தீராமல் தேகமெங்கும் படிப்படியாய் பரவி, உதிரம் மாமிசம் யாவும் அழுகிச் சிதையும்படி செய்யும் இயல்புடையது. அப்பரலோகநாதன் பூதலத்தில் புதுமையாய் அவதாரஞ்செய்த காலத்தில் சஞ்சரித்த நாட்களில் குஷ்டரோகம் வெகு பிரபலமாய் இருந்தமையால் அதின் வாதையைச் சகிக்கமுடியாமல் அநேகர் பரோபகாரியின் செய்தியைக் கேட்டு அவர் திருச்சன்னதியில் வந்து முறையிட்டார்கள். உடன் பிறந்தவர்களான உலக வைத்தியரும் பிணிதீர்க்கும் அவிழ்தங்களும் அவர்கள் வாதையின் திர்ப்பாக்கியத்தை நீக்கக்கூடாமற் போயிற்று. உடன்பிறவா பரலோக பண்டிதரும் மாமலையின் மூலியுமான மகிமையினாண்டவர், அக்குஷ்டரோகிகள் உயிரைத் தம்முயிர்போலும், அவர்கள் வாதையைத் தம்முடைய வாதைபோலும் பாவித்து அவிழ்தம் ஒன்றும் நீட்டாமலும் கருவி ஒன்றும் கையாடாமலும், தம் திருவாய்மொழியால் அற்புதமாகத் தம்மைச் சார்ந்தோருக்குக் குஷ்டரோக நிவாரணம் அளித்தார். (மாற். 1. 40–42; லூக். 17. 12–19.)

சகல ரோகங்களையும் இவ்வாறு சுகப்படுத்துவது மாத்திரமேயன்றி அங்கப்பழுதுள்ளவர்களையும் சுகப்படுத்திவந்தார். அவ்வற்புதநாதர் மகிமைப்பிரதாபரான இயேசுகிறிஸ்து ஊமையர்களைப் பேசச்செய்து பிறவிக்குருடனுக்குப் பார்வையளித்து சப்பாணிகளைத் தமது நிகரற்ற வல்லமையால் நடக்கச்செய்து வந்தமையால் அத்தேசத்தார் அச்சமாசாரத்தைக் கேள்விப்பட்டு, அந்தகர், சப்பாணிகள், பிசாசு பிடித்தவர்கள், குஷ்டரோகிகள்முதலிய நோயாளிகளையும் அங்கவீனர்களையும் அவரது திருப்பாதத்தண்டை திரட்டிக்கொண்டு வந்தார்கள்.

எவ்வளவுபேர் வந்தாலும் கருணாநிதியான இயேசுபகவான் ஒருவரை
யாயினும் தள்ளாமல் யாவரையும் வெகுதயவாய் கண்ணோக்கிப்பார்த்து
அவர்களனைவர்க்கும் சர்வாங்க சுகம் அளித்தார் (மாற். 1. 32–34;
6. 54–56.). மனிதரில் ஒருவனாகிலும் மேற்கூறிய காரியங்களைச்
செய்ய முடியாமற்போனாலும் இயேசுநாதர் இவைகளுக்கு மேலான
காரியங்களை நிறைவேற்றிவந்தார். ஜீவன் இருக்கும்வரையில் எந்த
வியாதியையாகிலும் யாதாமோர் வழிவகையினால் நிவிர்த்தியாக்கலா
மென்றாலும் ஜீவன் உடலைவிட்டுப் பிரிந்தவுடனே எத்தனை பிரயத்
தனம் பண்ணினபோதிலும் உபயோகமில்லை என்பது சகலருக்குந்
தெரிந்தவிஷயமே. நாம் எந்த சரித்திரத்தை வாசித்தாலும் மரித்தவன்
திரும்ப ஜீவனடைந்தான் என்பதாக வாசித்ததில்லை. ஜீவாதிபதி
யான திருப்புதல்வன் மாத்திரம் சர்வாதிகார முடையவராதலின்,
அவர் திருவுளங்கொண்ட பட்சத்தில் பிரிந்துபோன ஜீவனைத்
திரும்ப வரவழைத்து மாண்டவரை உயிர்ப்பிக்கிறதற்கு வல்லமை
உடையவராய் இருந்தார். இயேசுகிறிஸ்து ஊக்கத்தைக் கையாடி
தமது திவ்ய வல்லமையினால் மாண்டோரை ஜீவனுடையவர்களாக்
கினார் என்பதற்கு ஆட்சேபனையில்லாத அனந்த திருஷ்டாந்தங்கள்
உண்டு. ஒரு சமயத்தில் அப்பரமகுரு உபதேசம் பண்ணிக்கொண்
டிருக்கையில் யவீரு என்னும் ஓர் பெரிய மனிதன் ஓடிவந்து, தன்
புதல்வி மரணவஸ்தையாயிருக்கிறாள் என்று விண்ணப்பம் செய்த
போது துக்கிக்கிறவர்களின் துயர்நீக்கி கண்ணீர்துடைக்கும் கருணா
நிதியாகிய அவர் அவன் மன்றாட்டைக் கேட்டு அவன் வீட்டுக்குப்
போவதற்குப் புறப்பட்டார். அவர்கள் வழியில் போகையில் ஒருவன்
எதிர்கொண்டுவந்து, அப்பெண் அதற்குள் ஜீவன் துறந்து மாண்டுபோ
னாள் என்று அவர்களுக்குத் தெரிவித்தான். ஜீவாதிபதியும் மரணத்
திற்கு மாற்றுமான மகிமைப்பிரதாபன் அச்செய்திகேட்டு, எவ்வளவே
னும் அஞ்சாமலும் மனத்தளர்ச்சியடையாமலும் அவர்களுக்கு தைரி
யஞ்சொல்லி அவர்களுடன் அவ்வீட்டுக்குச் சென்று உள்ளே பிரவே
சித்துகொஞ்சநேரத்துக்குமுன் மாண்டுபோன அச்சிறுமியைப் பார்த்து
அவள் கையைப் பிடித்து, 'சிறுபெண்ணே எழுந்திரு' என்று கட்டளை
கொடுத்தார். உடனே மாண்டுபோன சிறுபெண், நித்திரைசெய்வோர்
சத்தங்கேட்டு எழுந்திருக்குமாப்போல், வையகமும் வானகமும் போற்



றும் மன்னவராகிய இயேசுவின் சத்தங்கேட்டு ஜீவனுடையவளாய்
உயிர்த்தெழுந்தாள் (லூக். 8. 41, 42, 49–56.). தேசங்கள்தோறும்
தேசாந்திரியாய்த் திருமறை கூறிவந்த இத்திவ்யபுருஷன் தமது சீஷ
ரோடுகூட நாயீன் என்னும் ஓர் ஊருக்குச் சென்றசமயத்தில் அப்
பரமகுரு தம் பரிவாரத்துடன் ஊர்வாசலுக்குச் சமீபித்தபோது மாண்
டுபோன ஓர் வாலிபனை அவ்வூரார் பாடையில் வைத்து மயானபூமிக்கு
தூக்கிக்கொண்டு போனார்கள். மாண்டவன் மாதா கைம்பெண்ணாகை
யால் துக்கசாகரத்தில் மூழ்கினவளாய், ஊராருடன் பாடைக்குப்
பின்சென்று ஓலமிட்டு புலம்பிக்கொண்டு போனாள். காருண்ணியக்
கடவுளான இயேசுபகவான் அவளைப் பார்த்து, மனமுடைந்து 'அழா
தே' என்ற தம் திருவாக்கால் அவள் கண்ணீரைத் துடைத்து அன்
பென்னும் நதியை அவள்மேல் பாயவிட்டு, சமீபித்துவந்து, பாடை
யைத் தொடவே, சுமக்கிறவர்கள் நின்றார்கள். அப்போது 'வாலி
பனே, எழுந்திரு' என்று மரணத்திற்கும் ஜீவனுக்கும் அதிபதியாகிய
கிறிஸ்துநாதர் கூறிய தக்ஷணமே மாண்டவன் எழுந்து அவரது திருச்
சந்நிதியில் உட்கார்ந்து பேசத்தொடங்கினான். எல்லாரும் பார்த்து
பயம் நடுக்கம் கொண்டவர்களாகி தேவன் தமது பிரஜைகளுக்குத் தரி
சனம் அளித்தார் என்று கடவுளைத் துத்தியம்பண்ணி ஸ்தோத்திரித்
தார்கள். (லூக். 7. 11–17.)

ஒருதினம் இயேசுபகவான் நாலு தினங்களுக்குமுன் மரித்து கல்
லறையில் அடக்கம்பண்ணப்பட்டவனை உயிர்ப்பித்தெழுப்பினார்.
அதெப்படி என்று கொஞ்சம் விவரித்துக் கூறுவோம். பெத்தானியா
என்னும் கிராமத்தில் லாசரு என்னும் பக்தன் ஒருவன் இருந்தான்.
அவன் குடும்பத்தாருக்கும் இயேசுபகவானுக்கும் அதிக அந்நியோந்
நிய ஐக்கியம் இருந்தமையால், ஆண்டவர் பலதடவை அவர்கள்
வீட்டில் தங்குவது வழக்கம். இப்படியிருக்கையில் ஆண்டவர் இவ்
வித சம்பூத்தில் லாசரு வியாதிப்பட்டு அதிக அவஸ்தைப்பட்டதால்,
தங்கை தமக்கைமார் ஆண்டவரிடத்திற்கு ஆளனுப்பினார்கள். இச்
சமயத்தில் ஆண்டவர் வேறோர் ஸ்தலத்திலிருந்தார். அச்சங்கதி கேட்
டபோது புண்ணியஞ்செய்யத் துரிதப்படும் பூமான் தம் வழக்கத்துக்கு
மாறாக சில நாட்கள் தாமதித்து, கடைசியில் தமது சீஷரை நோக்கி
'லாசரு மாண்டுபோனதால் அந்நித்திரையிலிருந்து அவனை எழுப்பப்

போகிறேன்' என்று மொழிந்து அவர்களோடு பெத்தானியாவுக்கு வந்தார். அவர்கள் அந்த ஸ்தலம் சேருவதற்கு நாலு நாட்களுக்கு முன்னமே லாசரு மரித்துப்போனமையால், அவன் சகோதரிகள் துக்கசாகரத்தில் மூழ்கி அழுது புலம்பினார்கள். அவனை ஜீவனுடையவனாக்கத் திருவுளங்கொண்டு அந்த ஸ்தலத்திற்கு வந்த ஜீவாதிபதி, தமது உடன் சகோதரர்களின் சுகதுக்கங்களில் பங்கடைகிறவராதலால், அவர்கள் துக்கத்தைக் கண்ணுற்று மனமுடைந்து கண்ணீர் சொரிந்து 'நீங்கள் அவனை வைத்த ஸ்தலமெங்கே' என்று வினவினார். அவர்களும் அவர்கள் நண்பர்களும் மரணத்தை ஜீவனாக மாற்றுகிற சஞ்சீவியும் மானுதிபதியுமான இயேசுநாதரைக் கல்லறையண்டைக்குக் கூட்டிக்கொண்டு போனார்கள். அச்சமாதி குன்றில் வெட்டப்பட்ட ஓர் குகையாயிருந்தது. அதின் வாயிலில் ஒரு பெரிய கல் வைக்கப்பட்டிருந்தது. இயேசுபகவான் அதைக் கண்டு, 'கல்லை எடுத்துப்போடுங்கள்' என்று கட்டளையிட, மாண்டவனுடைய தமக்கை கொஞ்சம் சந்தேகித்து, 'ஆண்டவரே, எம் சகோதரன் மரித்து, நாலுதினங்களானதால் நாறுமே' என்று சொன்னாள். அவர் அவள் மொழியைக் கேட்டு 'நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் சொல்லவில்லையா' என்று கூறியபோது அவர்கள் ஆண்டவர் சொற்படி கல்லை எடுத்துவிட்டார்கள். ஜீவாதிபதி 'லாசருவே, வெளியேவா' என்று திருவாய்மலர்ந்து கூப்பிட்டார். இவ்வாக்கை மொழிந்தவுடனே திருவாக்குக்கு மறுவாக்கின்றி மாண்டு நாலுதினங்கள் மண்ணறையிலிருந்த லாசரு ஜீவனடைந்து எழுந்து பிரேதச்சீலைகளினால் கட்டுண்டவனாய் வெளியே வந்தான். அத்திசையிலுள்ள ஊர்களிலிருந்துவந்த திரள் ஜனங்கள் கண்டு, அதிக பிரமைகொண்டு வியப்படைந்து, இயேசுபகவானின் ஒப்பற்ற மாட்சிமையைத் துத்தியம்பண்ணி அம்மகிமைப்பிரதாபன் செய்த அற்புதத்தையும் அதில் மறைந்துள்ள அவர் திவ்ய வல்லமையையும் குறித்து எத்திசையிலும் பிரசித்தம் பண்ணினதால் ஆண்டவருடைய புகழும் கீர்த்தியும் அத்தேசங்களெங்கும் பிரபலமானது. அம்மகிமைப்பிரதாபனுக்கு விரோதிகளான அதிகாரிகளும் சாஸ்திரிகளும் யாதொன்றும் எதிர்ப்பேச முடியாமல் 'நாம் என்னசெய்கிறது. இம்மனிதன் அநேக அற்புதங்களை நடப்பிக்கிறானே. நாம் பார்த்துக்கொண்டு



இவனை இப்படியே விட்டுவிட்டால் எல்லாரும் இவனை விசுவாசிப்பார்கள். அப்போது ரோமர்கள் வந்து நமது ஜனத்தையும் நமது ஸ்தலத்தையும் பிடுங்கிக்கொள்வார்களே' என்று தீர்க்காலோசனை பண்ணி ஜீவாதிபதியை எவ்வகையிலும் மரணத்திற் கிரையாக்க வேண்டும் என்று தீர்மானித்தார்கள். (யோவா. 11. 47, 48.)

இயேசுநாதர் நடப்பித்த அற்புத காரியங்களைப் பார்க்குங்கால், அப்பெருமான் மனிதருக்கு மேற்பட்டவர் என்று உரைக்கச் சந்தேக மில்லை. அக்காலத்தவர் பலர் அச்சம்பவத்தைக் கண்டு, ஆச்சரியப் பட்டு, வியப்புக்குரிய அக்காரியங்களை செய்த புருஷன் மண்ணுக்கு ரிய மானிடனாயிராமல், அவதரித்துவந்த விண்ணுக்குரிய ஜகத்ரட்ச கரென்று நம்பினார்கள் (யோவா. 2. 23.). சாஸ்திரிகளிலும் சிலர் வெகு ஜாக்கிரதையாக அவரைப்பற்றி விசாரித்து அம்மகிமைப்பிர தாபன் செய்த கிரியைகளால் அவருடைய மகத்துவத்தை அறிந்து கொண்டவர்களானார்கள். அவர்களில் அதிகப் புகழுங்கீர்த்தியும் மதிப் பும் அடைந்து குருவென்னும் பேர்பெற்ற நிக்கொதேமு என்னும் பண்டிதன் ஒருவன் இயேசுபகவான் செய்த புதுமைகளைக் கண்டு, அவருடைய திவ்ய தரிசனைக்காக அபேட்சைகொண்டு அத்திருச்சொ ரூபியின் சமீபம் சேர்ந்து, 'ஸ்வாமி நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம். ஒருவனும் தன்னுடன் தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்ய மாட்டான்' என்று அவரை வியந்து, ஸ்துத்தியம்செய்து கூறினான் (யோவா. 3. 2.). இப்பண்டிதன் மொழிந்ததைக்குறித்து ஆட்சேபிக் கக் கொஞ்சமேனும் இடமில்லை. இயேசுபகவான் திவ்ய சுபாவலட் சணங்கள் அவர் செய்த அரிய அற்புதங்களைவிட அதிக வியப்புக் குரியவைகளானபோதிலும், மனிதர் பாவ ஆவேசங்கொண்டவர்க ளாய் பகற் குருடராகி அப்படிப்பட்ட அறிகுறிகளை அவ்வளவு சுளு வாகக் கண்டறியாமல் தங்கள் கண்காணும் அடையாளங்களைக் காண அபேட்சித்தார்கள். அவ்வகை அடையாளங்களை விரும்புகிறவர்க ளுக்கு இயேசுபகவான் செய்த அரிய அற்புதங்களைவிட வேறே அடையாளங்கள் விசுவாசத்திற்கு ஆதாரமாகமாட்டா. அத்திவ்ய புருஷன் தெய்வ மாகிமையுடையவர் அல்லாமற்போனால் அவ்வகை அரிய அற்புதங்களை எவ்வளவேனும் செய்யக்கூடாதவராகவே இருப்

பார். ஆண்டவர் ஓர் தருணத்தில் இவ்விஷயத்தைபற்றி 'என் பிதாவின் நாமத்தினாலே நான் செய்கிற கிரியைகளே என்னைக்குறித்து சாட்சியிடுகின்றன' என்று தமது சீஷருக்குத் தெரிவித்தார் (யோவா. 10. 25.). மேலும் அப்பரமகுரு தமது ரட்சணிய கிரியைகளை நிறைவேற்றி பரலோகத்துக்கு எழுந்தருளிய பின்னர், அவரது சீஷர்கள் தம் குரு செய்த அற்புதங்களைப் பிரசித்தம்பண்ணி அவைகளைக் கொண்டே தம் குருவாக்கை ஸ்திரப்படுத்தி, அவ்வற்புதநாதர் உலக மீட்புக்கென்று நியமிக்கப்பட்ட ரட்சகரென்பதை ரூபகாரப்படுத்தி இருக்கிறார் என்று பிரசித்தம் செய்துவந்தார்கள் (அப். 2. 22.). இவ்வாதம் மறுக்கக்கூடாததாகையால் இயேசுபகவான் தம்மைக்குறித்து வெளிப்படுத்திய யாவும் அவர் கிரியைகளினால் உறுதியானதென்று கூறுவதற்குச் சந்தேகமில்லை. தம் போதனையினாலும் அற்புதக்கிரியைகளினாலும் அப்பரப்பொருள் தமது தெய்வீகத்தைத் தெளிவாக வெளியிட்டார்.

இயேசுபகவான் அதிக வியப்புக்குரிய மாட்சிமை பொருந்திய கிரியைகளினால் தமது மகத்துவத்தை வெளிப்படுத்தினபோதிலும் அம்மகிமைப்பிரதாபன் அடைந்த மரணப்பாடுகளைப்பற்றிச் சிலர் சந்தேகங்கொள்வார்கள். அவர் பரலோக மெழுந்தருளிய உடனே அவருடைய சீஷர்களுக்குப் பகையாளியானவர்கள், இச்சங்கதியை எடுத்துரைத்து 'நீங்கள் சிலுவையில் அறையுண்ட தெய்வத்தை வணங்குகிறவர்கள் அல்லவா' என்று இகழ்ந்து பேசினார்கள். தற்காலத்திலும்கூட சிலர் அப்புண்ணிய மூர்த்தியினது மரணப்பாடுகளின் பொருளை உணராதவர்களாய் இயேசுகிறிஸ்து தெய்வமாய் இருக்கும் பட்சத்தில் இவ்வளவு அவமானமும் பாடும் அடைந்து கொலைபாதகனைப்போல் சிலுவை மரணமடைந்து மாளலாமா என்று ஆட்சேபனை செய்கிறார்கள். இயேசுபகவான் கொடுத்த சாட்சியை விசாரித்துப்பார்க்கையில் இவ்வாட்சேபனைக்குத் தகுந்த ஆதாரமொன்றும் இல்லை என்று வெளியாகும். இதைக்குறித்து நாம் மூன்று சங்கதிகளைக் கிரகித்து ஞாபகம் பண்ணிக்கொள்ளவேண்டும். அவை என்னவெனில்:—

(1.) முற்கால தீர்க்கதரிசிகள் வரப்போகும் ரட்சகர் அதிகப் பாடுபட்டு மனிதருக்காக மரணமடைய வேண்டுமென்று முன்னுரைத்தார்கள். கிறிஸ்து சகாப்தத்திற்கு 600 ஆண்டுகளுக்குமுன் யூதேயா தேசத்தில் எசாயா என்னும் தீர்க்கதரிசி இதைக்குறித்து வெகு தெளிவாக எழுதியிருக்கிறார் (எசா. 53. அதி.). இயேசுபகவான் சமாதியிலிருந்து ஜீவாதிபதியாக உயிர்த்தபிறகு முன்னோர்கள் உரைத்த தீர்க்கதரிசனங்களை எடுத்துரைத்து இச்சங்கதியைத் தமது சீஷர்களுக்கு விளக்கிக் காட்டினார் (லூக். 24. 25–27.). மேலும் நாம் முன்னமே பார்த்தபடியே ருக்வேதத்தை இயற்றிய ரிஷிகள் இவ்விஷயத்தைப்பற்றி பிரஜாபதி தம்மைத்தாமே யாகமாகச் செலுத்தினார் என்று மொழிந்த வாக்கு இதற்கு நன்றாக இசைகிறது.

(2.) இயேசுநாதர் மற்றவர்களுக்காகவேயன்றி, தம்பொருட்டு மாண்டவர் அல்லர். 'நானே நல்ல மேய்ப்பன். நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்' என்று அந்த குரு தமது சீஷருக்கு முன்னுரைத்தார். (யோவா. 10. 11–15.)

(3.) இயேசுபகவான் தமது ஜீவனை இலவசமாகக் கைம்மாறின்றி கொடுத்தாரேயன்றி தாம் தப்புவித்துக்கொள்ள வழியின்றி மாளவில்லை. இதைக்குறித்து 'நான் என் ஜீவனை மறுபடியும் கண்டடைந்துகொள்ளும்படிக்கு அதை கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார். ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான். நானே அதைக் கொடுக்கிறேன். அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரமுண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரமுண்டு, என்று அப்பரமகுரு தமது அடியாருக்கு முன்னமே திருவுளம்பற்றினார் (யோவா. 10. 17, 18.). அக்காலத்திலுள்ள கிறிஸ்தவ பக்தசிரோமணி ஒருவர் இப்புதைபொருளின் பொருளையறிந்து, 'அவர் தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும்பொருட்டு இக்கடைசிகாலத்தில் ஒரேதரம் வெளிப்பட்டார்' என்று தெளிவாக எழுதினார் (எபி. 9. 26.). பிறர் பாரம் நீக்கும்பொருட்டு எவரேனும் அவமானத்திற்கும் தண்டத்திற்கும் உடன்பட்டால் அப்படிப்பட்டவர்களுக்கு வரும் அபகீர்த்தி எவ்வளவேனும் உண்டாகாது. விசேஷமாக மேன்மக்கள் பரோபகாரத்தினிமித்தம் தங்களுடைய மாட்சிமைதங்கிய நிலைமையைத் தள்ளி, பிறர் வருத்தத்தைத் தம்மேல் போட்டுக்கொண்டு, அவர்பொருட்டு நானாவித வாதை ...ளமான புகழ் உண்டாகுமேயன்றி

களைச் சகிக்கும்பட்சம், சகல ஜனங்களும் அவர்களுடைய பொறு மையையும் பரோபகார குணத்தையும் வியந்துபேசி, வெகுவாகப் புகழுவார்களல்லவா? இயேசுபகவான் செய்த அற்புத காரியங்க ளெல்லாவற்றிலும் அவர் தம்மைத்தாம் காப்பாற்றிக்கொள்ள வொண் ணுமல் மன்னுயிர்க்காகத் தம்முயிரைத் தத்தம்பண்ணினார் என்ற வர்த்தமானம் முற்றிலும் மனோகரமானது. ஜீவனைப் பெறவும் அந்த ஜீவனைத் திரும்ப விடவும் சர்வாதிகாரமுடைய பிராணநாதர் தம் அதி காரத்தை வெறுத்து சீர்கெட்ட உலகோர்பொருட்டு பிராணனைத் தத்தம்பண்ணத் துணிந்து தம்மைத்தாம் அவமான மரணத்திற்கு ஒப்புக்கொடுத்ததைப்பற்றி யோசிக்கும்போது, மிகவியப்புக்குரிய இப்பரோபகாரத்தை நிறைவேற்றினவர் தேவனேயன்றி வெறும் மனிதன் அல்ல என்று நிச்சயிக்காதிருக்க நீதியில்லை.

இயேசுநாதர் நம்பொருட்டு மாண்டபோதிலும், அவர் மரணத் திற்குட்படாமல் தாம் முன்னுரைத்தபடியே திரும்ப ஜீவனடைந்து ஜீவாதிபதியாய் உயிர்த்தெழுந்தார். அவர் பிராணத்தியாகம் செய்த பிறகு அவருடைய தொண்டரில் சிலர் வந்து திவ்ய பரப்பொரு ளின் திருமேனியைக் கல்லறையில் அடக்கம் செய்தார்கள். பிறகு அத்தேசாதிகாரிகள் அவருடைய தொண்டர் ஒருவேளை தங்குருவின் சரீரத்தை மறைத்து, தம் ஆண்டவர் திரும்ப ஜீவாதிபதியாக எழுந் தருளினார் என்று பிரஸ்தாபம்பண்ணுவார்கள் என்று சந்தேகித்து அக்கல்லறைவாசலை பெரிய கல்லால் மூடி முத்திரைபோட்டு போர்ச் சேவகரைக் காவல் வைத்தார்கள். இரவில் கதிரவன் கண்ணுக்கு மறைய[illegible] கல்லறையில் அவர் மறைந்திரு[illegible], மூன்றாம்நாள் அருணோதயவேளையில் தேவதூதர் தம்மை[illegible] அடிபணிய, பூதலங் குலுங்க, காவலர் செத்த வர்போல[illegible] மரணத்தையும் பாதாளத்தையும் வென்ற வேந்தனாய் ஜீவனடைந்து கல்லறையிலிருந்தெழுந்து வெளியே வந்து, தமது சுயேச்சையாகச் சென்றார். இது சொல்லற்கரிய புதுமையானா லும் இச்சம்பவம் நிச்சயமாய் நடந்ததென்பதற்குச் சந்தேகமொன் றும் இல்லை. இது இடையில் உண்டான சங்கதியல்ல. அக்காலத்தி லுள்ள கிறிஸ்துபகவான் தொண்டரனைவரும் அதைக்குறித்து வெகு பலமான சாட்சி கொடுத்திருக்கிறார்கள். ஆதிச்சீஷர்கள் மற்ற எல்லா



சங்கதிகளையும்விட தம் ஆண்டவர் மரணத்தை வென்று உயிர்த்த
சங்கதியை அதிக முக்கியமாய்ப் போதித்துக்கொண்டு வந்தார்கள்
(அப். 2. 23–34; 4. 33; 17. 18.). மேலும் அவர்கள் தங்கள் சிஷ
ருக்கு எழுதிய நிருபங்களில் இச்சுபசெய்தியை அடிக்கடி எடுத்
துரைத்துக் காட்டி அது சகல ஜனங்களுக்கும் சாதாரணமாகத் தெ
ரிந்த விசேஷம் என்று எழுதியிருக்கிறார்கள்! கிறிஸ்துநாதர் சமா
தியிலிருந்து திரும்ப ஜீவனோடெழுந்தருளுவது தமது விசுவாசத்
திற்கு முக்கிய ஆதாரமென்று அவர்கள் நிச்சயித்து இவ்வாறெழுதி
வந்தார்கள். இதைக்குறித்து பவுல் என்னும் தொண்டன் 'கிறிஸ்து
எழுந்திருக்கவில்லை என்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள்
விசுவாசமும் விருதா' என்று வெளிப்படையாகச் சொல்லுகிறான்.
(1 கொரி. 15. 14.)

இவ்வகைச் சாட்சியைத் தள்ளிவிடுகிறதற்குப் போதுமான ஆதா
ரம் இல்லை. ஆதிச்சீஷர்கள் ஆவேசத்தையோ அல்லது வேறெதை
யோ கண்டு வீண் பிரமைகொண்டு இவ்வண்ணம் நம்பிவந்தார்கள்
என்று சொல்வதற்கிடமில்லை. அறிவீன ஜனங்கள் தம் அறிவுக்குத்
தக்கதாய் தாம் பிசாசுகள் பூதங்கள் முதலியவற்றைக் கண்டதாக
நம்புவார்கள் என்பது வாஸ்தவமானாலும் பரமகுருவின் சிஷர்கள்
சங்கதியைப் பரிசோதனைபண்ணி பார்க்கும்பட்சத்தில் அவர்கள்
அபிப்பிராயம் அப்படிப்பட்டதல்லவென்று விளங்கும். மாயத்தோற்
றத்தைக் கண்டு பிரமைகொண்டு அதை உண்மையென்று நம்புகிற
வர்கள் எப்போதும் தமது முந்தின மனோபாவனையை ஒட்டி நம்பு
வார்களேயொழிய தமது எண்ணங்களுக்கும் யோசனைகளுக்கும்
எதிரிடையாக நடந்ததென்று ஒருக்காலும் அபிப்பிராயங் கொள்
ளார்கள். மேலும் அவர்கள் தமக்குத் தோன்றின சங்கதியை எவ்வள
வேனும் பரிசோதனைபண்ணாமல் அதைப் பெருமையாக எண்ணுவார்
கள். இயேசுபகவான் சீஷர்கள் தம்மாண்டவருடைய உயிர்த்தெழு
தலுக்கு எதிர்பார்த்திருந்தவர்கள் அல்லர். அவர்களெல்லாரும் தம்
மாண்டவர் முன்னுரைத்த வார்த்தைகளை மறந்துவிட்டு, விசுவாசத்தை
தளரவிட்டு வெகு பயமுள்ளவர்களாய் தம்மாண்டவர் மாண்டுபோன
தால் தம் விருப்பங்கள், நம்பிக்கைகள் யாவும் வீணாய்ப்போயிற்
றென்று வெகுவாய் வியாகுலத்திற்குள்ளாகித் துக்கித்தார்கள் (லூக்.

24. 21.). இயேசு ஞானகுருவாகிய கிறிஸ்து சமாதியிலிருந்து உதயமானபிறகு அவர்கள் கண்ணாரக்கண்டு பூரணமாய் விசாரிக்கும்வரையில் அச்சம்பவத்தை நம்பாமற்போனார்கள். கிறிஸ்துவைக் காண கல்லறையைத் தரிசித்த ஸ்திரீகள் வந்து இதைக்குறித்துச் சொன்னபோதிலும் அச்சீஷர்கள் அவர்கள் வார்த்தையையாகிலும் ஏற்றுக்கொள்ளவில்லை (லூக். 24. 11.). மேலும் வேதாளத்தை வென்று பாதாளத்தைத் துறந்த வெற்றிவேந்தனாகிய இயேசு தம் சீஷர்களில் பத்துப்பேருக்குத் தரிசனம் அளித்து, அவர்களுடன் சம்பாஷணை பண்ணியபிறகு அச்சமயத்தில் வேறு எங்கேயோ போயிருந்த தோமா என்னும் தொண்டன், அவர்கள் வாக்கை ஏற்றுக்கொள்ளாமல் 'அவருடைய கரங்களில் ஆணிகளால் உண்டான காயத்தை நான் கண்டு, அந்தக் காயத்திலே என் விரலையிட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்க மாட்டேன்' என்று சொல்லி தான் தன் ஆண்டவரைக் கண்ணாரக் காணுமட்டும் நம்பாமலே இருந்தான் (யோவா. 20. 24–28.). பூமியின் தாழ்விடங்களிலிருந்து உதிக்கும் சூரியன் ஒருதினம் மாத்திரமல்ல வருஷம் முழுவதும் உலகோர்க்குக் காணப்படுமாறுபோல் கல்லறையிலிருந்துதித்த கதிரவனான இயேசுவும் ஒருதடவைமாத்திரம் காட்சியளிக்காமல், நாற்பது தினங்கள்வரையில் தமதன்பருக்கு இடைக்கிடையே தரிசனந்தந்து சகல விஷயங்களைக்குறித்தும் அவர்களுடன் பேசிவந்தார். ஒருவர் இருவர்மாத்திரம் இவ்வாறு தரிசித்திருந்தால் அவர்கள் வாக்கைக் கேட்டு, நம்பி, ஏற்றுக்கொள்வது சிறிது சந்தேகத்திற் கிடமாகும். ஆனால் இயேசுபகவான் ஜீவனோடெழுந்தருளியபிறகு ஏறக்குறைய 500 பேர் உயிர்த்தெழுந்த ஜீவாதிபதியைக் கண்ணாரத் தரிசனம்பண்ணி, கருத்தில்வைத்து, அவருடன் முகமுகமாய்ப் பேசி, அன்னபானம்பண்ணி, சந்தேகமற இனங்கண்டவர்களாயிருக்க, இவ்விஷயத்தில் நாம் சந்தேகங்கொள்ளுவது எவ்வாறு?

இயேசுநாதர் மரணத்தை ஜெயித்து ஜீவனடைந்து உயிரோடெழுந்தருளியதால் அவருடைய சீஷரிடத்தில் பெரிய மாறுதலுண்டானது. அவர்கள் அதற்குமுன் தம்மாண்டவர் உபதேசத்தை அவ்வளவு செவ்வையாக உணராமல் உலகத்தை நோக்கிப் பார்த்துச் சந்தேகப்பட்டுப் பயப்பட்டார்கள். தம் பரமகுரு சத்துருக்கள் கைகளில்



சிக்கி அவமானமும் பாடுகளும் அனுபவித்து மரணதண்டனைக் குள்ளாகி மரித்தபோது, அவர்கள் அதிகமாய்த் திகில்கொண்டு திக்குத் திசையறியாத ஆடுகளைப்போல சிதறிப்போனாலும் அந்த ஜீவாதிபதி மரித்தோரிடத்திலிருந்து ஜீவனுடையவராக எழுந்தருளியவுடனே தம்பயம் சந்தேகம் அனைத்தையும் நீக்கி சகலத்திற்கும் துணிந்தவர்களானார்கள். ஆண்டவரின் மரணத்திற்குமுன் யூதருடைய அதிகாரிகள் அவரை சபைக்குமுன் நிறுத்தி விசாரணைசெய்தபோது பேதுரு என்னும் சீஷன் அதிகமாய்ப் பயப்பட்டு 'நான் அவரை அறியேன்' என்று மூன்றுமுறை மறுதலித்தபோதிலும், அவர் மரணத்தை ஜெயித்து உயிர்த்தெழுந்தருளிய பிறகு, பேதுரு அதிக தைரியமடைந்து, அதிகாரிகள் செய்த துரோகத்தைக்குறித்து அவர்களைக் கண்டிப்பாய்க் கடிந்துகொண்டு, தன் ஆண்டவரின் சங்கதியைச் சகல ஜனங்களுக்கும் பிரசித்தம்பண்ணினான் (அப். 2. 14–23.). மேலும் எவ்வளவு வாதை நேரிட்டபோதிலும் அவன் கொஞ்சமாகிலும் பின்வாங்காமலும், தனக்கு வரப்போகிற சிலுவை மரணத்தைக் கூட ஒருபொருட்டென்றெண்ணாமலும், அதைக்குறித்து வெகு உற்சாகமாக எழுதிக்கொண்டுவந்தான் (2 பேது. 1. 14.). மற்ற அப்போஸ்தலர்களும் பேதுருவைப்போலவே பெரிய மாறுதலடைந்து, கஷ்டம் நஷ்டம் சாவு முதலியவற்றை ஒரு பெரிய காரியமாக எண்ணாமல், அதிக தைரியசாலிகளானார்கள். அதிகாரிகள் அவர்களைப் பிடித்து அடித்து வாதித்தபோதும், அவர்கள் அணுவளவேனும் கிலேசப்படாமல் தாம் தம் பரமகுருவின் நாமத்தினிமித்தம் அவமானம் அடைகிறதற்குப் பாத்திரரானதிற்காக மனமகிழ்ச்சி கொண்டார்கள் (அப். 5. 40, 41.). அல்லாமலும் அச்சீஷரில் முக்கியமானவர்கள் மாத்திரமேயன்றி இயேசுபகவானை நம்புவோர் யாரோ அவர்கள் புருஷராயினும் பெண்டீராயினும் பிள்ளைகளாயினும் அவர்பொருட்டு வெகு சந்தோஷத்துடன் மானநஷ்டம் பொருள்நஷ்டம் பிராணநஷ்டம் முதலியவற்றை அடைந்தார்கள். அதற்குமுன் சிலுவை மரணம் அதிக அவமானமானதென்று குறைவுபண்ணிவந்தபோதிலும் தம்மாண்டவர் கொண்ட வெற்றியைக் கண்டபிறகு அவர் அனுபவித்த மரணப்பாடுகளைக் குறித்துக் களிப்படைந்து அதை வியந்து கொண்டாடினார்கள் (கலா. 6. 14.). அந்த ஜீவாதிபதி ஜீவன

டைந்து கல்லறையிலிருந் தெழுந்தருளியிராதபட்சத்தில் அவருடைய சீஷருக்கு இவ்வளவு ஆச்சரியமான மாறுதலுண்டாவது எவ்வண்ணம்? தம்மைத் தப்புவித்துக்கொள்ள மாளாமல் மரணாதிகாரத்துக் குட்பட்டவரானால், அவர்களுக்கு நம்பிக்கையாயினும் ஆதாரமாயினும் ஒன்றுமிராது. ஆகையால், ஒருவேளை ஆண்டவர் மரணத்திற்குக் கீழ்ப்பட்டவராயிருந்தால், அவர்கள் அநேகமாய் கொஞ்சக்காலம் அவர்மேல் ஞாபகமுடையவர்களாயிருந்து, அவர் சாற்றிய திருமறையை ஞாபகம் பண்ணிக்கொள்வார்களென்றாலும், காலம் செல்லச் செல்ல, அவருடைய குறைவை அறிந்தவர்களாய் அவரை மறந்துவிடுவார்கள். ஆகையால் ஆதிச்சீஷர்களின் தைரியம் பொறுமை என்பவற்றையும் அவர்களது சொல்லற்கரிய வல்லமையையுங் கண்டு தேகவியோகமான இயேசுபகவான் தம் வாக்குப்படி மரணத்தை ஜெயித்து வெற்றிகொண்டு ஜீவனுடையோராய் எழுந்தருளினார் என்பது வாஸ்தவம் என நிச்சயிக்கவேண்டியது அவசியம்.

கிறிஸ்துபகவான் தாம் உயிர்த்தெழுந்ததால் தம்முபதேசத்தை ஸ்திரப்படுத்தியிருக்கிறார். அவர் ஜீவனடைந்து உயிருடையவராய் எழுந்தருளியதால் மரணத்தின்மேல் அதிகாரமுடையவர் என்பதும் மற்ற மனிதர்போல் மரணத்திற்குக் கீழ்ப்பட்டவரல்ல என்பதும் ரூபகாரமானது. இவ்வளவு தெளிவான மகத்துவத்தைப் பார்த்து எண்ணிறந்த அற்புதங்களை நடப்பித்தவர் நிச்சயமாகவே ஜகத்ரட்சகராய்த் தம்மை அண்டிய யாவரையும் ரட்சிக்கிறதற்கு சமர்த்தராயிருக்கிறார் என்று ஒப்புக்கொள்ளவேவேண்டும். (ரோம. 1. 4, 5. எபி. 7. 25.)

இயேசுபகவான் சரித்திரத்தை எத்தனை விதங்களாக விசாரணை செய்தாலும் அவருடைய வாக்குக் கருமங்களால் அவரது தேவ தன்மை வெளியாகிறது.

(1.) அவரது உபதேசம் மனிதருடைய யோசனை எல்லாவற்றுக்கு மிஞ்சினது. அது முழுவதும் பட்சபாதமில்லாததும், களங்கமற்றதும், பூரணமானதும், எக்காலத்திற்கும் எத்தேசத்திற்கும் இசைந்ததுமானதாயிருக்கிறதேயொழிய, நாம் எவ்வளவு ஆராய்ச்சி செய்தபோதிலும் அதிலொரு பழுதாயினும் குற்றங்குறையாயினும் கிடையவே கிடையாது. அப்பரமகுருவின் திவ்ய லட்சணங்களையும் மனிதருடைய ஸ்திதியையும் திட்டமாய்த் தெரிந்துகொண்டு சகல மனிதரும் லேசாய்



அறிந்து பற்றிக்கொள்ளும்பொருட்டு மோட்சவழியை வெளிப்படுத்தினார்.

(2.) இயேசுபகவான் திருப்போதனையை அங்கிகரித்தவர்கள் பாவபாரத்தைப் போக்கடித்து மனச்சமாதானம் சம்பாதித்துக்கொண்டார்கள். அவரது உதவியினால் அவர்கள் பெரிய மாறுதலடைந்தவர்களாய், பாப இச்சைகளை அடக்கிவென்று, நீதிநெறிகளைக் கைக்கொண்டு, அநுசரித்து நடந்துகொள்ள புதிய பெலமடைந்தார்கள். இயேசுநாதர் செய்த காரியங்கள் மானிடர் சக்திக்கு மேற்பட்டவை. ஒரு கருவியுமின்றி தம் வாக்கினாலேயே சகல ரோகங்களையுஞ் சுகப்படுத்தி மாண்டோரை ஜீவனுடையவர்களாக்கிவந்தமையால், அவர் சர்வாதிகாரசம்பன்னர் என்று உரைக்க சந்தேகமில்லை. கிறிஸ்துபகவான் தீயோர்களால் அவமான மரணம் அடைந்தபோதிலும் மூன்று தினங்கள் கல்லறையிலிருந்தபிறகு அவர் திரும்ப ஜீவனடைந்து உயிர்த்தெழுந்தருளி, நாற்பது நாட்களாக தம்மடியாருக்குக் காட்சியளித்து, கடைசியில் மேகவாகனராய் மேலுலகுக்கு எழுந்தருளினார். இவ்வளவு மகத்துவத்தையுங் காட்டினவர் தம் அநுபவத்தையொட்டித் தாம் அவதரித்துவந்த ஜகத்ரட்சகரென்றும், தம்மை நம்பி தமது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிகிறவர்கள் யாவரும் பாவ விடுதலையடைந்தவர்களாய் மோட்சபதவி யடைவார்களென்றும், சொல்லுகிறபோது நமது சந்தேகம் அனைத்தையும் அகற்றி, அவரைப் பூரணமாய் நம்பி அப்பரமகுருவின் பாத பணிவிடையில் பிரவேசிப்பது அதிக உத்தமம் என்று உரைப்பதற்குச் சந்தேகம் என்ன?

# VIII. அதிகாரம்

## இயேசுகிறிஸ்து சர்வாதிகாரமுடையவராய் லோக பரிபாலனம் பண்ணுகிறார் என்று ரூபித்தல்

கிறிஸ்துநாதரின் சரித்திரத்தை விசாரித்து அப்பரமகுரு தமது உச்சிதமான போதகங்களினாலும் மனிதர் வல்லமைக்கு மேற்பட்ட தமது மகத்துவமான காரியங்களினாலும் தம் வாக்கை ஸ்திரப்படுத்தி தாம் மெய்யாய் அவதரித்துவந்த ஜகத்ரட்சகர் என்று ரூபகாரம் பண்ணினார் என்று முந்தின அதிகாரத்தில் ஸ்திரப்படுத்தியிருக்கிறோம். அவ்வண்ணம் விசாரணை செய்யுங்கால் இயேசுநாதர் விஷயத்தைப் பூரணமாய்ப் பரிசோதிக்காமல் அவர் மரணத்திற்குரிய தேகமுடையவராய் நடப்பித்த காரியங்களைமாத்திரம் ஆராய்ச்சிசெய்தோம். இவ்வகை விசாரணை போதும் என்பதற்கு இடமில்லை. ஒவ்வொரு விருட்சமும் தன்தன் கனியால் அறியப்படுமாகையால், கிறிஸ்துபகவான் அதிகாரம் எத்தன்மையுடையதென்று நிலைவரமாக அறிந்துகொள்ள விரும்பினால், இப்பூதல சரித்திரங்களையும் ஆராய்ச்சிசெய்து அப்பரமகுருவின் நோக்கம் சித்தியடைந்ததா இல்லையா? என்று சரியாய் அறிந்துகொள்ளவேண்டும். மேலோக ராஜனான இயேசுபகவான் விண்ணுலகிற்கு ஏகியபிறகு அவரது தொண்டர்கள் தம் இரட்சகனின் வர்த்தமானத்தைப் பிரசித்தம் செய்தபோது அத்தேசாதிபதிகள் பகைஞராகி அவர்களைக் கொன்று மரணத்திற்கு இரையாக்க ஆலோசித்தார்கள். அதன்மேல் அவர்கள் எல்லாரிலும் அதிகக் கீர்த்திப்பிரதாபமுடைய கமாலியேல் என்னும் ஓர் படிப்பாளி சபையில் எழுந்து 'இந்த மனுஷருக்கு ஒன்றுஞ்செய்யாமல் இவர்களை விட்டுவிடுங்கள். இந்த யோச



னையும் இந்தக் கிரியையும் மனுஷரால் உண்டாயிருந்தால் ஒழிந்துபோம்; தேவனால் உண்டாயிருந்தேயானால் அதை ஒழித்துவிட உங்களால் கூடாது; தேவனோடே போர்செய்கிறவர்களாய்க் காணப்படாதபடிக்குப் பாருங்கள்' என்று மொழிந்தான் (அப். 5. 38, 39.). இந்நியாயம் ஆட்சேபனைக்குரியதல்லாததால் இதை ஒட்டியே கிறிஸ்துபகவானின் சரித்திரத்தைச் செவ்வையாக விசாரிப்போம்.

பூர்வகாலத்தில் சிறப்புற்று விளங்கினவர்களின் சங்கதியை விசாரணைபண்ணுங்கால் அவர்கள் தம் ஜீவியத்தில் பெருங்காரியங்களை நிறைவேற்றி, சகல ஜனங்கள்மேலும் அதிகாரம் செலுத்திவந்தபோதிலும், அவர்கள் மரித்தபிறகு அவர்களுடைய அதிகாரம் சாதாரணமாய்ப் படிப்படியாய்க் குறைந்துபோனதென்று தெளிவாய் விளங்கும். கிறிஸ்துநாதர் வெறும் மனிதனாக மாத்திரமிருந்தால், அவர் அதிகாரமும் கொஞ்சங்கொஞ்சமாய் வலிகுறைந்துபோயிருக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. என்றாலும் உலகசரித்திரத்தை உற்றுப் பரிசோதித்துப் பார்க்குமிடத்தில் கிறிஸ்துபகவான் பூண்ட அதிகாரம் எத்திசையிலும் பரவுகிறதேதவிர, அது எவ்வளவேனும் குறைவடைகிறதில்லை என்று தெளிவாய்க் காணப்படும். இயேசுபகவான் இவ்வுலகில் மனுஷாவதாரியாய்ச் சஞ்சரித்தபோது, அவரது திருநாமம் ஓர் சிறிய தேசத்தில்மாத்திரம் சிறிது பிரபலமானதேயன்றி வேறெத்தேசத்திலும் பெயரெடுக்கவில்லை. மேலும் அக்காலத்தில் அத்தேசத்தில் சில நூறுகணக்கான மனுமக்களே அவரில் பயபக்தியுடையவர்களாகி அவர் திவ்ய சமயத்தைத் தழுவினர் (அப். 1. 15.). அப்பக்தர்கள் வறிஞர்களேயன்றி கனம்பெற்று பெயர் பிரஸ்தாபம் அடைந்தவர்களல்லர். உயர்ந்தோர் என்று பெயரெடுத்தவர்கள் யாவரும், கிறிஸ்துபக்தர்களுக்கு விரோதிகளாகி, அவர்களை ஹிம்சித்து வதைத்து, அவரது திருநாமத்தை நிர்மூலம்பண்ண தங்களால் கூடியமட்டும் போராடினார்கள். இப்படியிருக்கையில் வலிமையற்ற இம்மதம் சீக்கிரத்திலேயே நிர்மூலமாய்விடும் என்று நிச்சயிக்கலாமல்லவா? இயேசுவானவர் ஸ்தாபகம்பண்ணிய இம்மார்க்கம் இவ்வண்ணம் நாசமாகாமற் போனதுமாத்திரம் அல்ல, அப்பரமகுரு ரட்சிப்பை நிறைவேற்றி பரலோகம் எழுந்தருளியபிறகு அது வெகு வியப்பை பயக்கும்வண்ணமாய்ப் பரவிக்கொண்டுவந்தது. அவருடைய சீஷர்கள்

நாகரீகம் இல்லாதவர்களாயினும் பரிசுத்தாவியானவரால் ஏவுதலடைந்தவர்களாய் தம் ஆண்டவரைப்பற்றிய விஷயங்களைத் தைரியமாகவும் பொறுமையாகவும் போதித்து வந்தமையால் எண்ணிறந்தபேர் அவர்கள் வாக்கை அங்கீகரித்து பரிசுத்த மூர்த்தியான இயேசுபகவான் பேரில் பக்திகொண்டு அத்திருக்குருவினுடைய திவ்ய சமயத்தைத் தழுவினார்கள். அச்சீஷர் எருசலேம் என்னும் மாநகரில் முதல் முதல் பிரசங்கித்தபோது, மூவாயிரம் ஜனங்கள் இயேசுநாதர்மேல் விசுவாசம்வைத்து அவரது திருநாமத்தில் ஞானஸ்நானம் என்னும் திவ்ய தீட்சைபெற்றார்கள் (அப். 2. 41.). அதிகாரிகள் அவர்களைத் துன்பப்படுத்தினதினால் எண்ணிறந்தபேர்கள் சுயதேசத்தைத் துறந்து பரதேசிகளாக ஓடிப்போனார்கள். என்றாலும் எத்தேசங்களுக்குப் போனபோதிலும் அவர்கள் கிறிஸ்துநாதருடைய சுபவர்த்தமானத்தை பிரசுரஞ்செய்யத் தவறாததால் சில வருடங்களுக்குள்ளாக இயேசுநாதரின் திருநாமம் சகலதேசங்களிலும் பிரபலமானது. (அப். 8. 1-4.)

கிறிஸ்துமத சரித்திரத்தை ஆராய்ச்சிசெய்தால் அது அற்புதங்களனைத்திலும் அதிக வியப்புடையதாய்க் காணப்படும். லோகாதிகாரிகள் அனைவரும் ஒருமித்து அதை நிர்மூலமாக்கப் பிரயத்தனம் பண்ணியபோதிலும், அவர்கள் பிரயத்தனம் யாவும் வீணாகி, அவர்களே நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாகக் குறைந்துகொண்டுவந்தார்கள். 'வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று; அந்தக் கல்லின்மேல் விழுகிறவன் எவனோ அவன் நொறுங்கிப்போவான், அது எவன்மேல் விழுமோ அவனை நசுக்கிப்போடும்' (லூக். 20. 17, 18.) என்று இயேசுநாதர் தம்மதிகாரத்தைக்குறித்து உரைத்த வாக்குப் பூரணமாய் நிறைவேறினது. யூதர்கள் கிறிஸ்துபகவானின் திருமறையை ஏற்றுக்கொள்ளாமல் அவரை அவமதித்து மரணசிட்சைக்கு ஒப்புக்கொடுத்தார்கள். மேலும் அந்தப் பரமகுரு இம்மாநிலத்தைவிட்டுப் பரலோகத்திற் கெழுந்தருளியபின்னர் அவர்கள் அப்பெருமானின் தொண்டரை வெகுவாய் இம்சித்து அவரது திருநாமத்தை நிர்மூலஞ்செய்ய பலவாறாய்ப் போராடிவந்தார்கள். இயேசுநாதர் பூலோகவாசியா யிருந்தபோது அவர்கள் மனக்கடினத்தைக் கண்ணுற்று, மிகவும் மனநோவடைந்து, அவர்களுடைய சிறப்புற்ற தேவாலயமும் அதிக மேன்மைபொருந்திய அவர்களுடைய



நகரமும் சர்வநாசமாகும் என்றும், அந்த ஜனங்கள் சொல்லற்கரிய துன்புறுவார்கள் என்றும் அவர்களுக்கு அவர் முன்னுரைத்தபோதிலும், அக்கொடியோர் புண்ணியமூர்த்தி வாக்கைப் புறக்கணித்துத் தள்ளி செவிகொடாமற்போனார்கள் (லூக். 19. 42-44.). இயேசுநாதர் இகலோகந் துறந்து பரலோகமேறி நாற்பதாண்டுகள் சென்றபின்னர் சத்தியவாசகராகிய அவர் முன்னுரைத்தவண்ணம் ரோமர்கள் அந்நகரை வசப்படுத்தி, அக்கினிக்கிரையாக்கி, அதைச் சர்வநாசம் பண்ணினார்கள். யூதர்கள் தங்கள் ராஜ்யத்தை இழந்து நாநாதேசங்களிலும் சிதறுண்டு அக்காலமுதல் தற்காலம்வரையில் சுயஸ்தலமில்லாத பரதேசிகளாயிருக்கின்றார்கள்.

யூதர்கள் மாத்திரமேயன்றி அப்பரமகுருவின் போதனையை எதிர்த்த புறமதஸ்தர்களும் சீர்குலைந்து சிதைந்துபோனார்கள். இயேசுநாதரின் திரு அவதாரத்துக்குமுன் கிரேக்கதேசத்தார் சகல கல்விகளிலும் பெயரெடுப்புடையவர்களா யிருந்தார்கள். அந்தக் கிரேக்கப் பண்டிதரும், புலவரும் இயற்றிய நூல்களைவிட சிரேஷ்டமானவை ஒன்றுமில்லை என்று தற்கால வித்வான்கள் அனைவரும் சாதாரணமாக ஒப்புக்கொள்கிறார்கள். கிறிஸ்து பக்தர்கள் இக்கிரேக்கரிடம் போய் தம் ஆண்டவரின் வர்த்தமானத்தைக்குறித்து போதிக்கையில் அவர்கள் முதலில் வெறுப்பைக் காட்டி, அச்செய்தி முற்றிலும் அவிவேகம் என்று கருதி அதை முற்றிலும் நிராகரித்தார்கள். அவர்கள் கல்விமதங்கொண்டவர்களாயினும் நாளடைவில் அவர்கள் கைக்கொண்டுவந்த நியமநிதிகள் யாவும் தள்ளுண்டுபோக, அவர்கள் குறைவுபண்ணின இயேசுநாதர் சுபவர்த்தமானம் சகல தேசங்களிலும் பரவிப் பிரபலமானது.

இயேசுபகவான் ஜன்மித்தகாலத்தில் ரோமர்கள் தங்கள் நிகரற்ற பராக்கிரமத்தால் இங்கிலாந்துமுதல் அரபியாவரையில் மேற்கிலுள்ள சகல தேசங்களையும் சுயாதீனஞ்செய்து அரசியற்றி வந்தனர். அவர்கள் சக்கிரவர்த்திகள் ரோமாபுரியில் வாசஞ்செய்து நாநாதேசங்களுக்குங் கவர்னர்களை நியமித்து அவர்கள் மூலமாய் ராஜ்யபரிபாலனம் செய்துவந்தார்கள்.

அச்சக்கிரவர்த்திகள் தமக்குச் சர்வாதிகாரம் சூட்டிக்கொண்டு தேவர்களுக்குச் செய்கிறதுபோல் சகல ஜனங்களும் தமக்குத் திவ்ய

பூஜை செய்யவேண்டுமென்று சட்டம் நிருபித்தார்கள். கிறிஸ்து
சமயம் பிரபல்யமாகுமுன் இவ்வதிகாரிகள் அந்நிய மதத்தைக் குறைவு
பண்ணி அதை ஒரு பொருட்டாய் எண்ணாமல் ஆசாரவிஷயத்தில்
அவரவர் இஷ்டப்படி அவர்களை நடக்கவிட்டபோதிலும் கிறிஸ்து
மதம் சீக்கிரத்தில் விர்த்தியடைந்ததால் பொறாமைகொண்டு அதை
நிர்மூலம் செய்யும்படி வேண்டிய பிரயத்தனஞ்செய்தார்கள். அவர்
கள் கிறிஸ்துபகவானின் பக்தர்களுக்கு உண்டுபண்ணின வருத்தங்
களும் துன்பங்களும் சொல்லற்கரியவை. அவர்கள் ஆஸ்தி யாவற்
றையும் அபகரித்து அவர்களைப் பிடித்துக் காவலில் போட்டார்கள்.
ஏராளமானபேரைக் கொடிய மரணத்திற் கிரையாக்கினார்கள். சிலரை
நாடகசாலையில் துஷ்டமிருகங்கள் நடுவில் போட்டார்கள். சிலரை
தூண்களோடு கட்டி தீக்கொளுத்தி தகனம்பண்ணினார்கள். வேறு
சிலரை ஆணிகளால் சிலுவையி லறைந்து கொன்றார்கள். இயேசு
நாதர் காலம் முதற்கொண்டு மூன்று ஆண்டுகளாக ராஜ்யாதி
காரிகள் யாவரும் அதிக விரோதிகளாகிக் கிறிஸ்துநாதன் நாம
தேயத்தை நாசம்பண்ண நோக்கங்கொண்டு அப்பேர்கொண்ட யாவ
ரையும் வெகுவாய் சித்திரவதை செய்துவந்தார்கள். ஆகிலும் அவர்
கள் எவ்வளவாய்ப் போராடி எவ்வளவோ இடையூறுகள் உண்டு
பண்ணியபோதிலும் தெய்வ நியமமான கிறிஸ்துமதம் சகல இடங்களி
லும் விருட்சக்கிளைகள்போல் வியாபித்து வந்ததேயொழிய எவ்வள
வேனும் குறையவில்லை. கிறிஸ்துபக்தர்கள் லோகாதிகாரிகளின்
பிரயத்தனங்கள் யாவையும் மீறி, தம் பரமகுருவின் திருநாமத்
தைப் பிரபலப்பண்ணினது அதிக வியப்புக்குரிய செய்கை என்
பதற்குச் சந்தேகமில்லை. ஆதிக்கிறிஸ்தவர்களுக்குக் கனமாகிலும்
தனமாகிலும் கல்வி சாமர்த்தியமாகிலும் இல்லாவிடினும், அவர்
கள் சாதாரணமான ஸ்திதியிலிருந்தவர்கள். இதைப்பற்றி பவுலென்
னும் பக்தசிரோமணி எழுதிய தென்னவெனில்: 'சகோதரரே, நீங்
கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள், மாம்சத்தின்படி
ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள்
அநேகரில்லை. ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில்
பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்; பலமுள்ளவைகளை
வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத்



தெரிந்துகொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி உலகத்தின்
இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்
லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார்' என்பதே (1 கொரி.
1. 26–28.). கிறிஸ்துசமய சரித்திரத்தை வாசித்துப்பார்க்குமிடத்
தில் இவ்வாக்குப் பூரணமாய் நிறைவேறிற்றென்று தெளிவாய் விளங்
கும். கிறிஸ்து சமயத்தை ஒருமனதாய் விரோதித்துப் பகைத்த
யூதர்களுடைய மதவைராக்கியமும், கிரேக்கருடைய கல்விமதமும்,
ரோமருடைய பராக்கிரம பெருமையுமான இவை யாவும் படிப்
படியாய்க் குறைந்துவர, நட்சத்திரங்கள் நடுவில் சூரியன் பிரகா
சிக்கிறாற்போல் சகல நாமங்களுக்கும் மேலாக இயேசுநாதரது
திருநாமம் அதிகமாய் ஓங்கி வளர்ந்து எத்திசைகளிலும் கீர்த்திபெற்
றது. மூன்று நூற்றாண்டுகள் சென்றபிறகு ரோம அதிகாரிகள்
தங்கள் சக்கிரவர்த்தி சமேதராய் கிறிஸ்துமத மாட்சிமையை எதிர்க்க
முடியாமல், தமது துராலோசனைகளை அகற்றிவிட்டு இயேசுபக
வான் பூண்ட அதிகாரத்திற்குச் சம்மதித்து, அவரது திருப்பாத
சரணமடைந்து, அவர் திவ்யமார்க்கத்தில் பிரவேசித்தார்கள். கிறிஸ்து
மதத்தைத் தழுவியதால் படிப்படியாய் நிலைதடுமாறிச் சிதைந்து
போகும் ஸ்திதியிலிருந்த அவர்கள் அரசாட்சி இன்னும் சிறிது
காலம் நிலைபெற்றது. என்றாலும் அவர்கள் கிறிஸ்து சமயிக
ளானபோதிலும் தங்கள் ஆணவம் அகந்தை மேட்டிமை முதலிய
அகங்கார குணங்களை விட்டுவிடாமல் அநேக விஷயங்களில் அம்
மார்க்க சட்டங்களை விருதாவாக்கி தம் சுயேச்சைப்படி நடந்து
கொண்டு வந்தமையால் பூர்வத்தில் நாகரீகமில்லாமல் வெகு வீரிய
மும் மூர்க்கமும் மாத்திரமுடைய வடதேசத்தார் அவர்கள்மேல்
எழும்பி தன் கரை கடந்து வேகமாக பிரவாகித்து ஓடுகிற நதியைப்
போல் அவர்கள் ராஜ்யம் அனைத்தையும் பறித்துக்கொண்டு, அவர்
கள் மேன்மையனைத்தையும் நிர்மூலம் செய்து, அவர்களுக்குக் கீழ்
ப்படிந்திருந்த சகல தேசங்களிலும் தம் அரசாட்சியை ஸ்தாபித்துக்கொண்
டார்கள். இவ்வண்ணம் வடதேசத்திலிருந்துவந்த பிரஜைகள் புற
மதஸ்தர்களாயிருந்து அநேக தேவதைகளை ஆராதித்து நாகரீக
மற்ற ஆசாரங்களை ஆசரிக்கிறவர்களாயிருந்தபோதிலும் அவர்
கள்கூட ஜெகத் பரிபாலனை திவ்யரட்சகரின் மட்டற்ற தயவின்

மாட்சிமையால் ஜெயிக்கப்பட்டவர்களாகி, அவர் சமயத்தைச் சேர்ந்து அவரைத் தம்மாண்டவராக அங்கீகரித்தார்கள்.

நாம் எத்திசையில் பார்த்தபோதிலும் இதரமதங்கள் யாவும் படிப்படியாகக் குறைந்துகொண்டுவர கிறிஸ்துசமயம் மாத்திரம் சகல தேசங்களிலும் விர்த்தியடைந்து வருகின்றது. இந்தியா தேசத்தில் சிலர் இதனுண்மை அறியாதவர்களாய் கிறிஸ்துமார்க்கம் திவ்விய நியமமாயிருக்கும்பட்சத்தில் அது இவ்வளவு குறைவாயிருப்பதற்குக் காரணமென்னவென்று ஆட்சேபிக்கிறதுண்டு. அவர்கள் ஆட்சேபனை முற்றிலும் ஆதாரமற்றது. பூகோள சாஸ்திரத்தைப் பரிசோதித்துப் பார்க்கையில் சகல மதங்களைவிட கிறிஸ்துமதம் வெகு பிரபலமாயிருக்கிறதென்று விளங்கும். ஹிந்து சமயிகளைவிட கிறிஸ்துமதஸ்தர்கள் இருமடங்கு அதிகரித்திருக்கிறார்கள். மேலும் தற்காலத்தில் கல்வியிலாகிலும் தனத்திலாகிலும் பராக்கிரமத்திலாகிலும் மேம்பட்டான ராஜ்யங்கள் யாவும் கிறிஸ்துமதத்தைத் தழுவினவைகளே. அம்மதத்தைத் தழுவாதவர்களுக்குச் சாதாரணமாக பலமாகிலும் கனமாகிலும் கிடையாது. இதுவுமன்றி கிறிஸ்துசமயத்தை அநுசரியாத சகல தேசங்களிலும் இயேசுநாதர் திருநாமம் படிப்படியாய் பிரபலமாகிக்கொண்டு வருகிறது. இந்துதேசத்தில் கிறிஸ்து பக்தர்கள் வெகு சொற்பமாயிருந்தபோதிலும் ஜனத்தொகையைப் பார்க்குமிடத்தில், அவர்கள் வெகு துரிதமாய் அதிகரித்து வருகிறார்கள் என்று தெளிவாய் விளங்கும். நாற்பது ஐம்பது வருஷங்களுக்கு முன் பத்துலட்சம் கிறிஸ்து சமயிகள்கூட இல்லாதபோதிலும் இப்போது ஏறக்குறைய முப்பதுலட்சம்பேர் கிறிஸ்துநாதரின் திருநாமத்தைத் தரித்துக்கொண்டு கிறிஸ்துமத சட்டதிட்டப்படி நடந்து வருகிறார்கள். அல்லாமலும் கிறிஸ்துமார்க்கத்தைத் தழுவாத பலர் தமது முன்னுள்ள பகையைவிட்டு கிறிஸ்துமத சத்திய வாக்கை மனமகிழ்ச்சியுடன் கேட்டு அங்கீகரிக்கிறார்கள். மூட ஜனங்களில் எண்ணிறந்தோர் கிறிஸ்துநாதர உபதேசத்தைச் சிறிதளவு உணர்ந்து அதைவிட மேன்மையான மார்க்கம் வேறொன்றுமில்லை என்று ஒத்துக்கொள்ளுகிறார்கள். அன்றியும் கொஞ்சக்காலத்திற்குள் சகல ஜனங்களும் கிறிஸ்து பக்தர்கள் ஆவார்களென்பது தம் நம்பிக்கை என்று பெரும்பான்மையோர் ஒத்துக்கொள்ளுகிறார்கள்.



நாம் எத்தேச ஸ்திதியை விசாரித்தபோதிலும் கிறிஸ்துபகவான் திருமறை சர்வ ஸ்தலங்களிலும் பிரபலமாகி சகல மனிதரையும் படிப்படியாய் வசப்படுத்திக் கொள்ளுகிறதென்பதற்குச் சந்தேகமில்லை. இது மனிதருடைய பிரயத்தனத்தினால் நடக்கிற காரியம் அன்று. இயேசுபகவான் சமஸ்த லோகங்கள்மேலும் அதிகாரமுடையவராய் தாமே தம் திருவாக்கை இவ்வண்ணம் நிறைவேற்றுகிறார். இகத்திலிருந்து பரத்துக் கெழுந்தருளிய சமயத்தில் அப்பரமகுரு தம் சீஷரைநோக்கி 'வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்தாவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்' என்றார் (மத். 28. 18-20.). இவ்வாக்குப் பூரணமாய் நிறைவேறிவருகிறது. அப்பரமகுரு 1900 வருஷங்களுக்கு முன்னர் திவ்விய திருமறையோதி மற்ற மானிடரைப்போல மாண்டுபோனார் என்று எண்ணுவது அவிவேகம். அவர் ஜீவனுடையவராய் சமஸ்த லோகங்களையும் பரிபாலித்து சகல ஜனங்களையும் தம் திருச்சித்தப்படி ஆண்டு நடத்திவருகின்றார்.

அத்தேவகுமாரனை எதிர்த்தோர் யாவரும் படிப்படியாக சிதைந்து நிலைகெட்டுப்போனார்கள். இதற்கு உதாரணங்கள் பல உண்டு. பரலோகநாதர் விண்ணுக்கெழுந்தருளி 350 ஆண்டுகள் சென்றபின்னர், ஜூலியன் என்னும் ஓர் ராஜபுதல்வன் பட்டாபிஷேகம்பெற்று ரோமருக்குக் கீழான ராஜ்யங்கள்மேல் அரசாளத் தொடங்கினான். அவன் யுத்தத்திலும் சகல வித்தைகளிலும் அதிக நிபுணனாய்த் தன் ராஜ்யத்தைச் செவ்வையாகப் பரிபாலனஞ்செய்யும் நோக்கமுடையவனா யிருந்தபோதிலும் ஏதோ ஓர் காரணத்தினால் கிறிஸ்துமதத்திற்கு விரோதியாகி, அதைக் கண்டனம்பண்ணி பூர்வகாலத்து தேவதைகளின் பூஜையைத் திரும்ப நிலைநிறுத்த மனங்கொண்டவனாய், தன்னாலியன்ற முயற்சிசெய்யத் தொடங்கினான். தன் பிரஜைகள் இயேசுபகவான் திருமறைக்குக் கீழ்ப்பட்டால் அவர்கள் தன் அதி

காரத்திற்கு அவ்வளவு பூரணமாய் கீழ்ப்படியமாட்டார்கள் என்று நிச்சயித்து கிறிஸ்துசமயத்தை எவ்வகையிலும் நிர்மூலம் செய்வதற்குப் பலவாறாய் முயன்றான். முதலில் கிறிஸ்துமதஸ்தர்களிடத்தில் உள்ள குற்றங் குறைவுகளைக் கவனித்து, அவர்கள் பிரயத்தனங்கள் அனைத்தையும் விருதாவாக்கி, அவர்களை எளிதில் அடக்கிக்கொள்ளலாகும் என்று எண்ணினான். ஆயினும் சிறிதுகாலம் போராடின பிறகு தான் செய்யும் வழிவகைகள் யாவும் விருதாவானதைக் கண்டு, இவ்வபிப்பிராயத்தைத் தள்ளி பலவீனரான கிறிஸ்தவர்களுடன் மாத்திரமேயன்றி அக்கிறிஸ்தவர்கள் ஆராதிக்கும் பரலோக நாதனோடேயே போர்புரிந்து அப்பராக்கிரமனை ஜெயிப்பதே அவசியம் என்று நிச்சயித்துக்கொண்டான். அவன் அவ்வண்ணம் தீர்மானித்துத் தன் பிரயத்தனங்களை விட்டுவிடாதபோதிலும், இயேசுநாதரது நிகரற்ற திவ்விய மகத்துவத்தைக் கண்டறிந்து, அவ்வல்லவரின்மேல் பூரண வெறுப்புற்று, அவரது அதிகாரத்தைத் தொலைத்துவிட அதிக ஊக்கமுடையோனாய்ப் போராடினான். அவன் எவ்வளவு முயன்றும் அவன் செய்த சகல பிரயத்தனங்களும் சூரியன்முன் பனிபோல் சிறிதுபொழுதையால் படிப்படியாய் உண்மையாய்ப் பரிசோதித்து கடைசியில் இயேசுவானவர் தெய்வம் என்று நிச்சயித்தும் தன் அகந்தையைவிட மனமற்றவனாய் தானும் ஓர் தேவன் என்று நிச்சயித்துக்கொண்டு பிரஜைகள் யாவரும் தனக்கே பூஜை நைவேத்தியம் நடப்பிக்கவேண்டும் என்று சட்டமே பிறப்பித்தான். இவ்வகை வீண் மதியீனத்தினால் கிறிஸ்துமதஸ்தருடைய தேவாலயங்களை இடித்துத் தள்ளி, தரையோடே தரையாக தகர்த்து, அவர்கள் வேதநூல்களை அக்கினிக் கிரையாக்கி அவர்களைப் பலவாறாய் வாதித்துவந்தான். இதற்குமுன் அவன் அதிக விவேகசாலியாய் ராஜ்ய காரியங்களை செவ்வையாக வெகு திறமையுடன் நடத்திவந்தவனாயினும் ஜகத்ரட்சகர்மேல் இவ்வகை வெறுப்புற்றபிறகு அவன் அதிகாரம் கொஞ்சங்கொஞ்சமாக குறைந்துபோனது. ஆரணியஸ்தலத்தில் அகப்பட்டு மானத்தையும் ஜீவனையும் போக்கடித்துக் கொண்டவனானான். அவன் சத்துருக்கள் மத்தியில் அகப்பட்டு மாளும்போது தான் செய்துகொண்ட தீர்மானத்தை, மனவெடிப்போடு ஞாபகம்பண்ணி ரக்தசாகரத்தில் மூழ்கி தன்னிலும் வீரியமும்



பலசாலியுமான இயேசுபகவானுடைய திருநாமத்தை ஸ்மரணை செய்து 'ஓ கலிலேயனே! நீயே ஜெயித்தாய்! நீயே ஜெயித்தாய்!' என்று பெருங்குரலுடன் கூப்பிட்டுச்சொல்லி பிராணனை விட்டான். ஜூலியன் மகாராஜா மரணவஸ்தையில் உண்மையை அறிந்து இப்படிப் பிரலாபித்து முறையிட்டான் என்பதற்குச் சந்தேகமில்லை. கிறிஸ்துசமய அபிவிருத்திக்கு இயேசுநாதரே காரணர். பரலோக வேந்தன் திருத்தொண்டர்களால் அது சிறிதேனும் நிறைவேறக் கூடியது அல்ல என்றபோதிலும், அவர் அவர்களுக்குத் துணை புரிந்து, அவர்கள் பலவீனத்தால் விளையும் குற்றங்குறைவுகளைச் செவ்வைபண்ணி, அவர்கள் மாற்றான் பிரயத்தனங்களை தாறுமாறாக்கி, தம் மட்டற்ற மாட்சிமையால் தமது ராஜ்யத்தை சமஸ்த தேசங்களிலும் பரவச்செய்து வருகின்றார். பவுலென்னும் பக்த சிரோமணி உரைத்தபடி 'எல்லா சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப் போடுமளவுக்கும் அவர் ஆளுகை செய்யவேண்டியது' (1 கொரி. 15. 25.). ஜகத்ரட்சகர் திருச்சரித்திரத்தை ஆராயுங் காலத்தில் அப்பரலோகவேந்தன் அரசாட்சி இவ்வண்ணம் பிரபலமாயிருப்பது, அதிக வியப்புக்குரியது என்பதற்குச் சந்தேகமில்லை. பரம குரு மனிதரிடம் நயவசனிப்பாகப் பேசாமல், அல்லது அவர்களை வியந்து புகழ்ந்து ஸ்தோத்திரம்பண்ணாமல், அவர்கள் தம் சரீர இச்சைகளுக்கு இணங்காமலும், ஆணவம் அகந்தை முதலியவற்றிற் கிடங்கொடாமலும், தங்கள் சுயத்தைமட்டும் விரும்பாமலும், தம்மைத் தாம் வெறுக்கவேண்டும் என்று திருவுளம்பற்றினார். அப்பெருமான் திருவாய்மலர்ந்தருளிய உபதேசத்தைச் சீர்தூக்கிப் பார்க்குங்கால் இது விளங்கும். ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கை வைக்கக்கூடாதென்றும், தீமைக்குத் தீமை செய்யலாகாதென்றும், மனுஷர் தூஷித்துத் துன்புறுத்தும்போது சந்தோஷப்படவேண்டும் என்றும், பெரிய மனிதனாக இருக்க விரும்புகிறவன் சகலருக்கும் அடிமையாயிருக்க வேண்டுமென்றும், பிறர் பாரத்தைச் சுமந்து அவர்கள்பொருட்டு பாடுபட்டு உழைக்கவேண்டுமென்றும், கண்டிப்பாய் விரித்துரைத்தார். இவ்வித சட்டங்களைக் கைக்கொள்வது மனிதர் இயல்புக்கு முற்றிலும் எதிரிடையான காரியமன்றோ? என்றாலும் இவ்விதிகளின் பலாபலனைக் கண்டறிந்தவுடனே இது அதிக சிறந்ததென்று ஒத்துக்

கொள்ளவேண்டியிருக்கிறது. ஆகலால் மனிதர் எவ்வளவு மூடராயினும் இப்பிரமாணங்களைக் கைக்கொள்ளுகிறவர்களைப் பார்க்கும்போது தங்கள் துர்எண்ணங்களைக் கொஞ்சங் கொஞ்சமாய்த் துறந்து, இறுதியில் அதிசிரேஷ்டமான இத்தர்ம சாஸ்திரத்திற்கு அமைந்து கீழடங்குவது அவசியம் என்று ஒத்துக்கொள்ளுவார்கள். ஆதிக் கிறிஸ்தவர்கள் தம் நடத்தையால் இப்புதிய தர்ம சாஸ்திரத்தை ரூபகாரம் பண்ணிவந்தார்கள். அவர்கள் சகல பேதங்களையும் வெறுத்துத்தள்ளி சகோதரர்போல் ஒருமனதுடன் ஏகோபித்து அந்நியோந்நிய சகவாசம் செய்துவந்தார்கள். ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லி சொந்தம் பாராட்டவில்லை. 'சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது. நிலங்களையும் வீடுகளையுமுடையவர்கள் அவைகளை விற்று, விற்கப்பட்டவைகளின் கிரயத்தைக் கொண்டுவந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தார்கள். அவனவனுக்குத் தேவையானதற்குத் தக்கதாய்ப் பகிர்ந்து கொடுக்கப்பட்டது; அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றுங் குறைவாயிருந்ததில்லை' என்று அவர்கள் சரித்திரத்தினால் தெரியவருகிறது (அப். 4. 32-35.). மேலும் அப்பக்தர்கள் ஒருவர்ஜோலிக்குப் போகாமலும், தம்மைத் துன்பப்படுத்தினவர்களுக்குத் தீமைசெய்யாமலும், தம்மாண்டவர் திருவாக்குக் கிணங்க சகல மனிதருக்கும் உபகாரங்களை மனதாரக் கரிசனையுடன் செய்துவந்தார்கள். இதினால் மனிதர் அவர்கள் சகிப்பையும் நீண்ட பொறுமையையும் பட்சபாதமில்லாத அவர்கள் அன்பையும் கண்ணுற்று வியப்படைந்து, இவ்வளவு கனத்துக்கும் வியப்புக்கும் உரிய கனிகளைக்கொடுக்கும் மதோபதேசத்தைச் சொந்தமாக்கிக்கொள்ளப் பேராவல் கொண்டார்கள். இவ்வகைக் காதல்கொண்டு விசாரணை செய்தபடியால் அவர்கள் அக்கிறிஸ்தவர்கள் ஆராதிக்கும் புண்ணியமூர்த்தியின் வரலாற்றைத் தெரிந்துகொண்டு, அம்மகிபனுடைய நிகரற்ற நட்பினால் இழுக்கப்பட்டுப் படிப்படியாய் ஜாதிமானங்களைத் தள்ளி வையகமும் வானகமும் பணியும் வேந்தனுடைய அதிகாரத்துக்கு இணங்கி அவர் பாதசேவைக்குத் தங்களைப் படைத்தார்கள். உலக விரோதங்களைச் சூனியமாக்கி கடின இருதயங்களைத் தீயிலிட்ட வெண்ணெய்போல் உருகச்செய்வது அன்பின்மூர்த்தியுடைய அள



வற்ற அன்பே. இவ்வகைக் காரியங்களை நிறைவேற்றும் சக்தி இவ்வையகத்தில் வேறொன்றுமில்லை. கன்மலையை உடைக்கலாகும். பர்வதமனைத்தையும் தவிடுபொடியாக்கலாகும். ஆனாலோ கடினமுள்ள தந்திர மனதை இளக்குவது கூடாமை என்று வித்வான் வேமன்னு சொல்லியபடி இயேசுபகவான் தமது மட்டற்ற மாட்சிமையால் செய்வதற்கரிய இக்காரியத்தை நிறைவேற்றிவருகிறார். எத்தேசத்தவர் ஆயினும் எந்த ஸ்திதியினராயினும் மகிமைப்பிரதாபன் கனைகாணு அன்பினாலும் மன்னுயிர்பொருட்டு தாமடைந்த மானப்பாடுகளின் மகத்துவத்தினாலும் யாவரையும் சாதுவாக்கி சகலரிலும் பூரணபக்தியை உண்டுபண்ணுகிறார்.

நாம் எத்திசையில் விசாரணைசெய்தாலும் மனிதரில் இவ்வளவு பூரண பயபக்தியை உண்டாக்கினவர்கள் வேறு யாரும் இல்லை என்று வெளிப்படையாய்க் காணப்படும். மனிதர்கள் முற்காலத்திலுள்ள மகானுபாவர்களின் சரித்திரங்களை வாசித்து அவர்களை மெச்சிக்கொண்டபோதிலும் இயேசுபகவானை மாத்திரமே நேசித்து ஆராதிக்கிறார்கள். அவரது திருவரலாற்றைக் கண்டறிந்தவர்கள் அந்த ஜீவாதிபதி மாண்டுபோன மானிடன் என்று சிறிதேனும் வீண் எண்ணங்கொள்ளாது, அவர் ஜீவனுடையவராய்த் தம்மிடம் சதாகாலமாய் இருக்கிறார் என்றெண்ணி, அவரைத் தியானித்து, அவருடன் நெருங்கிய கூட்டுறவுபண்ணி வருகின்றார்கள். விண்ணரசுக்குரிய இவ்வொப்பில்லா வதிகாரம் வேறே எந்த வையக மன்னருக்காயினும் எந்த வைதீக குருவுக்காயினும் கிடையாது. சகல தேசங்களிலும் அப்பரமகுருவின் அடியார்கள் அவரை ஆராதித்து அம்மேலோனுடைய மகிமையின்பொருட்டுத் தமது சுயநயத்தைத் தேடாமல் வெறுத்துத் தள்ளி, தமது வேந்தனுடைய திருநாமத்தினிமித்தம் பலவாறாய்ப் பாடுபடுகின்றார்கள். இயேசுநாதருடைய வரலாற்றை வெளிப்படுத்தி அவருடைய ராஜ்யத்தை விரிவாக்கும்பொருட்டு அவருடைய பக்தர்கள் தங்கள் சுயதேசங்களை விட்டுச் சகல தேசங்களுக்கும் பரதேசிகளாய்ப் போகின்றார்கள். ஜனங்கள் எவ்வளவு மூடரும் மூர்க்கரும் குரூரருமாயிருந்தபோதிலும், கிறிஸ்துபகவானுடைய திருத்தொண்டர் உள்ளக்கனிவுடன் அவர்கள்மேல் மனதுருகி, அவர்கள் தேசங்களில் இறங்கி, அவர்கள் தேசபாஷையைக் கற்றுக்கொண்டு,

அவர்களுக்குக் கிறிஸ்துமார்க்க சத்தியத்தை உபதேசித்து, இயேசுபக வான் அளிக்கும் திவ்ய வரங்கள் அவர்களுக்கும் கிடைக்கும்படிக்கு செய்வதற்கு வெகுவாய் உழைத்தும் பாடுபடுகின்றார்கள். கிறிஸ்துபக வான் காலம் முதற்கொண்டு இதுவரையில் அவருடைய பக்தர்கள் தமதாண்டவர் காண்பித்த மாதிரிக்கிசைய கெட்டுப்போனவர்களைத் தேடி ரட்சிக்கும்பொருட்டு யாவையும் உதறித்தள்ளி, தங்கள் ஜீவனையும் போக்கடித்துக்கொண்டிருக்கிறார்கள். அநேக தலைமுறைகளாய் கிறிஸ்துமதஸ்தர்களா யிருக்கிறவர்கள் மாத்திரமேயன்றி பூர்வத்தில் அஞ்ஞான ஆசாரங்களில் மனதைச் செலுத்தி அதில் பிரமைகொண்டு கிறிஸ்துநாதருடைய உபதேசத்தைப் புதிதாக ஏற்றுக்கொண்டவர்கள் கூடவே வேலையில் என்கிற மனதுடன் ஊக்கமாய் தம்மாண்டவர் கிறி ஸ்துக்குத் தம் பிராணனையும் ஒரு பொருட்டென் றெண்ணாமல் துணிந்து பலவாறாய்ப் பாடுபடுகின்றார்கள். ஆறு வருஷங்களுக்குமுன் தென் சமுத்திரத் தீவுகளில் வாசம்பண்ணும் ஜனங்கள் வெகு மூர்க்கரும் மூடருமானவர்களாய் உண்மையான தேவனை அறியாமல் அவபக்தியான அஞ்ஞான ஆசாரங்களைக் கையாடி அன்யமார்க்க பயிற்சி செய்துவந்தார்கள். அவர்களில் சிலர் நரமாமிச பட்சணிகளான மிலேச்சர். இப்படி யிருக்கையில் சீமைதேச போதகர்களில் சிலர் அத்தீவுகளுக்குப் போய் அக்கொடியோர் மத்தியில் இரங்கி அவர்களுக்குக் கிறிஸ்துநாதர் வ லாற்றைப் போதிக்கத் தொடங்கினார்கள். முதலில் அந்த ஜனங்கள் அவர்கள் வாக்கை ஏற்றுக்கொள்ளாமல் அவர்களில் சிலரைக் கொன்று சிலரை வெகுவாய் இம்சித்துத் துரத்திவிட்டார்கள். ஆகிலும் படிப் படியாக ஜகத்ரட்சகருடைய சுவிசேஷத்தை அறிந்துகொண்டு தங்க ளெண்ணங்களை நீக்கி கிறிஸ்துசமயத்தைத் தழுவினார்கள். தற்காலம் அத்தீவுகளிலுள்ளோர் உபகாரட்சகர்பேரில் அதிக பயபக்தியுடையவர் களாய்த் தங்கள் ஜென்மதேசத்தை விட்டுச் சமுத்திரத்தைத் தாண்டி ஆயிரக்கணக்கான மைல் தூரத்திலுள்ள தேசங்கள் நாடுகளுக்குச் சென்று மனுவுருவெடுத்த இயேசுவின் மீட்பை அறியாதவர்களுக்கு அவர் வரலாற்றைத் தெரியப்படுத்தி வருகின்றார்கள். சில வருடங்க ளுக்குமுன் அவர்களில் சிலர் நியூகினியா என்னும் அதிபயங்கரமான தேசத்திற்குப் போய் அக்குடிகளுக்கு ரட்சண்யமார்க்க உபதேசங்களை உபதேசிக்கத் தொடங்கினபோது, அத்தேசத்தார் அதிக மூர்க்கவெறி



கொண்டு அவர்களில் பாதிப்பேரைப் பிடித்து வெகு கொடுமையாய் பட்டயத்திற்கு இரையாக்கினார்கள். மேலும் அத்தேசத்தினுடைய சீதோஷ்ணஸ்திதி தங்களுக்கு ஒத்துக்கொள்ளாததினால் மீதியானவர்களில் அநேகர் வியாதிப்பட்டு மாண்டுபோனார்கள். ஆதலால் அத்தேசத்துக்குப் போனவர்களில் ஒருவர் இருவர்மாத்திரமே மிகுதியானார்கள். இதினால் அவர்களுடன் சென்ற சீமைதேசத்துக் குரு துக்க சாகரத்தில் மூழ்கி அத்தீவுகளுக்குத் திரும்பிவந்து துயரமான அச்சங்கதியை அத்தீவாருக்குத் தெரிவித்தார். இவ்வளவு கஷ்டமுண்டான பிறகு எல்லாரும் சந்தேகிப்பார்களென்றெண்ணி அவர் யாரையுந் தெரிந்துகொள்ளவில்லை. என்றாலும் வாலிபர் படிக்கும் வேதசாஸ்திரசாலைக்குப் போய் இவ்விருத்தாந்தங்க ளனைத்தையும் அவர்களுக்கு விவரித்துச் சொல்லி அவர்களுடன் 'நான் உங்களைக் கேட்கக்கூடாது, என்றாலும் உங்களில் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துநாதரை நேசித்து அவர்பொருட்டு ஜீவனையும் எண்ணாமல் துணிந்து வருகிறவர்கள் யாராகிலுமிருந்தால் அவர்கள் முன்னால் வந்து சொல்லவேண்டும்' என்று தன் நோக்கத்தை வெளியிட்டார். அந்நிமிஷமே கேட்டவர்களெல்லாரும் எழுந்து நடிவந்து 'நாங்கள் வருகிறோம், நாங்கள் வருகிறோம்' என்று உரத்த சத்தமாய்ச் சொன்னார்கள். ஆதலால் அவர் உள்ளம் அதிகமாய் களித்தது. தான் விரும்பின அத்தனைபேரையும் தெரிந்துகொண்டு, அவர்களோடுகூட அத்தூரதேசத்திற்குத் திரும்பிப்போனார். அத்தேச மூர்க்கரின் கொடுமையைப் போக்கடித்து அவர்களில் தெய்வபக்தியை உண்டுபண்ணி அவர்களை அவ்வளவு மகிமையான காரியங்களுக்கு வழிநடத்தின வல்லமை திவ்ய சம்பந்தமானதேயன்றி, மனித சம்பந்தமானதல்ல என்று உரைக்க சந்தேகமுண்டா?

பரலோக மன்னனாகிய இயேசுபகவான் தமக்குத் திவ்யாதிகாரத்தைத் தரித்துக்கொள்வது ஆச்சரியமானாலும் கோடிக்கணக்கான பேர் அவ்வதிகாரத்திற்குச் சம்மதிக்கிறது அதைவிட ஆச்சரியமானது. அம்மகிமையின் ஆண்டவரின் மட்டற்ற தயவை அனுபவித்தவர்கள் தங்கள் சரீர ஆத்துமாக்களை அந்த தயாநிதிக்குப் படைத்து அவர்பொருட்டு யாவற்றையும் தள்ளவும் பலவாறான பாடுபடவும் ஆயத்தமாயிருக்கிறபடியால் சத்தியநாதர் தம்மைக்குறித்து உரைத்த வாக்குகள் பூரணமாக நிறைவேறின தென்பதற்குச் சந்தேகமில்லை. எளிய நிலைமையில்

ஜென்மித்து, ஏழைகளுடன் நெருங்கிய கூட்டுறவுபண்ணி ஜீவித்து,
அவமானத்தையும் சொல்லற்கரிய பாடுகளையும் சகித்து, கொலைபாத
கன்போல் சிலுவையில் மரணத்தியாகம் செய்த இயேசுநாதர், மனி
தர் யாவரையும் தமது தாசராக்கி, இப்பூதல மனைத்தையும் படிப்படி
யாக சுயாதீனம் செய்துகொண்டுவருகிறார். இப்புண்ணியமூர்த்தி
யின் விஷயத்தை பூரணமாய் விசாரித்துப் பார்த்தால் அவருடைய
சீஷனான பவுல் என்னும் பக்தன் சொன்னபடி 'தேவன் எல்லாவற்
றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின்நாமத்தில் வானோர்
பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்
படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்
தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்
திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்' என்பது
தெளிவாய்ப் புலப்படுகிறது. (பிலி. 2, 9–11.)
இரட்சண்யமூர்த்தியான இயேசுபகவான் தமது ராஜ்ய பரிபால
னத்தை உலகமெங்கும் ஸ்தாபித்து நிலைநிறுத்தியிருக்கிறார் என்று
உலகசரித்திரங்களால் வெளியானபோதிலும் இவ்வரசாட்சியினாலுண்
டான பலாபலன் என்னவென்று பலர் கேட்பதுண்டு. இவ்விஷயத்தை
விசாரித்துப் பார்ப்பது அவசியமே. கனிதரும் விருட்சத்தின் லட்ச
ணங்களை அறிய விரும்பினால் நாம் அவற்றின் கனிகளை அறுத்து [illegible]
பார்க்கவேண்டுமல்லவா? அவ்வண்ணமே மதவிசாரணை செய்கையி[illegible]
ஒவ்வொரு சமயத்தினாலுண்டான நன்மைகளை ஜாக்கிரதையாகப்
சோதனைபண்ணி, ஒவ்வொரு மதத்தின், பலாபலனைக்கொண்டே [illegible]
வொரு மதத்தின் லட்சணத்தைப் பகுத்தறியலாம். இவ்வி[illegible]ன்
அனுசரித்து கிறிஸ்துமத சரித்திரத்தை ஆராயுங்கால், அம்மதம் [illegible]ம்
சே பிரபலமாகிறதோ ஆங்குள்ள மனிதர் துரப்பியாசங்களைத் தவி[illegible]வர்
கொஞ்சங்கொஞ்சமாய்க் குணப்பட்டு வருகிறார்களென்று கா[illegible]டி
டும். இயேசுநாதர் இவ்வுலகத்தை விட்டுவிட்டவர் அல்ல. என்[illegible]ச்
ஆவிக்குரியவராய், சகல தேசங்களிலும் நடக்கும் காரியங்களைக் [illegible]
னித்து, சகல துரப்பியாசங்களையும் கண்டித்து, சகல பேதங்களை[illegible]
போக்கடித்து, நீதிநெறிமுறைகளை எங்கும் பரவச்செய்துவருகிறார்.
சிலர் கிறிஸ்துமதம் பரவிய தேசங்களின் ஸ்திதியை விசாரித்து
அவற்றிலுள்ள கேடுகளைக் கவனித்து ஆட்சேபனை செய்தபோதிலும்



நாம் வாஸ்தவமாய் விசாரிக்கும்போது அவர்கள் ஆட்சேபனைக்கு
ஆதாரமில்லை என்று விளங்கும். கிறிஸ்துசமயம் பரவின தேசங்
களில் தீமைகள் சொற்பமே. இதினால் அச்சமயத்தின் பெருமை திட்
டமாய்க் காணப்படும். நாம் எந்தத் தோட்டத்திற்குப் போய்ப் பார்த்த
போதிலும் அங்கே கொஞ்சம் களைகள் காணப்பட்டாலும் சோய்பேறி
தோட்டத்தில் அவை ஏராளமாகவும் சுறுசுறுப்பாளி தோட்டத்தில்
வெகு மட்டாகவும் இருக்கும், அவ்வாறே நாம் எத்தேசத்திற்குப்
போய் விசாரணைசெய்தபோதிலும் துரப்பியாசங்களும் துராசாரங்
களும் சிறிதளவு காணப்பட்டபோதிலும், கிறிஸ்துசமயம் பரவாத
தேசங்களில் வெகு சொற்பமாகவே இருக்கின்றன. கிறிஸ்துமார்க்கம்
பரவிய தேசங்களில் சகல ஜனங்களும் இயேசுநாதருடைய நீதிப்பிர
மாணத்தைச் செவ்வையாகக் கைக்கொண்டு நடக்கிறவர்களல்லர்.
ஆகையால் துன்மார்க்கம் குறைந்திருந்தபோதிலும் அது முற்றிலும்
இன்னும் வேரற நாசமடையவில்லை என்றபோதிலும் அத்தேசங்
களிலுள்ள துரப்பியாசங்கள் படிப்படியாய்க் குறைவுபடுவதினால்
கிறிஸ்துசமயத்தின் மகத்துவம் வெளியாகிறது. உடலுக்கு நோயுண்
டாகும்போது வைத்தியர்கள் தேகநிலைமைக்கேற்றபடி தகுந்த அவிழ்
தங்கொடுக்கும்போதிலும், அம்மருந்தைக் கொடுத்தவுடனே பிணி முற்
றிலும் நீங்கிப்போமெனக் கருத இடமில்லை. இப்படி இருப்பதினால்
அம்மருந்து உபயோகமற்றதென்றெண்ண இடமில்லை. என்றாலும்
அதினால் ரோகம் படிப்படியாகக் குறைந்துவந்தால் அது தேகக்
கூறுக்கு ஒத்துக்கொண்டதென்றும் அதினால் சுகம் உண்டாகும்
என்றும் நிச்சயிக்கவேண்டும். வைத்தியன் கொடுக்கும் அவிழ்தம்
போலவே பரம பரிகாரியான இயேசுபகவான் சற்போதனையும் தன்
காரியத்தை நடப்பிக்கிறது. முற்காலத்து மனுஷர் கிறிஸ்துமார்க்
கத்தைச் சேருவதற்குமுன் அவர்களில் துரப்பியாசங்கள் ஏராளமாக
இருந்தபோதிலும் அப்பரமகுருவின் சற்போதனை மாட்சிமையால்
அவ்வகை துரப்பியாசங்கள் அநேகம் ஒடுங்கிப்போயிருக்கிறது. இன்
னும் முற்றிலும் ஒழியாத துர் அப்பியாசங்கள் அநேகம் குன்றிப்போ
யிருக்கிறது.
இவ்விஷயத்தில் ஹிந்துமதத்துக்கும் கிறிஸ்துசமயத்திற்கும்
அனந்த வித்தியாசம் உண்டு. கிறிஸ்துமார்க்கம் நிலைபெற்ற தேசங்

களில் கெட்ட பழக்கங்கள் உண்டு என்று உரைப்பது வாஸ்தவமானாலும், அவையாவும் கிறிஸ்துசமய நீதிநெறிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் விரோதமாகவே நடந்தேறிவருகின்றன. ஹிந்துதேசத்திலுள்ள துராசாரங்கள் ஹிந்துமதக் கோட்பாடுகளுக்கு அநுசரணையாகவே நடந்தேறிவருகின்றன. இதற்குத் திருஷ்டாந்தங்கள் பலவுண்டு. 'இந்தியன் பீனல்கோடு' என்னும் சட்டநூலை இயற்றிய ஆசிரியர்கள் அவலட்சணமான படங்களையும் பார்க்கத்தகாத உருவங்கள் பதுமைகள் பொம்மைகள் முதலியவற்றைக் காட்டுகிறவர்களுக்குத் தகுந்த சிட்சை விதிக்கையில் அவர்கள் இந்து மதாசாரங்களுக்கு ஆட்சேபனை ஒன்றும் செய்யமுடியாமல் அவ்வகை படங்களும் பதுமைகளும் தேவாலயங்களிலும் வாகனங்கள் ரதங்கள் முதலியவற்றின்மேலும் இருக்கும்பட்சத்தில் சிட்சை விதிக்கப்படாதென்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். (Penal Code 292.) பீனல் கோடு மதசம்பந்தமான ஆசாரங்களை விலக்கிவையாதவிஷயத்தில் தேவஸ்தான காரியங்களிலும் தேவாலய அதிகாரிகளிலும் சிட்சைக்குட்படாதவர்கள் யாருமே இருக்கமாட்டார்கள். நாம் எந்த உற்சவத்திற்குப் போனாலும் நமது மனதைக் கறைப்படுத்தி நம்மில் துராசைகளை யுண்டாக்கும் படங்களையும் உருவங்களையும் கண்ணாரக்கண்டு, அவலட்சணமான பாடல்களையும் கதைகளையும் காதாரக் கேட்கிறோமல்லவா? மேலும் கோவில்களில் மேள தாளம் வாசித்து சங்கீதம் பாடுகிறவர்கள் வேசித்தனத்தினால் ஜீவிக்கிற தாசிப்பெண்கள் அல்லவா? கிறிஸ்துமார்க்கம் வேசித்தனம் முற்றிலும் தகாதென்று கண்டனம் பண்ணுகையில், இந்துக்கள் தமது மதாசாரங்களை யொட்டியே தோஷமறியாப் பச்சைப்பாலகரை தேவடியாட்களாக்கி, மிகவும் அவமானமானதும் பழிப்புக்குரியதுமான தொழிலுக்கு அவர்களை அடிமைகளாக்குகிறார்கள். இத்தென்தேசத்தில் கல்வித் திறமையினாலும் வாக்குச் சாதுரியத்தினாலும் விசேஷமான தைரியம் வீரியம் சிறப்பு முதலியவற்றினாலும் மிகவும் பெயர் பிரஸ்தாபம் அடைந்த வீரேசலிங்கம் பந்துலு அவர்கள் இதைக் குறித்து 'நிர்வாணிகளும் மிருகங்களைப்போன்றவர்களும் வீண்பேச்சில் பொழுதுபோக்கி காலங்கழிக்கிறவர்களுமான பாமரர் முதற்கொண்டு திவ்யமான உடைதரித்து கல்வியிலும் ஞானத்திலும் விவேகத்திலும் மிக்கச் சிறப்புடையவர்களாய் அலங்காரமான மாடமாளிகை



களில் வாசஞ்செய்யும் நாகரீகமுடைய மேன்மக்கள் கடையாயுள்ள எல்லா ஜனங்களுக்குள்ளும் விபசாரத்தையே தேவதையிட்ட தொழிலாகத் தங்களுக்கு நியமித்துக்கொண்டு சிற்றின்பவிஷயத்தில் நீதிநெறி ஒன்றுமில்லாமல் மனம்போனபடி நடக்கிற ஜாதியைத் தமது இந்துதேச மொன்றில் தவிர வேறெத்தேசத்திலும் எக்காலத்திலும் இருப்பதாகக் கண்டதும் இல்லை கேட்டதும் இல்லை' என்று கூறியிருக்கிறார்.

சபையில் பகிரங்கமாய் நடக்கும் பூஜைகளை நிறுத்தி அறையில் அந்தரங்கத்தில் நடக்கும் ஆசாரங்களை விசாரிக்கும்பட்சத்தில் அவை இன்னும் நாவால் வசனிக்கத்தகாதவை என்று உரைக்கச் சந்தேகமில்லை. சத்திபூஜை செய்கிறவர்கள் ஆசாரங்களை விவரித்தெழுதுகிறதற்கு இடமில்லை. அவ்வகை அவலட்சணமும் அருவருப்புமான காரியங்களைக்குறித்துப் பேசுவதுங்கூட தகாதென்று சத்தியவேதத்தில் சொல்லியிருக்கிறது (எபே. 5, 12.). அவர்கள் சரீரேச்சைகளைப் பின்பற்றி முறைகேடுபண்ணி சொல்லத்தகாத விபசாரத்தினால் தம் தேவதை தயவைச் சம்பாதித்துக்கொள்ளலாமென்று தங்கள் சபைகளில் யாதொரு கட்டுப்பாடுமின்றி வெகு அருவருப்பான காரியங்களைச் செய்துவருகிறார்கள். இவ்வகை துராசாரங்களை நிறைவேற்றும்போது, அவர்கள் தங்கள் ஆலோசனைபடி நடவாமல் அவர்கள் நடப்பிக்கும் அனுச்சாரங்கள் அனைத்துக்கும் தந்திர சாஸ்திரமே ஆதாரமாம்.

இந்துமதத்தைப் பரிசோதித்துப் பார்க்கையில் அதில் முற்றிலும் நியாயவிரோதமான ஏற்பாடுகள் காணப்படுகின்றன. ஜாதிக்கட்டுப்பாட்டை விதித்தவர்கள் விதவைகளைக்குறித்து எவ்வளவு கொடுமையான கட்டளைகளை நியமித்திருக்கிறார்கள். துரைத்தனத்தார் அவர்கள் சட்டங்களை விலக்கித் தள்ளி அவற்றிற்குத் தகுந்த சிட்சை விதிக்கும்வரையில், கைம்பெண்களை சுடுகாட்டுக்குக் கூட்டிக்கொண்டுபோய் அவர்கள் புருஷருடைய பிணங்களுடன் அவர்களையும் வைத்துத் தகனித்துவந்தார்கள். மேலும் இக்கொடிய வழக்கத்தைக் கையாடாதவர்கள் விதவைகளைக் கொல்லாமற்போனாலும் அவர்களைச் சிறிதளவும் ஆறுதல்பண்ணாமல், யாரும் சகிக்கமாளாத பாரங்களை அவர்கள்மேல் சுமத்தி, அவர்களை வெகுவாய் ஹிம்சிக்கிறார்கள். கிறிஸ்து

பகவானுடைய பக்தர்கள் தங்கள் சத்தியவேத நீதிநியாயங்களைச் சார்ந்து விதவைகளைப் பராமரித்து கனப்படுத்தும்போது இந்துக்கள் தங்கள் தர்மசாஸ்திரங்களை அனுசரித்தே அவர்களைக் கொடுமைபண்ணித் தூஷித்துச் சபிக்கப்பட்டவர்களைப்போலப் பாவிக்கிறார்கள். இதினால் எவ்வளவு கேடு விளைந்திருக்கிறதோ அது ஜனங்கள் வழக்கமாய் பிரயோகிக்கிற வழக்கச்சொல்லால் தெளிவாகத் தெரியவரும். ஒரு ஸ்திரீயைக் கைம்பெண்டாட்டி என்று சொன்னால் அவளைத் தூஷித்து அவமானப்படுத்தினதுபோல் காணப்படுமல்லவா?

கிறிஸ்துமதஸ்தரில் உயர்வு தாழ்வு சிறுபான்மை இருந்தபோதிலும் பரமகுருவின் திவ்ய உபதேசத்தில் அதற்காதாரமொன்றும் இல்லை. நீங்கள் ஒருவரை ஒருவர் நேசிக்கவேண்டும் என்றும் நீங்கள் எல்லாரும் சகோதரரென்றும் உங்களில் ஒருவன் பெரியவனாயிருக்க விரும்பினால் அவன் எல்லாருக்கும் பணிவிடைக்காரனாயிருக்கவேண்டும் என்றும் இயேசுகிறிஸ்துநாதர் திருவுளம்பற்றியதால் கிறிஸ்துசமயிகள் யாராகிலும் பேதங் காண்பித்தால் அவர்கள் தங்கள் சமயத்திற்கு விரோதமாக நடக்கிறவர்களென்று உரைக்கச் சந்தேகமில்லை. இந்துக்களிலுள்ள பேதங்கள் அவர்கள் சமயக் கோட்பாட்டைச் சார்ந்தவை. அவற்றை இயற்றிய கர்த்தாக்கள் தங்களை உயர்த்திக்கொண்டு மற்றவர்களெல்லாரையும் தங்களுக்குத் தாழ்த்திக்கொள்ளவேண்டும் என்று விரும்பி சூத்திரர் முதலானவர்களுக்கு அநியாயமான ஏற்பாடுகள் விதித்து வரையறைப்படுத்தி யிருக்கிறார்கள். இதைக்குறித்து மனுதர்மசாஸ்திரம் நாலாம் அதிகாரம் 81–ம் சுலோகத்தில் 'சூத்திரனுக்கு தர்மசாஸ்திரம் கற்றுக்கொடுத்து பாவநிவாரண வழியை உபதேசிக்கிறவன் எவனோ, அவன் அச்சூத்திரனோடுகூடநாகியம் விருத்தம் என்னும் நரகத்தில் அமிழ்ந்துவிடுவோன்' என்று சொல்லியிருக்கிறது. இதுவுமன்றி சூத்திரர்கள் பொருளைத் தேடி க்ஷேமஸ்திதிக்கு வரக்கூடாது என்றும் அவர்கள் பிராமணர்களுக்கு எப்போதும் கீழடங்கி அவர்களுக்குப் பணிவிடை செய்யவேண்டுமென்றும் கண்டிப்பாய் சட்டம் விதித்திருக்கிறார்கள். இதைக்குறித்து மனுதர்மசாஸ்திரம் 10–ம் அதிகாரம் 129–ம் சுலோகத்தில் 'சூத்திரனுக்குத் திராணியிருந்தாலும் அவன் தனத்தைத் தேடலாகாது. சூத்திரன் திரவியத்தை திரட்டிக்கொண்டால் அது பிராமணருக்கு மனவருத்தம்

201



உண்டாக்கும்' என்று உரைத்திருக்கிறது. இன்னும் வேறு சங்கதிகளை எடுத்துரைப்பது அவசியம் அன்று. இந்துதேசத்தின் பல துராசாரங்களும் துர்ப்பழக்கங்களும் இந்துமத சட்டங்களைத் தழுவியே நடந்தேறிவருகின்றன. ஆனால் கிறிஸ்துசமயம் பரவின நாடுகளில் சிற்சில துராசாரங்களிருந்தபோதிலும் கிறிஸ்துமதம் அவற்றைக் கண்டனம்பண்ணி அவற்றில் ஒன்றுக்காகிலும் இடங்கொடுக்கிறது இல்லை என்று மேற்கூறிய உதாரணங்களினால் நன்றாய் வெளிப்படும்.

நாம் எத்தேச சரித்திரத்தை விசாரித்தபோதிலும் கிறிஸ்துசமயத்தினால் பல மேன்மையான சீர்ப்பாடுகளும் நன்மைகளும் விளைந்திருக்கின்றன என்று விளங்கும். கிறிஸ்துசமயம் பிரபலமாகுமுன் அதிகாரிகள் நானாதேசங்களிலும் தம் சட்டங்களை மீறின குற்றவாளிகள் விஷயமாய் வெகு கொடுமைபண்ணி வந்தார்கள். தற்காலத்திலும் கிறிஸ்துமார்க்கத்தை அநுசரியாத சீனா முதலிய தேசங்களில் குற்றவாளிகளைப் பலவகையான கொடிய தண்டனைகளால் வாதிக்கிறார்கள். இயேசுநாதரோ குரூர தன்மையைக் கண்டனம் செய்து மறுத்துத் தள்ளினதால் அவருடைய திவ்யபோதனை எங்கெங்கே பிரபலமாகிறதோ அங்கங்கே குரூரவதை அப்பியாசம் படிப்படியாகத் தொலைந்து, குற்றவாளிகளைத் தண்டிப்பது நியாயமாயினும் அவர்களை தண்டிக்கிறபோது அவர்கள் நமது சகோதரர்கள் என்று மறவாது வெகு கொடுமையாய் சிட்சிக்கக்கூடாதென்ற நீதி ஸ்தாபகமாகிறது. யுத்தவிஷயத்திலும் வியப்புக்குரிய பெரிய மாறுதல் உண்டாயிருக்கிறது. போர்புரிவது பரமகுரு திருவுளத்திற்கு விரோதமானது. ஆனாலும் யுத்தம் இன்னும் முடிவுபெறாமற்போனாலும் அவற்றின் கொடுமை பெரும்பாலும் தணிந்து வலிகுன்றிபோயிருக்கிறது. சமர்புரிகிறவர்கள் தங்கள் பகைவருடன் போராடி அவர்களைக் கூடியமட்டில் சங்காரஞ்செய்தபோதிலும் வெற்றியடைந்தபிறகு மீதியானவர்களுக்கு எவ்விதக் கெடுதியும் செய்யவேமாட்டார்கள். மேலும் தீமைசெய்யாமற் போவதோடுகூட சத்துருக்களில் காயப்பட்டு விழுந்தவர்களை தங்களு ஆஸ்பத்திரிகளுக்குப் பத்திரமாய் எடுத்துக்கொண்டுபோய் தங்களுடையவர்களைப்போல பராமரிப்பார்கள். முற்காலந்தொட்டுள்ள வழக்கம் இவ்வழக்கத்திற்கு எவ்வளவு வித்தியாசமானது. இவ்வித அபகாரங்கள் நின்றுபோகிறதுமன்றி, அத்திவ்யகுருவின் திருப்போதனையி

ஞல் அநாதிகளுக்குப் பேருபகாரஞ்செய்வது வெகு பிரபலமானது.
பழையகாலத்தில் நோயாளிகளுக்கும் அங்கவீனர்களுக்கும் தர்ம ஆஸ்
பத்திரிகள் முதலியவை இருக்கவில்லை. ஆனால் இயேசுநாதர் இவ்வகை
நிர்ப்பந்தர்மேல் மனதுருகி உள்ளங்கனிந்து அவர்களை ஆற்றித்தேற்றி
அவர்கள் பிணிகளை நிவாரணம்செய்து வந்ததினால் அப்பெருமானின்
திருத்தொண்டர் இத்தர்மவிதிகளைக் கைக்கொண்டு ரோகிகளுக்கும்
அங்கவீனர்களுக்கும் பைத்தியம் பிடித்தவர்களுக்கும் ஆஸ்பத்திரிகள்
கட்டுவித்து, அவர்களுக்கு ஆறுதலும் அமைதலும் உண்டாகும்படி
பற்பல ஒழுங்குகளைக் கிரமப்படுத்தியிருக்கிறார்கள்.

இயேசுநாதருடைய திவ்யமாட்சிமையும் அவரது திவ்ய செல்
வாக்கும் மனிதருள்ளத்தில் கிரியைசெய்வதால் மனிதரிடத்திலிருந்த
வித்தியாசங்களும் பகை வர்மங்களும் பெரும்பாலும் குறைந்திருக்கின்
றன. பூர்வத்தில் சகல ஜனங்களும் தம் கோத்திரத்திலும் தம் தேசத்தி
லும் பிறந்தவர்களைமாத்திரமே நேசித்து வருவதுண்டு. மேலும் சாதா
ரணமாய் யாவரும் வறிஞரையும் ஹீனஸ்திதியில் ஜென்மித்தவர்களை
யும் அற்பமாய் எண்ணி அவர்களை மிருகங்களுக்குச் சரிசமானமாக
நடத்திவந்தார்கள். விண்ணுலகின் வேந்தன் மண்ணில் அவதரித்த
போது மனிதர் அனைவரும் தம் சகோதரர்களென்று கருதி எவ்வகை
வித்தியாசமுமின்றி சகலரோடுங் கலந்து நெருங்கிக் கூட்டுறவுசெய்து
சகலருடைய பாரங்களையுந் தாமே சுமந்து அவர்பொருட்டுத் தம்மைப்
பிராணத்தியாகஞ்செய்தார். ஆதலால் அந்த ரட்சண்யமூர்த்தி திரு
வாய் மலர்ந்துரைத்த திருமறைப்பயனை உணர்ந்தவர்கள் யாரோ அவர்
கள் ஒருவரையும் அற்பமாய் எண்ணாமல் எவ்வளவு இழிஞரானாலும்
சரி எவ்வளவு மூர்க்கரானாலும் சரி யாவரையும் தமது சகோதர
ரென்று பாவித்து அவர்களை அருமையாகவும் கனமாகவும் பட்சமாக
வும் மதிக்காமலிருக்கமாட்டார்கள். இயேசுநாதர் ஒவ்வொரு மனிதனை
யும் நேசித்து ஒவ்வொருவனுக்காகவும் தன் பிராணனை விட்டாரென்று
எப்போது உணர்வோமோ அப்போதுதான் ஒவ்வொரு மனுஷனும்
மிக்க மதிப்புக்குரியவன் என்பதை உணர்ந்து மனிதரெல்லாரையும்
கனம்பண்ணுவது அவசியமென்று நிச்சயமாய் அறிவோம். மேலும்
திராட்சச்செடியில் கொடிகளும் சரீரத்தில் அவயவங்களும் எவ்வண்
ணம் ஒருமித்திருக்கின்றனவோ அவ்வண்ணமே தம் தாசர்களனை



வரும் தம்மில் இணைபிரியாவிதமாய் ஒன்றித்திருக்கிறார்களென்று
அந்த அன்பின்மூர்த்தி வெளிப்படையாய்ப் போதித்தபடியால் க்ஷேம
நிர்ப்பாக்கிய நிலைமைகளில் பேதம் இருந்தபோதிலும் சகல மனிதருக்
கும் அந்நியோந்நிய சம்பந்தம் உண்டென்று சொல்வதற்குச் சந்தேகம்
இல்லை. கிறிஸ்துசமயத்தைத் தழுவினவர்கள் இச்சத்தியத்தைக் கண்டு
கொண்டு மனுஜாதி யாவும் ஒன்றே என்று நிச்சயித்து தேசாபிமானத்
தினாலும் குலாபிமானத்தினாலும் உண்டான குரோதத்தையும் வர்மத்
தையும் படிப்படியாய் விட்டுவிடுவார்கள்.

சகல மனிதரும் தேவனுடைய புத்திரராகவும் மதிப்புக்குரியவர்க
ளாகவு மிருக்கிறார்கள் என்கிற சத்தியத்தைக் கண்டுகொண்டவர்கள்
ஸ்திரீ ஜாதியையாயினும் பிள்ளைகளையாயினும் அசட்டை செய்ய
மாட்டார்கள். ஆதலால் கிறிஸ்துமதம் பரவுகிற எல்லா இடங்களி
லும் தமக்குச் சுபாவமாக உள்ள பெலவீனத்தினால் இடுக்கணுக்கும்
இடையூறுக்கும் உள்ளான மாதர்கள் பிள்ளைகள் முதலியோர் அந்நிலை
மையினின்று விடுதலையடைந்து நியாயம் பெறக்கூடிய நிலைமைக்குரிய
வர்களாவார்கள். பூர்வகாலத்தில் கிரேக்கர் ரோமர் முதலிய தேசத்தார்
கள் கல்வியினாலும் நாகரீகத்தினாலும் பெரும் பிரக்கியாதியும் உடைய
வர்களாயிருந்தபோதிலும் அவர்கள் மனைவிகளும் மக்களும் யாதொரு
சுயாதீனமும் இன்றி அதிகக் கேவலஸ்திதியில் உள்ளவர்களாய்
அநேக விஷயங்களில் கொடுமையான ஏற்பாடுகளுக்கு அடங்கினவர்
களாயிருந்தார்கள். பிள்ளைகள்மேல் தந்தைக்குச் சர்வாதிகாரம் இருந்
ததையால் அவன் அவர்களை அநியாயமாய் கொன்றபோதிலும் கேள்
விமுறை ஒன்றுங் கிடையாது. மேலும் பிதாக்கள் தம் பிள்ளைகளுக்
குச் சவரட்சணை செய்யவாவது அவர்களை வளர்க்கவாவது மனமில்லா
விடில் ஒருவருடைய ஆட்சேபனையுமின்றி அப்பிள்ளைகளைக் கொண்டு
போய் யாதாமோர் நிர்மானுஷியமான இடத்தில் எறிந்துவிடலாம்.
தற்காலம் சீனதேசத்தில் இவ்வாறே சகஜமாக நடந்தேறிவருகிறது.
அன்றியும் துரைத்தனத்தார் இதைக் கண்டனம்பண்ணி தடுத்து தகுந்த
சிட்சை விதிக்கும்வரையில் இந்துதேசத்தில்கூட பெற்றோர்களில்
பலர் தம் பச்சைப்பாலகரைத் தங்கள் பொருத்தனைகளை நிறைவேற்
றும்பொருட்டு கங்காநதியில் எறிந்து கொன்றுவந்தார்களல்லவா?
இயேசு என்னும் பரமகுருவின் திருமறையாகிய விளக்கு வல்லிருள்

சூழ்ந்த வையகத்தில் சுடர்வீசிப் பரவி வருகிறதால் இவ்வகைத் துராப்பியாசங்கள் சர்வநாசமடைந்து வருகின்றன. இயேசுபகவான் பாலகர்மேல் அதிகபட்சமுடையவராய் ‘சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்’ என்று மொழிந்தார் (மத். 19. 14.). அன்றியும் நாம் சிறுகுழந்தைகளை அற்பமாய் எண்ணுகபடி ‘இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணுகபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள்’ என்று அம்மகிமைப்பிரதாபன் திருவுளம்பற்றினார் (மத். 18. 10.). கிறிஸ்திறைவனின் தொண்டர்கள் இந்நீதிமொழியைக் கைக்கொண்டு பிள்ளைகளை எறிந்துவிடுகிற வழக்கத்தை முற்றிலுந் தள்ளிவிட்டார்கள். இதுவுந்தவிர பெற்றோரில் யாராகிலும் தம் பிள்ளைகளைச் செம்மையாகச் சவரட்சணை செய்யாமற்போனால் அதிகாரிகள் அவ்விஷயத்தை விசாரணைசெய்து அவர்களுக்குத் தகுந்த சிட்சை விதிப்பார்கள். இயேசுநாதருடைய பக்தர்கள் தாய்தந்தையில்லாத அநாதப்பிள்ளைகளின் சவரட்சணையினிமித்தம் எவ்வளவு ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்பது இத்தேசத்தார் யாவருக்கும் சகஜமாகத் தெரிந்தவிஷயமே. ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு பட்டணத்திலும் கிறிஸ்துசமயக் குருக்கள் அநாதப்பிள்ளைகளுக்காக நியமித்திருக்கிற தர்ம பாடசாலைகளிருக்கின்றன அல்லவா?

பிள்ளைகளுக் கெப்படியோ அப்படியே ஸ்திரீ ஜாதிகளுக்குமுண்டு. கிறிஸ்துமத உபதேசம் பிரவேசியாதத் தேசங்களில் ஸ்திரீ ஜாதியின் ஸ்திதி வெகு பரிதாபமாக இருக்கிறது. நாகரீகமில்லா தேசங்களில் புருஷர்கள் வேட்டைக்குப் போகிற ஒரே தொழில் மாத்திரமே அன்றி வேறொரு வேலையும் செய்யமாட்டார்களாதலால், ஸ்திரீ ஜாதி சகலவித வேலைகளையும் மெய்வருந்தச் செய்து பாடுபடுவார்கள். சிறிது நாகரீகமடைந்த தேசங்களில் இவ்வளவு அநியாயமான வழக்கமில்லை என்றாலும் அத்தேசங்களிலும் ஆண்கள் சர்வாதிகாரத்தையும் தமக்கே சொந்தமாக்கிக்கொண்டு பெண்களை அதிகத் தாழ்வாக மதிப்பார்கள். பெண்கள் எவ்விதக் கல்வியும் சிறிதேனும் பயிற்சிசெய்யாமல் முரட்டு வேலைகளைமாத்திரஞ் செய்துகொண்டு சுயாதீனம் ஒன்றுமின்றி தம் வாழ்நாளெல்லாம் புருஷருடைய அனு



மதிக்குக் கீழடங்கவேண்டும் என்று இந்து தர்மசாஸ்திரங்கள் கண்டிப்பாய் சட்டம் விதிக்கின்றன. இதைக்குறித்து மனுநீதிசாஸ்திரம் வெகு கொடிய சட்டங்களை அமைத்திருக்கிறது. அதாவது ‘பாலியத்திலாகிலும் வாலிபத்திலாகிலும் முதுமையிலாகிலும் ஸ்திரீயானவள் தன் வீட்டில்கூட யாதொரு காரியத்தையும் தன் சுயமாய்ச் செய்யக்கூடாது. இளமையில் அவள் தன் தந்தைக்கும், வாலிபத்தில் தன் கணவனுக்கும், கணவன் மாண்டபின்னர் தன் குமாரர்களுக்கும் அடங்கியிருக்கவேண்டுமேயன்றி மங்கையானவள் சுயாதினத்தை ஒருக்காலும் ஆசிக்கலாகாது’ என்று சொல்லியிருக்கிறது. இயேசுபகவான் நியாய விரோதமான நிர்ப்பந்தங்கள் அனைத்தையும் கண்டித்தவராகையால் ஆண்களானாலும் பெண்களானாலும் புருஷரானாலும் ஸ்திரீகளானாலும் சகலரும் சுயாதீனமுடையவர்களென்று ரூபித்து புருஷனாகிலும் ஸ்திரீயாகிலும் ஒவ்வொருவரும் சத்தியாசத்தியங்களை விசாரித்துப் பகுத்தறிந்து தம் நடத்தையைக் குறித்து கடவுளுக்குப் பதில் சொல்லவேண்டுமென்று வெளிப்படையாய்க் கூறினார். அவ்விண்ணிறைவன் சற்குருமூர்த்தியாக மேதினியில் அவதரித்தபோது அநேக மாதர்கள் அப்பரமகுருவின் திருவடி பணிந்து அப்பெருமானின் திருமொழிகேட்டு அவருடைய சீஷிகளானபடியால் அக்காலமுதல் தற்காலம்வரையில் அப்பரோபகாரியின் சமயம் வேரூன்றின நாடுதேசங்களில் ஆடவர்களும் ஸ்திரீஜாதிகளும் மரியாதையான ஸ்திதிக்குவந்து வெகு கண்ணியமடைந்திருக்கிறார்கள். கிறிஸ்துமதஸ்தர்கள் ஸ்திரீகளை மேன்மைப்படுத்தி அவர்களுக்கு அதிக மரியாதை செய்கிறதால் ஸ்திரீகள் புருஷரைப்போல கல்விப் பயிற்சி பெற்று தம் குழந்தைகளைச் செவ்வையாக வளர்க்கவும் அவர்களுக்கு ஞானோபதேசம் செய்யவும் சமர்த்தராயிருக்கிறார்கள்.

மூவுலகுக்கும் ஒளிகொடுக்கும் இயேசுநாதர் திருமறை என்னும் தன் திருவிளக்கை வல்லிருள் சூழ்ந்த இவ்வையகத்தில் ஏற்றுமுன், ஏழைகள் அடிமைத்தனத்துக்குள்ளாகி அதிக இடுக்கண் அடைந்து வந்தார்கள். வலியவர்கள் அவர்களை மிருகங்களுக்குச் சமானமாகப் பாவித்துக் கொடுமையாக ஒடுக்கி அவர்களைக்கொண்டு தமது வேலைகள் யாவையுஞ் செய்வித்துக்கொள்வதுண்டு. அவர்களுக்கு எவ்வளவேனும் சுயாதீனம் இல்லாதபடியால், அவர்கள் எஜமான்கள்

அவர்களை மிருகங்களைப்போல கிரயத்துக்கு வாங்கித் திரும்பவும் விற்றுவந்தார்கள். எஜமான்கள் அவர்களை எவ்வளவாக அடித்தாலும் அநியாயமாய்க் கொன்றாலும் கேள்விமுறை யில்லாதபடியால் அவர்கள் நிலைமை வெகு அகோரமாய் இருந்தது. இயேசுநாதர் தம் திவ்யோபதேசத்தை ஆரம்பித்தபோது இத்துராப்பியாசம் சகல தேசங்களிலும் வேரூன்றியிருந்தது. புலவர்களும் தர்மசாஸ்திரிகளும் இவ்வகை ஜனஸ்திதியிலுள்ளோரை அற்பமாய் எண்ணி அவர்கள் கஸ்தி வாதைகளைக் கொஞ்சமாயினும் சட்டைபண்ணாமலும் உண்மையை விசாரிக்காமலும் மனிதரில் உயர்வு தாழ்வு சகஜமானதால் இவர்கள் அடிமைகளாயிருப்பது அவசியமென்னும் அபிப்பிராயம் உடையவர்களாயிருந்தார்கள். பரோபகாரியான இயேசுநாதர்மாத்திரம் சகலரையுந் தேவனுடைய பிள்ளைகளாக எண்ணி இந்தத் துர்வழக்கத்தைக் கண்டித்து தம் மதத்தைச்சேர்ந்த தேசங்களில் அதைப் படிப்படியாக நிர்மூலமாக்கி இருக்கிறார். அப்புண்ணியமூர்த்தியின் தொண்டர்கள் இச்சங்கதியை எடுத்து அவ்வளவு விசேஷமாய்ப் போதியாவிடினும் மனிதரெல்லாரும் சகோதரரென்றும் ஒருவரையொருவர் நேசிக்கவேண்டுமென்றும் போதிப்பதினால் அவர்கள் போதனைக்குட்பட்டவர்கள் இத்தர்மவழியைப் பின்பற்றித் தம்மடியார்களுக்குச் சுயாதீனமளித்து வந்தார்கள். இத்துர்ப்பழக்கம் சிறிதுகாலத்திலேயே நிர்மூலமாகாவிடினும் நிகரற்ற வல்லமையுடைய பரமகுருவாகிய இயேசு அதை வென்று பாழாக்க ஆதிமுதற்கொண்டு அரும்பாடுபட்டு போராடுகிறபடியால் அவருடைய அதிகாரம் எவ்வளவு அதிகரித்திருக்கிறதோ அவ்வளவாக இத்துர்ப்பழக்கம் கொஞ்சங்கொஞ்சமாய்க் குறைந்து சிறுத்து சிதைந்துபோகின்றது. தற்காலத்தில் கிறிஸ்துசமயம் தழைத்தோங்கும் தேசங்களில் ஏழைகள் நிலைமை வெகு பரிதாபமாயினும் இயேசுநாதர் திருப்போதனையின் ஏவுதலால் அது சிறிதளவாக நன்மையாகிறபடியால் சகலரும் அப்போதனையைப் பூரணமாக உணர்ந்து தழுவும்போது சகல பேதங்களும் சகல அநியாயங்களும் தொலைந்து சகல ஜனங்களும் ஒருவரிலொருவர் தயவுடையவர்களாய் சகோதரரைப்போல ஒருவருக்கொருவர் உபகாரஞ் செய்து தத்தம் காலத்தை க்ஷேமமாய்க் கழிப்பார்களென்று நம்புகிறதற்கு இடமுண்டு.

-207-



கிறிஸ்துபகவான் திருமறை இந்துதேசத்துக்கு வந்ததினால் எவ்வளவு க்ஷேமமும் மாறுதலு முண்டாயிருக்கின்றன. ராஜாங்கத்தார் அதின் சட்டங்களைக் கைக்கொண்டு நம் விதவைகளை உடன்கட்டையேற்றுவித்துத் தகனிப்பதும், பாலகரை கங்காநதியில் எறிந்துபோடுவதும், நரபலியிடுவதும்போன்ற துராசாரங்களை முற்றிலும் நிறுத்திப்போட்டிருக்கிறார்கள். மேலும் கிறிஸ்துமதக் குருக்கள் தம்மாண்டவரின் மதோபதேசங்களைப் பிரசுரம்பண்ணிவருகிறதினால் சகல ஜனங்களும் தங்கள் அவிவேகத்தைக் கொஞ்சங்கொஞ்சமாக விட்டு நற்புத்தியடைந்து தாம் பூர்வத்தில் கையாடின சில துர்ப்பழக்கங்களை நிறுத்தியிருக்கிறார்கள். முக்கியமாக கிறிஸ்துமதக் குருக்களின் உற்சாகத்தினால் அதற்குமுன் கல்வியறியாதவர்கள் படிப்புடியாகக் கல்வி கற்று நாகரீக ஸ்திதியடைகிறார்கள். ஏறக்குறைய அறுபது வருஷங்களுக்கு முன்னர் இத்தேசத்தில் பெண்பிள்ளைகளுக்கு வித்தியாப்பியாசசாலைகள் இல்லாமையினால் ஸ்திரீஜாதிகளனைவரும் கல்லாதவர்களாய் அறிவீனம் என்னும் காரிருளால் நிறைந்திருந்தார்கள். இப்போது கிறிஸ்துசமயக் குருக்களுடைய தளராமுயற்சியால் ஒவ்வொரு பட்டணத்திலும் இரண்டொரு பாடசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறபடியால் பெண்கள் கல்விகற்க எவ்வளவேனும் தடை ஒன்றுமில்லை. மேலும் முற்காலத்தில் மிகவுந் தாழ்ந்த நிலைமையிலிருந்த கீழ்குலத்தாருக்கும் கிறிஸ்துமார்க்கத்தினால் பெரும்பேறு விளைந்தது. கிறிஸ்துமதக் குருக்கள் இத்தேசத்திற்கு வருமுன் இப்படிப்பட்டவர்களைப் பராமரிக்கிறவர்களும் இவர்களுடைய சுகதுக்கங்களில் பங்கடைகிற புண்ணியர்களும் ஒருவரும் இருந்ததில்லை. சகல ஜனங்களும் அவர்களை வெகு குறைவாகப் பாவித்து அவர்களுக்குச் சிறிதளவேனும் நன்னிலைமை வந்தெட்டாதபடி அவர்களைப் பலவாறாகச் சிறுமைப்படுத்தி ஒடுக்கினார்கள். இப்படி இருப்பதினால் அந்த ஜனங்கள் மிருகங்களைப்போல இழிவாகவும் சுத்தம் சுசி அறியாதவர்களாகவும் இருந்தார்கள். இப்படிப்பட்டவர்கள் அப்பரமகுருவின் உபதேசத்திற்கு எப்போது உடன்பட்டார்களோ அப்போதே தமது துராப்பியாசங்களைத் தவிர்த்து தமது ஜனஸ்திதியை விட்டு அப்பரமகுருவின் மட்டற்ற உதவியினால் நன்னிலைமைக்கு ஏறப் படிப்படியாய் ஆரம்பித்தார்கள். முன்னமே பன்றிகளைப்போலச் சேற்

தில் புரண்டவர்கள், இப்போது முன்னுக்குவர ஆசைகொண்டு நிலம் சம்பாதித்து தகுந்த வீடுவாசல் கட்டிக்கொண்டு அன்னவஸ்திராதி விஷயங்களில் சுசியாகவும் மேன்மையாகவும் கனமாகவும் வாழ, பலவாறாய்ப் பாடுபட்டு முயலுகிறார்கள். அவர்கள் எத்திசையை நோக்கினும் அவர்களுக்குத் துணை உதவி கிடையாமற்போனாலும் கிறிஸ்துசமயத்தைத் தழுவினால் தமக்குப் பெரும்பேறு விளையும் என்று நிச்சயித்து ஆயிரக்கணக்கானோர் கிறிஸ்துசமயத்தில் சேருகிறார்கள். அவர்கள் நோக்கம் ஒப்புக்கொள்ளத்தக்கதே. சில ஆண்டுகளுக்குமுன் ம—ா—ா—ஸ்ரீ, ஸ்ரீனிவாச ராகவ ஐயங்கார் அவர்கள் இச்சங்கதியைக்குறித்து 'இந்த இழிகுல வகுப்பினர் விருத்திக்கு வரவேண்டுமானால் அது மிஷனெரிகள் செய்யும் ஏற்பாடுகளால் உண்டாகவேண்டும். இந்துமதத்தில் நற்சீருண்டாவதற்கு இடமில்லை' என்று துரைத்தனத்தாருடைய குடிமதிப்பு ரிப்போர்ட்டில் பகிரங்கமாய் எழுதியிருக்கிறார். இது சத்தியவாக்கு. ஈனஸ்திதியிலிருப்போர் கிறிஸ்துமதத் துணையினால் உயரவேண்டுமேதவிர வேறுவிதங்களால் அவர்களுக்குப் பயனில்லை என்பது ஒத்துக்கொள்ளவேண்டிய விஷயமே. இயேசுபகவான் தம் மாட்சிமையால் மிருகங்கள்போன்ற இழிஞரைத் தூக்கி எடுத்து, அவர்கள் அறிவீனத்தைப் போக்கடித்து, அவர்களை விருத்திக்குக் கொண்டுவந்திருக்கும்பட்சத்தில், அப்பகவான் சகல ஜாதியையும் ரட்சித்துக் காப்பாற்ற அதிகாரமுடையவரென்று விளம்புவதற்குச் சந்தேகமில்லை.

கிறிஸ்தவ தேசங்களிலுண்டான மாறுதல்கள் நாகரீகத்தினாலாவது கல்விப்பெருக்கத்தினாலாவது விளைந்தவையல்ல. முற்காலத்தில் பாபிலோன் தேசத்தார்கள், எகிப்தியர்கள், கிரேக்கர், ரோமர் முதலானவர்கள் தங்கள் கல்விப்பெருக்கத்தினால் பெயரெடுத்தார்களேயொழிய அவர்கள் ராஜ்யங்களில் அநியாயமும் அக்கிரமமும் துராப்பியாசங்கள் முதலியவற்றிற்கு வேர்ப்பூச்சி வெகு விஸ்தாரமாக இருந்தமையால், அவர்கள் அதிகாரமும் வைபவமும் மேட்டிமையும், அகந்தையும் மேன்மையும் படிப்படியாய்க் குன்றி நிர்மூலமானது. இயேசு கிறிஸ்துவின் திவ்யோபதேசம் செல்லாத ஒவ்வொருதேசத்திலும் இவ்வகை அவலட்சணங்கள் அதிகமாகிறதேயன்றி கொஞ்சமாகிலும் குறைகிறதில்லை. அத்திருமறை சென்ற தேசங்களில்மாத்திரம் மனிதர் தமது துராப்பியாசங்களை விட்டுவிட்டு கொஞ்சங்கொஞ்சமாக நற்குணராகி வருகிறார்கள். மேலும் அப்பரமகுருவின் திவ்ய சித்தாந்தம் சில தேசங்களில் கொஞ்சமாகவும் சில தேசங்களில் அதிகமா



கவும் பரவுகிறதால் அது எந்தெந்த தேசங்களில் விஸ்தாரமாகப் பரவியிருக்கிறதோ ஆங்காங்கெல்லாம் துர்ப்பழக்கங்கள் பெரும்பாலும் நீங்கி தொலைந்துபோயின என்று தெளிவாகக் காணப்படுகிறது. இதுவுமன்றி கிறிஸ்துசமயம் பரவிய தேசங்களில் யார் யார் பரமகுருவின் போதனையைச் சரியாகக் கொண்டிருக்கிறார்களோ அவர்கள் மற்றவர்களைவிட நற்குணசாலிகளும் பரோபகாரிகளும் நீதிநியாயங்களை நியமிக்க அதிக கரிசனையுடன் போராடிப் பாடுபடுகிறவர்களுமாயிருக்கிறார்கள். இப்படியிருக்க நாம் என்னசொல்வோம். ஒரு வைத்தியன் வியாதிக்காரருடைய ஸ்திதியை விசாரித்து முறைச்சீட்டு எழுதி ஒருவகை அவிழ்தத்தை இலவசமாகக் கொடுக்கும்பட்சத்தில் அவ்வைத்தியன் சாமர்த்தியத்தை நாம் எப்படிக் கண்டுகொள்வோம். அவனுடைய அவிழ்தத்தைச் சாப்பிடாதவர்களனைவரும் வீணாக மாளும்போது அதைச் சாப்பிடுவோர் அமைதலும் சுகமுமடைந்து தாம் சாப்பிடுமளவாக தம் நோய்களை மட்டுப்படுத்திக்கொண்டுவந்தால் அந்த வைத்தியன் சமர்த்தனும் நம்பிக்கைக்குரியவனுமாய் இருக்கிறான் என்று நிச்சயிப்போம் அல்லவா? இவ்வண்ணமே நாம் கிறிஸ்துமத சரித்திரத்தைப் பரிசோதிக்கையில் கிறிஸ்துபகவானுடைய திருமறையை ஏற்றுக்கொள்ளாத தேசங்களில் துன்மார்க்கம் கொஞ்சமாகிலும் குறையாமல் நாளுக்குநாள் வளர்ந்தோங்கிக்கொண்டிருக்க கிறிஸ்துசமயத்தைத் தழுவின தேசங்களில் துர்நடத்தைகளும் துராப்பியாசங்களும் படிப்படியாகக் குறைந்து ஜனங்கள் அப்போதனையை அங்கிகரிக்குமளவாக முற்றிலும் ஒழிந்து அகன்றுபோகின்றன என்று தெளிவாகக் காணப்படுகிறதால் இயேசுநாதர் சகல துராப்பியாசங்களையும் அடியோடே அழித்து மனுஷஜாதியின் ஸ்திதியைச் சீர்க்கிச் செவ்வைபண்ணக்கூடிய சர்வாதிகாரமுடைய பரமவைத்தியர் என்று நிச்சயிக்காதிருக்க இடமில்லை. நாம் வீண் மனோபாவனையைக்கொண்டு அம்மகிமைப்பிரதாபனை நம்பாமல் அத்திருப்புதல்வன் நிறைவேற்றின மகத்துவமான காரியங்களை ஆராய்ச்சிசெய்து அவற்றை வகையறுத்து அவரை நம்பி அவரது மாண்புக்குரிய மார்க்கத்தைத் தழுவுவது அவசியமானது.

# IX. அதிகாரம்

## அனுபவப் பிரமாணத்தைக்கொண்டு இயேசுகிறிஸ்து ஜகத்ரட்சகர் என்று ரூபகாரம்பண்ணல்.

முந்தின அதிகாரத்தில் இயேசுநாதர் இப்பூதலத்தில் நிறைவேற்றின பெருங்காரியங்களைக்கொண்டு அவர் சர்வாதிகாரம் உடையவராய் சகல லோகங்களையும் ஆண்டு பரிபாலித்துவருகிற ஆண்டவர் என்று நிச்சயித்தோம். இவ்வதிகாரத்தில் ஒவ்வொரு மனிதன் விஷயத்திலும் இயேசுபகவான் பூண்ட அதிகாரம் எப்படிப்பட்டதென்று விசாரிப்போம். சகல விஷயங்களிலும் அனுபவமே முக்கியம் என்பதற்குச் சந்தேகமில்லை. ஒரு விஷயத்தைப்பற்றிச் சாஸ்திரப்பயிற்சி மட்டும் செய்தவர்கள் அனுமானமாகச் சொல்வார்கள். ஆனால் அதை அனுபவித்தவர்கள் சந்தேகமின்றி, தம் அனுபவத்தைக்கொண்டு உறுதியாகவும் தைரியமாகவும் சொல்லக்கூடியவர்கள். இது ஒரு உதாரணத்தினால் விளங்கும். வைத்தியசாஸ்திரம் படிக்கையில் ஒவ்வொரு ரோகத்திற்கும் தகுந்த அவிழ்தங்களைக் கண்டுபிடித்து நோயாளிகளுக்கு வைத்தியமுறை செய்யக்கூடியவர்களாவோமாதலின் அநேகர் இச்சங்கதியை அறிந்து நம்மிடம் வந்து வைத்தியம் பண்ணிக்கொள்வார்கள். அவர்கள் நமது பேர்ப் பிரஸ்தாபத்தைக்கொண்டு இப்படி வருவார்கள். ஆனால் நம்மிடம் வந்தபிறகு ஒருவேளை நாம் அளிக்கும் மருந்து தமக்கொத்துக்கொள்ளுமோ ஒத்துக்கொள்ளாதோ என்று சந்தேகித்து சாப்பிடமனமற்றுப்போவதுண்டு. அப்படிப்பட்ட சமயத்தில் தம்பிணிபோன்ற வியாதியுடைய நோயாளிகளில் நமதவிழ்தத்தைச் சாப்பிட்டு சுகமடைந்தவர்கள் யாராகிலும் வந்து தம் அனுபவத்



தைச் சொல்லுகையில் அந்த ரோகிகள் சகஜமாய் தம் சந்தேகங்களை விட்டுவிடுவார்களல்லவா? மனிதர் இயேசுபகவானைப்பற்றி சந்தேகப்படுகையில் அவர்கள் தங்கள் ஐயங்களை இவ்வண்ணமாகவே தீர்த்துக்கொள்ளலாம். இயேசுநாதரை அண்டினோர் அநேகருண்டு. ஆகையால் அவர்கள் அனுபவம் எப்படிப்பட்டதென்று விசாரிக்கும்பட்சத்தில் அப்பரமபுருஷனின் சக்தியை நிச்சயமாய்த் தெரிந்துகொள்ளலாம். கிறிஸ்துபகவானின் பக்தர்கள் தம் அனுபவத்தால் அறிந்தவற்றைத் தாராளமாய்ச் சொல்லுகிறவர்களாகையால் இவ்விசாரணை வெகு சுளுவானது. இவ்விஷயத்தில் அவர்களுக்கும் இந்து மதஸ்தர்களுக்கும் அனந்த வித்தியாசமுண்டு. தமக்கொரு ஆதாயம் உண்டானால் அது மற்றவர்களுக்குக் கிடைக்கக்கூடாதென்று விரும்புகிறது மனிதருக்கு இயல்பே. இந்து மதஸ்தரில் முக்கியமானவர்களான பிராமணர்களும் மற்றவர்களை அசட்டையபண்ணித் தாங்கள்மாத்திரம் வேதாப்பியாசம் செய்து சமஸ்த ஆசாரங்களையும் நடத்தும்பொருட்டு விதி ஏற்படுத்தியிருக்கிறார்கள். கிறிஸ்துநாதரின் தொண்டர்கள் சகல மனிதரும் சகோதரர்கள் என்றெண்ணி தாங்கள் அடைந்த நன்மைப்பேறு சகல மனிதருக்கும் உண்டாகவேண்டுமென்று விரும்பித் தம்மாண்டவரின் வர்த்தமானத்தை எங்கும் பிரசுரஞ்செய்துவருகிறார்கள். அவிழ்தம் சாப்பிட்டு சுகமடைந்தவர்களைப்போலவே கிறிஸ்து உபதேசத்தை ஏற்றுக்கொண்டவர்களும் தமக்குண்டான நன்மையை உண்மையாய் அறிந்து பிறருக்குத் தெரியப்படுத்துகிறார்களாதலால் அவர்கள் வாக்கை நம்புவதற்குப் போந்த இடமுண்டு. மற்றவர்கள் அவ்வரத்தைப் பெறுவதினால் அவர்களுக்கு லாபம் ஒன்றும் உண்டாகாது ஆதலால் அவர்கள் பொய்சொல்வதற்குக் காரணம் ஒன்றும் இல்லை. அல்லாமலும் அவர்கள் சங்கதியை விசாரிக்கும்போது அவர்கள் சகஜமாய் நீதிமான்களும் சத்தியவான்களும் பரோபகாரிகளுமாயிருக்கிறார்கள் என்று தெளிவாகிறது. ஆகையால் அவர்கள் தங்கள் அனுபவத்தைக்கொண்டு தம்மாண்டவர் அளித்த வரங்களைக்குறித்து சாட்சியிடும்போது அவர்கள் சாட்சி அங்கீகரிக்கத் தக்கதென்பது நிச்சயம்.

பூர்வம் இயேசுநாதர் நரவேடம்பூண்டு இவ்வையகத்தில் மனிதரைப்போல் வாசஞ்செய்கையில் சிலர் அத்திவ்யபுருஷனிடம் சேர்ந்து நெருங்கிய கூட்டுறவு செய்துவந்தார்கள். அவர்கள் தம்மாண்டவரின்

சங்கதியைப் பூர்ணமாய் அறிந்தவர்களாகையால் அவர்கள் சாட்சி அதிகப் பலமானது. அவர்களில் பேதுரு என்னும் பக்திமான் தன் ஆண்டவரின் தய்ளமாட்சிமையைக்குறித்து 'நீங்கள் அவரைக் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள். இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம்வைத்துச் சொல்லிமுடியாததும் மகிமையால் நிறைந்ததுமாய் இருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய்க் களிகூருகிறீர்கள்' என்று தன் உபதேசத்தைக்கேட்ட பக்திமான்களுக்கு எழுதியிருக்கிறான் (1 பேது. 1. 8.). இதுவுமன்றி இயேசுகிறிஸ்துநாதர் நம்முடைய பாவங்களின் பாரத்தைச் சுமந்து நம்மெல்லாருக்காகவும் மரணத்தியாகஞ் செய்ததினால் வழி அலைந்த நாம் திரும்ப வழியில்வந்து சுகமடைந்திருக்கிறோம் என்று வேறோரிடத்தில் வெளிப்படையாகச் சொல்லுகிறான் (1 பேது. 2. 24, 25.). மேலும் அக்காலத்தில் அதிகாரிகள் கிறிஸ்துமதத்திற்கு விரோதிகளாகிக் கிறிஸ்துபகவானின் பக்தர்களை வெகுவாய் துன்பப்படுத்துகையில் பேதுரு இச்சங்கதியைக்குறித்து உங்களுக்கு வரப்போகிற பாடுகளைக்குறித்து நீங்கள் கவலைப்படாமல் இயேசுகிறிஸ்துவினுடைய 'பாடுகளுக்கு பங்காளிகளானதால், சந்தோஷப்படுங்கள். நீங்கள் கிறிஸ்துநாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள்' என்று தன் சகோதரர்களுக்கு தைரியஞ்சொல்லுகிறான் (1 பேது. 4. 13, 14.). மேலும் தான் சிறையில் அடைபட்டுச் சிலுவை மரணத்திற்கு எதிர்நோக்கியிருக்கையில் இப்பேதுரு என்பவனே கொஞ்சமாகிலுங் கலங்காமலும் கவலைப்படாமலும் 'நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து எனக்கு அறிவித்தபடி நான் என் கூடாரத்தை (அதாவது என் சரீரத்தை) விட்டுப்போவது சீக்கிரத்தில் நேரிடும் என்று அறிவேன்' என்று பயமின்றி சொல்லுகிறான் (2 பேது. 1. 13.). இவ்வார்த்தைகளால் பேதுருவுக்குண்டான அனுபவத்தைப் பரிசோதிக்கையில் விவரிக்கமுடியாத வரங்களை இயேசுகிறிஸ்துநாதரால் பெற்றபடியால் இப்புவியில் நேரிடுகிற சுகதுக்கங்களை ஒரு துரும்புக்குச் சமானமாகப் பாவித்தாற்போலக் காணப்படுகிறது.

யோவான் என்னும் பரிசுத்தன் பகர்ந்த சாட்சியும் இதற்கிசைந்திருக்கிறது. இயேசுநாதரின் சீஷர்கள் எல்லாரிலும் யோவான் என்பவன் தன் ஆண்டவருக்குப் பிராணசிநேகிதனானபடியால் அவன் தன்



ஆண்டவரின் சங்கதியைப் பூரணமாய்த் தெரிந்துகொண்டு அவருடைய சரித்திர ரகசியங்களை எல்லாரையும்விட வெகு நேர்த்தியாகவும் இன்பத்தைப் பயக்கும் விதமாகவும் வெளியிடக் கூடியவனானான். அவன் எழுதிய சுவிசேஷ ஆகமத்தைப் பரிசோதிக்கையில் அவன் தன்னாண்டவரில் எவ்வளவு பயபக்தியுடையவனாய் இருந்தான் என்பதைத் தெளிவாய் அறிந்துகொள்ளலாகும். அவன் எழுதிய நிருபங்களில் தன் அனுபவத்தைக்கொண்டு வெகு தெளிவாய் எழுதியிருக்கிறான். அவன் இயற்றிய சுவிசேஷ நூல்களையாகிலும் நிருபங்களையாகிலும் விசாரிக்கும்பட்சத்தில் அதிக ஆச்சரியத்தையுண்டாக்கும் ஒரு சங்கதி வெளிப்படுகிறது. அதென்னவெனில், இயேசுபகவான் முப்பத்து மூன்று ஆண்டுகள் இவ்வுலகில் மனிதனைப்போல் ஜீவித்த பிறகு மண்ணைவிட்டுக் கண்ணுக்குத் தோன்றாதவராய்ப் போனபோதிலும், அவர் தம்மைவிட்டுப் போனாரென்று சீஷர்கள் எண்ணாமல் தம் ஆண்டவர் ஜீவனுடையவராய் எப்போதும் தம்முடனே இருக்கிறாரென்று எல்லாரும் நிச்சயமாய் நம்பிவந்தார்கள். இதைப்பற்றி 'நம்முடைய ஐக்கியம் பிதாவோடும் அவர் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது' என்றும் (1 யோவா. 1. 3.), 'நாம் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து என்னப்பட்ட சத்தியமுள்ளவருக்குள்ளும் இருக்கிறோம். இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார்' என்றும் (1 யோவா. 5. 20.), இந்த யோவான் சாட்சி கொடுத்திருக்கிறான். மேலும் இயேசுகிறிஸ்து நம்முடைய பாவங்களை நீக்கி நம்மை சுத்திகரிக்கிறார் என்றும் (1 யோவா. 1. 9.), நமது ஜீவிய நாட்டம் முடிந்தபிறகு நாம் அப்பொன்னுலகாதிபனைக் கண்ணாரக்கண்டு அவருடைய கூட்டுறவால் பூரணராவோம் என்றும் (1 யோவா. 3. 1, 2.), இப்பக்தன் பரிஷ்காரமாய்ப் போதிக்கிறான்.

பவுல் என்னும் பரிசுத்தனின் அனுபவத்தை விசாரிக்குங்கால் அது இன்னும் ஆச்சரியமாயிருக்கின்றது. இயேசுபகவான் சற்குருமூர்த்தியாகத் திருமறைச் சாற்றியகாலத்தில் பவுல் என்பவன் அப்பரமகுருவின் திருப்போதனையைக் காதாரக்கேட்டு அவரது பணிவிடைக்கு ஏற்படவில்லை. விண்ணுலகாதிபதி பரமேறிய பின்னர் இரண்டு மூன்று ஆண்டுகள்வரையில் அவன் கிறிஸ்திறைவனுடைய பிரஜைகள்மேல் பகைகொண்டு சீறிச் சினந்து அவர்களை வெகுவாய்

இம்சைபண்ணிவந்தபோது ஒருநாள் அவன் பிரயாணம் போகையில் இயேசுபகவான் அவனுக்குக் காட்சியளித்தார். அதின்மேல் அவன் சகிக்கமுடியாமல் தரையில் விழுந்தபோது 'சவுலே நீ ஏன் என்னைத் துன்பப்படுத்துகிறாய்' என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான். அப்பொழுது அவன் 'ஆண்டவரே நீர் யார்' என்று வினவ அவ்வாண்டவர் 'நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே, நீ எழுந்து பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்யவேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும்' என்று உத்தரவருளினார். பவுலுடன் பிரயாணம்பண்ணின மனிதர்கள் அந்தச் சத்தத்தைக் கேட்டும் ஒருவரையும் காணவில்லை. பவுல்மாத்திரம் ஒளிமயமான பிரகாசத்தைக் கண்டு மூன்று நாட்கள்வரையில் பார்வையில்லாதவனாய் அன்னபானமின்றி இருந்தான். மூன்று தினங்கள் சென்றபிறகு அனனியா என்னும் ஒரு பக்தன் தேவனால் ஏவப்பட்டு பவுலிடம் வந்து ஜெபம் செய்து இயேசுபகவான் நாமத்தில் அவன்மேல் கைகளை வைக்கவே அவன் பார்வையடைந்து மிகவும் சந்தோஷப்பட்டு எழுந்து கர்த்தருடைய நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றான். அதன்பின்னர் பவுலென்னும் அப்பரிசுத்தன் இயேசுநாதர்மேல் பூரணபக்தியுடையவனாய் அவர்பொருட்டு யாவையுந் துறந்து, தான் முன் எட்டிக்கொட்டையைப்போல வெறுத்து விரோதித்த மார்க்கத்தை எத்திசையிலும் பரவச்செய்யும்பொருட்டு சொல்லற்கரிய கஷ்டவாதைகளை அனுபவித்துச் சகல தேசங்களிலும் பிரயாணம்செய்து கிறிஸ்துபகவான் திருப்புகழ் எங்குந் தொனிக்கும்படியாக ரட்சண்ய பேரிகையடித்து பிரசுர எக்காளம் ஊதிவந்தான். (அப். 9. 1–30; 22. 1–23.)

இம்மனிதனுக்கு வியப்பைப் பயக்கும் இவ்வளவு ஆச்சரியமான மாறுதல் உண்டாக்குவதற்குக் காரணம் யாது? அவன் அதற்குமுன் சகல வித்தைகளிலும் சமர்த்தனாய் மிகவும் பெயர்ப்பிரஸ்தாபம் அடைந்து அதிகமேன்மையான நிலைமைக்கு ஆயத்தமாயிருந்தபோதிலும், இம்மண்ணின் மகிமையை வெகு அற்பமாய் எண்ணி சகலரும் இகழ்ச்சிசெய்த கிறிஸ்துமார்க்கத்தைத் தழுவி கணக்கில்லாக் கஷ்டநஷ்டங்களை வருவித்துக்கொண்டான். அதிக முக்கியமான காரணமிருந்தபோதிலும், ஒருவரும் இவ்வளவாகத் துணிந்து இவ்வளவு நஷ்டமடையமாட்டார்கள் அல்லவா? பவுல் தானே இச்சங்கதியைக்



குறித்து எவ்வளவு தெளிவாகச் சொல்லியிருக்கிறான் என்று பாருங்கள். எனக்கு லாபமாயிருந்தவைகள் எவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். கிறிஸ்தென்னும் லாபத்தை யடையும்பொருட்டு சகலத்தையும் நஷ்டமாக்கி குப்பையுமாக எண்ணுகிறேன் என்று அவன் பிலிப்பிப் பட்டணத்திலுள்ள தன் சிநேகிதருக்கு எழுதியிருக்கிறான் (பிலி. 3. 7–11.). இயேசுநாதர் அதிகப் பெரிய வரங்களை அளித்திருக்கிறாரென்று பவுல் தான் எழுதிய எல்லா நிருபங்களிலும் பலமான சாட்சி கொடுத்திருக்கிறான். விசுவாசிக்கிற ஒவ்வொருவனுக்கும் ரட்சிப்புண்டாவதற்குக் கிறிஸ்துவின் சுவிசேஷம் தேவபலனாய் இருக்கிறபடியால் நான் அதைக் குறித்து வெட்கப்படுகிறவன் அல்ல (ரோம. 1. 16.), என்று சொல்லுகிறான். மேலும் தான் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் விடுதலையடைந்ததாகவும் (ரோம. 7. 23–25.), அவ்வாண்டவரின் துணையினாலேயே தன்னாலும் பிறராலும் தேவனாலும் உண்டாகும் மூவகைக் கவலைகளையும் ஜெயித்து மனச்சமாதான மடைந்ததாகவும் (பிலி. 4. 12, 13.), அவ்வடைக்கலநாதனை அண்டுவதால் மரணபயத்தை முற்றிலும் போக்கடித்துக்கொண்டதாகவும் (1 கொரி. 15. 55–57.), சாட்சியிடுகிறான். இயேசுநாதருடைய தயாளத்தை அவன் அனுபவ அறிவினால் தெரிந்துகொண்டபடியால் மற்றவை யாவும் அவனுக்குச் சாரமற்றதானதால் அவ்வனுபவத்தைக்கொண்டு 'கிறிஸ்துவின் அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது' என்றும் (2 கொரி. 5. 14.), 'நான் கிறிஸ்துவுடனேகூட சிலுவையிலறையப்பட்டபடியால் இனி நான் அல்ல கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்' என்றும் (கலா. 2. 20.) விளம்புகிறான்.

பரிசுத்தனான இப்பவுலின் முதிர்வயதில் ரோம சக்கிரவர்த்தி அவனைப் பிடித்துச் சிறையிலடைத்து வைத்தபோதிலும், கைதியான அவன் கொஞ்சமாகிலும் கவலைப்படாமலும் கலங்காமலும் தன் ஆண்டவர்மேல் திருஷ்டிவைத்து வெகு மகிழ்ச்சியடைந்தான். கொடிய மரணம் சம்பவித்த தருணத்தில் அவன் தமக்குச் சம்பவித்த யாவையும் ஞாபகம்பண்ணி வெகு களிப்புற்று 'நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப் போகிறேன். நான் தேகத்தைவிட்டுப் பிரியுங்காலம் வந்தது. நல்ல போராட்டத்தைப் போராடினேன்,

ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்கு தந்தருளுவார்' என்று தன் சிநேகிதனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதினான். (2 தீமோ. 4. 6–8.)

பவுல் என்னும் பக்தியான் இயேசுநாதரின் தயாளத்தை அனுபவித்து அவ்வாண்டவர் அருளிய வரங்களைச் சொந்தமாக்கிக்கொண்டு அவர் அவ்வதிகாரமுடைய ரட்சகரும் சகல லோகங்களையும் அரசாண்டுவரும் அகிலாண்ட நாயகருமாய் இருக்கிறார் என்று நிச்சயித்தான். நாம் செவ்வையாகப் பரிசோதித்துப் பார்க்குமிடத்தில் இவ்வகை அனுபவம் உடையவர்கள் இவ்வண்ணம் நிச்சயிப்பது அவசியமென்றுரைக்கச் சந்தேகமில்லை. முற்காலத்தவர் விஷயங்களை விசாரித்தபோதிலும் கிறிஸ்துவின் அடியார்கள் எல்லாரும் இப்படிப்பட்ட சாட்சிகொடுப்பார்கள் என்று தெளிவாய்க் காணப்படும். கி. பி. 167–ம் ஞு போலிக்கார்ப்பு என்னும் கிறிஸ்தவ போதகன் நூறுவயதுடையவனாய் இருக்கையில், அதிகாரிகள் கிறிஸ்துமதத்தை நிர்மூலம்பண்ண நோக்கங்கொண்டு அவனைப் பிடித்து கொடிய வதை செய்தார்கள். அவர்கள் எவ்வளவு பயமுறுத்தினாலும் கொஞ்சமாகிலும் பயப்படாமல் தான் கிறிஸ்துபக்தன் என்றே அறிக்கையிட்டு உறுதியாய் நின்றான். அவர்கள் கடுஞ்சினமடைந்து 'கிறிஸ்துவை தூஷியாதபட்சத்தில் அக்கினித்தழலில் உன்னைப் போட்டுவிடுவோம்' என்று பயமுறுத்தினாலும் அவன் துணிந்து நின்று 'நான் எண்பத்தாறு வருஷங்களாய் அப்பரமாத்மனை சேவித்து, அப்புண்ணிய புருஷனுக்கே தொண்டுசெய்து வருகிறேன். அவரும் எனக்கு யாதொரு கேடும் செய்யவில்லை. ஆகையால் என் மன்னனும் ரட்சகருமாகிய அத்திவ்யபுருஷனை நான் மனதார தூஷிப்பது எப்படி' என்று சாற்றி அந்த அக்கினிச்சூளையைச் சமீபித்துச் சென்று தழலில் இறங்கி உயிர்துறந்தான்.

போலிக்கார்ப்பு என்பவர் மரித்து ஏறக்குறைய இருநூறு வருஷங்கள் சென்றபின்பு அகுஸ்தீன் என்னும் ஓர் கல்வியான் இருந்தான். அவனது அன்னை அதிக பக்தியுள்ள சீமாட்டியாயிருந்தபோதிலும் அவன் தன் யௌவனகாலத்தில் முற்றிலும் பக்தியற்றவனாயி-



ருந்து, பற்பல துஷ்டத்தனங்களைச் செய்து தன் காலத்தை வீணே கழித்துவந்தான். எவ்வளவு சுகபோகங்களை அனுபவித்தபோதிலும், அவன் மனச்சமாதானம் அடையாமல் பலவாறாய்த் தொல்லைப்பட்டதினால் துக்கசாகரத்தில் மூழ்கினவனாய்த் தன் கர்மத்தை எப்படியாகிலும் போக்கடிக்கும்பொருட்டு விடாமுயற்சியுடன் போராட ஆரம்பித்தான். முக்கியமாய் அவன் ஞானவழியைப் பின்பற்றி தத்வ ஞான சாஸ்திரத்தை வெகு ஊக்கமாகப் பயிற்சி செய்தபோதிலும், எவ்வளவு கல்வி கற்றாலும் எவ்வளவு தர்க்கம்பண்ணினாலும் துர் ஆசைக்கட்டுகளை அவிழ்த்துக்கொள்ள முடியாமல் எப்போதும்போல் நடந்துகொண்டுவந்தான். கடைசியில் ஒரு கிறிஸ்துமதக் குருவின் பிரசங்கங்களைக் கேட்டதினால் அவன் தன் நிஜஸ்திதியைக் கண்டுகொண்டு அதிகமாய் மனஸ்தாபப்பட்டு இயேசுகிறிஸ்துநாதருக்கு மனதைத் தத்தம்பண்ணி அத்திவ்ய மைந்தனுக்குத் திருப்பணிவிடை செய்ய உடன்பட்டான். அக்ஷணமே அவனில் வெகு ஆச்சரியமான மாறுதல் உண்டானது. தான் முன்னமே அப்பியாசம் செய்து வந்த துர்சகவாசத்தை முற்றிலும் நீக்கி தன் துர்ப்பழக்கங்கள் யாவையும் வெறுத்துத்தள்ளி மற்றவர்களைவிட வெகு கண்டிப்பாகவும் வெகு யதார்த்தமாகவும் ஜீவியம்பண்ணத் தொடங்கினான். அதுமுதல் அவன் மரணம்வரையில் அதிக முயற்சியும் ஊக்கமுமுடையவனாய் ஜெபித்துத் தியானஞ்செய்து நீதிநெறியை வெகு பொறுமையுடன் போதித்துவந்தமையால் அவன் கிறிஸ்து பக்தர்கள் எல்லாரைவிட அதிகக் கீர்த்திப்பிரதாபமுடையவனானான். இப்பெரும்மாறுதல் வித்தியாப்பியாசத்தினாலாகிலும் யோகாப்பியாசத்தினாலாகிலும் உண்டாகாமல் இயேசுகிறிஸ்துநாதருடைய திவ்ய மாட்சிமையினாலேயே உண்டானது. இதைக்குறித்து அகுஸ்தீன் 'நித்தியானந்த மூர்த்தியும், சர்வாதிகாரமுடைய தேவனுமான இயேசுகிறிஸ்துநாதர் என்னும் மனிதன் 'நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்' என்று மொழிந்து, என்னைக் கூப்பிடுகையில் இச்சகவாசத்தால் திருப்தியடையும்பொருட்டு தகுந்த பலம் சம்பாதித்துக்கொள்ள வேண்டுமென்று போராடினபோதிலும் மனிதனுக்கும் தேவனுக்கும் மத்தியஸ்தராகிய இயேசுகிறிஸ்துநாதரைத் தழுவிக்கொள்ளும் வரையில் அது கிடைக்கவே இல்லை' என்று தன் சொந்த

அநுபவத்தைக்கொண்டு சொல்லியிருக்கிறான். (அகுஸ்தீன் சரித்திரம் VII. 24.)

இயேசுநாதருடைய திவ்ய மகத்துவத்தால் தமக்கு அதிக ஆச்சரியமானதும் சொற்கடங்காததுமான மாறுதலுண்டானதென்று எண்ணிறந்த பக்திமான்கள் சாட்சிகொடுத்திருக்கிறார்கள். அவர்கள் எத்தேசத்தாராயினும் யாவரும் ஒருமித்து தமக்கு மோட்சபதவியளித்த அம்மேலோனை ஸ்தோத்திரஞ் செய்கிறார்கள். ஏறக்குறைய 150 ஆண்டுகளுக்குமுன் சீமைதேசத்தில் வசித்த தளகர்த்தனான கார்டினர் துரையவர்கள் அகுஸ்தீனைப்போல் தன் வாலிபகாலம் முழுவதையும் வீணாய்க் கழித்துக்கொண்டுவந்தான். அவன் அதிக துன்மார்க்கனாய் மத்தியபான பயிற்சிசெய்து சூதாடி விபசாரஞ்செய்து, தேவனையாகிலும் மனிதரையாகிலும் எள்ளளவேனும் மதியாமல் மதங்கொண்ட களிறுபோல் தன் மனம்போனபடி சரீரேச்சைகளைப் பின்பற்றி நடந்துவந்தான். யார் என்னசொன்னாலும் அவன் கொஞ்சமாகிலும் கேளாமல் பெருங்குவியலைப்போல தினந்தோறும் அக்கிரமத்தை ஏராளமாகக் கட்டிக்கொண்டுவந்தான். இப்படியிருக்கையில் ஒருநாள் சிநேகிதன் ஒருவனுடைய இல்லாளை வசியப்பண்ணி இராக்காலத்தில் பன்னிரண்டுமணிக்கு ரகசியமாய்ச் சந்திக்கும்படிக்கு அவளுடன் ஒழுங்குபண்ணிக்கொண்டான். அத்தினம் ராத்திரிவரையில் அவர் சில சிநேகிதர்கூட மதுபானம்பண்ணிச் சூதாடி பத்து மணிவேளைக்கு அவர்களைவிட்டுப் பிரிந்து தன் வீட்டுக்குப் போனான். தான் நியமித்தவேளைக்குப் புறப்பட்டு அந்த ஸ்திரீயைக் கூடும்படி ஆயத்தப்பட்டிருக்கும்வேளையில் கொஞ்சநேரம் கழிக்கும்பொருட்டு, மேஜைமேலிருந்த ஓர் சிறு புஸ்தகத்தை எடுத்து வாசிக்கத் தொடங்கினான். அதில் இயேசுநாதர் சரித்திரம் சிறிதளவு சொல்லியிருக்கையால் அவன் விடாமல் வாசித்துக்கொண்டிருக்கையில் மின்னல் மின்னினாற்போல் அதின் அர்த்தம் அவன் மனதில் திடீரென்று ஒளிபோல் வீசினது. அதின்மேல் அவன் மெய்மறந்தவன்போல் ஆகி தன் விழிகளை ஏறெடுத்துப்பார்க்குங்கால் இயேசுநாதர் சிலுவைமேல் தொங்கி அதிக வேதனையடைந்து தன்மேல் கண்ணூன்றி, 'உனக்காகவே, இவ்வளவு பாடுபட்டேன்,' என்று சொல்லுவதுபோல அவனுக்கொரு காட்சியுண்டானது. அதிவிநோதமான அத்தரிசனத்



தால் அவன் நெஞ்சு தீயிலிட்ட வெண்ணெய்போல் இளகி உருகிப்போனது. அவன் தன் பாவத்தைக்குறித்துச் சிந்தித்து துக்கசாகரத்தில் மூழ்கி, தன் துராலோசனையை முற்றிலும் தவிர்த்து மட்டற்ற தயையுள்ள அப்புண்ணியருக்குத் தன்மனதைத் தத்தம்பண்ணி தன் ஜீவகாலம் முழுவதும் சிலுவைப் பிராணத்தியாகேசரின் திருப்பாத பணிவிடை செய்வதாக நிர்ணயம் செய்தான். அதன்பின்னர் அவன் இதற்குமுன் சகல துர்ப்பழக்கங்களிலும் எவ்வளவு முயற்சியுடையவனாயிருந்தானோ அப்படியே இப்போது தர்மகாரியங்களைச் செய்வதில் அதிக மனவலிமையுடையவனாய், வைராக்கியங்கொண்டு தன் சன்மார்க்க நடக்கையினால் வெகு கனமான பேர்பெற்றவரானான்.

இவ்வநுபவம் மேன்மக்களுக்கு மாத்திரமல்ல, இயேசுபகவானின் திருப்பாத சரணடைந்த எல்லாருக்கும் உண்டாகிறது. கிறிஸ்திறைவனுடைய பக்தர்களிடம் விசாரிக்கும்போது, கற்றோராயினும் கல்லாராயினும் புருஷர்களாயினும் ஸ்திரீகளாயினும் சமஸ்தமானவர்களும் ஏகோபித்து தம் ஆண்டவர் செய்த நன்மைகளைக்குறித்து பலமான சாட்சிகொடுக்கிறார்கள். இவ்வார்த்தைகளை எழுதுகிற நான் என் அநுபவத்தைக்கொண்டு எழுதுகிறேன். நான் பதினைந்து அல்லது பதினாறு வயதுள்ளவனாய் இருந்தபோது, தேவதயவால் இயேசுகிறிஸ்துநாதரின் தயவுள்ள அழைப்பைக்கேட்டு அம்மேலோனுக்கு மனதைத் தத்தம்பண்ணியமாத்திரத்தில் என் பாவபாரம் நீங்கி எனக்குச் சொற்கடங்காத மனச்சமாதானம் உண்டானது. இயேசுநாதர் எனக்கு வாக்கிட்டு என் பாவ அந்தகாரத்தைப் போக்கடித்து, அக்காலம்முதல் தற்காலம்வரையில் எனக்குத் துணையாயிருந்து என்னை நடத்திக் காப்பாற்றிக்கொண்டுவருகிறார். கிருபாசமுத்திரமான அவர் என் நோக்கங்கள் எல்லாவற்றையும் மாற்றி எனக்கு நூதன மனமளித்து என்னைக் கைவிடாது எப்போதும் எச்சரித்து ஏவுதல் பண்ணிக்கொண்டுவருகிறார். இவ்வநுபவம் எவ்விதமுண்டானதென்று வினவும்பட்சம் இயேசுநாதருடைய திவ்ய மகத்துவத்தால் உண்டானதென்று திட்டமாய்ச் சொல்லக்கூடும். ஆனால் அநுபவமில்லாதார் பூரணமாய்க் கண்டுகொள்ளக்கூடியவிதமாய் அதை விளக்கிக்காட்டவலாது. இதைக்குறித்து புதைபொருளை விளக்கிக்காட்டும் பகலோனை அப்பரமகுரு 'காற்றானது தனக்கிஷ்டமான இடத்திலே வீசு

கிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்திற்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது. ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான்' (யோவா. 3. 8.) என்று திருவாய் மலர்ந்தருளினார். இப்பரமரகசியம் விளக்கிக்காட்ட மாளாத விஷயமாயினும் இருட்டை வெளிச்சமாக்கும் உலக ஒளியாகிய இயேசுவை அண்டினவுடனே சொல்லிமுடியாத ஆச்சரியமான மாறுதலுண்டானதால், நாங்கள் புதிதாகவே பிறந்தாற்போல ஆனோம் என்று அறிவோம். இதைப்பற்றி பவுலென்னும் பக்தசிரோமணி 'ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின' (2 கொரி. 5. 17.) என்று தன் சொந்த அனுபவத்தினால் உரைத்திருக்கிறான்.

மேற்கூறியதற்கு அநேக திருஷ்டாந்தங்கள் உண்டு. சில ஆண்டுகளுக்குமுன் நியூசிலாந்து என்னும் தீவில் வசிக்கும் ஜனங்கள் முற்றிலும் அவிவேகிகளாய் ஒருவரோடொருவர் கொடிய யுத்தஞ்செய்து நீதிநெறிகளை ஒருபொருட்டென்றெண்ணாமல் வெகு அக்கிரமஸ்திதியில் ஜீவித்துவந்தார்கள். இப்படியிருக்கையில் கிறிஸ்துமதப் போதகர்கள் அத்தேசஞ்சென்று விடாமுயற்சியாய் உபதேசித்துவந்தமையால் அந்த ஜனங்கள் தம் துர்அபிப்பிராயங்களைக் கொஞ்சங் கொஞ்சமாய் ஒழித்துவிட்டு கிறிஸ்துமதத்தைத் தழுவினார்கள். பிறகு ஓர்தினம் ஒரு கிராமத்தான் தன் தேவாலயத்திற்கு வந்து தேவாராதனை செய்து தேவசுதனான இயேசுபகவான் நியமித்த திவ்ய நற்கருணை என்னும் பரிசுத்த ராப்போஜன நியமத்தை ஆசரிக்கையில் ஒருவன் திடீரென்று எழுந்து, வாசல்வரையில் போய் அங்கே கொஞ்சநேரம் நின்று திரும்பிவந்து தன் ஸ்தானத்தில் உட்கார்ந்தான். அவர்கள் குருவானவர் அதைக் கவனித்து ஆச்சரியப்பட்டு ஆராதனை முடிந்தபிறகு அம்மனிதனைக் கூப்பிட்டு, 'நீ உன் இடத்தை விட்டு அகன்றுபோய் திரும்பவந்து உட்கார்ந்ததற்கு காரணம் என்ன' என்று வினவினான். அதற்கு அவன் தன் குருவானவருக்கு பின்வருமாறு கூறினான். 'நான் முதலில்வந்து உட்கார்ந்தபோது என்னண்டை உட்கார்ந்திருந்தவன் யாரென்று எனக்குத் தெரியாமல் போனாலும் பிறகு நான் அவன்பக்கம் திரும்பி அவனை நோக்கிப்



பார்த்தபோது சில வருஷங்களுக்குமுன் என் தந்தையைக் கொன்று அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணின கொலைபாதகனென்று கண்டேன். அக்கொலைகாரப்பாவியை எப்போ பார்க்கிறேனோ அப்போதே அவனைக் கொல்வேன் என்று ஆணையிட்டுக்கொண்டிருந்தேன். ஆகையால் அப்பாபிஷ்டி துன்மார்க்கத்தை விட்டுவிட்டவனானபோதிலும் அவன் சமீபத்திலுட்கார்ந்து முழங்காலூன்றியபோது என் மனதிற்குள் எவ்வளவோ குழப்பம் நேரிட்டது. கடைசியில் அதைச் சகிக்கமாளாமல் நான் எழுந்துபோனேன். ஆனால் கொஞ்சதூரம் போனபிறகு 'நீங்கள் ஒருவரையொருவர் நேசித்தால் நீங்கள் என் சீஷர்களாயிருக்கிறீர்கள் என்பதை சகலரும் அறிவார்கள்' என்கிற ஓர் அசரீரிவாக்கு என் காதில் விழுந்தது. அதினால் எனக்கு அநேக யோசனையுண்டானபோது, ஓர் சிலுவையும் அதின்மேல் ஆணிகளால் பாதங்களும் கரங்களும் கடாவப்பட்ட ஓர் மனிதனும் பிரத்தியட்சமானதுபோல் தோன்றினது. அம்மனிதன் 'பிதாவே அவர்களுக்கு மன்னியும். அவர்கள் செய்கிறது இன்னதென்று அறியார்கள்' என்று சொன்னதாகவுங் கேட்டேன். ஆகையினால் 'நான் என் ஸ்தானத்திற்குத் திரும்பிவந்தேன்' என்று விடைகூறினான். கருணைக்கடலும் கிருபைநிதியும் அன்பின்பெருக்குமான் அண்ணலின் மட்டற்ற தயாளத்தை ருசித்து, அனுபவித்து, அப்பிராணத்தியாகேசருடைய மரணப்பொருளைக் கண்டு உணர்ந்ததால் அவ்வறிவீனன் தன் வர்மத்தை முற்றிலுந் துறந்து தனக்கு எண்ணத்தொலையாத அபகாரம் செய்தவனை மன்னித்து, அவன் சமீபத்திலுட்கார்ந்து அவனைத் தன் சகோதரனைப்போல பாவித்தான். இயேசுபகவான் மாட்சிமையாலேயன்றி வேறொன்றாலும் இவ்வளவு வியப்புக்குரிய மாறுதல் உண்டாகமாட்டாதென்று உரைக்கச் சந்தேகமில்லை.

இயேசுநாதரே எங்களுக்கு ஆதாரம். அம்மாண்புடைய மன்னனில் அடைக்கலம் புகும்வரையில் நாங்கள் பாவாந்தகாரத்தில் சிக்கிக்கொண்டு, தேவனை அறியாமல், அதிகச் சந்தேகிகளாய்ப் பிறர்போல் வியாகுலப்பட்டுக்கொண்டிருந்தவர்களே யாயினும், அவ்வற்புதநாதனுக்கு உள்ளத்தைக் காணிக்கையாக படைத்த தட்சணமே, தேவசந்நிதியை மறைத்த பாவமேகங்கள் நீங்கித் திவ்யசுடர் எம்முள்ளத்தில்

வீச ஆரம்பமானது. தந்தை தன் பிள்ளை துக்கமுகத்தைப் பார்த்து, அவன் செய்த தப்பிதத்தை மன்னித்து, அவனைத் தூக்கி, கட்டி அணைத்துக்கொள்ளும்வண்ணம், தேவன் தமது வழியைவிட்டுக் கொடிய பாவங்களைச்செய்த எங்களைத் தம்மிடம் சேர்த்து அரவணைத்திருக்கிறார். நாங்கள் முன் எங்களிடத்திலிருந்த பயம் சந்தேகம் முதலிய யாவற்றையும் விட்டுவிட்டு தேவனுடைய அளவற்ற அன்பை ருசித்து எங்கள் பாரமனைத்தையும் சுமைதாங்கியான அவர்மேலே போட்டு, ஒப்பற்ற சமாதானம் அடைந்திருக்கிறோம். இதுவுமன்றி, இயேசுகிறிஸ்துநாதரை நோக்கிப் பார்த்து, அவரது மாண்புடைய தயவை எப்போது ருசிபார்த்தோமோ, அப்போதே நாங்கள் அதற்கு முன் செய்துவந்த பாவங்களை அதிகமாய் அருவருக்கிறவர்களானோம். நாங்கள் முன்னே நன்குமதித்த துராப்பியாசங்கள் முற்றிலும் அருவருப்பானவை என்று தோன்றியதால், அவற்றை முற்றிலும் வெறுத்துத்தள்ளி சகல விஷயங்களிலும் யதார்த்தமாகவும் பரிசுத்தமாகவும் ஜீவிக்கவேண்டும் என்று எங்களுக்கு அதிக வாஞ்சை உண்டாயிற்று.

இப்புதிய நோக்கம் கைகூடிவரும்படி நாங்கள் நம்பின இயேசு பகவான் எங்களுக்குத் துணைநின்று சமயத்திற்குத்தக்கதாய் உதவி புரிந்து வருகிறார். யாதாயோர் துர்ஆலோசனை உண்டாகும்போது அப்பரிசுத்தரை ஞாபகம்பண்ணுவதினால் அத்துர்எண்ணம் அகன்று போம். யாதாயோர் துன்மார்க்கத்தைப் பின்பற்றக் கருதினால் அம்மாசற்ற தூயர் எங்களைக் கைப்பற்றி எச்சரிக்கிறார். ஆபத்துக்காலத்தில் நாங்கள் பாரத்தைச் சுமக்கமாளாமல் வெகுவாய் வியாகுலப்படும்போது எம் சமயசகாயர் எமக்குச் சமீபித்துவந்து 'நான் உன்னை ஒருக்காலும் விடுவதில்லை' என்று வாக்கிட்டு எங்களை ஆற்றித் தேற்றி ஆதரிக்கிறார். எங்களுக்கு எவ்வளவு கஷ்டம் நேரிட்டபோதிலும் சர்வவல்லவரின் தயவு ஒருக்காலும் தவறாது என்று நிச்சயித்து அமைதல் அடைகிறோம். எங்கள் பிராணசிநேகிதரானாலும் எங்கள் மாதா பிதாக்களானாலும் ஜீவனைவிட அருமையான எங்கள் பிள்ளைகளானாலும் எங்களை விட்டுப் பிரிந்து பரலோகதியடைந்தால் நித்தியஜீவியாகிய அந்த ரட்சகரின் தயவினால் எமக்கருமையான அவர்களுடன் திரும்பச் சேர்ந்து ஊழிகாலமாய் அவர்களுடன் க்ஷேமமாய் வாழ்வோம் என்று உண்மையாக அறிந்து எங்கள் துக்-



கத்தை அடக்கிக்கொள்ளுகிறோம். ஜீவாதிபதியான இயேசுநாதர் அளித்த ஆறுதலால் மரணபயமுதலாய் ஒழிந்துபோயிற்று. அந்த ஜீவமூர்த்தியின் சரணடைந்தவர்கள் பவுல் என்னும் பக்திமான் போல் மரணத்தைத் திரும்பிப்பார்த்துப் பெருமைபாராட்டி, 'மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்' என்று வெகுவாய்ச் சந்தோஷங்கொண்டு மகிழ்கிறார்கள் (1 கொரி. 15. 55-57.). இது எவ்வளவு பெரிய வரம். மனிதர் யாவரும் தமக்கு நேரிடப்போகிற கதியை அறியாமல் மரணத்திற்கு அதிகமாய் நடுங்கிப் பயந்து தங்கள் பயத்தை நீக்கிக்கொள்ள முடியாதவர்களாய் தம் வாழ்நாள் எல்லாம் வெகுவாக வியாகுலப்படுகிறார்கள். இவ்விஷயத்தைப்பற்றி முன்னோர்கள் அதிக பயம் உடையவர்களாய் 'யமகணங்களை நினைத்தாலும் என் குலை நடுங்கித் துடிக்கிறது, நாராயணனாகிய கைகண்ட எங்கள் வைத்தியரே யமவாதைகளை நீக்கிவிடும்' என்று முறையிட்டுக்கொண்டு வந்தார்கள். ஜீவனுக்கும் மரணத்திற்கும் அதிகாரியான இயேசுபகவான் இம்முறைக்கேட்டை எங்களுக்கு வாக்கிட்டிருப்பதால், நாங்கள் மரணபயத்தை முற்றிலும் துறந்துவிட்டு, ஜீவாதிபதி எப்போது கட்டளையிடுவாரோ அப்போது அவருடைய கிருபாசனம் செல்ல ஆயத்தமாயிருக்கிறோம். எங்கள் ஆண்டவர் எம்பொருட்டு ஒரு ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணி எங்கள் ஜீவஓட்டம் முடிந்தவுடனே எங்களைத் தம் சமீபத்தில் சேர்த்து, எம் கஷ்டம் அனைத்தையும் தீர்த்து, எங்களுக்கு நித்தியானந்தத்தைக் கட்டளையிடுவார் என்று அறிவோமாகையால் பயம் சந்தேகமின்றி எங்கள் ஆவி வாஞ்சிக்கும் பரம நண்பரிடம் போகிறோம். கிறிஸ்துபக்தர்கள் யாவரும் இவ்விதமாக ஏகோபித்து சாட்சியிடுகிறார்கள். இது யாதாமொருவர் கற்பனைபண்ணின கட்டுவிஷயமல்ல. இயேசுவை அண்டினவர்கள் எல்லாரும் இவ்வண்ணமாகவே அநுபவம் அடைந்திருக்கிறார்கள். மற்றவர்கள் அவர்களுடைய நியாயங்களைக் கண்டித்து அவர்கள் எடுத்துக்காட்டின திருஷ்டாந்தங்களை ஒருவேளை தள்ளிவிட்டபோதிலும், இவ்வநுபவத்தையோ ஒருவரும் நிராகரித்துத் தள்ள முடியாது. இந்தப்

பெரும்பாக்கியம் சகலருக்கும் கிடைக்கக்கூடியதாகையால் இயேசு பகவானை நம்பி அந்தத் தயாநிதிக்கு மனதைப் படைக்கிறவர்கள் யாரோ அவர்களெல்லாரும் இப்பெருஞ்செல்வத்தைப் பெறுவார்கள்.

இயேசுநாதர் உலகரட்சகரா யிராதபட்சத்தில், அப்பெருமான் தம்மடியாருக்கு இவ்வித வரங்களை அளிக்கக்கூடியவர் ஆவாரா? அத்திருமகன் பூர்வகாலத்தில் நம்மைப்போல் ஜன்மித்து வளர்ந்து, ஜீவித்து மாண்ட மனிதனுமாத்திரம் இருக்கும்பட்சத்தில், தற்காலத்தில் சகல தேசங்களில் வசிக்கிறவர்களையும் ஆதரித்துத் தம்மை நம்பின ஒவ்வொரு மனிதனுக்கும் துணையாயிருக்கக்கூடுமோ? அந்த ஜீவமூர்த்தி நித்தியம் நடப்பிக்கிற காரியங்களினால் பரலோகநாதனின் திவ்ய மாட்சிமை தெளிவாய் விளங்குகிறது. அவர் தற்காலத்தில் பாவத்தால் பிடியுண்ட ஜனங்களின் பாரத்தை இறக்கி, அவர்களைத் தேவனுடன் சமாதானம்பண்ணி, அவர்கள் உள்ளத்தைப் பிடித்த ஆசைப்பசாசுகளைத் துரத்தி, அவர்கள் வாழ்நாளெல்லாம் அவர்களை ஆண்டு நடத்தி மரணவேளையில் அதின் பயத்தை நீக்கி நல்வாக்களித்து அவர்கள் அதிக களிப்புடன் செல்லும்படி ஆதரிக்கிறார். இது மறைபொருளான சங்கதி அன்று. எவரேனும் இதைப் பரிசோதனைபண்ணி சத்தியத்தை விசாரணைபண்ணி, கண்டுகொள்ளலாகும். இயேசுநாதரை நம்பி முறையிட்டால் அக்காதலன் மனிதரை ரட்சிக்கிறவர்தானோ அல்லவோ என்பதைத் திட்டமாய்க் கண்டறிந்துகொள்ள இடமுண்டாம். கோடிக்கணக்கானபேர் அந்த ஜீவகாருண்யரை நம்பியிருந்தபோதிலும் அவர்களில் ஒருவருடைய ஆசையாகிலும் வீணாகவில்லை. எத்தேசத்தாராயினும் எந்நிலைமையில் பிறந்தோராயினும் யாவரும் ஒருமனப்பட்டு அப்புண்ணியநாதரால் தங்களுக்குப் பாவநிவாரணமும் சொற்கடங்கா அமைதலும் உண்டாயிருக்கிறதென்று சாட்சியிடுகிறார்கள். இவ்வகைச் சாட்சியை வேண்டாமென்று எதிர்த்துத் தள்ளுவது பேரறிவீனம். சகல மனிதரும் ஏதோ ஓர் வியாதியினால் அதிக அவஸ்தைப்படுகையில் சிலர் பேர்போன ஓர் பண்டிதனிடம் சென்று, அவன் செய்யும் வைத்தியத்தினால் சுகமடைந்து தம் அநுபவத்தைக்கொண்டு அவ்வைத்தியன் மகத்துவத்தை எத்திசையிலும் பிரசுரம்பண்ணும் பட்சத்தில், அவர்கள் சாட்சியை அற்பமாய் எண்ணி அவனிடம் போக



மனமில்லாமல் தம் ஜீவனை அநியாயமாகப் போக்கடிக்கிறவர்கள் முழுவதும் பைத்தியக்காரர்களென்று சொல்வதற்குச் சந்தேகமுண்டா? இப்படியிருக்கையில் கணக்கில்லாத மனிதர்கள் இயேசுநாதரின் திவ்ய மகத்துவத்தால் கர்ம நிவாரணமடைந்து, தங்கள் அநுபவத்தையொட்டி அப்பெருமானின் திவ்ய மாட்சிமையைக்குறித்துச் சாட்சிகொடுக்கையில் அச்சாட்சியை அவமதித்துச் சர்வாதிகாரமுடைய அந்த ரட்சகரை அற்பமாய் எண்ணுவது பைத்தியம் அல்லவா? கிருபாசமுத்திரத்தின் தயவை அற்பமாய் எண்ணி நமது க்ஷேமத்தைப் போக்கடித்துக்கொள்வதைவிட நமது துர் அவமானங்களை விட்டுவிட்டு ரட்சணமூர்த்தியை அண்டி அப்பரன் மகன் அளிக்கும் வரங்களை சுதந்தரித்துக்கொள்வது எவ்வளவு உத்தம

# X. அதிகாரம்

## இயேசுநாதரின் மனிதாவதாரப் புண்ணியங்களைக்கொண்டு அவருடைய தெய்வீகத்தை ரூபகாரம்பண்ணுதல்.

நாம் எத்தனை விதங்களாய் விசாரித்தபோதிலும் கிறிஸ்து பகவான் வெறும் மனிதனாய் மாத்திரம் இராமல் தெய்வீகமுடையவராய்ச் சகல பாவங்களையும் பரிகரித்து நிர்ப்பந்தரான ஜனங்களெல்லாரையும் ரட்சிக்கிறதற்குச் சர்வாதிகாரமுடையவராய் இருக்கிறார் என்று நிச்சயிப்பது அவசியம். இயேசுநாதருடைய அவதாரப் பலாபலன்களை ஆராய்ந்து பார்க்கும்போது இது அதிகமாய் விளங்கும். கடவுள் நம்முடைய சீர்கெட்ட நிலைமையைக் கண்ணுற்று அதைச் சீர்படுத்தும் வழியை நியமிக்கத் திருவுளம் கொள்ளும்பட்சம் கிறிஸ்து சமயத்தைவிட அதிக உத்தமமான மார்க்கத்தை நியமிப்பது கூடாமை என்று சொல்வதற்குச் சந்தேகம் ஒன்றுமில்லை. கிறிஸ்து மார்க்கம் சகல விஷயங்களிலும் மனிதநிலைமைக்கு வெகு ஆச்சரியமானவிதமாய் ஏற்றதாயிருக்கிறதென்று எண்ணிறந்த உதாரணங்களினால் தெளிவாகும்.

I. இயேசுநாதர் சத்திய அவதாரியாயிருந்தால் நாம் அவர் மூலமாய்க் கடவுளுடைய சுபாவ லட்சணங்களை அறியக்கூடுமேயொழிய அத்திருமகன் சத்தியாவதாரபுருஷனாயிராதபட்சத்தில், கடவுளுடைய சங்கதி எப்போதும் விளங்காத மறைபொருளாகவே இருக்கும். நாம் எந்தச் சாஸ்திரங்களை ஆராய்ந்து பார்த்தாலும் அவையாவும் சந்தேகமாய்க் கூறுகின்றனவேயன்றி, அவை ஒன்றாலாகிலும் நமக்கு நிச்சயம் கிடைக்க வழியில்லை. இந்துமத சாஸ்திரநூல்களைப்



பரிசோதனை பண்ணினால் இது வெளிப்படும். முற்காலத்திலுள்ள ரிஷிகள் ஏகேஸ்வர விஷயத்தைச் சிறிதளவு ஆலோசித்து அறிந்துகொண்டபோதிலும், சூரிய சந்திர நட்சத்திராதிகளைத் தேவர்களென்று எண்ணி, அவைகளை வணங்கிப் பணிந்து ஆராதித்துக்கொண்டு வந்தபடியால், இருக்குவேதத்தில் கூட பல தேவர்கள் வணக்கத்திற்கு ஆதாரம் இருக்கின்றது. புராணங்களில் சத்தியஞானத்தைக் கெடுக்கும் இந்த வஞ்சகமுள்ள தப்புக் கோட்பாடு அதிகமாய்ப் பரம்பினதால் அவைகளைக் கைக்கொள்ளுகிறவர்கள் உண்மையான கடவுளை மறந்து கோடாகோடி தேவதைகளை ஆராதித்து வருகிறார்கள். அத்தேவர்களுடைய சரித்திரங்களை ஆராய்ந்துபார்த்தால் அவர்களெல்லாரும் சரீர இச்சைகளுக்கு அடிமைகளாகி, அன்னபானமபண்ணி, கொள்வினை கொடுப்பினைசெய்து, ஒருவரோடொருவர் சண்டைசச்சரவுபண்ணி, சகல விஷயங்களிலும் மனிதரைப்போல் ஜீவித்தவர்கள் என்று காணப்படுகிறது. மேலும் அவர்களெல்லாரும் நம்மைப்போல் துராசையின் ஆளுகைக்குட்பட்டவர்களாய், எண்ணிறந்த துர்க்கிரியைகளை நடப்பித்துத் தங்கள் அக்கிரமத்தில் மூழ்கினவர்களென்று வெளிப்படுகிறது. அவர்களுடைய சரித்திர நூல்களை விசாரணை செய்கிறபோது யாவும் தாறுமாறாக இருக்கின்றன. ஒரு புராணத்தில் ஒரு தேவனும் வேறொரு புராணத்தில் மற்றொரு தேவனும் உயர்வாகக் காணப்படுகிறதினால் எந்தத்தேவன் உத்தமமானவனென்பதைப் பரிசோதனைபண்ணி அறிந்துகொள்வது கூடாமையாயிருக்கிறது. அப்படிப்பட்ட தேவர்களை வணங்குவதினால் மனிதர்கள் குணக்கேடர்களாவார்களேயொழிய பாவப்பரிகாரம் சம்பாதித்துக்கொண்டு குணசாலிகள் ஆகப்போகிறதில்லை. கல்விமான்கள் இச்சங்கதியைக் கண்டுணர்ந்து பலதேவவணக்கத்தைக் கண்டனம்பண்ணி ஏகேச்சுரமதத்தைத் தழுவினார்கள். உபநிஷதங்களை வாசித்துப்பார்த்தால் இது தெளிவாய் விளங்கும். அந்நூல்களை இயற்றிய ஆசிரியர்கள் கடவுளுடைய ஏகத்துவத்தைக் கண்டறிந்து பரப்பிரமமேதவிர வேறொரு கடவுளும் இல்லை; பரப்பிரமத்தினால் சகலரும் ஜன்மித்து ஜீவித்து நடந்தேறிக் கழிந்துபோகிறபடியால், அக்கடவுளை அறிவதினால்மாத்திரம் மனித ஜனனம் ஈடேறுமேதவிர மற்றெந்த வழியாலும் சித்தியாகமாட்டாதென்று உபதேசித்தார்கள்.

சாஸ்திரிகள் அவ்வளவாக சத்தியத்தைக் கண்டறிந்து, ஒரே கடவுள் உண்டு என்று போதித்தபோதிலும் அக்கடவுளுடைய குண லட்சணங்கள் எப்படிப்பட்டவை என்று விசாரித்து ஆராய்ச்சி செய்து பார்க்கையில் நமக்குச் சமாதானம் சொல்வதற்கு அவர்க ளால் முடியாது. அவர்கள் அனைவரும் சந்தேகசாகரத்தில் மூழ்கி, கடவுள் குணமுடையவரோ நிர்க்குணரோ என்று தர்க்கவாதம் பண்ணி, தேவனுடைய உண்மையான தன்மையை அறியாமல் அங்குமிங்கும் அலைந்து தடவித்திரிகிறார்கள்.

இதைக்குறித்துத் தமிழ்ஞானியாகிய தாயுமானவர்,

'பூதமலய மாகின்ற மாயைமுதல் என்பர்சிலர்
பொறிபுலன் அடங்கும் இடமே
பொருளென்பர் சிலர்கரண முடிவென்பர் சிலர்குணம்
போனவிடம் என்பர் சிலபேர்
நாதவடி வென்பர்சிலர் விந்துமயம் என்பர்சிலர்
நட்டநடு வெளிநிறைந்த
நாமென்பர் சிலர்உருவ மாமென்பர் சிலர்கருதி
நாடில்அரு வென்பர் சிலபேர்
பேதமற உயர்கெட்ட நிலையமென் றிடுவர்சிலர்
பேசின்அருள் என்பர் சிலபேர்
பின்னுமுன் னாம்கெட்ட சூனியம தென்பர்சிலர்
பிறவுமே மொழிவர் இவையால்
பாதரச மாய்மனது சஞ்சலப் படுமல்லால்
பரமசுக நிஷ்டை பெறுமோ
பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே'

என்று சொல்லிப் பிரலாபிக்கின்றார்.

நிர்ப்பாக்கிய ஜனங்களுக்கு இவ்வித உபதேசம் சிறிதேனும் ஏற்றதும் அல்ல உபயோகமானதும் அல்ல. கடவுள் உண்டு என்று எவ்வளவு நிச்சயமாகச் சாதித்தபோதிலும், அக்கடவுளுடைய சுபாவ லட்சணங்கள் தெரியாமற்போனால் ஆராதிக்கிறதற்காகிலும் ஜெபிக் கிறதற்காகிலும் இடம் இருக்கமாட்டாது. கடவுளுக்கும் மனிதருக் கும் ஏதாவதொரு சம்பந்தம் இருக்கும்பட்சத்தில், நாம் அவருக்கு மனதைப்படைத்து, அவரை நோக்கி விண்ணப்பம் செய்யலாம்.



ஆனால் அப்படிப்பட்ட சம்பந்தமிராதபட்சத்தில் நாம் எவ்வளவாக ஜெபித்தாலும் எவ்வளவாகத் தியானம் பண்ணினாலும் இலவுகாத்த கிளிபோல வீண் பிரயாசையாகுமேதவிர நமக்கு லாபக்ஷேமம் ஒன் றும் உண்டாகாது. கல்விமான்களும் சாஸ்திரிகளும் கற்பனை பண் ணின உபதேசங்களுக்கும் நமதாண்டவராகிய இயேசுகிறிஸ்து நாதரின் போதனைக்கும் அனந்த வித்தியாசம் உண்டு. இயேசு நாதர் ஒன்றுமறியும் அதரிசனமானவருமான கடவுளை வெளிப் படுத்தி, அறிவீனர்கள்கூட அவரை அறிந்து அவருடன் ஐக்கியப் பட்டு தம் ஜென்மத்தைப் பயன்படுத்திக் கொள்ளத்தக்கதாய் தாராள மான வழியை வெளிப்படுத்தியிருக்கிறார். அப்பரமகுரு பாவாந்த கார மேகத்தை அகற்றி ஒளிமயமான ஞான சூரியனுடைய திவ்ய பிரகாசத்தை நமதுமேல் பிரகாசிக்கப்பண்ணினார். அத்திவ்ய புரு ஷன் வருகைக்குமுன்னர் மனிதர்கள் தாமறியாத தேவனைக்குறித் தும் பலவாறாய் ஆலோசனைபண்ணி தந்தையை விட்டுப் பிரிந்து வழியலைந்து அந்தகாரத்தில் அகப்பட்டுக்கொண்ட பிள்ளைகள்போல, தாம் நம்பி அண்டி, சரணடையத்தகுந்தவர் இவர்தம் வெருவாய் பிரலாபித்துக்கொண்டிருந்தார்கள். ஆனால், திக்கற்றவர்களுக்குக் கதி யான இயேசுபகவான் அவர்களுடைய பிரலாப ஓசையைக் கேட்டு, அவர்கள் சந்தேகம் நீங்கும்விதமாய் அவர்கள் தேடுகிற கடவுள் அவர்கள் தகப்பனே என்று திருஷ்டாந்தப்படுத்தினார். இயேசுநாதர் உபதேசம்பண்ணிய பொழுதெல்லாம் தேவனுக்குப் பிதா என்னும் நாமத்தையே சூட்டி உபதேசித்துவந்தார். இதற்கு எண்ணிறந்த திருஷ்டாந்தங்கள் உண்டு. 'நான் பிதாவை வேண்டிக்கொள்வேன்' என்றும் (யோவா. 14. 16.), 'நான் பிதாவினிடத்திலிருந்து புறப் பட்டு உலகத்திலே வந்தேன். மறுபடியும் உலகத்தைவிட்டு பிதாவி னிடத்துக்குப் போகிறேன்' என்றும் (யோவா. 16. 28.), 'பிதா வைக்குறித்து உங்களுக்கு வெளிப்படையாக அறிவிப்பேன்' என்றும் (யோவா. 16. 25.), 'என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்' என்றும் (யோவா. 14. 9.), பலவாறாய் இந்நாமத்தைக்கொண்டு தேவ னுடைய நிஜ சுபாவத்தை வெளிப்படுத்திக்கொண்டுவந்தார். தற்கா லத்தில் சில இந்துக்கள் கடவுள் சகல மனிதருக்கும் பிதாவென்னும் உபதேசம் தங்கள் மதத்திற்கு மூலம் என்று சொல்லிக்கொண்டபோ

திலும், அவ்வுபதேசம் வேதங்களிலாகிலும் புராணங்களிலாகிலும் கிடையாது. தேவசுதனுகிய கிறிஸ்து அந்நாமத்தைக் கற்றுக்கொடுத்தாரேயன்றி அவரது வருகைக்குமுன் அதைத் தெளிவாகவும் வெளிப்படையாகவும் உபயோகிக்கத் துணிந்தவர்கள் யாருமே கிடையாது.

பரமகுருவான இயேசுபகவான் கற்றுக்கொடுத்த பாடம் நமக்கு எவ்வளவு மனச்சமாதானம் அளிக்கிறது. கடவுள் நமது பிதாவாயிருக்கும்பட்சத்தில் அவர் நம்மிடத்தில் மட்டற்ற தயவும் கருணையும் உடையவராய் நமக்குத் தருந்த உதவிசெய்யாமல் போகமாட்டார் என்பதற்குச் சந்தேகமில்லை. பிள்ளைகள் எவ்வளவு பொல்லாதவர்களாயிருந்தபோதிலும், பெற்றோர் அவர்கள்பேரிலுள்ள பட்சத்தை விடாமல் அவர்களை எப்படியாகிலும் கூட்டிச்சேர்த்து குணசாலிகளாக்கவேண்டுமென்று இரவுபகலாய் ஊண் உறக்கமின்றி விடாமுயற்சியாய்ப் பிரயாசப்படுகிறார்களல்லவா? தேவாலோசனைகள் நம்முடைய யோசனையைவிட உன்னதமானவை அவருடைய தயவு நம்முடைய உருக்க இரக்கங்களைப்பார்க்கிலும் சிரேஷ்டமானது. ஆதலால் நாம் எவ்வளவு பாபிஷ்டிகளாயினும், கடவுள் பிள்ளைப்பட்ச கரிசனையும் பிதாவுடைவான அன்பும் உடையவராய் நம்பொருட்டுப் பிரயாசப்பட்டுப் பாவநிவாரணம் உண்டாக்கி; தம் மார்க்கமொன்றை நியமிப்பாரென்று நிச்சயிப்பது அவசியமானது. கடவுள் சர்வாதிகாரமும் அத்தியந்த தயவுமுடையவர் என்று எப்போது நமக்குப் புலப்படுகிறதோ, அப்போதே சந்தேகம் யாவற்றையும் ஒழித்து அவரைச் சமீபிக்கிறதற்குத் தைரியமுடையவர்களாவோம். மனுமக்கள் கடவுளுடைய சுபாவலட்சணங்களை அறியாமல் மனோபாவனையைப் பின்பற்றி அநேக உபதேசங்களை உண்டுபண்ணியிருக்கிறார்கள். இயேசுபகவானே கடவுளுடைய ரூபமாயிருந்து, அவருடைய லட்சணங்களைத் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறபடியால் அந்த ஞானசூரியன் திருப்போதனை பரிபூரணமானது. இதைக்குறித்து சத்தியவேதம் 'தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை. பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்' என்று சொல்லுகிறது. (யோவா. 1. 18.)



நாம் மேற்கண்டபடி (7-ம் அதிகாரம்) இயேசுநாதர் தமது உபதேசத்தினால் மாத்திரம் அல்ல, தமது கிரியைகளினாலும் கடவுளை வெளிப்படுத்தியிருக்கிறார். 'என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்' (யோவா. 14. 9.) என்று அத்திருச்சுதன் வெளிப்படையாகத் திருவுளம்பற்றினார். பிள்ளைகள் அந்தகாரத்தில் அகப்பட்டு அங்குமிங்கும் தடவிக்கொண்டு திகிலடைகிறதை அவர்கள் பிதா கண்டு, அன்பான குரலோடு கூப்பிடுகிறபோது ஒருவேளை அவனுடைய குரலைக் கண்டுகொள்ளாமல் அதிகமாய்ப் பயமடைந்தபோதிலும், தகப்பன் தீபத்தைக் கையில் பிடித்து எதிரே வருகையில் உடனே அவனை இன்னாரென்று இனங்கண்டு அதிக சந்தோஷமுடையவர்களாய் தங்கள் பயம் யாவையும் நீக்கி அவனிடம் ஓடி அவனைக் கட்டி அணைத்துக்கொள்வார்களல்லவா? இயேசுநாதரின் திருமுகத்தைத் தரிசித்தவர்கள் இப்படியே சந்தோஷித்து தம்பயம் சந்தேகங்கள் அனைத்தையும் அகற்றி, கடவுளிடம் திரும்பி அவர் பாதத்தில் சரணடைந்து ரட்சிப்படைவார்கள். பிரபஞ்சகாரியங்களைப் பரிசோதனைசெய்து கடவுளுடைய அளவற்ற மாட்சிமையைச் சிறிதளவு கண்டறியலாமென்றாலும், இயேசுநாதர் திருச்சரிதையை ஆராய்ச்சிசெய்து பார்க்கும்வரையில் அவருடைய அன்பையும் அவருடைய அளவற்ற இரக்கத்தையும் கொஞ்சமாகிலும் கண்டுகொள்ள முடியாது. மகிமையின் ஆண்டவராகிய இயேசுநாதர் தம்மைத் தாம் தாழ்த்தி மானுடதேகம்பூண்டு நம்மைப்போல் மனிதனாய் ஜீவித்து மனுமக்களுக்குண்டாகிற கஷ்டங்களெல்லாவற்றையும் சகித்துத் தம் சொந்த சௌக்கியத்தைக் கருதாமல் தரித்திரரை ஆதரித்துப் பாதுகாத்து ரோகிகளைச் சுகப்படுத்தி அறிவீனர்களுக்கு அறிவைப் புகட்டி இறுதியில் சர்வலோகத்தார் பாவப்பரிகாரத்தினிமித்தமும் சொல்லிமுடியாப் பாடுபட்டு தம் ஆவியை விட்டு பிராணத்தியாகஞ் செய்ததைப் பார்க்கையில், கடவுள் அன்பின் சொரூபி என்று நிச்சயிக்காதிருக்க விதியில்லை. ஆபத்துக்காலத்தில் நாம் சகஜமாய் மிகுந்த வியாகுலமடைந்து 'தேவனுக்கும் நமக்கும் எவ்வளவுதூரம்' என்று முறையிட்டு ஆறுதலடைய முடியாமல் கவலைப்பட்டாலும் கடவுளுடைய நிஜரூபம் இயேசுநாதரில் பிரகாசிக்கிறதைப் பார்த்தவுடனே நித்தியரும் சயம்புவானவரும் அத்தியந்த மாட்சிமையுடையவருமான பகவான் நமக்கு முற்றிலும்

பந்து சம்பந்தமுடையவராய், நம்முடைய நிலைமையையும் கதியையும் விசாரித்து நம்மை ஆதரித்து ரட்சிக்கிறதற்கு ஆயத்தமாயிருக்கிறாரென்று நிச்சயிப்போம். நாமெவ்வளவு துன்மார்க்கரும் சண்டாளருமாயிருந்தபோதிலும் அக்கருணாநிதி 'என் அண்டை வருகிறவனை நான் ஒருபோதும் தள்ளமாட்டேன்' என்பதாய்த் திருவாக்களித்திருக்கிறார் என்று ஞாபகம்பண்ணி நமது பாவச்சுமையைச் சுமந்துவந்து கிருபா சமுத்திரமானவரின் பாதத்தில் விழுவோமாக. நாம் எவ்வளவு தர்க்கம்பண்ணினாலும் என்னென்ன விதங்களாய்ப் பரீக்ஷைசெய்தாலும், தேவனுடைய சங்கதியைத் தகுந்தவிதமாய் அறிந்துகொள்ள முடியாமற்போகிறது. ஆனால், இயேசுநாதருடைய மனிதவதாரப் புண்ணியங்களை எப்போது கண்டுகொள்ளுகிறோமோ அப்போதுதான் நமக்குத் திருப்தியுண்டாகும்.

இயேசுநாதர், என்கிற பரமகுருவால் உண்டாகிற அறிவு நம்முடைய எல்லா ஞானத்திற்கும் மேலானதாகையால், அம்மேலோக ராஜனைத் தியானிக்கும் அளவுக்குத்தக்கதாக திவ்ய சுபாவ ரகசியங்களைப் படிப்படியாய்க் கண்டறிந்துகொள்வோம். அத்திவ்ய புருஷனில் பராபரனுடைய பரிபூரணம் அடங்கியிருக்கிறபடியால் எல்லையில்லா சமுத்திரத்தில் குதித்தவர்களைப்போல பரமதேவனுடைய ஞானக்களஞ்சியத்தை அடைந்து ஊழியூழிகாலங்களாய் திவ்ய ஞானத்தைத் தாராளமாகச் சொந்தமாக்கிவருவோம். ரட்சண்ய பெருமானுடைய அவதாரப் புண்ணியபலன்களைக் கிரகித்துக்கொண்டபட்சத்தில் அத்திருச்சேயன் சர்வஞானியும் சர்வ வியாபகரும் ஒன்றானவருமான கடவுளை வெளிப்படுத்துகிறார் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆகையால், அப்பரம புருஷன் திவ்ய ரட்சகரென்று நிச்சயிக்காதிருக்க இடமில்லை.

II. இயேசுநாதருடைய மனிதாவதாரப் புண்ணியங்களைப் பரிசோதனை பண்ணும்போது மனுமக்களுடைய ஸ்திதிகதிகள் கூட நமக்கு விளங்கும். மனிதர் பாவாந்தகாரத்தில் அகப்பட்டுச் சிக்கிக்கொண்டு தம் நிஜமான நிலைமையைக் கண்டறியாமல் தமக்குச் சம்பவிக்கப்போகிற நிலைமையைக்குறித்து அதிகமாய் ஐயப்படுகிறார்கள். மனச்சாட்சி என்னும் உள்ளிந்திரியம் சகல மனிதருக்கும் சாதாரணமானாலும் அவர்கள் மனச்சாட்சியின் தொனியைச் செம்மையாகக்



கண்டறிய முடியாமல் பலவாறாய் வழிதப்பி அலைகிறார்கள். கணித சாஸ்திரமறியாதவன் அளவுகோலைக் கையில் பிடித்துக்கொண்டிருந்தாலும் அவன் பூமியளவு சரியாகச் செய்யமாட்டானல்லவா? அவ்வாறே மனச்சாட்சி இருந்தும் அதைச் சரியாய்க் கையாடி விஷயங்களைப் பகுத்தறிந்து நமது நடத்தையைச் சீராக்கிக்கொள்வதற்கு நமக்குத் திராணியில்லை. மனுஜாதி தத்துவஞானத்தைச் சிறிதளவாகத் தேடிக்கொண்டு அநேக யந்திரங்கள் சூஸ்திரங்கள் தர்மவிதிகள் என்பவற்றைக் கற்பனை பண்ணிக்கொண்டபோதிலும், அவர்கள் செய்கிற பிரயாசங்களும் அவர்கள் பிரயத்தனங்களும் ஒருக்காலும் சித்தியாகா. தங்கள் வீடுகளில் உட்கார்ந்துகொண்டு தம் யோசனை போனபடி ஒரு ரூபம் வரைந்து அதற்குத் தகுந்த வர்ணம்பூசி சிங்காரித்து அழகுண்டாக்கினாலும் அவர்கள் வரைந்த படத்திற்கும் அது குறிப்பாய்க் காண்பிக்கிற நிஜரூபத்திற்கும் எவ்வளவோ பேதமுண்டு. பூர்வத்திலுள்ள படிப்பாளிகளும் பண்டிதர்களும் புலவர்களும் சித்திரக்காரரைப்போல தம்மனதோற்றப்படி மனிதருடைய உத்தம நிலைமையை எல்லாவற்றாலும் விவரித்துரைக்க வேண்டுமென்று கருதி பிரயத்தனம் செய்துகொண்டு வந்தபோதிலும், அவர்கள் பிரயத்தனங்களெல்லாம் நிறைவேறாமற் போய்விட்டன. அவர்கள் இயற்றிய நூல்களையும் ஆகமங்களையும் வாசித்து ஆராய்ந்து பார்க்கும்போது, படங்களைப் பார்த்தாற்போல் இருக்கின்றனவேயன்றி நிஜஸ்திதியைப் பார்த்தாற்போல் இருக்கக்காணோம். சாஸ்திரிகளும் கல்விமான்களும் எழுதிய ஆகமங்களை விட்டு இயேசுபகவானை நோக்கிப் பார்த்தால் நமக்கு அதிக ஆச்சரியமான அனுபவம் உண்டாகும். அவரை நோக்கிப் பார்த்தவுடனே மனிதஜாதியின் உத்தமஸ்திதி எப்படிப்பட்டதென்று நமக்குத் தெளிவாய்ப் புலப்படும். இயேசுநாதர் திவ்ய சுபாவத்தை மாத்திரமல்ல, மனித சுபாவத்தைக்கூட வெளிப்படுத்துகிறதற்கு அவர் அவதாரமெடுத்து இத்தரணியில் மனிதனாக உற்பவித்தார். அம்மகானுபாவன் காண்பித்தமாதிரி நமக்கவசியமானதே. நாம் ஒரு வித்தையைப் பயிற்சிசெய்ய விரும்பி வெறும்வாய் உபதேசத்தினால் அதைச் செவ்வையாகக் கற்றுக்கொள்ள முடியாமற்போனாலும், தேறின ஒருவன் மாதிரி காண்பித்தால் அதைச் சுளுவாய்க் கற்றுக்கொள்வோம். இயேசுபகவானின் திருச்சரித்திரம்

9357



இவ்வகை திருஷ்டாந்தங்களுக்கு நிதியாயிருந்து பல மாதிரிகளைக் காட்டுகிறது. நாம் எம்மதஸ்தராயினும் அச்சரித்திரத்தைவிட அதிக மேன்மையான தொன்றுமில்லை என்று ஒத்துக்கொள்ளாதிருக்க இடமில்லை. சகல உபதேசங்களைக்குறித்தும் குறைகூறித் தள்ளின நாஸ்திகர் என்னும் வகுப்பார்கூட மனதிற்கு இன்பம் பயக்கும் மாண்புடையோனாகிய இயேசுவின் சரித்திரத்தை ஆராய்ச்சிசெய்து இயேசுநாதரைவிட களங்கமற்றவனும் பரிசுத்தவானும் சர்வகுண சம்பூரணனுமான வேறொருவனும் இகத்தில் உற்பவிக்கவில்லை என்று ஒத்துக்கொள்வார்கள். மதசித்தாந்தங்களனைத்தையும் வேண்டாமென்று வெறுத்துத்தள்ளின ஓர் படிப்பாளி இயேசுநாதரின் உத்தமத்தைக்குறித்து 'மனுஜாதியானது தனது காரியாகாரியங்களைப்பற்றி விசாரிக்கும்போது யாதாயினும் ஓர் சந்தேகம் உண்டாகுமானால், இயேசுபகவானை மனதில் நினைவுகூர்ந்து அவ்வுத்தமமூர்த்தி அவ்வித காரியத்தைப் புகழ்வாரோ இகழ்வாரோ என்று யோசிப்பதைவிட மேலான நீதிநெறி வேறொன்றுமில்லை' என்று உரைத்தான். சகல தர்மசாஸ்திரங்களைப்பார்க்கிலும் இயேசுபகவான் காண்பித்த மாதிரி அதிக மனோகரமாய், யாவரையும் பரவசமாக்கும் லட்சணமுடையதாய், நமது உத்தம நிலைமையை வெளிப்படுத்தி, நற்கிரியைகளுக்கு நம்மை அதிகமாகத் தூண்டிவிடுகிறது. இயேசுபகவான் நம்மைப்போல் மனிதனாகையால் அப்பெருமானின் அளவற்ற சற்குண பரிபூரணத்தைக் கண்ணுற்று, மனுமக்களான நாமும் தேவனுடைய புத்திரர்களாதலின் சத்தியவேதம் உரைக்கிறபடி, 'இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை. ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். அவர்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறவன் எவனும் அவர் சுத்தமுள்ளவராய் இருக்கிறதுபோல் தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான்' (1 யோவா. 3. 2–3.) என்பதை அறிந்து அவருடைய திருஅடிச்சுவடுகளைப் பின்பற்றுவோமாக.

இயேசுநாதரின் திருச்சரித்திரத்தைப் பார்க்கையில் மனிதருடைய உத்தம நிலைமைமாத்திரமேயன்றி அவர்களுடைய இழிவான நிலைமையும் நமக்குத் தெரியவரும். பாவாந்தகாரம் சூழ்வதினால் நம்முடைய



பாவம் எவ்வளவு கொடியது என்று நமக்குச் சாதாரணமாய்த் தெரியாது. ஒரு வீடு எவ்வளவு அசுத்தமாயிருந்தபோதிலும், கதவைத் திறந்து சூரியப்பிரகாசத்தை உள்ளே வரவிடும்வரையில் அதினுடைய யதார்த்த நிலைமையைக் காணமுடியாது. ஆனால் அதில் ஒளிவந்தவுடனே அதின் அசுத்தத்தைக் கண்டு அருவருப்போம். இவ்விதமாகவே பாவாந்தகாரத்தில் அகப்பட்டுத் தங்களை செவ்வையாகக் கண்டு கொள்ளக் கூடாதவர்களாயிருக்கிற மனுமக்களுடைய இருதய அந்தகாரத்தை இயேசுநாதருடைய சற்குண ஒளி நீக்கினவுடனே அவர்கள் தங்களுடைய இழிவான நிலைமையைக் கண்டறிந்து அதை வெகுவாய் அருவருப்பார்கள். உன்னை அறியும்பொழுது தன்னைத் தான் அறிவான் என்னும் நீதிமொழி இவ்வனுபவத்தால் ஸ்திரமாகிறது. இயேசுநாதரை நோக்கிப் பார்க்கையில் தேவன் நம்மைத் தமது சாயலில் சிருஷ்டித்து நம்மைச் சகல சற்குண சம்பன்னர்களாக்க நோக்கங்கொண்டார் என்று கண்டறிவதுமாத்திரமேயன்றி, அப்பரிசுத்த மூர்த்தியிடத்தில் பிரகாசிக்கிற உத்தமகுணங்களையும் நாம் நமது துர்நடத்தையினால் தேடிக்கொண்ட தீயகுணங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் திவ்விய திருவுளத்தைக் கெடுத்து முற்றிலும் தீயவர்களும் தீட்டானவர்களுமானோம் என்று வெட்கமடைந்து துக்கசாகரத்தில் அமிழ்வோம். இவ்வகை யோசனைகள் பிறப்பதால், நாம் பூரண மனஸ்தாபமடைந்து நமது பாவங்களை அருவருத்து அவற்றை எவ்வாற்றாலும் கண்டித்து நாம் இழந்துவிட்ட தேவசாயலைத் திரும்பவும் தேடிக்கொள்ளவேண்டுமென்று அதிக வாஞ்சையுடையவர்கள் ஆவோம். இவ்விஷயத்தில் பிரம சமாஜத்தைச் சேர்ந்த கேஷப் சந்திரசேன் என்பவர் கொடுத்த சாட்சி அதிக மேன்மையுள்ளது. அவர் சகல சாஸ்திரங்களையும் ஆராய்ச்சிசெய்து, இயேசுநாதருடைய திருச்சரித்திரத்தை வாசித்து அதின் பொருளைக் கண்டறிந்து, ஆனந்தத்தில் மூழ்கினவராய்த் தன் அனுபவத்தைக்கொண்டு இப்பரஞ்ஜோதியின் அளவற்ற மகிமையைக்குறித்து வெகு தாராளமாக உபதேசம்பண்ணினார் 1879-ம் ஆண்டு ஏப்ரல் மீ 9-ம் தேதியில் கல்குத்தாவில் அவர் செய்த ஓர் உபந்நியாசத்தில் இவ்விஷயத்தைக் குறித்து அவர் எடுத்துரைத்து 'இக்காலத்தில் கிறிஸ்துநாதர் எங்கே இருக்கிறார்? சகலமான கிறிஸ்தவ பக்தர்கள் கிரியைகளிலும், மனு

மக்கள் பக்திக்குரிய விஷயங்களில் விருத்தி அடையச் செய்கிறதினும் அப்பரமகுரு ஜீவிக்கிறாரே, நீங்கள் அப்பரலோகநாதரின் தூண்டுதலை எதிர்க்க முடியாது. ஒருக்கால் நீங்கள் அம்மகிபனுடைய மதோபதேசங்களை அசட்டைபண்ணி அற்பமாய் எண்ணுவீர்கள். ஒருவேளை அத்திருச்சுதன் நாமத்தையுங்கூடப் பகைத்து அசட்டைபண்ணினாலும், அவர் உங்கள் உள்ளத்தில் பிரவேசித்து உங்கள் கிரியைகளனைத்தையும் தம்மிஷ்டப்படியே எழுப்பிவிடுவார். நீங்கள் துரோகிகளில் பிரதான துரோகிகளானபோதிலும் அம்மன்னனுடைய மதோபதேசங்களைச் சிறிதளவாயினும் அங்கிகரியாதவர்களானாலும் அம்மகாதேவனில் உள்ள சத்தியம் உங்கள் இருதயங்களை அவர் வசமாக்கி அடக்கி, மடக்கி உங்கள் அறிவீனத்தைப் போக்கடித்து, உங்கள் சுபாவலட்சணங்களைப் படிப்படியாய் மாற்றும்' என்று வியந்து கூறிப் பிரஸ்தாபித்தார். இயேசுபகவான் அன்பை அனுபவித்தவர்களும் ருசித்துப் பார்த்தவர்களும் யாரோ அவர்களனைவரும் அத்திருப்புதல்வன் திவ்ய சௌந்தரியத்தைக் கண்ணுற்று எவ்வாறாயினும் அப்பரிசுத்தரைப்போலொத்தவர்கள் ஆவோம் என்று, அதிக காதல் கொண்டவர்களாயிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களில் சில குறைவுகளிருந்தாலும் அவர்கள் முக்கிய நோக்கம் உத்தமமானதால் அந்நோக்கம் அவர்களை நீக்கவிடாமல் அவர்களை எப்போதும் தூண்டுதல் பண்ணிக்கொண்டே இருக்கும். அப்போஸ்தலனாகிய பவுல் என்பவன் சொன்னபடி அவர்கள் பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறார்கள். (பிலி. 3. 13, 14.)

III. இயேசுநாதர் கடவுளுடைய சுபாவ லட்சணங்களையும் மனிதருடைய இழிந்த நிலைமைகளையும் வெளிப்படுத்துகிறதோடுகூட, மனிதாவதாரமெடுத்து மனிதனாக உற்பத்தியானதினால் அந்த ரட்சகர் பாவத்தினால் துண்டு படுத்தப்பட்ட கடவுளையும் மனிதரையும் ஒருமைப்படுத்தி ஐக்கியப்படுத்துகிறார். மனிதரனைவரும் தம்தம் சுயசித்தத்தைக் கையாடி தேவனுடைய கட்டளைகளை அற்பமாய் எண்ணி, தேவனுடைய ஐக்கியத்தைத் தள்ளி உதறிவிடுகிறார்கள். அதினால் நதியைவிட்ட மீன் எவ்வாறோ அவ்வாறே தமக்கு ஜீவாதாரமான



அக்கடவுளின் உறவை விட்டுவிடுவதால், சகல நிர்ப்பாக்கியங்களுக்கும் உள்ளானவர்களாய் அமைதலடைய முடியாமல் பலவாறாய்க் கஷ்டப்படுகிறார்கள். இப்படியிருக்கையில் ஜீவகாருண்யரான கடவுள் அவர்களுடைய அவிவேகத்தைக் கண்ணோக்கி வெகு கவலைப்பட்டு கிலேசமடைந்து அவர்களை ரட்சித்து தம் சமீபத்தில் சேர்க்க வேண்டுமென்று காத்துக்கொண்டிருந்தபோதிலும், மனுமக்கள் பாவாந்தகாரத்தினால் பயமடைந்து அவருடைய இரக்கத்தைக் கண்டுகொள்ள முடியாமல் அவரில் அடைக்கலம்புக விரும்பாமல் போனார்கள். இப்படியிருப்பது இயல்பே. யாராகிலும் ஒருவனுக்கு யாதாமோர் அபகாரம் செய்தபட்சத்தில் அவன் இயல்பாக அம்மனிதன் குணலட்சணங்களைக் கண்டுகொள்ள முடியாமல் அவனுடைய நியாயத்தை அநியாயமாக மாற்றி, அவனுக்கு அநேக தீயகுணங்களைச் சூட்டி துன்மார்க்கத்துக்குள்ளாக்கி அவன்மேல் பொல்லாப்பைப்போட்டு தூற்றித் திரிவான். தேவனுடையவிஷயத்தில் மனிதர் அனைவரும் இவ்வாறே துர் அபிப்பிராயம் கொண்டவர்களாய் நடந்துகொண்டு வந்தார்கள். அவர்கள் தேவனை நிராகரித்துத் தள்ளி அவர் அருளிய நீதிநெறிகளையும் நியாயப்பிரமாணங்களையும் மீறி அவருக்கு விரோதமாக எண்ணத்தொலையாத பாவங்களைச் செய்தவர்களாகையால், அளவற்ற இரக்கமுடைய தங்கள் பிதாவிடத்தில் முழுமையும் கல்மனமும் கடின சிந்தையுமுடையவர்களாய் அவர் தயவாய் அளித்த வாக்குத்தத்தங்களை அங்கிகரியாமல் தூரமானவர்களாய் நின்றுவிட்டார்கள். இவ்வகை இருதயகடினத்தை நீக்குவது ஒருவராலும் கூடியதல்ல. 'கன்மலையை உடைக்கலாகும். பர்வதத்தைப் பொடியாக்கலாம். கடின இருதயத்தை இளக்கமொண்ணாது' என்று வேமன்னா என்பவர் பாடியிருக்கிறார்.

இயேசு தமது அளவற்ற அன்பின் மாட்சிமையால் மனிதரால் கூடாத இப்பெருங்காரியத்தை நிறைவேற்றி இருக்கிறார். அப்பெருமான் கடவுளாய் இருந்து மனுஜனனமெடுத்து கடவுளுக்கும் மனிதனுக்கும் மத்தியஸ்தரானபடியால், மனுஷீகத்தையும் தெய்வீகத்தையும் சந்திக்கச்செய்து மனுமக்களின் துர்ச்சிந்தனைகளைக் கண்டித்து, அவர்களுடைய இருதயகடினத்தை நீக்கி, அவர்களைக் கடவுளுடன் சமாதானப்படுத்துகிறார். அத்திவ்ய சுதன் மனிதாவதாரம்

எடுத்தபடியால் அளவற்ற சற்குண சம்பன்னரான தம் தெய்வீகத்தில் நமது மனுஷீகத்தையும் சேர்த்துக்கொண்டிருக்கிறபடியினால், அவரது திவ்ய மகத்துவத்தினால் மனுஷ சுபாவம் நிஷ்களங்கமடைந்து நன்மை பெறக்கூடியதாயிற்று. மனிதரில் யார் யார் பாவியை பரிசுத்தனாக்குகிற புண்ணியமூர்த்தியாகிய இவரில் பக்திவைத்து இவரில் அடைக்கலம் புகுகின்றார்களோ அவர்கள் அவரிடத்தில் உள்ள நற்கிரியைகளுக்குப் பங்காளிகளாகி, அவ்வாண்டவர் தயவால் கடவுளுடன் ஐக்கியமடைந்து படிப்படியாக பூரணர் ஆவார்கள்.

இயேசுபகவானின் மரண புண்ணியங்களை எவ்வளவாக விசாரிக்கிறோமோ அவ்வளவாக அது மிகவும் தெளிவாய் விளங்கும். நாம் எந்த ஜாதியார் வர்த்தமானத்தை விசாரித்தபோதிலும், சகல மனிதரும் தம் பாவநிலைமையைக்குறித்துச் சிந்தித்து, தங்கள் கர்மங்களுக்குத்தக்கப் பிராயச்சித்தம் செய்கிறதற்குப் பலவித யாகங்களை இயற்றுகிறதுண்டு என்பது வெளியாகும். அவர்கள் செலுத்தும் யாகங்கள் பயனுள்ளவை என்றுரைக்க இடமில்லையாயினும், அவ்வகை உபகரணங்கள் இல்லாமல் கர்மநிவாரணம் உண்டாகாதென்று யாவரும் நிச்சயித்திருக்கிறார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. இயேசுநாதர் மனுமக்கள் ரட்சிப்புக்காக அவதரித்துவந்தபோது, இப்பெரும் அவசரத்தைக் கண்டு தம்மைத்தாமே யாகார்ப்பணையாகப் படைத்துத் தமது மரணத்தினால் நமக்குங் கடவுளுக்கும் இடையிலுள்ள தடைகள் பிரிவினைகள் யாவையும் முற்றிலும் நீக்கிவிட்டார். இதினால் இயேசுநாதர் 'சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தையுண்டாக்கி பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும், அவருக்குப் பிரியமாயிற்று' என்று (கொலோ. 1. 20.), சத்தியவேதத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

கிறிஸ்துநாதரின் உபதேசம் பரவுகிற இடங்களிலுள்ளவர்கள் இனி யாகங்களும் பலிகளும் சிறிதளவாயினும் அவசியமில்லை என்று உணர்ந்து அவைகளை முற்றிலும் நிறுத்தி கடவுளுக்கு மானச ஆராதனைமாத்திரம் செய்துவருகிறார்கள். இயேசுநாதர் பெரிய அடைக்கலமானதால், 'நாம் இரக்கத்தைப்பெறவும் ஏற்றசமயத்தில் சகாயஞ்செய்யும் கிருபையை அடையவும் தைரியமாய்க் கிருபாசனத்தண்



டையிலே சேரக்கடவோம்' (எபி. 4. 16.) என்று ஒரு பக்திமான் சொல்லியிருக்கிறான். இது பெரிய ரகசியமாயினும் இயேசுநாதரை நம்பினவர்களுக்கு அனுபவவழியாய் ஸ்திரமாகிறது. இத்தேசத்தில் அநேகர் முற்கால ஆசாரங்களைத் தள்ளி லோகரட்சகர்பேரில் பக்தி விசுவாசம்வைத்து வெகு சிரேஷ்டமான இவ்வனுபவத்தை அடைகிறார்கள். அவர்கள் சாட்சியினால் யாரும் இவ்வனுபவத்தின் மேன்மையை அறிந்துகொள்ளலாகும். சிறிதாண்டுகளுக்கு முன்னர் கடப்பை ஜில்லா, ஜம்மலமடுகு தாலுக்கா தெசவுகாரர் உப்பலபாடு கிராமத்தில் மாயலூர் புராரெட்டி என்னும் ஒரு கிறிஸ்தவ பக்தன் வாதையான ஓர் ரோகத்தினால் உடல் மெலிந்து பாயும் படுக்கையுமாகப் படுகிடையாய்க் கிடந்து எழுந்திருக்க மாளாமல் மரணத்திற்கு எதிர்நோக்கிக்கொண்டிருக்கையில் அவரிடம் போய் 'உமக்கெப்படியிருக்கிறது' என்று கேட்டேன். அதற்கு அவர் அதிக சந்தோஷங்கொண்டு என்னை நோக்கி 'எனக்கதிக நன்றாயிருக்கிறது. என் ரட்சகர் என் பாவங்களை எல்லாம் நீக்கிப்போட்டார்; ஆகையால் எனக்குத் தடை ஒன்றுமில்லை' என்று பதில் உரைத்தார். இயேசுநாதர் நமது பாவங்களைப் பரிகரித்து நம்மைக் கடவுளுடன் சமாதானப்படுத்துகிறார் என்பது யதார்த்தமாகையால், அவரை நம்பினவர்கள் இவ்வாறு தைரியமடைந்து ஆனந்தங்கொள்ளுகிறார்கள்.

'என்னாலேயன்றி ஒருவனும் பிதாவினிடம் வரமாட்டான்' என்று இயேசுபகவான் வெளிப்படையாகச் சொன்னார். இப்பட்சத்தை நிராகரிக்க ஒருவருக்கும் இடமில்லை. மனிதர் எவ்வளவு பிரயாசப்பட்டபோதிலும் திவ்ய மர்மங்களைக் கண்டறிந்து, கடவுளுடன் ஐக்கியமடையக் கூடாதவர்களாயிருக்கிறார்கள். ஆனால் கடவுளும் மனிதனுமான இயேசுபகவானை எப்போது கண்டு நம்புகிறார்களோ, அப்போது திவ்ய ஐக்கியம் அவர்களுக்குப் பிராப்தியாகிறது. இவ்விஷயத்தைக்குறித்து இயேசுநாதர் 'ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான். அவனில் என் பிதா அன்பாயிருப்பார், நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்' என்று தமது சிஷர்களுக்கு வாக்குக்கொடுத்தார் (யோ. 14. 23.). இதைக்குறித்து இயேசுநாதருடைய பிராண சிநேகிதனாகிய யோவான் என்னும் பக்தன்

'நம்முடைய ஐக்கியம் பிதாவோடும் அவர் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது' என்று (1 யோவா. 1. 3.), தன் முதலாவது நிருபத்தில் தன் அநுபவத்தைக்கொண்டு எழுதியிருக்கிறான். இவ்வைக்கியம் இயேசுகிறிஸ்து மூலமாகவேயன்றி வேறொருவர் மூலமாயும் பாவபந்தனைக்குள்ளான நிர்ப்பாக்கியர்களுக்கு உண்டாகாது. ஆனபடியால் உத்தமமான இவ்வநுபவத்தைக் கண்டு அதையளிக்கிறவர் சத்தியாவதாரியாகிய ஜகத்ரட்சகர் என்று நிச்சயிப்பது அவசியம்.

இயேசுநாதருடைய அவதாரப் பலன்களைக் கண்டறியும்போது, இவ்வுலகத்தில் நடக்கிற ரகசிய காரியங்களின் பொருளைச் சிறிதளவு அறிந்துகொள்ளக் கூடியதானாலும், பரமகுருவின் திருமறையை அங்கீகரியாமற்போனால், அவை எப்போதும் பொருளற்றவையாகவே புலப்படும். மனுமக்களின் நிலைமையை விசாரணை செய்கையில் விடைகூற முடியாத அநேக வினாக்கள் தோன்றி நம்மை வாதிக்கின்றன. நாம் எவ்வளவு பரிசோதனை பண்ணினாலும் எத்தனை விதங்களாய்த் தர்க்கம் பண்ணினாலும் அவற்றை விளக்கிக்காட்ட நமக்குச் சிறிதேனும் திராணியில்லை. மனுஷர் தம் நிலைமையைக் குறித்து எப்போது யோசிக்க ஆரம்பிப்பார்களோ, அதுமுதல் தமது சந்தேகங்களை நிவிர்த்திபண்ணிக்கொள்ள முடியாமல் அதிகக் கிலேசப்பட்டுப் பிரலாபிக்கின்றார்கள். பலர் மனிதருக்கும் மிருகங்களுக்கும் சம்பவிக்கும் வியாதிமுதலான ஏராளமான கஷ்டங்களைக் கண்டு, 'சகலத்தையும் ஆண்டு நடத்துகிறவர் ஒருவர் உண்டென்று எப்படிச் சொல்வோம். அப்படிப்பட்டவர் ஒருவேளை இருந்தால் அவர் முற்றிலும் ஜீவகாருணியர் என்று சொல்வதற்கு இடமில்லை' என்று ஆட்சேபிக்கிறார்கள். பிரபஞ்சக் காரியங்களைக்கொண்டு இவ்வாதத்தைக் கண்டிப்பது கஷ்டமே. பூர்வீகத்தில் சிலர் தீர்க்காலோசனை செய்யாமல் மனிதருக்குண்டாகிற கஷ்டப்பாடுகள் எல்லாம் அவர்கள் கர்மப்பலன் என்று கருதிவந்தார்கள். நாம் தீர்க்காலோசனை செய்தால் இக்கோட்பாடு ஞானமாக ஏற்றுக்கொள்ளத்தக்கது என்று சொன்னாலும் பூரணமானதல்ல என்று புலப்படும். நாம் அநுபவிக்கும் கஷ்டங்களில் சில நம்முடைய காரியங்களினாலும் சில மற்ற மனிதருடைய பிரயத்தனங்களினாலும் சில திவ்ய நியமத்தினாலும்



உண்டாகின்றன என்று உரைக்கச் சந்தேகமில்லை. இதைப்பற்றி நம்முடைய கிரியைகளினாலுண்டாகிற கஷ்டங்களென்றும், பிறராலுண்டாகிற கஷ்டங்களென்றும், திவ்ய திருவுளத்தால் உண்டாகிற கஷ்டங்களென்றும் இவை மூன்று விதங்களானவை என்று இந்து மத நூல்கள் கூறுகின்றன. இப்பூதலத்தில் துன்மார்க்கர்கள் என்று பெயரெடுத்து புகழும் கீர்த்தியுமாகவும், சிறப்புஞ் செல்வமுமாகவும், சுகமும் க்ஷேமமுமாகவும் வாழ்கையில் சன்மார்க்கர் என்பவர் நிர்ப்பாக்கிய ஸ்திதியுடையவர்களாய்ப் பலவகைப் பாடுகள் அடைந்து துன்பமனுபவித்து வருகிறார்கள் அல்லவா? தோஷமறியாதவர்கள் தமது பந்துக்களின் துர்க்கிரியைகளின்நிமித்தம் பாடடைவதுண்டு. மாதா பிதாக்களின் தோஷத்தினால் பிள்ளைகளில் எத்தனையோபேர் பிறவிப்பிணி யுடையவர்களாய் ஜனனமுதல் மரணமட்டும் சொல்லிமுடியாப் பாடுகளைச் சகித்து வருகின்றார்கள். இதுவுமன்றி துஷ்டர்களுக்குப் பிறந்த பிள்ளைகள் தேக பலவீனத்திற்கு மாத்திரமேயன்றி, தம் அன்னை தந்தையரின் துர்ச்சுபாவத்திற்கும் சுதந்தரவாளிகளாய் இருப்பார்கள். ஆகையினால் அத்துர்க்குணத்தை மேற்கொள்ள மாளாமல் துர் இச்சைகளினால் எப்போதும் பிடிக்கப்படுவார்கள். இவ்வகைச் சங்கதிகளை விசாரிக்கும்போது சமாதானம் சொல்வதற்கு ஒருவருக்கும் இடமில்லையாதலால் தாம் ஆலோசனை செய்யுமளவாக திருவுள பரிபாலனத்தின் ரகசியத்தைக் கண்டறிய முடியாமல், இந்த அநியாயங்களை ஏன் நீக்குகிறதில்லை என்று வெகுவாய் வியாகுலப்படுகிறார்கள்.

நாம் சிற்றறிவாளராதலின் நாம் எவ்வளவு யோசனைபண்ணினாலும், இந்த மறைபொருளைப் பூரணமாய்க் கைக்கொள்ள முடியாது. என்றாலும் இயேசுநாதரின் அவதாரபுண்ணியங்களை எப்போது கண்டுகொள்வோமோ, அப்போது நம்மைச்சுற்றி நெருங்கி நிற்கிற விஷயங்களில் நமக்குச் சமாதானம் உண்டாகும். இயேசுநாதர் கடவுளாயிருக்கும்பட்சத்தில் நாம் ஆதரவற்றவர்களாய் இராமல், சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம் என்பவற்றிற்குக் காரணகர்த்தாவாகிய பகவான் நமது நிர்ப்பாக்கியங்களைக் கண்ணுற்று நம்முடன் கவலைப்பட்டுத் துயரப்படுகிறார் என்று வெளிப்படும். பாவத்தின் அகோரத்தைப் பூரணமாகக் கிரகித்து அதிக துயரமுடையவராய் அதை நிர்மூலம்

செய்வதற்கு விண்ணைவிட்டு மண்ணில் அவதரித்து மானிடப்பிறவியாய் உற்பவித்தார். மேலும் பாவத்தை நிர்மூலம்பண்ணி பாவத்தினால் பிடியுண்ட நரரை மீட்கும்பொருட்டு, அத்திருமகன் சொற்கடங்காப் பாடுகள் அனுபவித்துத் தம்மை மரணத்திற்குள்ளாக்கினார். அதிசிரேஷ்டமான இக்காரியத்தில் கடவுளுடைய பரிசுத்தமும் அவருடைய அளவற்ற அன்பும் எவ்வளவு துல்லியமாகப் பிரகாசிக்கின்றன. மாரிகாலத்தில் சூரியமண்டலத்தை மறைத்த மேகங்கள் காற்றினால் சிதறடிக்கப்படுகையில், சூரியன் எவ்வளவு பிரகாசத்துடன் வீசுகிறதோ அப்படியே இயேசுநாதருடைய அவதாரமாட்சிமையினால் திவ்ய பரிபாலனத்தைச் சுற்றின சந்தேக அந்தகாரம் நீங்கும்போது கடவுள் பாவத்தை மிக வெறுத்து ஜன்மப்பகையாய்ப் பகைக்கிறவரேயாயினும், பாவிகளை நேசித்து அவர்களைப் பாவபந்தத்தினின்று விடுதலைபண்ணிப் பரிசுத்தம் செய்வதற்கு விடாமுயற்சியாயும் ஊக்கமாயும் உழைக்கிறார் என்னும் சத்தியம் ஆயிரக்கணக்கான சூரியஜோதி மயமாய்ப் பிரகாசிக்கிறது.

அநேக விஷயங்கள் நமது யோசனைகளுக்கு மேற்பட்டவைகளாயிருந்தாலும், அநியாயக்காரரும் பக்தியீனர்களும் நன்றிகேடருமான நம்பொருட்டுக் கடவுள் தமது சொல்லற்கரிய மகிமையானந்தத்தைத் துறந்து மனுவேடம் பூண்டு அநேக பாடுகள்பட்டு தமது ஜீவனை மரணத்துக்கு ஒப்புக்கொடுத்தார் என்பது சத்தியமாய் இருக்கும் பட்சத்தில் அப்பராபரன் நம்மில் மட்டில்லாத தயவுடையவரென்று நிச்சயிக்காதிருக்க இடமில்லை. இப்படி இருக்கையில் தரித்திரம் ரோகம் முதலான அவஸ்தைகளின் பொருளை நாம் அறியாமற்போனாலும் அம்மட்டற்ற தயவைக் கருத்தில் வைத்துக் கடவுள்மேல் நமது பாரத்தைப் போட்டுத் தைரியசாலிகளாவோம். இயேசுநாதர் மாறுதவராகையால் இம்மண்ணில் மனிதனாய் சஞ்சாரஞ்செய்தகாலத்தில் மனுஜாதியின் துக்கம் எல்லாவற்றையும் தம்மேல் ஏற்றுக்கொண்டார். அப்படியே கடவுள் ஆதிமுதல் முற்றிலும் ஜீவதயாபரராய் ஜீவாத்மாக்கள்மேல் மிக்க கருணையுடையவராய்த் தம் பிள்ளைகளான நாம் படும் பாடுகளையும் துயர்களையும் தமதாக்கிக்கொண்டு நமக்கு நேரிடுகிற துக்கங்கள் யாவற்றிலும் பங்காளியாய் இருக்கிறார் என்று தீர்மானிக்கலாகும். நாம் நமது சுயபாரத்தைச் சுமந்து நமது பந்து



மித்திராதிகள் விஷயத்தில் சிறிதளவு பரிதாபப்படுகிறவர்களாயிருக்க, பகவானோ, இப்பூதலத்தின் பாவபாரம் யாவற்றையும் சுமந்து அதிலுள்ள கஷ்டப்பாடுகள் அனைத்தையும் அனுபவிக்கிறார். அந்த ஜீவாதிபதி ஒருவனுக்குண்டாகிற வாதையைக் கண்ணோக்கி, அவனுடன் தானும் வாதைப்படுகிறதுமன்றி ஒவ்வொருவனின் பாவத்தைக்குறித்தும் மிகவும் துக்கித்துத் துயரமடைந்து அதை எப்படியாயினும் நிவிர்த்திக்கவேண்டுமென்று இடைவிடாமல் போராடிப் பிரயாசப்படுகிறார்.

இச்சத்தியத்தைக் கண்டுகொள்ளும்போது நமக்கு உண்டாகும் கஷ்டங்கள் நோக்கமில்லாதவை என்று நினைக்கிறதற்குப் போதுமான ஆதாரமுண்டாகும். இயேசுபகவான் தம்மைத்தாம் வெறுத்து, தமது மகிமையானந்தத்தை விட்டு நரர்தேகமெடுத்து அவமானத்தையும் பாடுகளையும் மரணத்தையும் அடைந்ததால், கணக்கில்லாதபேர்கள் தமது நிஜஸ்திதியைத் தெரிந்துகொண்டு, தமது பாவங்களை ஜன்மப்பகையாய்ப் பகைத்து அவற்றை அருவருத்து கடவுளிடம் திரும்பிப் பாவத்தினின்று விடுதலையடைகிறார்கள் அல்லவா? அப்புண்ணியநாதரின் சிலுவைப்பாடுகளினால் சர்வலோகத்திற்கும் இந்தப் பெரும்புண்ணியம் உண்டானபட்சத்தில் நமக்கு உண்டாகும் துன்பங்கள் முதலியவைகளால் யாதாமோர் பயனுண்டாகுமென்று நிச்சயிக்கலாகாதா? 'சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டுத் தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற நம்பிக்கையுடையதாயிருக்கிறது. ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்து பிரசவவேதனைப்படுகிறது' (ரோ. 8. 20. 22.) என்று சத்தியவேதத்தில் எழுதியிருக்கிறது. இந்தத் திவ்ய நோக்கம் நிறைவேறும்பொருட்டு நமது கஷ்டங்களும் பாடுகளும் அநுகூலமாகும்பட்சத்தில் நாம் அதிகக் களிப்படைந்து மகிழ்ச்சிகொண்டு அவற்றைச் சகித்துக்கொள்ளலாகாதா? இவ்விதமாகக் கிறிஸ்துநாதரின் சரித்திரத்தையும் அதினால் விளைந்த பலனையும் உணர்ந்தறியுங்கால் முன்னொருக்காலும் நம் புத்திக்கெட்டாத ஒரு மேன்மையான புண்ணியபலன் மனித ஜனனத்தில் அடங்கியிருக்கிறதென்று வெளிப்படும். இயேசுபகவானுக்கு மனதைப் படைத்த

வுடனே நமது எண்ணங்கள் அபிப்பிராயங்கள் யாவற்றிற்கும் பெரும் மாறுதலுண்டாகும். அதற்குமுன் அடிமைகளைப்போன்றவர்களாய் நமக்குச் சம்பவிக்கிற கஷ்டங்களைச் சகிக்கமுடியாமல் பிரலாபித்தபோதிலும், இயேசுபகவானையண்டி அக்கிருபாநிதியின் தயவை ருசித்தபிறகு நாம் புத்திரஸ்தானத்தை வகித்துக் குமாரரைப்போல கஷ்டங்களைச் சந்தோஷமாய்ச் சகிக்க பொறுமையுடையவர்கள் ஆகிறோம். பவுல் என்னும் பக்தசிரோன்மணி சொல்லியபடி 'நாம் தேவனுக்கு உடன் வேலையாட்கள்' (1 கொரி. 3. 9.). ஆதலால் கடவுளுடைய திவ்ய திருவுள்ளத்தை அறிந்து, சந்தேகங்கள் அனைத்தையும் ஒழித்து, நமது பிரயாசங்களும் நமக்கு நேரிடுகிற பாடுகளும் எவ்வகையிலாகிலும் சித்தியாகும் என்று நிச்சயித்து, ஜெயவீரரைப் போலப் போராடி ஜெயமடைவோமாக.

கிறிஸ்துநாதர் உபதேசம் சத்தியமாய் இருந்தால், நம்மாலும் பிறராலும் கடவுளாலும் உண்டாகும் துன்பங்கள் அனைத்தையும் தாங்கி தைரியசாலிகளாய் ஜீவிக்கக் கூடியவர்களாவோம். அவ்வுபதேசம் வாஸ்தவமாயிராமற்போனாலோ, இம்மண்ணில் நமக்கு ஆறுதல் இருக்கவே இருக்கமாட்டாது. மற்ற மதங்களெல்லாம் விழுந்து சிதைந்து ஒழிந்துபோகின்றன. தாம் கல்விப்பயிற்சியில் தேறுமளவாகத் தமது முற்பிதாக்கள் வணங்கின தேவர்களுடைய வர்த்தமானங்களை விசாரணைசெய்து மனத்தளர்ச்சியடைந்து தேவர்கள் பூஜையைப் படிப்படியாக விட்டுவிடுகிறார்கள். அவர்கள் ஒருக்கால் பந்துமித்திராதிகளை மனநோகப் பண்ணலாகாது என்று அபிப்பிராயங்கொண்டு சிறிதுகாலம் தம் ஆசாரங்களை எப்போதும்போல கையாடினபோதிலும், அக்கோட்பாடுகளில் பூரண மனசு, அணுவளவேனும் இராது. இந்த இந்துதேசத்தில் மிலேச்சருங்கூட புராணாதி நூல்களில் உள்ள கோட்பாடுகளை நம்புவதற்கிடமின்றி, தம்முன்னோர்கள் பூஜித்த தேவர்களின் நடபடிக்கைகளைப்பற்றி பரிகாசம் செய்கிறார்கள். அவர்கள் கிராமத்திருவிழாக்கள் உற்சவங்கள் நடக்குங் காலத்தில் நாமும் அவர்களோடு கலந்து ஒருமித்துப் பார்ப்போமானால், அவர்கள் யாகங்களையும் பலிகளையும் வீண்வேடிக்கையுடன் செய்வதாய்க் காணப்படுமேயொழிய பக்திவிசுவாசத்துடன் செய்கிறார்கள் என்று கொஞ்சமாகிலும் புலப்படாது. கிறிஸ்துமதத்தைத் தழுவி



ல் நம்முடைய பாவ அந்தகாரம் அகன்று, நமக்கு உறுதிநிலை யுண்
ருகும். இதை ஒழித்து மற்ற மதங்களை அனுசரிப்பதினால் சந்தேக
காரத்தில் மூழ்கி நிவாரணம் அடைய மாளாமல் துயரத்துக்குள்
வோம். கிறிஸ்துசமயம் உண்மையானதாயிருந்தால் நாம் ஜகத்ரட்
ரான இயேசுகிறிஸ்துவை நமக்கு ஆதாரமாக்கி அம்மத்தியஸ்தர்
லமாய்க் கடவுளை அறிந்து தேவகடாட்சத்தால் கர்ம நிவாரணம்
ற்று நமக்கு நேரிடுகிற வாதைகளையும் துன்பங்களையும் சகிக்கக்
டியவர்களாவோம். கிறிஸ்துமதம் வாஸ்தவமாயிராதபட்சத்தில்
து சந்தேகத்தைத் தீர்க்கவும் நமது பாவங்களை நிவாரணம் பண்ண
ஆதாரம் ஒன்றுமில்லையாதலால், நமது ஜனனம் முற்றிலும்
ப்பிரயோஜனமானதென்று நிச்சயிக்கவேண்டியதாயிருக்கும். நாம்
மக்களாதலால் நமது பிறப்பு கருத்தற்றது என்றும் வீணானது
றும் சொல்வதற்கு மனது சம்மதியாது. ஆகையினால் நம்மு
டய சந்தேகங்களைத் தீர்த்து நமது உத்தம கோரிக்கைகளைத் திருப்தி
ணி இப்பிரபஞ்ச ரகசியத்தை விளக்கிக்காட்டுகிற கிறிஸ்துபகவா
ன் வாக்கு, வாஸ்தவம் என ஒப்புக்கொள்வது அவசியம். இயேசு
ரின் திரு அவதாரத்தினால் நமது பிறப்பு ஈடேறும்வழி ஏற்பட்டி
கிறதினால், அந்தச் சத்தியாவதாரப் புண்ணியங்களை எப்போது பற்
கொள்கிறோமோ அப்போது அவ்வாண்டவருடைய மகத்துவத்
க் கண்டு களிகூர்ந்து அப்பரமகுருவே சகல நரரையும் ரட்சித்து
டத்தேற்றும் ஜகத்ரட்சகர் என்று நிச்சயிக்கவேண்டும்.

# XI. அதிகாரம்

## ரூபகாரப் பொழிப்பு.

ஒரு சங்கதியை விசாரிக்கும்பொழுது ஒரு சாட்சிமாத்திரம் சொன்னால், நாம் சகஜமாகச் சந்தேகிப்போம். அநேக சாட்சிகள் ஏகோபித்து ஒரு மொழியாய்ச் சொன்னால், நமது சந்தேகத்தை நீக்கி உறுதியாய் நம்புவோம். இவ்வாறே மதவிசாரணை செய்யுங்கால் ரூபகாரத்தைமாத்திரம் விசாரிக்கும்பட்சம் உண்மை நன்றாகப் புலப்படமாட்டாதாயினும், அநேகவித ருசுக்களை ஆராயும்போது அவையாவும் ஒத்துவருமானால் நமது சந்தேகத்தைத் தவிர்த்து திடவிசுவாசமுடையவர்களாவோம். நாம் இதற்குமுன் உதாரணமாக எடுத்துரைத்த வைத்தியசங்கதியைப்பற்றி யோசித்தால் இது தெளிவாக விளங்கும் (9-ம் அதிகாரம் காண்க.). புதியவன் எவனோ ஒருவன் ஒரு ஊருக்கு வந்து வைத்தியஞ்செய்யத் தொடங்குங்கால் அவனுடைய வரலாற்றை வெகுவாக விசாரணைசெய்து ஜாக்கிரதையாய்த் தெரிந்துகொள்ளுமட்டும், விவேகிகளானவர்கள் ஒருவரும் அவனிடம் வைத்தியம் பண்ணிக்கொள்ளமாட்டார்கள். அவனுடைய சங்கதியைச் செவ்வையாகத் தெரிந்துகொள்ள விரும்பினால், அநேக விஷயங்களை எடுத்து விசாரிக்கவேண்டுமல்லவா? முதலாவது அவன் குணலட்சணங்களைப் பரிசோதித்து அவன் சத்தியவானோ அல்லவோ என்பதைத் தெரிந்துகொள்வது அவசியம். சத்தியவான் என்று நம்புகிறதற்கு ஆதாரமுண்டானால், அவன் ஒரு பொல்லாப்பும் பண்ணாமல் தன்னால் கூடியவரையில் தன் நிஜஸ்திதியைக்கொண்டு பேசுவானென்று நம்பலாகும். ஆகிலும் ஒருவன் யதார்த்தவாதியானபோதிலும், அவன் ஒருவேளை தன் நிஜநிலைமையை உணராமல் தன்னைத்



தான் வஞ்சித்துத் தன் சுயசக்திக்கு மிஞ்சின தொழிலுக்கு முயற்சி செய்யலாமாகையால் வைத்தியம் செய்யத் தலைப்படுகிறவன் சத்தியவானென்று நிச்சயித்தபிறகு, அவன் வாக்குக்கிரியைகளைப் பரிசோதித்து அவன் சாஸ்திரவாதிபோல நடக்கிறவனோ அல்லவோ என்று விசாரணைசெய்து அறிந்துகொள்ளவேண்டும். அவன் பண்டிதன்தான் என்று காணப்பட்டால், அவன் வித்தையைக் கையாடுகிறவனோ அல்லவோவென்று பரிட்சிப்பது உத்தமமாகையால், அதற்குமுன் வைத்தியம் செய்தவர்களை விசாரித்து அவர்கள் நற்சாட்சியால் அவன் சாமர்த்தியம் எப்படிப்பட்டது என்று தெரிந்துகொள்ளலாகும். எல்லாரும் ஏகோபித்து ஒரு மனதாய் அவன் சாமர்த்தியத்தைப் புகழ்ந்து கொண்டாடி அவன் செய்த பரிகாரங்களால் பல ரோகிகள் சுகமடைகிறதாகப் பலமான சாட்சிகொடுத்தால், நாம் உற்சாகமும் தைரியமும் அடைந்து அவனிடம் வைத்தியம் செய்துகொள்வோம். அவ்வைத்தியத்தால் நமது வாதையை நிவாரணம் செய்துகொண்டு ஆரோக்கியமடைந்தால், அவன் நம்பிக்கைக்குரிய வைத்தியசாஸ்திரி என்று சந்தேகமறத் தெரியவரும்.

கிறிஸ்துமத ரூபகாரத்தை இவ்வாறே விசாரிக்கவேண்டும். பற்பல அற்பசொற்ப அம்சங்களை விசாரிக்காமல், இயேசுகிறிஸ்துநாதருடைய சங்கதியைமாத்திரமே ஜாக்கிரதையாகப் பரிசோதித்து, அவ்வாண்டவர் மனுமக்களின் பாவப் பரிகாரத்தின்பொருட்டு, எழுந்தருளிய சத்திய அவதார புருஷனோ அல்லவோ என்று விசாரணைசெய்து அறிந்துகொள்ளவேண்டும். ஒரு ரூபகாரத்தினால் அப்பரமபுருஷனின் திவ்ய மகத்துவத்தைச் சிறிதளவு கிரகிக்கலாமென்றாலும், மேற்கூறிய உதாரணங்கள் எல்லாவற்றையும் சேர்த்து விசாரணைசெய்வதால் நமக்குப் பூரண நிச்சயமுண்டாகும். நாம் எத்தனை ரூபகாரங்களை பரிசோதித்து ஒத்துப்பார்த்தாலும், அவையாவும் ஏகோபித்து இயேசுநாதர் ரட்சகரென்று ஆயிரக்கணக்கான வாய்களுடன் ஆர்ப்பரித்துக் கூறுகின்றன. நாம் இதுவரையில் சவிஸ்தாரமாய் விசாரித்தவைகளைச் சுருக்கமாக எடுத்துரைத்துப் பரிசோதனை பண்ணினால் இது விளங்கும்.

1. மனிதர் ஸ்திதியைப்பற்றி விசாரிக்கையில், அவர்கள் தேவனுடைய சுபாவ லட்சணங்களை சிறிதளவு விசாரணைசெய்து, கற்று

அறிந்து தெரிந்துகொண்டு, அவ்வகை அறிவினால் திருப்தியடையாமலும் கடவுளைச் செவ்வையாக அறியக்கூடாமலும் சந்தேகசாகரத்தில் மூழ்குகிறார்களென்று நமக்குத் தெரியவரும். இவ்விஷயத்தைக் குறித்து இன்னும் ஆழ்ந்து ஆலோசித்தால், மனிதர் இயல்பாக தம் பலவீனத்தை உணர்ந்து திவ்ய சகாயத்தை வாஞ்சித்துக் கடவுள் தம்மைத்தாமே ஏதோ ஓர் வழியால் வெளிப்படுத்துவார் என்று நம்பினதாய்த் தெளிவாய்க் காணப்படும். மதச்சரித்திரங்களைப் பரிசோதித்துப் பார்க்குங்காலத்தில், சகல தேசங்களிலும் எண்ணிறந்தபேர் அவதாரக் கோட்பாட்டைத் தழுவி, சத்தியாவதார புருஷனுக்காக எதிர்நோக்கி வந்ததாகக் காணப்படும். மேலும் அவதாரச் சித்தாந்தத்தை ஆராய்ச்சிசெய்து பார்க்கையில் தேவசுபாவத்திற்கும் மனுமக்கள் நிலைமைக்கும் அது வெகுநேர்த்தியாய் இசைகிறதாகையால், சத்தியாவதாரமொன்று உண்டு என்று நம்புவதற்குப் போதுமான ஆதாரம் உளதென்று நிச்சயிக்கவேண்டும்.

2. இவ்வாரம்ப விசாரணையை நிறுத்தி, இயேசுகிறிஸ்துநாதர் சரித்திரத்தை எடுத்து ஆராய்ந்துபார்க்கையில், அப்பரமபுருஷனே சத்தியாவதாரப் புருஷனாகி அதரிசனமான கடவுளை வெளிப்படுத்தி, நமது சந்தேகங்களெல்லாவற்றையும் தொலைத்து நிவிர்த்தியாக்கி நம்பாவங்களைப் பரிகரித்து நம்முடைய ஜன்மத்தை ஈடேற்ற சர்வாதிகாரமுடைய ரட்சகர் என்று அநேக திருஷ்டாந்தங்களால் ஸ்திரமாகும். மனிதர் தழுவிய அவதாரச் சித்தாந்தங்களைப் பரிசோதனை பண்ணுகையில், இயேசுகிறிஸ்து நாதரேயன்றி வேறொருவரும் தேவலட்சணங்களை வெளிப்படுத்தவில்லை என்று ரூபகாரமாகும். நாம் எந்தச் சாஸ்திரங்களைப் பரிசோதித்தாலும், எந்த ஜாதியாரின் சமாசாரத்தை விசாரித்தாலும், சகல சாஸ்திரங்களும் சகல ஜனங்களின் கோரிக்கைகளும் இயேசுநாதர் திருச்சரித்திரத்தினால் சித்தியானது என்பதற்குச் சந்தேகமில்லை. இந்துமத சாஸ்திரங்களைப் பரிசோதனைசெய்து பார்க்குங்கால், அவற்றிலுள்ள அடையாளங்களும் அறிகுறிகளும் இயேசுநாதர் ஒருவருக்கே ஒழிய வேறொருவருக்கும் பொருந்தாது. இந்த அகிலாண்டநாயகன் பூர்வரிஷிகள் ருக்வேதத்தில் சுட்டிக்காட்டின முன்னடையாளங்களை நிறைவேற்றி, கல்விமான்கள் இதிகாசநூல்களில் விவரித்த சத்தியாவதார லட்ச



ணங்களை வெளிப்படச்செய்து, சகல ஜனங்களும் சகஜமாகக்கொண்டிருந்த நம்பிக்கையைப் பூரணமாக நிறைவேற்றினவர். ஆகையால் அம்மேலோனே சத்தியாவதாரப் புருஷன் என்று ஒப்புக்கொள்ளாதிருக்க இடமில்லை.

3. இயேசுநாதர் உற்பவித்த தேசச்சரித்திரத்தைப் பரிசோதனை பண்ணினால், இது இன்னும் நன்றாக விளங்கும். அத்தேசத்தில் எண்ணிறந்த பக்திமான்கள் தேவானுக்கிரகத்தால் தீர்க்கதரிசன வரமுடையவர்களாய், ஞானதிருஷ்டிப் புருஷர்களாய், ஜன்மிக்கப் போகிற ரட்சகரைக்குறித்து வெகு தெளிவாக உபதேசித்துவந்தார்கள். அவர்கள் அச்சற்குருவின் குணலட்சணங்களை விவரித்து அவர் உதிக்கும் காலஸ்தானங்களை தெரிவித்தமையால், அத்தேசத்தார் அவர்கள் தீர்க்கதரிசனத்தின்படி வரப்போகிற ரட்சகருக்காக எதிர்நோக்கி யிருந்தார்கள். அந்த ஞானிகள் முன் உரைத்தகாலம் பூரணமானபோது, அவர்கள் முன்கூறியவண்ணம் நீதியின் சூரியனாகிய இயேசு யூதேயா தேசத்திலுள்ள பெத்லெகேம் என்னும் ஸ்தலத்தில் ஜன்மித்தார். அவ்வகைத் தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றினபடியால், அப்பரம புருஷர் கடவுள் நியமித்த ரட்சகர் என்றே நிச்சயிக்கவேண்டும்.

4. இயேசுநாதர் சரித்திரத்திற்கும் மனிதர் இயற்றிய அவதார புருஷரின் கதைகளுக்கும் அனந்த வித்தியாசமுண்டு. இராமன், கிருஷ்ணன் என்பவர்கள் சங்கதிகளை விசாரணைபண்ணினால், சமஸ்தமும் குழப்பமும் தாறுமாறாகவும் இருக்கிறபடியால் நிஜஸ்திதியை அறிந்துகொள்ள இடமில்லை. இயேசுநாதரின் திருஅவதாரச் சரித்திரம் வெகு தெளிவாக இயற்றப்பட்டதினால், அத்திருமகன் வர்த்தமானத்தை செவ்வையாகக் கண்டறிய ஆட்சேபனை ஒன்றுமில்லை. அத்திருச்சுதனைக் கண்ணாரக் கண்டு அப்புண்ணியமூர்த்தியுடன் இணைபிரியாக் கூட்டுறவு பண்ணிய தொண்டர்கள் அவரது திருச்சரிதையைச் சவிஸ்தாரமாக எழுதியிருக்கிறார்கள். அவர்கள் புலவர்கள்போல் தங்கள் வித்வத்தன்மையையும் சாமர்த்தியத்தையும் காட்டி, வெளியிட்டு வெகுமானமாயினும் உலகப்புகழ்ச்சியாயினும் சம்பாதிக்க எத்தனித்தவர்கள் அல்ல. நடந்த வர்த்தமானங்களை நடந்ததுபோல் எழுதினவர்கள். தம் ஆண்டவருடைய சுபவர்த்தமானத்தைப் பிரசித்தப்

பண்ணுவதினால், அவர்களுக்கு அவமானமும் துன்பமும் அகால
மாணமும் நேரிட்டபோதிலும், அவர்கள் சிறிதேனும் பயப்படாமல்,
இயேசுநாதருடைய திவ்ய திருநாமத்தை எத்திசையிலும் வெளிப்ப
டுத்திவந்தார்கள். அவர்கள் இயற்றிய ஆகமங்களை வாசிப்பதால்,
இயேசுநாதர் 1900 ஆண்டுகளுக்கு முன்னர் யூதேயாதேசத்தில் ஜன்
மித்து பாலியத்தில் தச்சவேலை செய்தபிறகு வீடுவாசலை விட்டு நாக
ரீகமற்ற ஜனங்களில் சில சீஷர்களைத் தெரிந்துகொண்டு, அச்சீஷர்க
ளுடன் தேசாந்தரப் பிரயாணஞ்செய்து, சகல மனிதருக்கும் மெய்ஞ்
ஞான போதனைபண்ணி, கடைசியில் அதிகாரிகளுடைய பகை
யினாலும் பொறாமையினாலும் மாணசிட்சையடைந்து, கல்லறையில்
அடக்கம்பண்ணப்பட்டு மூன்றாம்நாளில் திரும்ப ஜீவனுடையவராய்
உயிரோடெழுந்து, தம் சீஷர்களுக்குப் பிரத்தியட்சமாய்க் காணப்
பட்டு, நாற்பது நாட்கள்வரையில் அவர்களுடன் இருந்து நடமாடி,
பிறகு அவர்களெல்லாரும் பார்த்துக்கொண்டிருக்கையில், பரலோகத்
திற்கு எழுந்தருளினார் என்பது நமக்குத் தெரிந்தவிஷயமே.

5. இயேசுவின் சரித்திரத்தை ஆராய்ந்துபார்த்தால் அப்பரமகுரு
வின் குணலட்சணாதிகளைக்கொண்டு அவரது திவ்ய மகத்துவத்தைக்
கண்டுகொள்ள ஏதுவாகும். அம்மேலோன் மற்ற மனிதரைப்போல்
குற்றங்குறைகள் உள்ளவர் அல்ல. அம்மகிமையினுண்டவர் எளிய
நிலைமையிற் பிறந்தவரானாலும், தம்நிலைமைக்கு முற்றிலும் மேற்பட்
டவராய், காலஸ்தானாதிகளின் கட்டுப்பாடுகளை முற்றிலும் மேற்
கொண்டு, சகல விஷயங்களிலும் வெகு மேன்மை உடையவராய்
ஜீவித்துவந்தார். அவ்விண்ணுலகன் ஆவியில் தாழ்மையான மன
முடையவராய், தம்மை ஒருக்காலும் உயர்த்திக்கொள்ளாமற் போனா
லும், அவருடைய சிஷரும் சிநேகிதரும்மாத்திரம் அல்ல, அவரு
டைய சத்துருக்கள்கூட அப்பெருமானின் மகத்துவத்தை ஆராய்ச்
சிசெய்து ஆச்சரியமும் பயமும் அடைந்தார்கள். திவ்ய திருப்புதல்
வனான இயேசுநாதர் அத்தியந்த கருணாநிதியாய் இழிஞரையும்
அற்பமாய் எண்ணாமல், சகல மனிதருக்கும் நீதிநெறியையும் சத்திய
மார்க்கத்தையும் புகட்டி, அவர்களைப் பாவத்தினின்று விடுதலையாக்க
வேண்டும் என்று பிரயாசப்பட்டுவந்தார். மன்னுயிரைத் தன்னுயிர்
போல் பாவித்த நிகரற்ற அந்த அன்பின்மூர்த்தி தம் சுயநயத்தையும்



சுயசௌக்கியத்தையும் கருதாமல் தம்மைத்தாம் வெறுமையாக்கி
மனுமக்கள் பாவநிவாரணத்தின்பொருட்டு அவமானத்தையும் துன்
பத்தையும் கொடிய மரணத்தையும் அனுபவித்தார். இவ்வளவு தயவை
யும் மகத்துவத்தையும் காண்பிக்கிறதும் அல்லாமல், அவர் பரிசுத்த
மூர்த்தியாய்ப் பாவம் ஒன்றும் செய்யாமல் முற்றிலும் மாசற்றவரா
யிருந்தமையால், ஸ்தோத்திரிக்கப்படத்தக்க அத்திருப்புதல்வனுடைய
எண்ணிறந்த வியப்புக்குரிய சுபகுண லட்சணாதிகளைக் கண்ணோக்கி,
அவர் திவ்ய சுபாவமுடையவர் என்று உரைக்க அணுவளவும் சந்
தேகமுமில்லை.

6. இயேசுநாதர் சிறிதேனும் சந்தேகியாமல் தம்மைக்குறித்து
வெகு தெளிவாக உபதேசித்துவந்தார். அத்திருமகன் தம் திவ்ய மகத்
துவத்தைப் பூரணமாய் அறிந்திருந்தபடியால், தாம் மனுமக்கள் கர்ம
நிவாரணத்தின்பொருட்டு, விண்ணின் வாழ்வும் அதின் மேன்மை
யனைத்தும் விட்டு மண்ணில் ஏழையாகவந்த அகிலாண்ட நாயக
ரென்று ஒளிவு மறைவின்றி உலகோர்க்கு உணர்த்தினார். இயேசு
நாதர் பூரண சத்தியமூர்த்தியாய்த் தம்மைக்குறித்து ஒருக்காலும்
பெருமைபண்ணி தற்புகழ்ச்சி செய்கிறவரல்லவானாலும், இவ்வகை
மேன்மையான மொழிகளால் அவர் பூரண அனுபவமுடையவராய்த்
தம் நிஜஸ்திதியை உணர்ந்து, இவ்வண்ணம் திருவுளம்பற்றினாரென்று
தீர்மானிக்காதிருக்க விதியில்லை.

7. இயேசுநாதர் இப்படிப் பிரசித்தம் பண்ணுகிறதோடேகூட தமது
வாக்குக்கிரியைகளால் தம் தெய்வீகத்தை உறுதியாக்கினார். அப்பரம
குரு உபதேசம் பண்ணியபோது, சகலரும் வெகுவாய் வியப்படைந்து
மனிதனொருவனும் ஒருக்காலும் இப்படி உபதேசிக்கவில்லை என்று
பிரமைகொண்டவர்களானார்கள். அச்சத்தியவாசகர் திருவுளம்பற்றிய
திருமறையில் கர்ம, ஞான, பக்தி, யோக, மார்க்கங்கள் தத்தம் குறைவு
களையும் பழுதுகளையும் ஒழித்துப் பூரணமாகின்றமையால், அவ்வுப
தேசம் மனுமக்கள் நிலைமைக்குப் பாலும் பழமும்போலும், நகமும்
சதையும்போலும், வெகு நேர்த்தியாய்ப் பொருந்தி அமைகிறது.
அவ்விண்ணுலக இறைவன் எண்ணிறந்த விதிகளை நியமித்துத் தம்
மடியாரைப் பலவாறாய்க் கட்டுப்பாட்டுக்குள்ளாக்கி வருத்தாமல்,
தானே வழி என்று திருவாய்மலர்ந்து, தம்மை நாடுகிறவர்களின்

பாவங்களைப் பரிகரித்து நிர்மூலமாக்கி, அவர்களை நற்குணசாலிகளாக்கிவந்தார். மேலும் அவர் போதிப்பதோடுகூட சகல திரளுங் கண்ணாரக்காண எண்ணிறந்த அற்புதக் காரியங்களினால் தம் திவ்ய மகத்துவத்தைப் பகிரங்கமாய் வெளிப்படுத்தினார். அப்பரம பரிகாரி சகல ரோகங்களையும் நிவாரணம்பண்ணி, அந்தகருக்குப் பார்வையும் முடவர்களுக்குச் சர்வாங்க சுகமும் அங்கப்பழுதுடையோருக்கு பூரண அங்கத்தையும் தயவாக அளித்து, மாண்டோரை உயிரோடெழுப்பினார். இதுவுமல்லாமல் ஒப்புவமையில்லா அற்புதநாதராகிய இயேசு மற்ற மனிதர்போல மரணமடைந்தாலும், மூன்றுதினங்கள் கல்லறையில் அடக்கப்பட்ட பின்னர் திரும்ப ஜீவன்கொண்டெழுந்து நாற்பது தினங்கள்வரையில் தம்மடியாருடன் நடமாடிக் கூட்டுறவுசெய்து கடைசியில் பரலோக மெழுந்தருளினார். இது எதிர்பேசக்கூடாத ரூபகாரமல்லவா?

8. இயேசுகிறிஸ்து நாளதுவரையில் தம்மகத்துவத்தை வெளிப்படுத்திவருகிறார். அந்த ஜீவாதிபதி பரலோகம் எழுந்தருளியபிறகு, லோகாதிகாரிகளும் சாஸ்திரிகளும் பேர்ப்பிரஸ்தாபம் அடைந்த சகல ஜாதிகளும் ஒன்றுகூடி, அப்பரமகுருவின் திருமறையை அற்பமாய் எண்ணி குறைவுபடுத்தித் தள்ளி அந்த நித்திய வஸ்துவின் நாமஸ்மரணையை நிர்மூலம் செய்யும்பொருட்டு, பலவாறாய் அடுத்து முயன்று வந்தனர். அந்த நாமத்தைப் பிரபலியம் பண்ணியவர்கள் கல்லாதவர்களாதலின் தம் வாக்குவல்லமையால் விரோதிகளையும் எதிர்பேசுகிறவர்களையும் கண்டித்து, உணர்த்திச் சம்மதிக்கப்பண்ணிச் சமாதானப்படுத்துவதற்கு அவர்களுக்குச் சாமர்த்தியம் சிறிதேனும் இல்லை. மேலும் அவர்கள் மனிதரை வியந்து புகழ்ந்து அவர்கள்முன் முகஸ்துதியாய்ப் பேசாமல், அவர்களுடைய வழக்கமான விருப்பங்களுக்கும் அவர்கள் சாதாரணமாக அனுசரிக்கிற துர்க்கிரியைகளுக்கும் முற்றிலும் நேர்விரோதமான வழியைப் போதித்தார்கள். இதினால் அம்மதம் படிப்படியாய்க் குன்றிச் சிறிதுகாலத்தில் ஒன்றுமில்லாமல் ஆகிவிடும் என்று நிச்சயிக்க இடம் உண்டல்லவா? நாம் எத்தேசச் சரித்திரத்தை வாசித்துப் பார்த்தபோதிலும், கிறிஸ்துமார்க்கம் இவ்வண்ணம் சூனியமாய்ப் போய்விட்டது என்று காணப்படாமல், இயேசுநாதரது திருநாமம் சகல தேசங்களிலும் படிப்படியாகப் பரவிச் சகல



ஜனங்களையும் வசப்படுத்திக்கொள்ளுகிறது என்பது அங்கீகரிக்கத்தக்க விஷயம் அல்லவா? இதுவுமன்றி இயேசுபகவான் திருநாமம் எங்கெங்கே பிரபலமாகிறதோ அங்கங்கே மனுமக்கள் தங்கள் துராப்பியாசங்களை வெறுத்துத்தள்ளிச் சகல சற்குணங்களிலும் அபிவிர்த்தியடைகிறார்கள் என்று வெளிப்படையாய்க் காணப்படுகிறது. இவ்வித விஷயங்களைக்குறித்து யோசிக்கும்பட்சத்தில், இயேசுநாதர் என்னும் மகிமைப்பிரதாபன் மனுமக்களைப்போல முற்றிலும் மரித்து, இவ்வுலகத்தைவிட்டு முற்றிலும் ஒழிந்துபோனவர் அல்லர். மனுவேடம்பூண்டு மரணத்திற்குள்ளான அந்த ஜீவாதிபதி பரலோகத்தியானது முதற்கொண்டு இந்நாள்வரையில் இவ்வுலகத்தில் ஆத்மீகமாய் இருந்து, சகலத்தையும் ஆண்டு நடத்திச் சகல ஜனங்களையும் கொஞ்சங்கொஞ்சமாய்த் தமது வசமாக்கிக்கொண்டுவருகிறார் என்று நிச்சயிக்கப் போந்த இடம் இல்லையா?

9. இவ்வுலக சரித்திரவிசாரணையை நிறுத்தி, இயேசுபகவானை நம்[illegible]ருக்குண்டான அனுபவத்தைக்கொண்டு விசாரணைசெய்து பார்க்கும்போது, அப்பரமகுருவின் மகத்துவத்தை வெளிப்படுத்தும் திருஷ்டாந்தங்கள் இன்னும் பல காணப்படும். இதைப்பற்றி இயேசுநாதர் திருவடியில் தீட்சைபெற்று உபதேசம் அடைந்த பேதுரு யோவான் என்னும் ஆதிச்சீஷர்கள் பலமான சாட்சி கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் மாத்திரமல்ல அக்காலமுதல் தற்காலமட்டும் கற்றாராயினும் கல்லாராயினும் பண்டிதராயினும் பாமராயினும் இயேசுபகவானை நம்பினவர்கள் எவர்களோ, அவர்கள் எல்லாரும் ஏகமனமுடையவர்களாய்த் தாம் அப்புண்ணியமூர்த்தியின் பேருதவியினால் முன்னுள்ள துர்எண்ணங்களை ஒழித்து, புதுமனம் அடைந்து, பாவங்களை அருவருத்து, பாவப்பார விடுதலை அடைந்தவர்களாகி வர்ணிக்கமாளாத மனச்சமாதானத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறதாய் அனுபவசாட்சி சொல்லியிருக்கிறார்கள். இதுவுமன்றி இயேசுநாதர் எங்கள் சந்தேகங்களை நீக்கி, எங்களை நடத்தி, பராமரித்து, மரணபயத்தைப் போக்கடித்து, ஸ்திரமான நெஞ்சம் அளிக்கிறார் என்று கிறிஸ்தவர்களான நாங்களெல்லாரும் சந்தேகமறச் சொல்லக்கூடியவர்களாகையால், அவ்வாண்டவர் தெய்வீகத்தைக் குறித்துச் சந்தேகிக்க இடமில்லை.

10. இயேசுநாதரே திவ்ய ரட்சகரென்று நம்பி, அந்நண்பருக்கு
இருதடகமலத்தைப் படைக்கும்போது, நாம் இதற்குமுன் கிரகிக்
கக்கூடாத அநேகவிஷயங்கள் நமக்கு விவரமாக விளங்கும். அப்
பரமகுரு அதரிசனமான கடவுளை வெளிப்படுத்தினவராகையால்,
அவருடைய அவதாரத்தின் புண்ணிய பலன்களை உணர்ந்து அறிந்த
வுடனே கடவுள் களங்கமற்றவரும் நீதிபரரும் அன்பின் மூர்த்தி
யும் சகல பாவங்களையும் அருவருக்கிறவருமாய்ப் பாவிகளான நம்மைக்
கண்டிப்பாகத் தண்டிப்பார் என்றும், நாம் நமது பாவ நிலைமையைக்
கண்டு துயரமடைந்து மனஸ்தாபப்பட்டு முறையிட்டால், நமது
பாவங்களைப் பரிகரித்து நாசம்பண்ணி நமக்கு உறுதிவாக்களிக்க ஆயத்
தமாயிருப்பார் என்றும் நிச்சயிப்போம். பரமகுருவான இயேசுநாதர்
மனுமக்களின் உத்தமநிலைமையை வெளிப்படுத்தினவராகையால்,
அப்பரஞ்சோதியின் சரித்திரத்தைக் கவனமாய் ஆராய்ச்சிசெய்து
ஆலோசிக்கையில், நாம் தேவசாயலில் ஜன்மித்தவர்களேயன்றி
இழிஞர்கள் அல்ல. ஆதலால் சகல தீயகுணங்களையும் விட்டு, சத்
தியமாகவும் பரிசுத்தமாகவும் நடந்துகொள்வதற்குக் கடமைப்பட்டிருக்
கிறோமென்றும், நாமனைவரும் அந்தச் சுதந்தரத்தைத் தள்ளி பாவ இச்
சைகளினால் முற்றிலும் குணங்கெட்டவர்களானோமென்றும், நமக்கு
உறுதியாகத் தெரியவரும். இதுவுமன்றி இயேசுநாதர் தெய்வீகமும் மனு
ஷீகமும் உடையவராய் மத்தியஸ்த தொழிலை வகித்துக்கொண்டு மனு
மக்களின் இருதயகடினத்தை நீக்கிச் சங்காரஞ்செய்து அவர்களைக்
கடவுளுடன் ஐக்கியப்படுத்துகிறவர் என்று நம்பினால், அப்போது
அவ்வாண்டவரை ஆதாரம் செய்துகொண்டு, பாவவிடுதலையடைந்து
அவரது திருவுளக்கடாட்சத்தால் நமது ஜனனத்தைப் பயனுள்ள
தாக்கிக்கொள்வோம் என்பதற்குச் சந்தேகமிராது. நமது நெஞ்சத்தைக்
கலங்கடிக்கும் ரகசியங்கள் பலவுளவெனினும், இயேசுநாதருடைய
அவதாரப்பலன்களை அறியும்பட்சத்தில் அவ்வகை ரகசியங்கள்
பெரும்பான்மை தெளிவாகும். சர்வ சிருஷ்டிகளுடைய கர்மபாரத்
தையும் சுமந்து வெகு வாதையடைந்தபோதிலும், சமஸ்தத்தையும்
ஆண்டு பரிபாலித்துவருகிற பகவான் மறுஜன்மம் பூண்டு, நரவடிவெடு
த்து, அப்பாரமனைத்தையும் தூக்கிச் சுமந்துகொண்டு கர்ம நிவாரணத்
தின்பொருட்டுச் சொல்லற்கரிய அரும்பாடுபட்டுத் தம்மைத்தாம் கொ



டிய மரணத்துக்கு ஒப்புக்கொடுத்தார் என்பது வாஸ்தவமாய் இருக்கும்
பட்சத்தில், தேவன் நம்முடன் பாடுபடுகிறதினால் அவருடைய திரு
வுளம் எப்போது ஈடேறுமோ அப்போதே சகல சிருஷ்டியும் பாவத்
தினின்று விடுதலையாகிச் சித்திக்குமென்று நிச்சயித்து மன அமைதி
யடைவோம்.
நாம் எத்தனை திருஷ்டாந்தங்களைக்கொண்டு விசாரணைபண்ணி
னாலும், அவையெல்லாம் ஒருமித்து இயேசுநாதருடைய திவ்ய மகத்து
வத்தைக்குறித்து உறுதியாகச் சாட்சிகொடுக்கிறபடியால், அந்த ரட்ச
கர் நமது பாவங்களை எல்லாம் பரிகரித்து, நமக்கு மோட்சபதவி அளிக்
கிறவர் என்று நிச்சயிக்காதிருக்க விதியில்லை. 'பாவங்களைப் பரிகரிக்
கிற நீர்தான் எங்கள் அடைக்கலம் ஆண்டவா! உம்பாதத்தில் சேர்ந்த
யாவருடைய ஆபத்தையும் நீக்கிப் பத்திரமான நித்தியகதி காண்பித்
தீர். ஆகையால் இயேசுநாதா உமது நாமம் அமிர்தம்போன்றது.
எங்களுக்கு அது எவ்வளவோ ருசியாயிருக்கிறது ஐயா!'' என்று ஒரு
[illegible] கின்றான்.
கிறிஸ்துமார்க்கத்தில் சிலாக்கியம் உண்டு. ஆதலால் அம்மதத்
தின் முக்கியபொருளை உணராத சிலர் அவ்வகை மாட்சிமைதங்கிய
விஷயங்களைக் கண்டு சந்தேகப்பட்டபோதிலும், இயேசுநாதருடைய
அளவற்ற அன்பின் பெருக்கை அனுபவித்தவர்கள் ஆத்தும துருக்க
மான அவரை ஆதாரமாக்கி அவ்விரட்சகர் தகுந்தசமயத்தில் சகல
ரகசியங்களையும் வெளியாக்குவார் என்று நம்பி உறுதியான உள்ள
முடையவர்களாயிருக்கிறார்கள். கிறிஸ்துமதத்தில் நமது ஆத்தும
ரட்சிப்புக்கு அவசியமானவிஷயங்கள் யாவும் வெகு தெளிவாயிருக்
கிறபடியால், எப்படிப்பட்டவர்களும் அவற்றைக் கிரகித்து பாவநிவா
ரணம் தேடிக்கொள்வதற்கு தடைஒன்றுங் கிடையாது. இயேசுபக
வான் இறந்து சென்றவர் என்று கருதக்கூடாது. அவர் ஜீவனுடை
யவராய் நமது மத்தியிலிருந்து நமக்குத் தகுந்த அனுகூலமான துணை
புரிய எப்போதும் ஆயத்தமாகவே இருக்கிறார்.
ஆகையால் நமது பாவநிலைமையைக் கண்டு உணர்ந்து நம் ஆணவ
அகங்காரத்தை ஒழித்து, அப்புண்ணியமூர்த்திக்கு நமது உள்ளத்
தைப் படைத்து, அக்கிருபாநிதியை அண்டிக்கொண்டால், நாம் உண்
மையான கடவுளை அறிந்தவர்களாகி, பாவவிமோசனம் அடைந்து

பாவக்கறையைப் போக்கடித்துக்கொண்டு, மனச்சமாதானத்தைப் பெற்று நமது ஜீவியஓட்டத்தின் இறுதியில் மோட்சபதவி அடைவோம்.

இயேசுநாதர் நீடிய பொறுமையும் அத்தியந்த தயாளமும் உள்ளவரானதால், மனிதர் அப்புண்ணியமூர்த்தியின் நீண்ட சாந்தத்தை அவமதித்து, அப்பரமகுருவின் திருமறையை மனதில் கொள்ளாமற் போனாலும், அக்கருணாநிதி அவர்களை ஒருக்காலும் மறவாது, அவர்களுக்காக ஆவலுடன் எதிர்பார்த்து, அவர்களைத் தம்மிடம் இழுத்துக்கொள்ள வேண்டுமென்று பலவாறாய்ப் பிரயாசப்படுகிறார். இதைப்பற்றி மாட்சிமைதங்கிய அவ்வாண்டவர் 'இதோ வாசற்படியில் நின்று தட்டுகிறேன். ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து அவனோடே போஜனபானம் பண்ணுவேன். அவன் என்னோடும் போஜனம் பண்ணுவான்' என்று திருவாய் மலர்ந்தருளினார் (வெளி. 3. 20.). இயேசுநாதர் நியமித்த மார்க்கம் சகல மனிதருக்கும் நன்றாய்ப் பொருந்துகிறது. அவ்வாண்டவரை நம்பி, அக்கிருபாசமுத்திரத்திற்கு நமது இருதயகமலத்தைப் படைத்து, அத்திவ்ய குருவைச் சேவிப்போம் என்று தீர்மானஞ்செய்வதே அவசியம். இயேசுநாதர் ஒருவரையும் அவமதித்து அற்பமாய் எண்ணித் தள்ளுகிறவர் அல்லர். ஆதலால் எவ்வளவோ அறிவீனரானாலும் எவ்வளவோ பாபிஷ்டிகளானாலும் அப்புண்ணிய சம்பன்னருடைய அளவற்ற தயவைத் தியானித்து பயசந்தேகாதிகளை நீக்கி, அப்பரனுடைய சரணடைந்து, அத்திருமகனுடைய திவ்ய சகாயத்தினால் பாவநிவாரணமடைந்து, மோட்சகதி யடையலாம். இயேசுபகவானின் தயவை அவமதித்து, அப்புண்ணியரின் பாதங்களைத் தேடாதவர்களுக்கு இந்த ஜீவியத்திலும் மற்ற ஜீவியத்திலும் முக்தி சித்தியாது. இதைப்பற்றி 'குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை. தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்' (யோவா. 3. 36.) என்பது தேவவாக்குப் பிரமாணம். ஆகையால் சகல மனிதரும் தங்கள் மனக்கடினத்தை நீக்கித் தமது துர் அபிப்பிராயத்தைத் தள்ளி அப்பரமாட்சகரை அண்டுவது இன்றியமையாத அவசியமாம்.



இயேசுபகவானுடைய வரலாற்றைச் செவ்வையாக விசாரணை செய்யுங்கால், கிறிஸ்துசமயமே சத்தியமதம் என்பதற்கு எதிர்க்க முடியாத பலமான ரூபகாரங்கள் சகல மனிதருடைய அறிக்கையினாலும் விளங்குகிறபடியால் புத்திசாலிகள் யாரோ அவர்கள் அனைவரும் ஆண்டவருடைய மகத்துவத்தை அறிக்கையிட்டு, உலகத்தினாலுண்டாகும் கஷ்ட நஷ்ட அவமானங்களை அற்பமாய் எண்ணி, அவ்வகிலாண்டநாயகரின் பாதபணிவிடையில் பிரவேசிப்பார்கள். ஒருவன் உலகமனைத்தையும் சம்பாதித்துக்கொண்டு தன் பிராணனை இழந்துவிட்டால் அவனுக்கு லாபம் ஒன்றுமில்லை. ஆதலால் தேசகுல அபிமானங்களினாலாவது பந்துமித்திரரின் நிந்தையினாலாவது இடறலடைந்து மோட்சபதவியளிக்கும் மாட்சிமைதங்கிய பரலோக வேந்தனை கனம்பண்ணாதவர்கள் அறிவீனர் என்று உரைக்க சந்தேகமில்லை.

67678

PRINTED AT THE S. P. C. K. PRESS, VEPERY, MADRAS—1914.